

விறுவிறுவிறுப்பான தமிழ் நாவல்



கடவுச்சொல்

*********** *********** ***********

விஜய்குமார் ஜெயராஜ்



கடவுச்சொல்

ஆசிரியர்: விஜய்குமார் ஜெயராஜ்

*********** *********** ***********

KADAVUSOL

Author: Vijaykumar Jayaraj

*********** *********** ***********

வாசக அன்பர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்!

நான் விஜய்குமார் ஜெயராஜ், சங்கம் வளர்த்த மதுரையில் பிறந்து, ஜல்லிக்கட்டுக்கு புகழ் பெற்ற அலங்காநல்லூரில் பள்ளிப்படிப்பை முடித்தவன். இளங்கலைப் படிப்பை மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும், மதம் மற்றும் மெய்யியலில் முதுகலைப் படிப்பை காமராசர் பல்கலையிலும் முடித்தேன். திருமணமாகி ஒரு மகனும், மகளும் இருக்கிறார்கள்.

நான் ஒரு தொழில்முறை கிரியேட்டிவ் டிசைனர், சிங்கப்பூரில் ஏழு ஆண்டுகள் பணியாற்றியது உட்பட பல ஆண்டுகள் இந்தத் துறையில் பணியாற்றிய அனுபவம் இருக்கிறது. தொலைக்காட்சியில் ஒளிபரப்பான சில குறும்படங்களுக்கு கதை திரைக்கதை வசனம் எழுதிய அனுபவமும் உண்டு. ஆன்மீகம், மெய்யியல் ஆகியவற்றில் ஆர்வம் அதிகம்.

இந்த நாவல் உங்களுக்கு ஒரு புதுவித வாசிப்பு அனுபவத்தைத் தரும் என்று நிச்சயமாக நம்புகிறேன். பாத்திரங்களின் நடைமுறை வாழ்க்கையை பிரதிபலிக்கும் வண்ணம் பல இடங்களில் தங்கிலீஷில் எழுத வேண்டியதை தவிர்க்க முடியவில்லை. எனதருமை தமிழ் ஆர்வலர்கள் பொருத்தருள்க!

நாவல் குறித்த உங்கள் பாராட்டுக்களோ, விமர்சனங்களோ எதுவாக இருந்தாலும் அமேசான் கிண்டில் ஸ்டோரில் அதைப் பதிவு செய்ய மறவாதிருங்கள். சமூக வலைதளங்களிலும் இந்த நாவல் குறித்த உங்கள் மேலான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது எனது வளர்ச்சிக்கு மேலும் உதவும்.

இந்தக் கதையில் வரும் பாத்திரங்கள், பெயர்கள் மற்றும் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே! யாரையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ குறிப்பிடுவன அல்ல.

எனக்கு ஊக்கமும் ஆதரவுமளித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்!

அன்புடன்
ஜெயராஜ் விஜய்குமார்

தொடர்புக்கு:
Vijaykumar.jeyaraj@gmail.com

*********** *********** ***********

முக்கிய அறிவிப்பு:

*********** *********** ***********

அத்தியாயம்: 1

முன்னோக்கிப் பாயும் குதிரை

முன்னோக்கிப் பாயும் ஆண் குதிரையின் பிரம்மாண்ட கட்டவுட் ஒன்று அந்த மைதான வாசலை அலங்கரித்திருந்தது. மாலையின் மஞ்சள் வெயில் மறையும் முன்னரே இராட்சத மின் விளக்குகள் ஒளியை உமிழத் தொடங்கியிருந்தன. எத்தனை வருடங்கள் கேட்டாலும் நம்பிக்கையை(மட்டும்) தூண்டத் தவறாத கட்சியின் கொள்கை முழக்கப்பாடலை வழிநெடுகக் கட்டப்பட்ட அரைக்குழாய்கள் ஒலிப்பெருக்கம் செய்து கொண்டிருந்தன. வேறு விதமாகச் சொல்லப்போனால் அவ்வழியே பயணிக்கும் வாக்களிக்கும் இயந்திரங்களின் செவிகள் வம்படியாகக் கிழிக்கப்பட்டு கருத்துக்கள் உள்ளே திணிக்கப்பட்டு கொண்டிருந்தது.

இந்தியாவில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை களைகட்டும் நாடாளுமன்றத் தேர்தல் திருவிழா. அதிலும் மாநில ஆளுங்கட்சியின் பிரச்சாரக் கூட்டம் என்றால் கேட்கவா வேண்டும். அது தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி… மாலை ஆறரை மணிக்கு தொடங்கவிருந்த பிரச்சார நிகழ்ச்சிக்கு ஐந்து மணிக்கெல்லாம் கூட்டம் வந்து குவிந்து விட்டது. மைதானத்தின் வாயிலில் மீடியா, காவல்துறை, தீயணைப்புத்துறை வாகனங்கள் வரிசைகட்டி நின்றிருந்தன. சரவெடிச் சத்தங்களும், வாழ்க கோஷங்களும், நாடி நரம்புகளுக்குள் உற்சாகத் தீ ஏற்றுவது போல ஆங்காங்கே ஒலித்துக் கொண்டிருந்த மேளச்சத்தமும் நடக்கப்போவது பிரச்சாரமா, பெருவிழாவா என்ற பிரமிப்பையும், முதுகுத் தண்டினுள் ஒருவித சில்லிடும் பரவசத்தையும் அங்கிருந்தவர்களுக்கு அளித்துக் கொண்டிருந்தது.

தமிழகத்திலேயே எங்கும் இல்லாத அளவுக்கு தொண்டர்களைவிட பொதுமக்களின் கூட்டம் அங்கு வந்து குவிந்து கொண்டிருந்ததை கூட்டத்துக்குள் உலவிக்கொண்டிருந்த உளவுத்துறையினர் கவனிக்கத் தவறவில்லை. இருக்காதா பின்னே! தஞ்சை மாவட்டத்தின் தலையாய பிரச்சனையான காவிரி நீர்ப்பகிர்வில் தமிழகத்தை வஞ்சித்து அரசியல் லாபத்துக்காக அண்டை மாநிலத்தின் பக்கம் சாய்ந்துகொண்ட ஆளும் மத்திய அரசுக்கு செமத்தியான சம்மட்டி அடி தரவேண்டும் என்று தமிழக மக்களைப் பற்றியிருந்த கோபமும் எழுச்சியும், மத்தியில் எதிர்க்கூட்டணியில் இருந்த தமிழக ஆளுங்கட்சியான மக்கள் தேசிய எழுச்சி முன்னணிக்கு (ம.தே.எ.மு) ஆதரவாக மாறியிருப்பது அனைவரும் அறிந்ததுதான்.

அரசியலில் பழுத்த ராஜதந்திரி என்று எதிர்கட்சிகளாலும் ஒப்புக்கொள்ளப்படும் தமிழக முதல்வரும், மக்கள் தேசிய எழுச்சி முன்னணியின் பொதுச்செயலாளருமான கோப்பெருஞ்சோழன் அந்த வாய்ப்பை நழுவ விடுவாரா? கட்சியில் தனக்கு அடுத்த நிலையில் இருப்பவரும், தன்னைப் போலவே மக்கள் செல்வாக்கு மிக்கவருமான செம்பருதியை தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளராக நிறுத்தியதுமே ம.தே.எ.முவின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது. இந்த செம்பருதி சாதாரண ஆள் அல்ல, அரசியலில் நுழைந்த நாள் முதற்கொண்டு நதிநீர் இணைப்பை வலியுறுத்தியே தனது அரசியல் பாதையையை வகுத்துக் கொண்டவர். நதிநீர் இணைப்பு என்றவுடன் தென்னிந்திய அளவில் அனைவருக்கும் செம்பருதியின் நினைவே முதலில் வரும் எனும் அளவுக்கு இப்பிரச்சனையில் தனது இருப்பை வலுவாக நிலைநிறுத்திக் கொண்டவர்.

மேடையில் கோப்பெருஞ்சோழனும் செம்பருதியும் ஒருசேர ஏறியவுடன், கூட்டத்தின் ஆர்ப்பரிப்பு சில நிமிடங்களுக்கு ஆழிப்பேரலை போல எழுந்து அடங்கியது. நிகழ்ச்சி நிரலில் பிரச்சாரக் கூட்டங்களுக்கே உரிய வழக்கமான மொக்கைகள், முகஸ்துதிகள் எல்லாம் முடிந்த பின்னர் வேட்பாளர் செம்பருதியும் அதன் பின்னர் இறுதியில் முதல்வர் கோப்பெருஞ்சோழனும் பேசுவதாக இருந்தது. உள்ளூர் ஜால்ராக்கள் ஒலித்து முடிந்த பின்னர் உரை நிகழ்த்தும்படி செம்பருதிக்கு அழைப்பு விடப்பட்டது. செம்பருதி பேச

வருகிறார் என்றதுமே அதுவரை அடங்கியிருந்த ஆழிப்பேரலை மறுபடி ஆர்த்தெழுந்தது. ஏன் என்ற காரணத்தைத்தான் கேளுங்களேன்!

ராஜதந்திரத்தில் கோப்பெருஞ்சோழன் கில்லி என்றால், மேடைப்பேச்சில் செம்பருதி ஜெகஜால ஜித்தர். மகுடிக்கு மயங்கிய பாம்புபோல மணிக்கணக்கில் அவரது தமிழ்ப் பேச்சை மெய்மறந்து ரசிக்கும் கூட்டம் இங்கு உண்டு. யூடியூபில் அவரது மேடைப் பேச்சு வீடியோக்கள் லட்சம் வியூக்களை தாண்டுவதெல்லாம் சர்வ சாதாரணம். அரசியலையும் தாண்டி அவரது பேச்சில் அத்தனை பேருக்கும் ஒரு ஈர்ப்பு இருந்தது.

செம்பருதியின் பேச்சுத் திறமை மீதும், அதைப் பயன்படுத்தி அவர் அடைந்த செல்வாக்கு மீதும் கோப்பெஞ்சோழனுக்கு எப்போதுமே ஒரு பொறாமை உண்டு. அதே போல அரசியல் சதுரங்கத்தில் அநாயாசமாக காய்நகர்த்தும் கோப்பெருஞ்சோழனின் வித்தைகளைக் கண்டு செம்பருதிக்கும் ஒரு பொறாமை உண்டு. ஆனால் இருவருமே தங்கள் பொறாமைகளை எப்போதும் வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார்கள். தமிழக அரசியலைப் பொறுத்தவரை கோப்பெருஞ்சோழன் அண்ணன் என்றால் செம்பருதி தம்பி.

செம்பருதி மைக்கைப் பிடித்து ஒரு இரண்டு நிமிடமாயிற்று இன்னும் ஆர்ப்பரிப்பு அடங்கியபாடில்லை. கையமர்த்திப் பார்த்தார், கூட்டம் கட்டுப்படவில்லை. வாழ்க கோஷங்கள் விண்ணை முட்டியபடியிருந்தது. மேடையில் முன்வரிசையில் சிம்மாசனம் போன்ற இருக்கையில் அமர்ந்துகொண்டு புன்னகைத்தபடி பார்த்துக் கொண்டிருந்த கோப்பெருஞ்சோழனின் முகத்தில் லேசாக பொறாமை ரேகை படர்ந்தது.

சரி, பேச ஆரம்பித்தால் அடங்கிவிடுவார்கள் என்று எண்ணி இரண்டுமுறை பேசத்தொடங்கி தோற்றுப்போனார் செம்பருதி.

சரி, இந்த ஆர்ப்பரிப்பு அடங்குவதற்குள் இக்கதையில் வரும் தமிழகத்தின் அரசியல் சூழலை உங்களுக்கு அறிமுகப்படுத்தி விடுகிறேன். இந்தக் கதையை படித்து முடிக்கும்வரை தற்கால நிஜ தமிழக அரசியலை சுத்தமாக மறந்து விடுங்கள். இக்கதை ஆங்கிலம் மற்றும் மற்ற இந்திய மொழிகளிலும் வெளிவரவிருப்பதால் இக்கதையை வாசிக்கும் அனைத்து இந்திய மக்களும் தங்கள் மாநில அரசியல் சூழலோடு தொடர்புபடுத்திக் கொள்ளும்படிக்கு கதையின் களம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்துக்கு மாநிலம் சூழல் வேறானாலும் ஊழல் நமக்கெல்லாம் பொதுதானே! அந்த வேற்றுமையில் ஒற்றுமையை(!) மையமாக வைத்துத்தான் கதை நகர்கிறது.

கதைப்படி தமிழகத்தின் ஆளுங்கட்சியான மக்கள் தேசிய எழுச்சி முன்னணி ஒரு சாதிக்கட்சியாகும். “என்னாது? தமிழகத்திலாவது சாதிக்கட்சியின் ஆட்சியாவது, இது பெரியார் மண்ணாக்கும்!” என்று யாராவது வம்புக்கு வருவீர்களானால் உங்கள் பள்ளி நாட்களில் உங்களிடம் கதை சொன்ன நண்பனிடம் இதே போல லாஜிக் பேசி “கதைக்கு காலுண்டா? உனக்கு வாலுண்டா?” என்று அவன் உங்களிடம் கேட்டது ஒருவினாடி மனத்திரையில் வந்து போகட்டும். இது சும்மா கற்பனைதாங்க…

கதைப்படி தமிழகத்தின் இரு பிரதான கட்சிகளும் சாதிக் கட்சிகள்தான். எதிர்க்கட்சியின் பெயர் வேண்டாம். ஏன்னா ஆளுங்கட்சிக்கு ஒரு பெயர் கண்டுபிடித்து வைப்பதற்குள்ளேயே எனக்கு நாக்கு தள்ளிருச்சு. தக்காளி… எப்படி கழகம், தமிழகம், மக்கள், முன்னேற்றம், தேசியம்னு மாத்தி மாத்தி டைப் பண்ணிப்பார்த்தாலும் ஃபேஸ்புக் அளவுலயாவது யாராச்சும் ஒரு கட்சியத் தொடங்கி வச்சிருக்காங்கப்பா. என் கட்சிப் பெயரை எப்படி நீ பயன்படுத்தலாம்னு அப்புறம் நாளைக்கு பஞ்சாயத்துக்கு வந்திரக்கூடாதில்ல. கூகுளே களைத்து விழும் அளவுக்கு தேடி அலசி ஆராய்ந்து பார்த்துட்டுத்தான் “மக்கள் தேசிய எழுச்சி முன்னணினு” கடைசியா ஒரு பேரு பிடிச்சிருக்கேன். இவ்வளோ மொக்கையான ஒரு பேரை யாரும் கட்சிக்கு வைக்க மாட்டாங்கன்னு என்ற ஒரு நம்பிக்கைதான்.

இருந்தாலும் ஒரு சேஃப்டிக்கு புதுமனிதன் பட கவுண்டமணி கணக்கா ஒரு வார்த்தை போட்டு வச்சிடலாம்:

இந்தக் கதையைப் படிக்கிற அய்யா, அம்மா…தமிழ்நாட்டுல எந்த சந்துல, பொந்துல, இண்டுல, இடுக்குல நீங்க எங்க இருந்தாலும் உங்க கட்சியைப் பற்றியோ, சாதியைப் பற்றியோ. தலைவர்களைப் பற்றியோ குறிப்பிடுவது போல கதையில் ஏதாவது வருவதாக நீங்கள் நினைத்தால் அது நிச்சயமாக வேண்டுமென்று செய்யப்பட்டதல்ல. தற்செயலானதாகத்தான் இருக்கும். ஒரு கதாசிரியனாக பொதுமக்களின் கைதட்டலைத்தான் காதுகளில் வாங்க விரும்புகிறேனேயன்றி, காதுலேயே(செவுள்) யாரிடமும் வாங்க விருப்பமில்லை.

மக்கள் தேசிய எழுச்சி முன்னணியும் அதன் எதிர்கட்சியும் கட்சி அளவில் எதிரிகள் மட்டுமல்ல, நாகபதனி - நாகப்பதனி மாதிரி சாதி அளவிலும் எதிரிகளே! தமிழகத்தில் சாதிசண்டை எந்த மூலையில் நிகழ்ந்தாலும் மோதிக்கொள்வது இந்த இரண்டு சாதிகளாகத்தான் இருக்கும். அந்த சாதிகளுக்கு பெயர் என்னங்கிறீங்களா? வம்புல மாட்டி விடுறீங்களே! ஏதாச்சும் ஒரு பெயர் வச்சு அந்தப் பேருல உண்மையிலேயே ஒரு சாதி இருக்கான்னு மறுபடியும் போய் ஆராய ஆரம்பிச்சேன்னா கூகுள் இந்த வாட்டி என்னை காறி துப்பிடும். அதனால் இத்தோடு நிறுத்திக்கலாம். உங்களுக்கு கண்டிப்பா ஏதாவது பேரு தேவைன்னு நினைச்சீங்கன்னா நாகபதனி - நாகப்பதனின்னே வச்சுக்கங்க!

கோப்பெருஞ்சோழன், செம்பருதி இருவருமே அருகருகான கிராமங்களைச் சேர்ந்த ஒரே சாதிக்காரர்கள்தான். ஒருவிதத்தில் பார்த்தால் பல ஒன்றுகளை விட்ட தூரத்து உறவு முறையின்படி பங்காளிகள்தான். மிக எளிதாக வாழ்க்கையைத் துவங்கி இன்று இந்தியாவின் அரசியலை நிர்ணயிக்கும் அளவுக்கு முக்கிய சக்திகளாக வளர்ந்து நிற்கிறார்கள். சரி செம்பருதிய மேடையில் நிறுத்திட்டு நாம்பாட்டுக்கு வழவழன்னு எழுதிட்டு இருக்கேன்.

“இப்ப நான் பேசட்டுமா வேணாமா?”

பொறுமையிழந்து கத்தினார் செம்பருதி. அந்த திடீர் கோபத்தை எதிர்பாராததினால் மிரண்ட கூட்டம் சற்று அமைதியாகவே. தொண்டையை செருமிவிட்டு, முகத்தில் கொஞ்சம் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு பேசத்துவங்கினார்.

தமிழகத்தின் முடிசூடா மன்னரும், மக்களின் இதய சிம்மாசனத்தில் சக்கரவர்த்தியாக என்றும் வீற்றிருக்கும் எங்கள் ஐயா கோப்பெருஞ்சோழர் அவர்களே! மேடையில் அமர்ந்திருக்கும் எனக்கன்பான கழகப் பொறுப்பாளர்களே! எம் குலத்தின் வீரமிகு, மானமிகு தலைவர்களே, போராளிகளே!

அடுத்ததாக அவரது டிரேட் மார்க் பஞ்ச்…”என் பேச்சிலும் மூச்சிலும் ஊனிலும் உயிரிலும் இரண்டறக் கலந்திருக்கும் என் இனிய தமிழ் சொந்தங்களே!” என் பேச்சிலும்.. என்று ஆரம்பித்த போதே அந்தப் பேச்சு யார் காதிலும் விழாத அளவுக்கு உற்சாகத்தில் கொடிகளும் கோஷங்களும் ஒருசேர உயர்ந்து விண்ணைத் தொட்டன… கோப்பெருஞ்சோழனுக்குள் அலைக்கழித்துக் கொண்டிந்த அந்த மிருகம் அந்த வினாடி மனதிற்குள்ளேயே விஸ்வரூபமெடுத்து அலறி அடங்கியது. அகத்தில் பொங்கிய உணர்வை முகத்தில் காட்டி விடாதபடி செம்பருதியின் பேச்சுக்கு தன்னையும் ஒரு ரசிகராகக் காட்டிக்கொள்ள அந்த டிரேட் மார்க் பஞ்சுக்கு கடமைக்காக கைதட்டி வைத்தார்.

செம்பருதி பேச்சைத் தொடர்ந்தார்..”ஏதேதோ நிறைய பேசணும்னு நெனச்சுக்கிட்டிருந்தேன்…ஆனா நேற்று இதே தஞ்சாவூர் கலெக்டர் ஆஃபீசுக்கு முன்னாடி தரணிக்கே சோறு போட்ட இந்த மண்ணின் மைந்தன், (மார்பில் அடித்து) என் விவசாயி… ஒட்டிய வயிறோடும், கண்ணீர் நிறைஞ்ச கண்களோடும் வாயில் எலியைக் கவ்வியபடி உட்காந்து போராட்டம் செய்த காட்சியை தொலைக்காட்சில பார்த்தேன். அந்தக் காட்சி திரும்ப திரும்ப திரும்ப திரும்ப என் கண்ணு முன்னாடி வந்து போகுது…

”சில வினாடிகள் தலை குனிந்து மௌனம் காத்த பின்பு துக்கத்தில் குரல் நடுங்க சத்தத்தை உயர்த்தி, “அந்தக் காட்சிய மனசுல நினைக்கும் போதெல்லாம் ஈரக்கொலை நடுங்குது….”

அரைக்குழாய்களில் அலறி எதிரொலித்த அந்த வார்த்தையைக் கேட்டவுடன் அதுவரை கத்திக் கொண்டும், விசிலடித்துக்கொண்டும் இருந்த மக்கள் திரளை ஒரு மயான அமைதி பற்றிக்கொண்டது. அந்த வழியே பயணித்தவர்கள்கூட ஒரு கணம் நின்று மேடை இருந்த திசை நோக்கி முகத்தைத் திருப்பினார்கள். மக்கள் நடுவே வைக்கப்பட்டிருந்த பிரம்மாண்ட பிளாஸ்மா டிவி செம்பருதியின் கண்களில் இருந்து வழியும் கண்ணீரை focus செய்து காட்டியது.

செம்பருதி ஒரு விரக்தியான தொனியுடன் தொடர்ந்தார், “ஹூம்.. சோழநாடு சோறுடைத்துனு சொல்லுவாங்க.. அடுத்தவன் பசிக்கு அன்னமிட்ட இந்த சோழநாட்டான் இன்னிக்கு சொந்த பிள்ளையோட பசிக்கு சோறுபோட முடியாம தற்கொலை பண்ணி சாகிற கொடுமைய என்னன்னு சொல்றது!..

இந்த நிலை எப்ப மாறும்? என்னதான் தீர்வு? இன்னும் எத்தனை காலம்தான் தண்ணிக்காக பக்கத்து மாநிலத்தானோட இப்படி மல்லுக் கட்டிக்கிட்டே இருக்குறது?!!”

“1972-ஆம் ஆண்டு அன்னிக்கு மத்திய நீர்வளத்துறை அமைச்சராக இருந்த கே.எல்.ராவ் அவர்கள் தனது ஆய்வறிக்கையை சமர்ப்பித்த அந்த நாளிலிருந்து ஓய்வில்லாம உறக்கமில்லாம உரக்கச் சொல்லிக்கிட்டேதான் இருக்கேன், (சத்தத்தை உயர்த்தி) இந்திய நதிகளை இணைப்பதே ஒரே தீர்வு, கங்கையையும் காவிரியையும் இணைப்பதே என் இலட்சியம்..(பலத்த கரகோஷம், விசில் சத்தம்)

எனக்கன்பான உறவுகளே, நாங்க தயாராத்தான் இருக்கோம், நீங்க எங்களுக்கு இதுவரை வாய்ப்பு குடுக்கலையே… கட்சி தொடங்கி 35 வருடங்களானாலும் கடந்த 8 வருடங்களாத்தான் மாநிலத்தை ஆளுகிற பொறுப்பையே குடுத்திருக்கீங்க. இந்த 8 வருடங்கள்ல தமிழ்நாடு அடைஞ்ச முன்னேற்றத்தை பார்த்தீங்கள்ல?…”

தோளில் இருந்த துண்டை கையில் எடுத்து ஸ்டைலாக தனக்கே உரிய பாணியில் கழுத்தைச் சுற்றிப் போட்டுக்கொண்டு பேச்சைத் தொடர்கிறார்.. “எத்தனை ஆர்ப்பாட்டங்கள், எத்தனை முற்றுகைகள், எத்தனை உண்ணாவிரதங்கள், எத்தனை இரயில் மறியல்கள்...நதிநீர் இணைப்பை வலியுறுத்திப் போராடியதற்காக மட்டும் இதுவரை 30 முறை சிறை சென்றிருக்கிறேன். (கைதட்டல்) அதில் 3 முறை குறைந்தது இரண்டு மாதங்களாவது சிறையில் இருந்திருக்கிறேன்.

மாநில அரசியலில் பணியாற்றியது போதும், தம்பி இனி தில்லி நோக்கிப் படை நடத்து, நதிகளை இணைக்கக் கோரும் உன் சிம்ம கர்ஜனை பாராளுமன்றச் சுவர்களில் எதிரொலிக்கட்டும் என்று எனது தலைவர் பணித்திருக்கிறார். அந்த அன்புக் கட்டளையை ஏற்று இன்று தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக “பாயும் குதிரை” சின்னத்துக்கு வாக்குக் கேட்டு உங்க முன்னாடி நிற்கிறேன்.”

“நான் சொல்லப்போற இந்த விஷயத்தை கொஞ்சம் நல்லா கவனிக்கணும், உலகத்துல உள்ள மொத்த தண்ணீர்ல 97.5 சதவீதம் கடலில் உப்புத்தண்ணியா கடல்ல கிடக்கு. மீதமுள்ள 2.5 சதவீத தண்ணிதான் சுத்தமான தண்ணி. இதுலயும் 2.24 சதவீத தண்ணி துருவ பகுதிகள்ல பனிப்பாறையாவும், பனிக்கட்டியாவும் யாரும் பயன்படுத்த முடியாத நிலைல இருக்கு.

கேளு! இதுல மீதமுள்ள வெறும் 0.26 சதவீத தண்ணியத்தான் உலகத்துல உள்ள எல்லாரும் குடிக்கவும், சமைக்கவும், விவசாயத்துக்கும் பயன்படுத்த முடியும். இப்பவே உலகத்துல 40 சதவீத மக்கள் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டுட்டு இருக்காங்க... இந்த லட்சணத்துல மக்கள்தொகை வேற எக்குதப்பா

பெருகிக்கிட்டு இருக்குது... இனி மூன்றாம் உலகப்போர்னு ஒண்ணு வந்துச்சின்னா அது தண்ணீருக்காகத்தான் இருக்கும்னு அறிஞர்கள் சொல்றாங்க…"

கூட்டத்தில் தொடர்ந்து நிசப்தம் நிலவ, மக்களின் முகத்தில் ஒரு பயம் அப்பிக்கொண்டது…

“இப்பத் தெரியுதா, நாங்க ஏன் கெடந்து தண்ணீ, தண்ணீன்னு கத்தறோம்னு.. மக்கள் மேலுள்ள அக்கறை, எதிர்கால சந்ததிகள் மேலுள்ள அக்கறை, நாட்டின் எதிர்காலம் பற்றிய எச்சரிக்கை உணர்வு…"

“இங்க பாரு! இப்ப நம்ம நாட்ல மொத்தம் 17 கோடி ஹெக்டேர் விளைநிலத்துல பயிர் செஞ்சு அதிலிருந்து 23.5 கோடி டன்கள் உணவு உற்பத்தி செஞ்சுக்கிட்டு இருக்கோம். இந்த ரியல் எஸ்டேட் பூதம் முழுங்கினது போக 2020-ல வெறும் 10 கோடி ஹெக்டேர் விளைநிலம்தான் இருக்கும். இந்த 10 கோடி ஹெக்டேர் நிலத்துல எவ்வளவு உணவு உற்பத்தி செய்ய வேண்டியதிருக்கும் தெரியுமா? 40 கோடி டன்னு…

40 கோடி டன்னு உணவு உற்பத்தி செஞ்சாத்தான் அத்தனை பேருக்கும் சாப்பாடு. இல்லாட்டி 2020-ல நாம மிகப்பெரிய உணவு பஞ்சத்த சந்திக்க வேண்டியது வரும்.

பரப்பளவுல நம்மளவிட பெரிய, நம்மைவிட அதிக மக்கள் தொகை கொண்ட சீனா அருமையான நீர்வழிச்சாலை திட்டத்தை தொடங்கி செயல்படுத்திக்கிட்டு இருக்கான். நம்மள விட ரொம்ப குறைவா மழைய வாங்குற பாலைவன நாடான இஸ்ரேல் அற்புதமான தண்ணீர் மேலாண்மை திட்டங்களை செயல்படுத்திக்கிட்டு இருக்கான். இத்தனைக்கும் நம்ம நாட்ல வற்றாத ஜீவநதிகள் இருக்கு... மழை பெஞ்சா மட்டுமே தண்ணீர் தர்ற நதிகளும் இருக்கு...எல்லா இருந்தும் என்ன நடக்குது? நாட்ல ஒருபக்கம் இருக்கிறவன் வெள்ளத்துல சாகுறான், மறுபக்கம் இருக்கிறவன் பஞ்சத்துல சாகுறான். இதுக்கு நிரந்தரத் தீர்வு என்ன?...கங்கை பிரம்ம புத்திரா நதிகள் தொடங்கி தெற்கே ஓடுற காவிரி, வைகை, தாமிரபரணி, பழையாறு வரைக்கும் இணைக்க வேண்டியதுதான்.

அப்புறம் என்ன நடக்கும்? நாட்ல இருக்க அத்தனை ஆறுகளும், குளங்களும், கால்வாய்களும் எப்பவும் சுத்தமான தண்ணீரால நிறஞ்சிருக்கும். வீடுகளுக்கு தேவையான தண்ணி, விவசாயத்துக்கு தேவையான தண்ணி. தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணி இப்படி எதுக்குமே எப்பவுமே பஞ்சம் இருக்காது. இது மட்டும் நடந்தா இந்த தேசமே சொர்க்க பூமியாகிரும்

தோளில் இருக்கும் துண்டை ஸ்டெயிலாக சரிசெய்துவிட்டு, மைக் மேடையில் ஓங்கித் தட்டி, “அப்புறம் எவண்டா உலகத்துல வல்லரசு?? ... நம்மதாண்டா வல்லரசு."

பலத்த கரவொலி, விசில்…

“ஐய்யோ, இத எப்படிப் பண்றது?சாத்தியமாகுமா? மாநிலங்களை ஒருங்கிணைக்க முடியாதே, சுற்றுசூழல் பிரச்சனை இருக்கே, எல்லாத்தும் மேல இந்தத் திட்டத்த நிறைவேத்தி முடிக்க பல லட்சங்கோடி செலவாகுமே…இப்படியெல்லாம் பொலம்புறவன் பொலம்பிக்கிட்டேதான் இருப்பான். அதுக்காக சும்மா விட்டுட முடியுமா? ஊர்கூடித் தேர் இழுப்போம், நூத்தி இருபது கோடி இந்தியர்களையும் ஒன்றிணைப்போம். இப்படி முடியாது முடியாதுன்னு சொல்லிக்கிட்டு உட்காந்திருந்தா அன்னிக்கு நம்ம பாட்டன் கரிகால் சோழன் கல்லணையை கட்டி முடிச்சிருப்பானா?"

மைக் மேடையில் ஓங்கித் தட்டி, “அதாண்டா தமிழன்…"

திடீரென்று கோப்பெருஞ்சோழனை நோக்கி கைநீட்டி… “இது அந்தக் கரிகால் பெருவளத்தானின் பேரன் கோப்பெருஞ்சோழனுடைய காலம். மறுபடியும் வரலாற்றை திருப்புவோம்..இந்த முறை இன்னும் பிரம்மாண்டமாக... “ (பலத்த கரவொலியும் விசில் சத்தமும் பறக்கிறது)…கோப்பெருஞ்சோழன் நிமிர்ந்து உட்காருகிறார், கரிகாற் சோழனின் பேரன் என்று சொன்னதால் அவர் முகத்தில் ஒரு பெருமிதம்...நூறு வாட்ஸ் பல்பு போட்டதுபோல அவர் முகத்தில் ஒரு பிரகாசம்.

“சிறுதுளி பெருவெள்ளம், அந்த பல லட்சம் கோடி பாரத்தை அரசாங்கம் மட்டுமே சுமக்க முடியாது...அந்த செலவை பகிர்ந்து கொள்ள வேண்டியது ஒவ்வொரு இந்தியனின் கடமையும் கூட...அதோட முதல் முயற்சியா நான் இப்ப குடியிருக்க வீட்டைத் தவிர என்கிட்ட இருந்த அத்தனை அசையாச் சொத்துக்களையும், குறிப்பாக எனது மனைவியோட தாலி உள்பட அத்தனை நகைகளையும் விற்று அதன்மூலம் கிடைத்த ரூபாய் ஒன்றரை கோடியை பிரதமர் நதிநீர் இணைப்புக்கான ஸ்பெஷல் ஃபண்டுக்குக் கொடுக்கிறேன். இவ்வளவுதான் எங்கிட்ட இருக்கிறது..இதையும் நான் அரசியல்ல சம்பாதிக்கலப்பா…இது என் பாட்டன் சொத்து”

செம்பருதி சில டாக்குமெண்டுகளை கையில் எடுத்துக் காட்டுகிறார்...மக்கள் உணர்ச்சிவசப்பட்டு கத்துகிறார்கள், தாய்மார்கள் சேலை முந்தானையால் தங்கள் கண்களைத் துடைத்துக் கொண்டு நன்றியோடு கையெடுத்து கும்பிட்டபடி அழுகிறார்கள். கோப்பெருஞ்சோழன் தன் முகத்தில் வெளிப்பட்ட நமட்டுச் சிரிப்பை கட்சிக் கரைபோட்ட துண்டால் மறைத்துக் கொண்டு கைகளைத் தட்டுகிறார்.

குண்டூசி விழுந்தால் கூட கேட்கும் அளவும் மைதானத்தில் அமைதி நிலவுகிறது. இந்தக் காட்சியை தங்கள் வீடுகளில் லைவாக தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் உணர்ச்சிவயப்பட்டு சிலையாகி நிற்கிறார்கள்.

தான் ஏற்படுத்திய அமைதியை தானே கிழித்தெறியும்படி தனது சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி உரத்த குரலில் செம்பருதி இறுதி வார்த்தையாக கர்ஜிக்கிறார்.

“என் தஞ்சாவூர் பாலைவனமாகி, என் விவசாயி மருந்தக் குடிச்சு செத்துப்போயி என் அக்காளும் தங்கச்சியும் ஆத்தாளும் தாலியறுத்து நிக்கிறத பார்க்குறதுக்கா நான் உசுரோட இருக்கேன்? நதிகளை இணைக்க இந்த செம்பருதி எந்த தியாகத்துக்கும் தயார். உசிரு போனா மசிராச்சுடா!…”

அந்த உறுமல் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் எதிரொலிக்கிறது…

தேர்தல் பந்தயத்தில் ‘பாயும் குதிரை’ முன்னோக்கி ஓட அத்தனை போட்டிக் குதிரைகளும் பதுங்கி மறைந்தன. தமிழகத்தில் மட்டுமல்ல இந்திய அளவில் மக்கள் தேசிய எழுச்சி முன்னணி சார்ந்த கூட்டணி மகத்தான வெற்றிபெற்று ஆட்சியைப் பிடிக்கிறது. கோப்பெருஞ்சோழன் செம்பருதிக்கு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் பதவியை கேட்டுப் பெற்றுத்தருகிறார். தங்கள் நெடுநாள் கனவாக இருந்த நதிநீர் இணைப்பு வெகு அருகாமையில் நிகழப்போவதை எதிர்பார்த்து தமிழக மக்கள் நிம்மதியான உறங்கத் தொடங்கினர்.

குறிப்பு: செம்பருதியின் மேடைப் பேச்சில் வரும் புள்ளி விபரங்கள் இணையத்திலிருந்து பெற்றவை

*********** *********** ***********

அத்தியாயம்: 2

மாயக்கண்ணாடியின் வருகை

சரியாக 9 ஆண்டுகள் கழித்து…

மத்திய நீர்வளத்துறை அமைச்சர் செம்பருதியின் வீடு, சென்னை…

வீட்டு வாசலில் பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் வழக்கமான பரபரப்பில் இயங்கிக் கொண்டிருந்தனர். வாசலில் ஒரு சிவப்பு நிறக் கார் வந்து நின்றது. அதிலிருந்து அர்ஜுனும் உமாவும் இறங்கினர். அர்ஜுன் செம்பருதிக்கு இருக்கும் ஒரே தங்கையின் ஒரே மகன். வயது 27 இருக்கும், நல்ல உயரம், சிவந்த நிறம், நிதானமாக ஊடுருவிப் பார்க்கும் கண்கள். வெள்ளை காட்டன் ஷர்ட், புளூ ஜீன்ஸ் அணிந்திருந்தான். சென்னையில் சொந்தமாக ஒரு துப்பறியும் நிறுவனம் நடத்திக் கொண்டிருக்கிறான்.

உமா அர்ஜுனின் காதலி, வயது 24 இருக்கும். சென்னையில் இருக்கும் பன்னாட்டு மென்பொருள் நிறுவனமொன்றில் டீம் லீடராக பணியாற்றுகிறாள். உருவத்தில் மும்பையிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்பட நாயகிகளை நினைவுபடுத்தினாள். மஞ்சள் நிற காட்டன் சுடிதார் அணிந்திருந்தாள். வாசலில் நின்ற பாதுகாப்பு அதிகாரிகளை அர்ஜுன் ஏற்கனவே நன்கு அறிந்திருந்ததால் அவர்களை நோக்கி ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு உள்ளே கடந்து சென்றான். உமா முகத்தில் ஒரு இனம்புரியாத பதட்டம் ஒட்டிக்கொண்டிருந்தது. வாசலில் நின்றிருந்த கடா மீசைக் கரை வேட்டிகள், போலீஸ் மற்றும் பாதுகாப்புப் படை வீரர்களைப் பார்த்ததும் அவள் உடல் லேசாக நடுங்க ஆரம்பித்தது.

வீட்டுக்குள் நுழைந்ததும் உமாவும் அர்ஜுனும் முதலில் சந்தித்தது அமைச்சரின் பி.ஏ லீனா. செம்பருதியோடு எப்போதும் லீனாவைப் பார்க்கலாம். நுனிநாக்கு ஆங்கிலத்தில் பொளந்து கட்டும் அல்ட்ரா மார்டன் பெண்ணாக இருந்தாலும் அதி புத்திசாலி, அசாத்திய திறமைசாலி. தனது துறை சம்பந்தப்பட்ட பணிகளில் செம்பருதி அவளை ரொம்பவே சார்ந்திருந்தார். லீனாவுக்கு வயது 37, திருமணம் செய்து கொள்ளாதவள். அவள் பேச்சிலும் நடையிலும் எப்போதும் ஒரு திமிர் தெறிக்கும்.

“ஹாய் அர்ஜுன், ஹவ் ஆர் யூ?” அர்ஜுனை வரவேற்றாள் லீனா. “ஃபைன் லீனா, தாங்க் யூ, திஸ் இஸ் உமா” என்றவுடன் உமாவும் லீனாவும் கை குலுக்கிக் கொண்டனர். லீனா உமாவின் முகத்தில் இருந்த பதட்டத்தை கவனித்து விஷயத்தை ஓரளவு மனதுக்குள் யூகித்துக் கொண்டாள். அர்ஜுன் ஏதோ கேட்க வாய் திறக்கும் முன்னரே, “சார் இப்போ வர்ற நேரம்தான், சி.எம் வீட்டுக்கு அவசரமா கிளம்பிக்கிட்டு இருக்கோம்” என்று சொல்ல, அர்ஜுன் “தெரியும் போன் பண்ணிட்டுத்தான் வந்திருக்கோம்” என்று சொல்லி முடிப்பதற்குள் மாடிப்படி வழியாக செம்பருதியும் அவரது மனைவி கல்யாணி அம்மாளும் இறங்கி வந்தனர்.

அர்ஜுனைப் பார்த்த செம்பருதி, “பிறந்தநாள் வாழ்த்துக்கள் அர்ஜுன்!” என்று சொல்லியபடி வர அவர்கள் கடைசிப் படி இறங்கும் வரை காத்திருக்காமல் அர்ஜுனும் உமாவும் ஓடிப்போய் அவர்கள் காலில் விழுந்தனர். அவர்களது பதட்டத்தைக் கண்ட செம்பருதியும் கல்யாணியும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டனர்.

எந்திரிங்க எந்திரிங்க…

இருவரும் எழுந்து மாமாவும், அத்தையும் கடைசிப் படி இறங்கி தளத்தில் வந்து நிற்பதற்கு வசதியாக இரண்டு எட்டு ரிவர்சில் போய் நின்றார்கள். கீழே வந்து நின்ற செம்பருதி அர்ஜுனையும் உமாவையும்

மாறி மாறிப் பார்த்தார். அர்ஜுன் தயங்கியபடி "ம்மாம்மா… இது…" என்றபடி ஏதோ பேச வாயெடுக்க, உமாவின் கண்களைக் கூர்ந்து பார்த்தடியே அர்ஜுனை பேசாதபடி கையமர்த்திய செம்பருதி..

"தெரியும்… பெயர் உமா, இருக்கிறது அடையாறு… அப்பா பேரு செண்பகராமன். பத்து வருஷத்துக்கு முன்னாடி ஹார்ட் அட்டாக்ல தவறிட்டாரு, இப்பக் கூட இருக்கிறது அம்மாவும், அண்ணனும் மட்டுந்தான். தரமணில இருக்கிற ஓரியன் டெக்னாலஜீஸ் நிறுவனத்தில டீம் லீடர் வேலை, இது போதுமா இன்னும் உன் ஆளோட ராசி, நட்சத்திரமெல்லாம் சொல்லட்டுமா?"

அர்ஜுன் வாயடைத்து நிற்க, உமாவுக்கு bp எகிறியது…

"இந்தப் பொண்ணு ஜாதகமே நாலு மாசத்துக்கு முன்னாடி என் டேபிளுக்கு வந்திருச்சு. நீயா வந்து எங்ககிட்ட சொல்லுவேன்னு எதிர்பார்த்தோம். பொறந்த நாளன்னைக்கு சொன்னா திட்ட மாட்டேன்னு இன்னைக்கு கூட்டிட்டு வந்திருக்க…

சொன்னவுடன் அர்ஜுன் தலை கவிழ்ந்தான், பதட்டத்தில் உறைந்து போயிருந்த உமாவின் முகத்தைப் பார்த்த செம்பருதி, பொய் கோபத்தை உடனடியாகக் கலைத்துவிட்டு உமாவை நோக்கி புன்னகைத்தபடியே, "கவலப்படாதம்மா, உங்களை பிரிச்சிட மாட்டேன், நானும் கல்யாணியும்கூட லவ் மேரேஜ்தான்" என்று கனிவாகச் சொல்ல அவளை அதுவரை பிடித்துக் ஆட்டிக்கொண்டிந்த பயம் லேசாக விலகத்தொடங்கியது.

அடுத்த வினாடியே செம்பருதி தனது முகத்திலிருந்த புன்னகையை மீண்டும் மறைத்துக் கொண்டு அர்ஜுன் பக்கம் திரும்பி "உன்னோட டிடெக்டிவ் வேலையெல்லாம் எப்படிப் போகுது? அங்க சுத்தி இங்க சுத்தி நம்ம கட்சிக்காரங்களையே நோண்ட ஆரம்பிச்சிட்ட போல…ம்ம்?? அவங்க எங்கிட்டயே வந்து பொலம்புறாங்க!" அர்ஜுன் பணிவாக மறுத்து ஏதோ சொல்ல முயற்சிக்க, செம்பருதி அவனை சட்டை செய்யாமல் உமாவிடம் திரும்பி, "பொழைக்கத்தெரியாத பையனா இருக்காம்மா உன் ஆளு… நீயாவது புத்தி சொல்லி அவனை திருத்து…இல்ல நீயும் இவன மாதிரிதானா? நீதி, நேர்மை, சத்தியம்னுக்கிட்டு..ம்ம்ம்???

உமா பயத்தில் எப்படி தலையாட்டுவது என்று தெரியாமல் ஆமா இல்லை என்று மாறி மாறி தலையாட்டுகிறாள்.

அவளது குழப்பத்தை ரசித்த கல்யாணி அம்மாள், "பொறந்தநாளுக்கு ஆசீர்வாதம் வாங்க வந்த புள்ளைங்ககிட்ட ஏங்க?? …இந்தாங்க" ஒரு சின்ன கிஃப்ட் பாக்ஸை செம்பருதியிடம் திணிக்கிறார். அவர் அதை வாங்கி அர்ஜுன் கையில் கொடுத்து. "இது மாமா அத்தையோட பிறந்த நாள் பரிசு, இப்ப அவசரமா சி.எம் வீட்டுக்கு கிளம்பிட்டு இருக்கேன், இன்னிக்கு சாயங்காலம் மலேசியா போறேன், திரும்பி வந்தவுடனே உங்க கல்யாணத்தை பேசி முடிச்சிடலாம்". என்றவுடன் உமா, அர்ஜுன் இருவரது முகங்களும் மலர்ந்தன.

"ரொம்ப தேங்க்ஸ் மாமா…" வெட்கத்துடன் நெளிந்தபடி சொன்னான் அர்ஜுன்.

செம்பருதியும் லீனாவும் அந்த இடத்தை விட்டு நகர்ந்தனர். உமாவுக்கு போன உயிர் திரும்பி வந்தது போல இருந்தது. அவளுக்கு செம்பருதியைப் பார்த்த போது இருந்த பதட்டம் கல்யாணி அம்மாளிடம் இல்லை. ஏற்கனவே ரொம்ப நாள் பழகிய சொந்தம் போல அவரிடம் போய் ஒட்டிக்கொள்ள வேண்டும் போலிருந்தது. அதே போன்றதொரு உணர்வே உமாவைப் பார்த்தபோது கல்யாணி அம்மாளுக்கும் ஏற்பட்டிருந்தது. அவர் அர்ஜுனையும், உமாவையும் மாடியில் இருந்த டைனிங் ரூமுக்கு அழைத்துச் சென்றார்.

அர்ஜுனை பக்கத்தில் உட்காரவைத்துவிட்டு கல்யாணி அம்மாளும், உமாவும் அளவளாவிக் கொண்டிருந்தனர். அர்ஜுனுக்கு இதைக் காண்பதில் உள்ளூர ஒரு சந்தோஷமே! மூன்று மணி நேரம் கழிந்ததே தெரியவில்லை.

கல்யாணி அம்மாளிடம் விடை பெற்றுக் கொண்டு அர்ஜுனும் உமாவும் வெளியே வந்து காரில் ஏறினர். உமாவுக்கு அன்றைய நிகழ்வுகள் அனைத்தும் மறக்க முடியாதவையாக அமைந்தன. ஏதேதோ எண்ணங்களில் ஆழ்ந்திருந்தாள். அவளுக்கு உலகமே இனிமையாகத் தோன்றியது. இருவரும் ஏறி உட்காந்து சில நிமிடங்கள் கடந்த பின்னும் கார் ஸ்டார்ட் ஆகாமல் இருப்பது கண்டு உணர்வு வந்தவளாய் உமா அர்ஜுனைத் திரும்பிப் பார்க்க, அவன் அவளை முறைத்து கொண்டிருந்தான். குறிப்பறிந்தவளாக சிரித்தபடி சீட் பெல்ட்டை இழுத்துப் போட்டுக்கொள்ளவே அர்ஜுன் காரைக் கிளப்பினான்.

காரை ஓட்டியபடியே அர்ஜுன், “உன்னை பெரிய தில்லான பொண்ணுன்னு நெனச்சேன், மாமாவுக்கு முன்னாடி கைகாலெல்லாம் இப்படி டைப் அடிக்குது…” என நக்கலாக பேச்சைத் தொடங்க, உமா தோள்களை சிலுப்பியவாறு, “அவரைப் பார்த்தாலே கைகால் உதறுதுப்பா”, என்றவள்… “ஹேய்...நீனாப்ல என்னாவாம்? நீ பம்முறதத்தான் நானே பார்த்தேனே! இத்தனைக்கும் அவர் உனக்கு சொந்த மாமாதானே!”

காதலியின் கிண்டலை சமாளிக்கும் விதத்தில் அர்ஜுன், “சரி...சரி...அந்த கிஃப்ட ஓப்பன் பண்ணு” என்று சொல்லி லாவகமாக பேச்சைத் திருப்பினான். உமா டேஷ் போர்டிலிருந்து செம்பருதி கொடுத்த அந்த பரிசை எடுத்து ஆர்வமாகப் பிரிக்க, அவள் கண்கள் விரிகிறது. “ஹேய்…கோல்ட் செயின்ப்பா…வாவ்!” அவன் முகத்துக்கு நேராகக் காட்டுகிறாள்.

“எங்கே உனக்கு போட்டு அழகு பார்ப்போம்”… அவனுக்கு அந்த தங்கச் செயினை அணிவித்துப் பார்க்க வருகிறாள். அர்ஜுன் அவசரமாக “ஏய், ஏய்…நோ!” என்றான். அவள் “ஏண்டா?” என்றாள்.

“அத வையி, அது ஒரு ஏழைக் குடும்பத்துக்குப் போக வேண்டியது”.

“ஏழைக் குடும்பத்துக்கா? ஏன்?” குழம்பியவளாக உமா வினவ…

அர்ஜுன் சற்று விரக்தியாக, “ஒவ்வொரு வருஷமும் பிறந்த நாளுக்கு மாமா எனக்கு ஏதாவது ஒரு தங்க நகையைப் பரிசாக் கொடுப்பாரு, நான் அத வித்து ஏதாவது ஒரு ஏழை குடும்பத்துக்கு உதவி செஞ்சிருவேன்”

உமாவுக்கு குழப்பமும் ஆர்வமும் அதிகரிக்கவே… “அதான் ஏன்?”

அர்ஜுன் தனக்குப் பின்னால் பிடிவாதமாக ஹார்ன் அடித்தபடி வழிகேட்ட ஒரு லாரிக்காரனுக்கு வழி கொடுத்தபடியே, “எனக்கு மாமாவை ரொம்ப பிடிக்கும், ஆனா அவரோட பணத்தை பிடிக்காது” என்று சொல்ல… உமா “புரியல” என்றாள், அர்ஜுன் “உனக்குப் புரியாது” என்றான். அதற்குள் மீண்டும் இன்னொரு வேன்காரன் ஹார்ன் அடித்து இம்சிக்க அர்ஜுன் அவனுக்கு வழிகொடுப்பது போல பேச்சை நிறுத்திக் கொண்டான்.

உமா மீண்டும் அந்த டாப்பிக்கை தொடரவிடாமல் அவளை திசை திருப்ப, “ஆமா உன்னோட கிஃப்ட் எங்க? நீ இன்னும் ஒண்ணுமே குடுக்கலையே!” என்றான். உமா இதுவரை பேசிக்கொண்டிருந்த சீரியஸான டாப்பிக்கை உடனடியாக மறந்தே போனாள், டக்கென்று ஒரு உற்சாகம் அவளைத்

தொற்றிக்கொண்டது. “இப்பக் கொடுக்கட்டுமா?” என்றாள். அர்ஜுன் அவளை ஒரு விஷமப் பார்வை பார்த்து “வண்டியை ஓரங்கட்டட்டுமா?” என்றான்.

உமாவின் முகம் வெட்கத்தில் சிவந்தது, “ச்சீ நாயே! இந்த ஒரு விஷயத்துல மட்டும் உன் நேர்மையைக் கழட்டி ஆணில மாட்டீர்ரடா நீ!” என்றவளாக தனது ஹேண்ட் பேக்கை பிரித்து ஒரு பார்சலை எடுத்து அவனிடம் நீட்டினாள். அர்ஜுன் அந்தப் பார்சலை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் சாலையில் கண்களைப் பதித்தவாறே “நீயே பிரி” என்றான்.

“ப்ச், நானே பிரிக்கிறதுக்கா இவ்வளோ கஷ்டப்பட்டு பேக் பண்ணேன்?” உமா சலித்துக் கொள்ள, அர்ஜுன் சரியான இடம் பார்த்து ஒரு ஓரத்தில் காரை நிறுத்தினான். அந்த கிஃப்ட் பேக்கை வாங்கிப் பிரித்துப் பார்த்து அதிர்ச்சியடைகிறான்

ஹேய்…ஸ்மார்ட் கிளாஸ்!!! அர்ஜுன் ஆச்சரியத்தில் கத்துகிறான்!

உமா அவனைப் பெருமையாகப் பார்த்து புன்னகைக்கிறாள்.

அர்ஜுன் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளாதவனாக. “ஏய் இது ஒரு லட்ச ரூபாடி!”

“ஸோ வாட்?” என்றாள் உமா

“ப்ச், இது உன்னொட ரெண்டு மாச சம்பளம்மா இது!”

உமா கிண்டலாக சிரித்துக் கொண்டே, அவன் கன்னத்தை கையால் கிள்ளி…” நீதான் காஸ்ட்லி மாப்பிள்ளையாச்சே! நாம லவ் பண்ணதுக்கப்புறம் இதுதான் உன்னோட ஃபர்ஸ்ட் பெர்த்டே, என்னோட கிஃப்ட் கொஞ்சம் ஸ்பெஷலா இருக்க வேணாமா அதான்”.

அர்ஜுன் கண்கள் கலங்குகின்றன, அவளை அன்புடன் பார்க்கிறான், அவளும் அவனைக் காதலுடன் பார்க்கிறாள்.

*********** *********** ***********

அத்தியாயம்: 3

இளம் “கோ” அறிமுகம்

முதல்வர் கோப்பெருஞ்சோழனின் வீடு…

முதல்வர் தனது வீட்டில் அமைச்சர்களையும், கட்சியின் முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து ஏதோ இரகசிய ஆலோசனை நடத்தவிருப்பதாக தகவல் கசிந்ததையடுத்து பத்திரிக்கை மற்றும் காட்சி ஊடகங்களின் ஆட்களை அங்கு அதிகமாகக் காணமுடிந்தது. அப்படியெல்லாம் எதுவும் இல்லை என்று சொல்லி கட்சிக்காரர்களும், பாதுகாப்பு அதிகாரிகளும் நிருபர்களை திருப்பி அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் அமைச்சர் செம்பருதியின் கார் முதல்வர் வீட்டு வாசலில் வந்து நிற்க, பரபரப்பான மீடியாக்காரர்கள் செம்பருதியின் காரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் அடுக்கடுக்காகக் கேட்ட எந்தக் கேள்வியையும் காதில் வாங்காமல் “இது ஒரு வழக்கமான சந்திப்புதான்” என்று மட்டும் சொல்லிவிட்டு விறுவிறுவென வீட்டின் முதல் மாடிக்குச் ஏறிச்சென்றார். அவரை லீனாவும் மேலும் இரு அதிகாரிகளும் பின் தொடர்ந்து சென்றனர். பின்னாடியே துரத்திக்கொண்டு மீடியாக்காரர்களும் ஓட, அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்ற பாதுகாப்பு அதிகாரிகளை நோக்கி “விட்டுவிடுங்கள் அவர்கள் மேலே வரட்டும்” என்று செம்பருதி சைகையில் காட்ட அவர்கள் விலகி நின்று கொண்டார்கள்.

வீட்டின் முதல் மாடியில் பிரம்மாண்டமான ஹால், பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. முதல்வரின் வழக்கமான பெரிய சந்திப்புகள் நிகழ்வது இங்குதான். செம்பருதி உள்ளே நுழைந்ததும் பக்கத்திலிருந்த அறையிலிருந்து கோப்பெருஞ்சோழனும், அவரது ஒரே மகன் இளங்கோவும் வெளியே வந்தார்கள். செம்பருதி தான் கையில் வைத்திருந்த பொன்னாடையை கோப்பெருஞ்சோழனுக்குப் போர்த்த, புன்னகைத்தபடி அதைப் பெற்றுக்கொண்ட கோப்பெருஞ்சோழன் “9 வருஷங்கள் ஓடுனது தெரியல” என்றார்.

கோப்பெருஞ்சோழனின் மகன் இளங்கோ செம்பருதியின் காலைத் தொட்டு வணங்க, அவனது தோளைத் தொட்டுத் தூக்கிய செம்பருதி “எப்படி இருக்கீங்க தம்பி?” என்று கேட்டவாறு லீனாவிடமிருந்து இன்னொரு பொன்னாடையை வாங்கி அவனுக்குப் போர்த்தினார். இளங்கோ பணிவோடு அதை ஏற்றபடி “உங்க ஆசீர்வாதத்தால நல்லா இருக்கேங்க ஐயா” என்றான். மீடியாக்களின் கேமராக்கள் மின்னொளியை உமிழ்ந்தபடி அந்தக் காட்சிகளைக் கவ்விக்கொண்டன.

செம்பருதி அங்கு கூடியிருந்த மீடியாக்காரர்களைப் பார்த்து, “ஒண்ணும் இல்ல, நான் மத்திய நீர்வளத்துறை அமைச்சராகி இன்னிக்கோட ஒன்பது வருஷங்கள் முடிஞ்சாச்சு, அதுமட்டுமில்லாம அரசுமுறை சுற்றுப்பயணமா இன்னிக்கு சாயங்காலம் மலேசியா கிளம்புறேன். அதனாலதான் தலைவரையும் தம்பியையும் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன். மத்தபடி இங்க இரகசியக் கூட்டமெல்லாம் எதுவும் நடக்கல, பாவம் யாரோ உங்களை தேவையில்லாம அலைய விட்டுருக்காங்க…” என்றார்.

நிருபர்கள் ஏதோ கேட்க முயல, அவர்களைக் கையமர்த்திய செம்பருதி, “மன்னிக்கணும், பேட்டிக்கெல்லாம் நேரமில்ல, இன்னொரு நாள் பார்க்கலாம்” என்றவாறு கோப்பெருஞ்சோழனைப் பின்தொடர்ந்து அருகிலிருந்த அறைக்குள் நுழைந்தார். இளங்கோ அங்கு கூடியிருந்தவர்களிடம் பணிவாக நேரமின்மையை சைகையில் சொல்லி விட்டு அவனும் அந்த அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினான். லீனாவும் செம்பருதியோடு வந்த மற்ற அதிகாரிகளும் ஹாலிலேயே காத்திருந்தார்கள்.

இளங்கோ நமது கதையின் ஒரு முக்கியப் புள்ளியாக இருப்பதால் அந்தப் புள்ளியை தெளிவாக வைத்துவிட்டு கதையைத் தொடரலாம் என்று நினைக்கிறேன்.

இளங்கோ கோப்பெருஞ்சொழனின் ஒரே மகன். மக்கள் தேசிய எழுச்சி முன்னணியின் எதிர்காலம். கட்சிக்காரர்களின் கூற்றுப்படி தமிழகத்தின் வருங்கால நிரந்தர முதல்வர். தந்தைப்புலி 8 அடி பாய்ந்தால் 36 அடி பாயும் அசகாய சூரப்புலி. அரசியல் ஆதாயத்துக்காக எந்த அழிவு வேலையிலும், எத்தனை அபகரிப்பு வேலைகளிலும் ஈடுபடத் தயங்காதவன். தற்போதைக்கு எந்தக் கட்சிப் பதவியிலும் இல்லை, ஆனால் கட்சியின் ஊடகங்களான 'அஸ்வா டிவி' மற்றும் 'பாயும் குதிரை பத்திரிக்கை' ஆகியவை இவனது கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. ஒரு காலத்தில் நாட்டு நடப்புகளை மறைத்து, வெறும் அரசு சார்பான செய்திகளை மட்டுமே சொல்லிக்கொண்டு தமிழக இளைஞர்களால் 'அல்வா டிவி' என்று லந்தாக அழைக்கப்பட்ட அஸ்வா டிவியை தான் பொறுப்பேற்றவுடனே விவாதமேடைகள், அனல் பறக்கும் செய்திகள், சர்ச்சைக்குரிய பேட்டிகள் என்று பரபரப்பாக்கி முதலிடத்திற்குக் கொண்டு வந்தவன் இளங்கோ.

இவனது இந்த திறமையைக் கண்ட கட்சிக்காரர்கள் கோப்பெருஞ்சோழனுக்குப் பிறகு அதே போன்ற திறமையான வாரிசு நமக்கு கிடைத்துவிட்டது என்ற உற்சாகத்தில் கோப்பெருஞ்சோழன் மற்றும் செம்பருதிக்கு இணையாக பேனர்களிலும், கட்டவுட்களிலும் இளங்கோவைக் கொண்டாட ஆரம்பித்தனர். ஒரு சூறாவளிக்கு நிகரானவன் அவன். எனவே இளங்கோவின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஊடங்கங்களில் வேலை செய்பவர்களுக்கும் சரி, கட்சிப்பொறுப்பில் இருக்கும் மற்றவர்களுக்கும் சரி இளங்கோவைக் கண்டால் ஒரு நடுக்கம் ஏற்படுவது திண்ணம். அதேநேரத்தில் செம்பருதி போன்ற கட்சியின் மூத்தவர்களுக்கு உரிய மரியாதை தருவதிலும் இளங்கோவிற்கு நிகர் அவன்தான். இளங்கோவின் ஒரு பக்கத்தை மட்டும்தான் பார்த்திருக்கிறோம். அவனுக்கு இன்னொரு பக்கமும் உண்டு, அதை இன்னொரு பக்கத்தில் எழுதுகிறேன்.

ஹாலில் கூடியிருந்த கூட்டம் இன்னும் கலையாமல் இருந்ததை கதவைப் பூட்டிய பின்னும் உள்ளே ஊடுருவிக் கேட்ட சத்தங்கள் சுட்டிக்காட்டியது. அதை சட்டை செய்யாமல் கோப்பெருஞ்சோழன், செம்பருதி மற்றும் இளங்கோ மூவரும் ஒரு இருக்கையில் சென்று அமர்ந்தனர். செம்பருதி இளங்கோவைப் பார்த்ததும் வழக்கமாகக் கேட்கும் "தம்பி என்னைக்குத்தான் கட்சிப் பொறுப்புக்கு வரப்போறீங்க?" என்ற கேள்வியுடன் பேச்சைத் துவங்கினார். இளங்கோ இது வழக்கமான கேள்விதானே என்ற ரீதியில் அதற்கு பதிலளிக்காமல் ஒரு புன்னகையை மட்டும் பதிலாகக் கொடுக்க, செம்பருதி தொடர்ந்தார். "கட்சில இப்ப புதுசு புதுசா நிறையப் பேரு வளர்ந்துட்டு வர்றாங்க தம்பி. பல சீனியர்களோட போக்கும் சரியில்ல. இதுதான் நீங்க உள்ள நுழைய சரியான நேரம்னு நான் நினைக்கிறேன். நீங்க தலைவரோட புள்ளங்கிறதுனால நான் இத சொல்லல…உங்களுக்கு அந்த திறமை இருக்குன்னு எனக்கு தெரிஞ்சதுனால சொல்றேன். அதுக்கு மேல உங்க விருப்பம்" என்றார்.

கோப்பெருஞ்சோழன் செம்பருதியின் பேச்சை ஆமோதிக்கும் விதத்தில், "இதத்தாங்க நான் ஆறு மாசமா சொல்லிக்கிட்டு இருக்கேன், கட்சில எல்லாரும் சொல்லிட்டாங்க…பெரியவங்க சொல்றத காதுகுடுத்துக் கேட்டாத்தானே!"

இளங்கோ செம்பருதியைப் பார்த்து பணிவாக, "கொஞ்சநாள் ஆகட்டுங்கையா, டிவி சேனலையும், பத்திரிக்கையையும் கவனிக்கிறதுக்கே எனக்கு நேரம் சரியா இருக்கு. இப்பத்தான் சேனல் நம்பர் ஒன் இடத்துக்கு வந்திருக்கு, இன்னும் நிறைய வேலை இருக்கு…" என்று சொல்ல,

செம்பருதி. "சேனல் விஷயத்தில உங்களோட வெற்றியப் பார்த்துத்தான் தலைவர் முதல் அடிமட்ட தொண்டர்கள் வரைக்கும் நீங்க கட்சிப் பொறுப்புக்கு வரணும்னு ஆசைப்படுறாங்க"

இளங்கோ, "புரியுதுங்கையா, சீக்கிரமே வந்திடறேன்" என்று சொல்லியவாறே திடீரெனெ ஏதோ ஞாபகம் வந்தவனைப்போல "ஆமா தனசேகரன் எப்படிங்கையா இருக்காப்ல?" என்று கேட்டான்.

தனசேகரனின் பேச்சை எடுத்ததுமே செம்பருதியின் முகம் சற்று வாடியது. ஒரு பெருமூச்சு விட்டபின் "இருக்கான் தம்பி, சுவிட்சர்லாந்துலதான் இருக்கான், அவனை வச்சுக்கிட்டு என்ன செய்யுறதுன்னுதான் தெரியல" என்று விரக்தியாகச் சொன்னவர் அதே தொனியுடன் தொடர்ந்தார் "ப்ச்ச்…அவன் நடவடிக்கைகள் ஆரம்பத்துல இருந்தே சரியில்ல தம்பி நடந்ததெல்லாம் உங்களுக்கே ஞாபகம் இருக்குமே!… என் பேர கெடுத்துருவான்னுதான் அங்க அனுப்பிச்சு படிக்க வச்சுக்கிட்டு இருக்கேன். படிப்பு இன்னும் முடியல, அடுத்த வருஷத்தோட முடியுது. அடுத்து பேசாம அவனக் கொண்டு வந்து உங்க பொறுப்புலதான் விடப்போறேன்" என்று சொல்ல. இளங்கோ சரியென்று தலையாட்டுகிறான். கோப்பெருஞ்சோழன் சிரித்தபடி, "நல்லதாப்போச்சு, தம்பி கூடவே இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு இளங்கோவைப் பார்த்து கிளம்பும்படி கண்ணசைக்க, அவன், "சரிங்கைய்யா, நீங்க பேசிக்கிட்டு இருங்க நான் இப்ப வந்துடறேன்..கொஞ்சம் அவசர வேலை இருக்கு…" என்று செம்பருதியிடம் விடைபெற்றுக் கிளம்பினான்.

'தனா என்ற தனசேகரன்', செம்பருதி - கல்யாணி தம்பதிகளின் ஒரே மகன். திருமணமாகி பல வருடங்களுக்குப் பிறகு பிறந்த பிள்ளை. சுவிட்சர்லாந்தில் எஞ்சினியரிங் படித்துக் கொண்டிருக்கிறான். இளங்கோ விஷயத்தில் கோப்பெருஞ்சொழனுக்கு கொடுத்து வைத்ததுபோல, தனா விஷயத்தில் செம்பருதிக்கு ஏனோ கொடுப்பினை இல்லை. அப்படி என்ன செய்தான் அந்த தனா? அந்தப் பிரகஸ்பதியின் வீர தீர பராக்கிரமங்களை அடுத்த அத்தியாயத்தில் அர்ஜுன் வாயால் கேட்போம்.

இளங்கோ சென்றவுடனே செம்பருதிக்கு இன்னும் அருகில் நகர்ந்து உட்காந்த கோப்பெருஞ்சோழன் மெதுவாக தயங்கியபடி பேச்சைத் துவங்கினார். "நீ மலேசியா போயிட்டு வந்ததுக்கப்புறம் பேசிக்கலாம்னு நெனச்சுக்கிட்டு இருந்தேன் தம்பி. ஆனா மனசு சரியில்ல, இப்பவே பேசுறது நல்லதுன்னு தோணுது"

"சொல்லுங்கண்ணே" என்றார் செம்பருதி.

கோப்பெருஞ்சோழன், "அடுத்த வருஷம் அக்டோபர்ல லோக்சபா தேர்தல் அறிவிக்கப் போறாங்கன்னு கேள்விப்பட்டேன்."

சொன்னவுடன் செம்பருதியின் முகம் இறுகியது. அமைதியாக கண்களை மூடி மூச்சை இழுத்து விட்டபடி ஆம் என்று தலையாட்டினார்.

கோப்பெருஞ்சோழன், "உளவுத்துறை ரிப்போர்ட் வந்திச்சு", உதட்டைப் பிதுக்கி ஏமாற்றமாக, " நமக்கு சாதகமா இல்ல" என்றார்.

செம்பருதி முகத்தை துக்கமாக வைத்துக்கொண்டு, "கங்கை-காவிரி இணைப்பு சாத்தியமில்லை, இமாலய நதிகளையும் தீபகர்ப்ப நதிகளையும் தனித்தனியா வேணும்னா இணைக்கலாம். அதுவும்கூட உடனே நடக்கிற காரியமில்லைன்னு கூட்டணிக்கட்சி தலைவர் அவசரப்பட்டு பிரஸ்மீட்ல போட்டு உடைச்சுட்டார். இர்ரிகேஷன் மினிஸ்டர்னு பின்ன நான் எதுக்கு இருக்கேன்? தமிழ்நாட்டுல இருக்க பிரச்சனை அவனுக்கென தெரியும்? அந்த ஆளு பேசுனத வச்சு நம்மூரு பத்திரிக்கைக்காரன் பத்தி பத்தியா எழுதி கிழிச்சுட்டான். இனி எந்த முகத்தொடு செம்பருதி அடுத்த தேர்தலில் ஓட்டுக்கேட்க வருவாருண்ணு, பத்தாததுக்கு ஊழல் குற்றச்சாட்டு வேற.."

செம்பருதியின் பதில் கோப்பெருஞ்சோழனுக்கு திருப்தி அளிக்கவிலை என்பதை அவர் முகத்தில் ஏற்பட்ட எரிச்சல் சுட்டிக்காட்டியது, "நம்ம ஸ்டேட் கவர்மெண்ட்டுக்கும் இன்னும் ஒரு வருஷம், எட்டு

மாசந்தான் இருக்கு. அடுத்து என்ன நடக்குமோ தெரியாது. லோக்சபா முடிவுகள் சட்டசபைத் தேர்தலை ரொம்பவே பாதிக்கும். அதுவும் ஊழலை நிரூபிச்சிட்டானுங்கன்னா…”

அவர் முடிப்பதற்குள் செம்பருதி இடமறித்து, “ச்சேச்சே..அப்படியெல்லாம் எதுவும் நடக்காதுண்ணே! எவனும் கண்டுபிடிக்க முடியாது”.

கோப்பெருஞ்சோழன், “எப்படி?... நீர்வளத் துறையில் 4500 கோடி ஊழல்னு எதிர்கட்சிக்காரன் சொல்றான்யா…”

செம்பருதி சற்று எரிச்சலாக, ஆமாண்ணே! உங்களுக்கு உட்பட போக வேண்டிய பங்கு எல்லாருக்கும் போயிருச்சு.. நதிகள் இணைப்பு சாத்தியமில்லன்னு அந்த ஆளு பேட்டி குடுத்ததே பிரச்சனையை உண்டாக்கி நம்மள கூட்டணியில இருந்து கழட்டி விடத்தான். ஆனா உண்மையிலேயே அவிங்களுக்குத்தான் நிறைய பங்கு போச்சு. ஒண்ணும் இல்லண்ணே! இப்படித்தான் ஊழல் ஊழல்னு கத்திக்கிட்டு இருப்பானுங்க...எவனாலயும் நிரூபிக்க முடியாது! நான் வேணா சேலஞ்ச் பண்றேன்.

கோப்பெருஞ்சோழன் சற்று ஆறுதலடைந்ததுபோல முகத்தை மாற்றிக்கொண்டு, “எனக்கு உன் மேல நம்பிக்கை இருக்கு தம்பி! சரி நீ உன் சைடுல எல்லாத்தையும் சேஃப்ட்டி பண்ணி வச்சுட்டேயில்ல...

செம்பருதி எல்லாம் பத்திரமாக இருக்கிறது என்பதுபோல செய்கை காட்டவே, கோப்பெருஞ்சோழன் விஷமமாக “எங்க சுவிஸ்ஸா?” என்று இரகசியமாக கேட்க மேலும் எரிச்சலடைந்த செம்பருதி முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு அவரிடம் திருப்பி, “சுவிஸ்ல போடுற அளவுக்கு நான் ஒண்ணும் பெருசா சம்பாதிக்கலண்ணே! சேர்த்த கொஞ்ச சொத்தும் இருக்க வேண்டிய இடத்துல பத்திரமா பாதுகாப்பா இருக்கு! நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க”.

கோப்பெருஞ்சோழனுக்கு சுருக்கென்றிருந்தது, ஏமாற்றமும் கோபமும் அவர் மனதில் கொப்பளித்தது, ஆனாலும் அவர் அதைக் காட்டிக்கொள்ளாமல், “அப்ப சரி! ஒரு அக்கறையிலதான் கேட்டேன். இப்பதான் மனசுக்கு கொஞ்சம் நிம்மதியாவும் இருக்கு. நீ மலேசியா ட்ரிப் முடிச்சுட்டு வா அப்புறம் பேசிக்கலாம்.”

வேறெதுவும் பேசாமல், அவரது முகத்தை கூடப் பார்க்காமல் கைகளைக் கூப்பி ஒரு வணக்கம் வைத்துவிட்டு விருட்டென்று எழுந்து வெளியேறுகிறார் செம்பருதி, அவரது முகத்தில் கோபம் பற்றி எரிகிறது, அவர் போவதை முறைத்துப் பார்த்தபடி அமர்ந்திருக்கிறார் கோப்பெருஞ்சோழன்.

*********** *********** ***********

அத்தியாயம்: 4

கோடரிக் காம்பின் கதை

சென்னை மெரீனா கடற்கரை...

அர்ஜுனும், உமாவும் கடற்கரையில் அமர்ந்து அலைகள் காலில் வந்து மோதுவதை ரசித்தபடி பேசிக்கொண்டிருக்கிறார்கள். செந்நிற அஸ்தமன சூரியனுக்கும் கண்ணில் தெரியும் கடலின் அக்கரை எல்லைக்கும் உள்ள தொலைவை இக்கரையில் அமர்ந்தபடி நான்கு விரற்கட்டைகளில் அடக்கிவிடலாம். கடற்கரைக் காற்று உமாவின் தலைமுடியை கலைத்து வைப்பதே தனது தலையாய கடமை என்பதுபோல அவள் கூந்தலோடு ஒரு யுத்தம் நடத்திக் கொண்டிருந்தது. கோதிக் கோதி பொறுமையிழந்த உமா மொத்த தலைமுடியையும் வாரி கொண்டையாக முடிந்து கொண்டாள். ஆனாலும் அழகுக்காக நெற்றியில் குறைத்து விட்ட கொத்து முடிகள் கொண்டைக்குள் அடங்காமல் முகத்தில் மோதி கலகம் செய்து கொண்டிருந்தன.

உமா கடந்த இரு நாட்களாக அர்ஜுனிடம் பேசுவதைவிட கல்யாணி அம்மாளிடம் போனில் நிறைய பேச ஆரம்பித்துவிட்டாள். அப்படி பேசியபோது நேற்று கல்யாணி அம்மாள் பேசியதில் தனக்கு ஏற்பட்ட ஒரு குழப்பத்தை அர்ஜுனிடம் கேட்டு தீர்த்துக்கொள்ளும் ஞாபகம் அவளுக்கு வந்தது. “டேய் நான் ஒண்ணு கேட்கட்டுமா” என்றாள்.

அர்ஜுன் விஷமமாக, “ஆனா ஒண்ணு எனக்குப் பத்தாதே” என்று சொல்லி முகத்தை அருகே கொண்டு வர

உமா அவனைத் தள்ளிவிட்டு, “ப்ச், அதில்லடா உங்க மாமா அத்தைக்கு குழந்தைங்க யாரும் இருக்காங்களா?”

சீரியஸான அர்ஜுன் அவளைக் கூர்ந்து பார்த்து, “ஏன் திடீர்னு உனக்கு இந்த சந்தேகம்?”

உமா, “இல்ல நேத்து ஆண்ட்டி என்கூட போன்ல பேசும்போது ‘என் பையன் பிறந்ததுக்கப்புறம் உடம்பு வெயிட் கூடிருச்சுன்னு’ எதேச்சையா சொன்னாங்க. அப்பத்தான் அவங்களுக்கு ஒரு பையன் இருக்கிறதாவே எனக்கு தெரிஞ்சது. நீயும் இதுவரைக்கும் இது பத்தி எதுவும் சொன்னதில்லையா. ஒருவேளை அவங்க பையன் இப்ப உயிரோட இருக்கானா இல்லையா எதுவுமே புரியல, அவங்ககிட்ட கேட்க பயம்; அதான் உங்கிட்ட கேக்குறேன். அன்னைக்கு நாம அவங்க வீட்டுக்கு போனப்பக்கூட அங்க எந்த போட்டோவையும் பார்த்ததா எனக்கு ஞாபகம் இல்ல.... அதான் எனக்கு ஒண்ணுமே புரியல.

அர்ஜுன் அவளை சில நொடிகள் பார்த்துவிட்டு பின்னர் திரும்பி கடலை முறைத்துப் பார்த்தபடி “ஆமா, அவங்களுக்கு ஒரு பையன் இருக்கான், உயிரோடதான் இருக்கான், அந்த விஷயம் நிறையப் பேருக்கு தெரியாது” என்றான்.

உமா ஆச்சரியமாக, “ஓ...அப்படியா, எங்க?”

அர்ஜுன், “சுவிட்சர்லாந்தில படிச்சுகிட்டு இருக்கான், ஆனா...”

உமா, “ஆனா என்ன?”

அர்ஜுன், “ப்ச், அது ஒரு மோசமான ஜந்து, எங்க அத்தை வயித்தில பிறக்க வேண்டியதே இல்ல. பொண்ணுங்க விஷயத்துல ஒண்ணாம் நம்பர் கிரிமினல்”

உமா அலட்சியமாக, “ம்ம்ம்… பெரிய இடத்துப் பிள்ளைங்கன்னா அப்படித்தான்”

அர்ஜுன், “அப்படி இல்ல உமா, எங்க அத்தை தெய்வம் மாதிரி, எங்க மாமாகூட அரசியல்ல மோசம்தான், ஆனா லேடீஸ் விஷயத்தில அவர் ஜெம். எங்க அத்தைய தவிர வேற யாரையும் அவர் நிமிந்து கூடப் பார்க்க மாட்டார். இவங்களுக்குப் போயி இப்படி ஒரு கேவலமான பிறவி பிள்ளையா பிறந்திடுச்சு. இத்தனைக்கும் கல்யாணமாகி பல வருஷமா பிள்ளையில்லாம தவமிருந்து பெத்த புள்ள”

அவனை இந்தியாவுல வச்சிருந்தா மாமாவோட அரசியல் வாழ்க்கையையே ஸ்பாயில் பண்ணிருப்பான். அவன் காலேஜ் பர்ஸ்ட் இயர் படிக்கும்போதே அவனால ரெண்டு பொண்ணுங்க தற்கொலை பண்ணிக்கிட்டாங்க (உமா அதிர்ச்சியடைகிறாள்). இந்தப் பிரச்சனையை புலனாய்வு பத்திரிக்கைகள் மோப்பம் பிடிச்சு நோண்ட ஆரம்பிச்சிட்டாங்க. அப்புறம் மாமாவும், கோபெருஞ்சோழனும் எப்படியோ அவங்களை சமாளிச்சு இந்தப் பயல அப்பவே சுவிஸ்ஸுக்கு பார்சல் பண்ணிட்டாங்க. அப்பத் தொலைஞ்சு போனவன்தான், எப்பவாச்சும் இரகசியமா இந்தியாவுக்கு வந்திட்டு அம்மா அப்பாவை பார்த்திட்டுப் போவான், ரெண்டு பொண்ணுங்க தற்கொலை பண்ணதா நான் சொன்னது ஒரு கேஸ்தான். இதுமாதிரி நிறைய இருக்கு…

உமா, “ஓ…அவ்வளோ சீரியஸ்ஸான கேசா அவன்?..பாவம் ஆண்ட்டியும், அங்கிளும்”

அர்ஜுன், “அவன் அங்க போயும் திருந்தல, ஆனா அங்க பண்றது இங்க யாருக்கும் தெரியாது. சரி அவன விடு… இந்த நேரத்துல அவனப்பத்தி பேசிக்கிட்டு”

இவர்கள் பேசிக்கொண்டிருந்த வேளையில் நான்கு விரற்கட்டை தள்ளியிருந்த கதிரவன் சற்று கீழிறங்கி கடலில் கால் நனைத்திருந்தான். அர்ஜுன் அந்த அழகை ரசித்துக் கொண்டே தனது தோற்பையைத் திறந்து உமா பரிசளித்த ஸ்மார்ட் கிளாசை வெளியே எடுத்தான். அதைப் பார்த்ததும் உமா குதூகலமானாள்.

“ஏ..யூஸ் பண்ணி பார்த்தியாடா இத?” ஆர்வமாய்க் கேட்டாள்.

அர்ஜுன், “கொஞ்சம் ட்ரைப் பண்ணிப் பார்த்தேன், ஒரு நிமிஷம் இரு”

ஸ்மார்ட் கிளாஸை கண்களில் அணிந்து காதருகே உள்ள டச் பேடைத் தட்டுகிறான். கிளாஸ் உயிர் பெறுகிறது. இந்தக் கதை முழுவதும் அர்ஜுனோடு சேர்ந்து பயணிக்கப் போகும் ஸ்மார்ட் கிளாஸ் பற்றி தெரியாதவர்களுக்கு சொல்லுகிறேன். கண்ணருகே கம்பியூட்டரை சுமந்து கொண்டு செல்வதுதான் ஸ்மார்ட் கிளாஸ் அணியும் அனுபவம். மூக்குக் கண்ணாடியுடன் ஒரு குட்டி கம்பியூட்டர் இணைக்கப்பட்டிருக்கும். உங்களது குரலின் கட்டளைக்கு இசைந்து அது ஏவல்புரியும். உங்கள் விழியெதிரேயுள்ள கண்ணாடித் திரையில் உலகத்தை விரித்துக் காட்டும். ஆர்வமாயிருந்தால் யூடியூப் அல்லது கூகுளில் “Smart Glasses” என்று டைப் செய்து பாருங்கள்!

அர்ஜுன், OK Glass...Send Message to Uma Shenbagaraman...I Love You என்று கட்டளையிட

அவனது குரல் கட்டளைக்கு ஏற்ப I Love you என்று டைப் ஆகி உமாவுக்கு செய்தி பறக்கிறது. உடனடியாக உமாவின் செல்பேசியில் Beep சத்தத்துடன் I Love you என்ற குறுஞ்செய்தி வந்து சேருகிறது.

உமா அந்த குறுஞ்செய்தியைப் பார்த்து உற்சாகமாக “வாவ்… சூப்பர்ப்பா” என்கிறாள். மாலைச் சூரியனின் ஆரஞ்சு ஒளி அவளது மஞ்சள் முகத்தில் பட்டு அவள் மூக்கின் நுனியில் ஒரு தங்க நட்சத்திரம் மின்னியதைக் கண்ட அர்ஜுன், “உமா, அப்படியே இரு, அசையாத” என்று சொல்லிவிட்டு “OK Glass take a picture” என்று சொல்ல உமாவின் அழகுமுகம் மாயக்கண்ணாடியின் திரையில் பதிவானது. அர்ஜுன் கண்ணாடியைக் கழற்றி உமாவுக்கு மாட்டிவிட உமா அதைப் பார்த்து “வாவ்…சான்சே இல்லடா… செம்ம டெக்னாலஜில்ல” என்றாள்.

திடீரென்று ஏதோ உள்ளுணர்வினால் உந்தப்பட்டவளாக சட்டென்று கண்ணாடியைக் கழற்றி, திரும்பி அவனை ஒரு சந்தேகப்பார்வை பார்த்து “ஏய், இதை வச்சு கண்ட பொண்ணுகளையும் போட்டோ எடுக்க மாட்டியே!”

அர்ஜுன் பொய்க் கோபத்தை வரழைத்து கொண்டு “ஓய், நான் என்ன அந்த மாதிரி ஆளா?” என்று அடித்தொண்டையில் கனைக்க. உமா அவன் தோளில் சாய்ந்தபடி “நீ நல்ல பையன்தான் தெரியும், ஆனாலும் இந்த ஆம்பளைப் பசங்கள நம்பவே முடியாதுல்ல” என்றாள். அர்ஜுன் மெலிதாக சிரித்தபடி அவள் காதுகளருகில் சாய்ந்து இரகசியமாய் கிசுகிசுத்தான் “நீ என்னை நூறு சதவீதம் நம்பலாம்”

*********** *********** ***********

அத்தியாயம்: 5

ஆழத்தில் கிடந்த இரகசியங்கள்

இளங்கோவின் இன்னொரு பக்கத்தைப் பற்றி எழுதுவதாக எழுதியிருந்தேன். இளங்கோவின் இன்னொரு பக்கத்தின் பெயர் பவானி. அவன் ஆசையாசையாக காதலித்துக் கட்டிக்கொண்ட மனைவி. ஆனால் அதுவரை அப்பாவுடன் ஒழுங்காக இருந்த உறவு சீர்குலையக் காரணம் இந்தக் காதல்தான். கட்சிப்பெரியவர்கள் அத்தனை பேரையும் மீறி இளங்கோ எதிர் சாதியைச் சேர்ந்த பவானியை கைப்பிடித்ததுதான் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தின் தலைப்புச் செய்தி. சில முற்போக்கு ஊடகங்கள் இளங்கோவையும்- பவானியையும் சார்லஸ் டயானா ரேஞ்சுக்கு கொண்டாடி வேண்டுமென்றே கோப்பெருஞ்சோழனுக்கு வெறுப்பேற்றின.

சாதியவாதிகளுக்கு கசப்பைத் தந்தாலும், அந்த நிகழ்வுக்குப் பின் ஒட்டுமொத்த தமிழக இளைஞர்களின் ஹீரோவாகிப் போனான் இளங்கோ. இவர்களின் காதல் சற்று சுவாரசியமானது. தியாகம் செய்யும் காதல் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். தியானம் செய்யும் காதல் தெரியுமா? சஸ்பென்ஸாக இருக்கட்டும், பின்னர் சொல்கிறேன் ;-)

பொதுவாக வீட்டை எதிர்த்து காதல் திருமணம் செய்த தம்பதிகளிடம் அந்த வீட்டுப் பெரியவர்கள் விரைப்பாக இருப்பது வாடிக்கைதான். ஆனா அந்த விரைப்பெல்லாம் வீட்டில் குவாகுவா சத்தம் கேட்கும்வரைதான். வேண்டாத மருமகளானாலும் ‘உண்டாகிவிட்டாள்’ என்று தெரிந்தாலே மனம் உள்ளூர உருகிவிடும். ஆனாலும் குழந்தை பிறக்கும் வரைக்காவது தங்கள் கித்தாப்பை மெயிண்டெயின் பண்ணிக்கொண்டிருப்பார்கள். பவானியும் தனக்கு ஒரு குழந்தை பிறந்து உறவுகளை இணைத்து வைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருந்தாள். ஆனால் மூன்று முறை கருத்தரித்து கருவோடு சேர்ந்து கனவுகளும் கலைந்து போனதுதான் மிச்சம். அதனால் மனதளவில் நொறுங்கிப் போயிருந்தாள் பவானி. அவளை ஆறுதல்படுத்தி இயல்பு நிலைக்கு கொண்டுவருவது இளங்கோவுக்குப் பெரும் சவாலாயிருந்தது.

பவானி பிறந்து சில நாட்களிலேயே அவள் அப்பா ஒரு விபத்தில் காலமாகிவிட்டார். அவள் அம்மாதான் பவானியின் அண்ணன் தனஞ்செயனையும், பவானியையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து ஆளாக்கினார். வறுமைக்கோட்டிற்கும் நடுத்தர வர்க்கத்துக்கும் இடையில் கிடந்து அல்லாடும் சராசரிக் குடும்பம்.

பவானி வீட்டுக்கு வந்ததிலிருந்தே கோப்பெருஞ்சோழன் அவளை எதிரி போலத்தான் பார்த்துக் கொண்டிருந்தார். மனதின் ஆழத்தில் அவருக்கு எதிர் சாதியின் மீதிருந்த வெறுப்பு அனைத்தும் ஒட்டுமொத்தமாக பவானி மீதும் அவள் குடும்பத்தார் மீதும் திரும்பியிருந்தது.

லண்டனில் இருக்கும் மிகப்பெரிய தொழிலதிபரும், தனது சாதிக்காரரும், ஆரம்பமுதலே கட்சிக்கு நிதியை வாரி வழங்கி வருபவருமான லோகநாதனின் மகளை இளங்கோவுக்குக் கட்டிவைக்கும் ஆசையில் இருந்தார் கோப்பெருஞ்சோழன். அந்தக் கனவில் மண்ணை வாரிப் போட்ட பவானியை கடுமையாக மனதளவில் வெறுத்தாலும் மக்கள் மத்தியில் தனது பெயர் கெட்டுவிடக்கூடாது என்பதற்காக தன்னை அடக்கிக் கொண்டிருந்தார்.

இளங்கோ அதற்கு நேர்மாறாக பவானியை உயிருக்கு உயிராக நேசித்தான். அவளை மட்டுமல்ல அவள் குடும்பத்தின் மீதும் ரொம்பவே பாசம் வைத்திருந்தான். பி.எஸ்.சி கம்பியூட்டர் சயன்ஸ் முடித்துவிட்டு வெட்டியாக ஊரைச் சுற்றிக்கொண்டிருந்த தனது மைத்துனன் தனஞ்செயனுக்கு மும்பையில் மூன்று கோடி செலவில் ஒரு சாஃப்ட்வேர் கம்பேனியை அமைத்துக் கொடுத்திருந்தான். பவானியின் அம்மாவும் தனஞ்செயனோடு இப்போது மும்பையில் போய் செட்டிலாகிவிட்டார். மும்பையில் இளங்கோவுக்கு

நண்பர் வட்டம் அதிகம். எனவே சென்னையில் இருந்தால் தனது கட்சிக்குள் இருக்கும் சாதி வெறியர்களால் பவானி குடும்பத்துக்கு ஏதேனும் பிரச்சனை வரலாம் என்று கருதி தனது நண்பர்கள் பாதுகாப்பில் அவர்களை மும்பையில் குடியமர்த்திவிட்டான். இளங்கோ தனது அப்பாவின் கோபத்தை அறிந்து வைத்திருந்ததும் அதற்கொரு காரணம்.

பவானியின் தாயாரைப் பொறுத்தவரையில் மகளுக்கு குழந்தைப்பேறு தள்ளிப்போவதுதான் அவரது தற்போதைய கவலையாக மாறியிருந்தது. எந்த தெய்வமாவது கண் திறக்காதா என்ற நம்பிக்கையில் மகாராஷ்டிராவிலுள்ள கோவில்களையெல்லாம் ஒன்றுவிடாமல் சுற்றி வந்து கொண்டிருந்தார். குடும்ப ஜோதிடர் “உன் மகளுக்கு ஐந்தாமிடமெல்லாம் நல்லாத்தான் இருக்கு, கோச்சார குரு பார்க்கட்டும் கொஞ்ச நாள் காத்திருக்கச் சொல்லு” என்று சொன்னது அவரை ஓரளவுக்கு ஆறுதல்படுத்தி இருந்தது.

கோச்சார குரு பார்த்துவிட்டாரோ என்னவோ தெரியவில்லை பவானிக்கு மீண்டும் மாதவிலக்கு தள்ளிப்போனது. அவளைப் பரிசோதிக்க ஒரு வயதான பெண் டாக்டர் வந்திருந்தார். பரிசோதனைகள் முடிந்த பின்னர் அவள் மீண்டும் கருவுற்றிருப்பது உறுதி செய்யப்பட்டது. பவானி கட்டிலில் அமர்ந்திருந்தாள். எதிரில் டாக்டரும், அருகே இளங்கோவும், இளங்கோவின் தாயாரும் முதல்வரின் மனைவியுமான மீனாட்சி அம்மாளும் அமர்ந்திருந்தனர். மீனாட்சி அம்மாவைப் பற்றி இதே அத்தியாயத்தில் பிறகு பார்ப்போம்.

பவானியின் கையைப் பிடித்தபடியே டாக்டர் சொன்னார். “உனக்கு மன அழுத்தம்தாம்மா பெரிய பிரச்சனை, அடுத்தடுத்து மூணு தடவை அபார்ட் ஆனதுக்கும் அதுதான் காரணம். பத்தாததுக்கு உடம்பு வேற ரொம்ப வீக்கா இருக்கு... மற்றபடி அடிப்படைல குழந்தை பிறக்குற வாய்ப்பெல்லாம் நல்லாத்தான் இருக்கு. மனசு சரியானா உடம்பும் சரியாகிடும். நல்லா சப்பிடு, சந்தோஷமா இரு… தமிழ்நாட்டுக்கே புடிச்ச பொண்ணாகிட்ட நீ, உனக்கென்ன குறைச்சல்? வீட்டுக்குள்ள இருக்கிற பிரச்சனையெல்லாம் தன்னால சரியாப்போயிடும்”.

பவானியின் பதிலை எதிர்பார்க்காமல் இளங்கோவிடம் திரும்பி, “இளங்கோ, இவ மன அழுத்ததுல இருந்து வெளிய வர்றது உன் கையிலதாம்ப்பா இருக்கு. உன் மனைவிகூட நல்லா டைம் ஸ்பெண்ட் பண்ணு. அவளை ஒரு குழந்தை மாதிரி பார்த்துக்கோ” அந்த வயதான பெண் டாக்டர் உரிமையாகப் பேசிய தொனி அவர் கோப்பெருஞ்சோழன் குடும்பத்துக்கு நீண்ட காலம் பரீட்சயமானவர் என்பதைக் காட்டியது.

இளங்கோ சரியென்று தலையாட்டினான். டாக்டர் விடைபெற்றார், இளங்கோவையும் பவானியையும் தனிமையில் விட்டுவிட்டு டாக்டரை வழியனுப்ப மீனாட்சி அம்மாளும் கிளம்பி விட்டார். இளங்கோ பவானியின் அருகே வந்து உட்காந்து அவளை இழுத்து தனது மடியில் கிடத்த, அவன் வாயிலிருந்து புறப்படும் ஆறுதல் வார்த்தையை எதிர்பார்த்தபடி பவானி ஒரு குழந்தையைப்போல வந்து படுத்தாள்.

இளங்கோ, “எங்கப்பா உன்னை ஏத்துக்கலங்கிறதுதானே பிரச்சனை? அது போகப் போக சரியாகிடும்மா. அவரு காதலுக்கெல்லாம் எதிரி கெடையாது...ஆனா நாம ஜாதி மாறி கல்யாணம் பண்ணிக்கிட்டது கட்சியில கொஞ்சம் சலசலப்பை உண்டாக்கிருச்சு. நம்ம கட்சி நடக்குறதே ஜாதி அரசியல வச்சுத்தான்னு உனக்குத் தெரியும்ல?”

பவானி, “தெரியுங்க ஆனா…”

இளங்கோ அவளைப் பேசவிடாமல் தனது விரல்களால் அவள் வாயை மூடி, “இன்னிக்கு ஒரு பெரிய உண்மைய உங்கிட்ட சொல்றேன்...இப்பப் போனாங்களே, இவங்கள என்னோட உண்மையான அம்மான்னு நெனச்சுக்கிட்டு இருக்கியா?

பவானியின் கண்கள் ஆர்வத்தில் விரிகின்றன, இளங்கோ தொடர்கிறான், "என்னைப் பெத்த அம்மா ஒரு குஜராத்திக்காரங்க. எங்கப்பா ஆரம்ப நாட்கள்ல அரசியல்ல ஏற்பட்ட ஒரு பிரச்சனையால கொஞ்ச நாள் குஜராத்துல தலைமறைவா இருந்தபோது அவங்க காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க, நான் பிறந்து மூணு மாசமான போது எங்கம்மா இறந்துட்டாங்க...இவங்க அப்பாவோட ரெண்டாவது ஒய்ஃப்..."

பவானி அவன் மடியிலிருந்து சட்டென்று எழுந்து உட்காந்தாள், சற்றுமுன் தன் காதுகளில் கேட்டவற்றை அவளால் நம்பமுடியவில்லை. "அப்படியா?" என்றாள் ஆச்சரியமாக.

"எங்கம்மா ஒரு குஜராத்திங்கிற உண்மை தெரிஞ்சா நாங்க இங்க அரசியல் பண்ண முடியாது...முக்கியமா என்னை ஒரு தமிழனா மக்கள் ஏத்துக்க மாட்டாங்க...எங்க கட்சிக்காரனே என்னை ஏத்துக்க மாட்டான்... உண்மைய மறைச்சு கட்சிக்குள்ள என்னை வளர்க்குறதுக்கு எங்கப்பா பட்ட பாடு கொஞ்ச நஞ்சமில்ல, நீ தமிழச்சிதான், ஆனா வேற ஜாதியாச்சே... அதுவும் தமிழ்நாட்டுல ஜாதிச்சண்டைன்னு வந்தாலே அடிச்சுக்கிறது உங்காளுகளும் எங்காளுகளுந்தான்... இப்ப மறுபடியும் அதே மாதிரி ஒரு சிக்கல உருவாக்கிட்டேன்னுதான் அப்பாவுக்கு என்மேல கோபம்... எங்க கட்சிக்கு விழுற ஓட்டுக்கள்ல மெஜாரிட்டி எங்க ஜாதி ஓட்டுத்தான். எங்கப்பா உன்னைப் பார்த்தாலே ஏன் டென்ஷனாகுறாருன்னு இப்பப் புரியுதுல்ல?..."

பவானி விரக்தியாக தலையாட்டினாள். இளங்கோ அவள் தலையைக் கோதியவாறு, "ஆனா...பரவாயில்ல பவானி... ஒரு குழந்த பிறந்து அது முகத்தைப் பார்த்தா அப்பாவுக்கு எல்லாம் மறந்துடும்..."

"அதுக்குத்தாங்க நானும் ஆசைப்படுறேன்...ஆனா", அதுவரை பவானிக்குள் கனன்றுகொண்டிருந்த மன அழுத்தம் மீண்டும் வெடித்தது. தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். இளங்கோ அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டான். கணவனின் அணைப்பில் சற்று ஆறுதலடைந்தாள் பவானி. அந்த நேரத்தில் இளங்கோவுக்கு அப்பாவிடமிருந்து செல்போனில் அழைப்புவர மனைவியின் நெற்றியில் ஒரு அழுத்தமான முத்தம் கொடுத்துவிட்டு கிளம்பிச் சென்றுவிட்டான்.

பவானி மெதுவாக கீழ் தளத்துக்கு இறங்கி வந்தாள். மெயின் ஹாலில் மீனாட்சி அம்மாள் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். பவானி மெல்ல அவரருகே வந்து அமர்ந்தாள். மீனாட்சி அம்மாளுக்கு பவானியை மிகவும் பிடித்திருந்தது. ஆனாலும் தனது கணவருக்கு பயந்து அவர் முன்னிலையில் அவளிடம் ஒரு இடைவெளியைக் கடைப்பிடித்து வந்தார். கணவன் இல்லாதபோது மருமகளிடம் அதிகம் நெருங்கிக் கொள்வார். பவானியும் இதை கவனிக்காமல் இல்லை. ஆனால் தனது மாமியாரின் சூழ்நிலையை நன்றாகப் புரிந்து கொண்டதால் அவள் அதைப் பெரிதுபடுத்தவில்லை.

மாமியாரின் அருகே வந்து அமர்ந்தவள் "அத்தை...நான் உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்". மீனாட்சி அம்மாள் புன்னகைத்தபடி "சொல்லும்மா" என்றார்.

"நீங்க அவரோட பெத்த அம்மா இல்ல...வளர்த்த அம்மாதான்னு சொன்னாரு... அது உண்மையா?"

பவானியிடமிருந்து அக்கேள்வியை எதிர்பாராத மீனாட்சி அம்மாளின் முகத்திலிருந்த புன்னகை சட்டென மறைகிறது..ஒரு செயற்கையான சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "இந்த விஷயத்தை அவன் உன்கிட்டயே இன்னைக்குத்தான் சொன்னானா?"

பவானி, "இப்பத்தான் சொன்னாரு அத்தை.."

மீனாட்சி அம்மாள் விரக்தியாக சிரித்தபடி, "அழுத்தக்காரனுகம்மா அப்பனும் மகனும்...(பவானி அவரை விநோதமாகப் பார்க்கிறாள்) இளங்கோ என்னை எப்பவுமே வளர்த்த அம்மாவா பார்க்கமாட்டான், அது

எனக்கு சந்தோஷந்தான்...ஆனா இந்த உண்மைய தாலி கட்டுன உங்கிட்டையே ஒண்ணரை வருஷமா சொல்லாம இருந்திருக்கான் பாரு...

பவானி ஒன்றும் புரியாமல் திருதிருவென விழிக்கிறாள்

மீனாட்சி அம்மாள் தொடர்ந்தார், "அவரு என்னோட தாய்மாமன்தான், எங்கம்மாவோட கூடப்பிறந்த தம்பி... ஆரம்பத்துல நாங்க எல்லாருமே கஷ்டப்படுற சராசரி குடும்பந்தான். சின்ன வயசுலயே பெரியவுங்க எங்க ரெண்டுபேருக்குந்தான் கல்யாணம்னு பேசி முடிவு பண்ணி வெச்சிருந்தாங்க... இங்க அரசியல்ல ஏதோ ஒரு பிரச்சனைன்னு கொஞ்சநாள் தலைமறைவா இருக்கிறதுக்காக இவர் குஜராத்துக்குப் போயிருந்தாரு..அப்பெவெல்லாம் இவரு பெரிய பதவில இல்ல. அங்க போனவரு அங்க ஒரு குஜராத்திப் பொண்ணப் பார்த்து காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டாரு...ஒரு ரெண்டு வருஷம் அங்கேயே வாழ்ந்திருப்பாங்க...திடீர்னு ஒருநாள் மழையோட ஒரு மூணு மாசக் குழந்தையையும் கையில ஏந்திக்கிட்டு எங்க வீட்டு வாசல்ல வந்து கண்ணீரும் கம்பலையுமா நின்னாரு..பொண்டாட்டி செத்துப்போயிட்டான்னு.... எங்கம்மாவுக்கு மனசு கேக்குமா? தம்பியாச்சே! என்னைப் பிடிச்சு இந்த ஆளு கையில குடுத்திருச்சு...

"அவங்க முதல் ஒய்ஃப் எப்படி இறந்தாங்க?" பவானி கேட்டாள்.

மீனாட்சி அம்மாள் சுரத்தையின்றி பதில் சொன்னார், "ஏதோ வயித்த வலின்னு தாங்க முடியாம விஷத்தக் குடிச்சிருச்சின்னு சொன்னாரு...என்ன நடந்துச்சோ யாருக்குத் தெரியும்?...அந்தப் பொம்பள ஃபோட்டோவக்கூட இதுவரைக்கும் நான் பார்த்ததில்ல.."

பவானி அடுத்த கேள்வியைக் கேட்டாள், "இந்த விஷயம் என் வீட்டுக்காரருக்கு எப்படி தெரிஞ்சிச்சு அத்தை?" மீனாட்சி அம்மாள், "நாங்க அவனுக்கு உண்மையை மறைச்சுத்தான் வளர்த்துட்டு வந்தோம், அவன் ஸ்கூல்ல படிக்கிற காலத்துல ஒருநாள் ஏதோ ஒரு கோபத்துல எங்கம்மா அவங்கிட்ட உண்மையப் போட்டு உடைச்சிருச்சு... அது அவன் மனசுல ஆழமா பதிஞ்சிருச்சு. ஆனாலும் இன்னிக்கு வரைக்கும் அவன் என்னை பெத்த அம்மா மாதிரிதான் பார்க்கிறான்...நானும் அவன் மேல உயிரையே வச்சிருக்கேன்".

“தயவு செஞ்சு இந்த விஷயத்தை உன் மனசுக்குள்ளேயே போட்டு புதைச்சிடும்மா..உங்க வீட்டு ஆளுகளுக்குக் கூட தெரிய வேணாம். இந்த விஷயம் வெளிய போச்சுன்னா பெரிய பிரச்சனை ஆயிடும்.”

மீனாட்சி அம்மாளின் கையைப் பிடித்து இழுத்து சத்தியம் வைத்த பவானி “புரியுது அத்தை... நான் கண்டிப்பா யாருக்கும் சொல்ல மாட்டேன்.” என்றாள் உறுதியாக.

மீனாட்சி அம்மாள் விரக்தியாகத் தொடர்ந்தார், “சோறு தண்ணி இல்லாமக் கூட இருந்துருவாங்கம்மா இந்த ரெண்டு பேரும்...ஆனா பதவி, அதிகாரம் இல்லாம இருக்க மாட்டாங்க... அப்பன் பத்து மடங்குன்னா மகன் இருபது மடங்கு...பதவிக்காக என்ன வேணும்னாலும் செய்வாங்க..."

“ஆனா ஒரு விஷயத்துல இளங்கோ கொஞ்சம் பரவாயில்லம்மா... அவன் உன்னை உண்மையா நேசிக்கிறான்...அது எனக்கு நல்லாத் தெரியும். ஆனா எனக்குத்தான் அந்தக் கொடுப்பினை இல்லை. அன்னில இருந்து இன்னிக்கு வரைக்கும் அடிமைப் பொழப்புதான்”. அத்தையின் மனநிலையை உணர்ந்தவளாய் ஆறுதலாக அவரது தோளைப் பற்றினாள் பவானி.

*********** *********** ***********

அத்தியாயம்: 6

அம்பலமானது காதல்

சென்னை அடையாறு, உமாவின் வீடு...

உமாவின் அம்மா பார்வதி வீட்டின் மொட்டை மாடியில் துணி காயப் போட்டுக்கொண்டு இருந்தார். உமாவின் அண்ணன் திருநாவுக்கரசு அந்த மொட்டை மாடியில் இருந்த சின்ன அறையில் அமர்ந்து தனது கம்பியூட்டரை நோண்டிக்கொண்டிருந்தான்.

திருநாவுக்கரசு, "ஏம்மா..இங்க ஒருத்தன் உட்காந்து மாங்கு மாங்குன்னு கம்பியூட்டர்ல வேல செஞ்சுக்கிட்டு இருக்கேன் ஒரு காஃபி, டீ, காம்ப்ளான் ஏதாவது போட்டுத் தரணும்னு தோணுதா உனக்கு?"

அம்மா துணி காயப்போட்டபடி எரிச்சலாக, "ஆமா நீ கிழிக்கிற கிழிக்கு காம்ப்ளான் ஒண்ணுதான் கொறச்சல்.. ஏண்டா உன்னை விட எட்டுக் குத்துக்கு இளையபுள்ள, உனக்கப்புறம் எம்.சி.ஏ முடிச்சவ இன்னிக்கு மாசம் ஐம்பதாயிரம் சம்பாதிக்கிறா..நீ இன்னும் வெட்டியாவே ஊரு சுத்திக்கிட்டு இருக்கியே.. அசிங்கமா இல்ல?, என்னாதான் பிரச்சனை உனக்கு"

திருநாவுக்கரசு, "இப்போதைக்கு ட்ரம்புதான் பிரச்சனை, என் அருமை அவருக்கு இன்னும் தெரியல, இங்க இருக்கிற யாருக்கும் எனக்கு வேல குடுக்கிற அளவுக்கு தகுதி இல்ல... எப்படியும் இன்னும் ஒரு வருஷத்துல வாஷிங்டன் டி.சில போயி உக்காந்துருவேன் பாரு.. "அம்மாவின் வசவுகளை எப்போதும் காமெடியாகவே எடுத்துக் கொள்ளும் திரு அம்மாவை வெறுப்பேற்றினான்

அம்மா மேலும் எரிச்சலானார், "ஆமாமா உன்னையத்தான் அங்க வெத்தல பாக்கு வச்சு அழைக்கிறாய்ங்க, கூரையேறி கோழி புடிக்க வக்கத்தவன் வானம் ஏறி வைகுண்டம் போறேன்னு சொன்னானாம்.

அம்மாவின் அர்ச்சனை திருவுக்கு துளிகூட சொரணையைத் தூண்டவில்லை, அம்மாவை மேலும் கடுப்பேற்றும் விதமாக, "நான் எவ்வளவு பெரிய ஹேக்கர்னு எவனுக்கும் புரியலம்மா... இரு இரு ஒருநாள் அந்த ஜிமெயில் சர்வரயே ஹேக் பண்ணி காட்டுறேன்..அன்னிக்கு இந்த உலகமே என்னை திரும்பிப் பார்க்கும்.

அண்ணனது பேச்சு காதில் விழவே அவனுக்கு கவுண்ட்டர் கொடுத்தபடியே மாடிப்படியேறி வந்தாள் உமா, "மொதல்ல ஜிமெயில்ல ஒரு அட்டாச்மெண்ட் ஒழுங்கா அனுப்பத் தெரியுமாடா உனக்கு...சர்வர ஹேக் பண்ற மூஞ்சியப்பாரு, அம்மாவுக்கு ஒண்ணும் தெரியாதுன்னுதானே இவ்வளோ தெனாவெட்டா பேசுற. உன் ஃபீல்டுக்காரன்கிட்ட பேசிப்பாரு நீ ஹேக்கரா இல்ல ஜோக்கரான்னு அவன் சொல்லுவான்" பேசிக்கொண்டே அவனருகில் சென்றவள் அவனது கம்பியூட்டர் மானிட்டரைப் பார்த்து விடுகிறாள்.

"ஐய்யோ, அம்மா இவன் வேலை செய்யலம்மா, டோரண்ட்டுல படம் டவுன்லோடு பண்ணிக்கிட்டு இருக்கான்."

அம்மா பல்லைக் கடித்துகொண்டே அவன் மேல் இருந்த கோபத்தை ஈரத் துணியை பிழிவதில் காட்டினார். "அதானே பார்த்தேன், இந்நேரம் வேலை கீலை செஞ்சிருந்தாத்தான் முன்னேறி இருந்திருக்குமே மூதேவி!"

உமா அவனைப் பார்த்து, “டேய் டோரண்ட் சைட்டையெல்லாம் பிளாக் பண்ணி வச்சிருக்காங்க, உனக்கு மட்டும் எப்படிடா ஓப்பனாகுது?”

திரு வேகமாக, “அதுதாண்டி ஹேக்கர்ங்கிறது, உங்களுக்கெல்லாம் எங்க புரியப்போகுது? நாளைப்பின்ன வருவேல, அண்ணா புதுப்படம் ஏதாவது டவுன்லோடு பண்ணி வச்சிருக்கியான்னு அப்பப் பாத்துக்கிறேன்”

அம்மாவின் கவனம் உமாவின்மீது திரும்பியது, “ஆமா நீ எப்படீ வந்த, ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமா எங்கதான் போயிட்டு வர்ற?”

உமா, “இன்னிக்கு ஒருநாள்தானம்மா ஃப்ரீ, ஃப்ரண்ட்ஸோட வெளிய போயிட்டு வர்றேன்…”

அம்மா, “உங்கப்பா இந்நேரம் உயிரோட இருந்திருந்து, நீ சொன்னதக் கேட்டிருந்தா உன்னைய இங்கேயே வெட்டிப் போட்ருப்பாரு.. பொண்ணா லட்சணமா வீட்டுல இருக்கிறத விட்டுட்டு உனக்கென்ன பிரண்ட்ஸோட சுத்துறது வேண்டியிருக்கு, வேலைக்குப் போற திமிரா?”

உமா, அம்மாவின் திட்டலை சட்டை செய்யாதவளாய் மாடியிலிருந்து கீழே இறங்க அம்மா இன்னும் சத்தமாகக் கத்தினார். “ஏய் இருடி..எங்கடி அந்த கல்லு வச்ச நெக்லஸ?? நானும் வீடுபூராம் தேடித்தேடிப் பார்த்தேன் எங்கேயுமே காணல?”

உமாவுக்கு “பக்”கென்றிருந்தது, அம்மாவிடமிருந்து இந்தக் கேள்வியை எதிர்பாராதவளாக ஒரு நொடி உறைந்து நின்றாள். பின்னர் உணர்வு வந்தவளாய்,

“அது..அது...மாலதி எமர்ஜென்ஸின்னு கேட்டாம்மா அவங்கப்பாவோட ஆஸ்பத்திரி செலவுக்கு...அதான் அடகுக்கு கொடுத்திருக்கேன்...இன்னும் ரெண்டு மாசத்துல சம்பளம் வாங்கி மீட்டுக் குடுத்துருவா”

அம்மாவுக்கு டென்ஷன் தலைக்கேறியது, “அடிப்பாவீ...யாரக் கேட்டுடி குடுத்த? எட்டுப் பவுனுடி அந்த நெக்லஸூ..ஒரு லட்ச ரூபாய்க்கு மேல போகும்....உன் கல்யாணத்துக்காக வயித்தக் கட்டி வாயக்கட்டி சேர்த்து வச்ச நகைடி அது…அவ மீட்டுக் குடுக்காம ஏமாத்திட்டா என்ன பண்ணுவ?”

அந்தத் தருணத்துக்காகவே காத்திருந்தவன் போல நக்கலாகப் பேசிக்கொண்டே திரு இடமறித்தான், “ம்மா..ம்மா...இரும்மா...பதறாத...அந்த நெக்லஸ் எங்க போச்சுன்னு எனக்குத் தெரியும்... அந்தத் துணியெல்லாம் அப்படியே அங்க வச்சிட்டு கீழ வா, உன் மக வண்டவாளத்த ஆதாரத்தோட தண்டவாளத்துல ஏத்துறேன்” என்றபடி மாடிப்படியில் இறங்க அவனை உமாவும், அம்மாவும் பின்தொடர்ந்தார்கள். உமாவின் அடி வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்தது.

உமா டென்ஷனாகக் கத்தினாள், “டேய்..என்னா பெரிய டிடக்டிவ் மாதிரி சீன் போடுற? என்னடா தெரியும் உனக்கு?”

வேகமாக வீட்டுக்குள் நுழைந்த திரு டேபிள் டிராயரில் இருந்து ஒரு பில்லை எடுத்து கையில் வைத்து ஆட்டியபடி தெனாவட்டாக நின்றான். அந்த பில் என்னவென்று கூர்ந்து பார்த்த உமாவின் முகம் வெளிறியது.

அம்மா கத்தினார், “என்னாடா அது?”

திரு கிண்டலாக, “ம்ம்ம்?… உன் கல்லு நெக்லஸ் ஸ்மார்ட் கிளாசா மாறிடுச்சு”

அம்மா, “புரியிற மாதிரி சொல்லித் தொலையேண்டா”

திரு, சொல்றேம்மா ஷாக் ஆகாத..(நடிகர் திலகம் சிவாஜி ஸ்டெயிலில்) உன் பொண்ணு லவ் பண்றாம்மா, உம் பொண்ணு லவ் பண்றா…

அம்மா உண்மையிலேயே ஷாக்கானார், காதுகளைப் பொத்தியபடியே “சிவசிவா, என்னாடி சொல்றான் உங்கண்ணேன்?”

உமா தலையைக் கவிழ்ந்தபடி அமைதியாக பக்கத்தில் இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

திரு, “இதுக்கே ஷாக் ஆனா எப்புடீ? இன்னும் கொஞ்சம் ரியாக்ஷன மிச்சம் வச்சுக்கோ, பையன் யாரு தெரியுமா சென்ட்ரல் மினிஸ்டரோட மருமகன்...புளியங்கொம்பு புளியங்கொம்புன்னு சொல்லுவாய்ங்களே… இது அதுக்கும் மேல…

அம்மா இரு கைகளாலும் தலையில் ஓங்கி அடித்துக் கொண்டு கதறி அழ ஆரம்பிக்கிறார். உடனே சீரியஸான திரு ஓடிப்போய் அவரைத் தடுக்கிறான் “ம்மா..ம்மா..அழாதம்மா...ஹார்ட் அட்டாக் ஏதாவது வந்திடப்போவுது..இங்க பாரு... இவ்வளவு தெரிஞ்சும் டென்ஷனாகாம நான் ஏன் கூலா இருக்கேன் தெரியுமா? அந்தப் பையன் பத்தரை மாத்துத் தங்கம்... அவனப் பத்தி நான் நல்லா விசாரிச்சுட்டேன்.”

அரண்டு போய் உட்காந்திருந்த உமாவின் முகத்தில் லேசான நம்பிக்கை துளிர் விட்டது...அண்ணனின் வார்த்தைகள் கேட்டு அவனை நன்றியோடு பார்த்து புன்னகை பூக்கிறாள். அழுது கொண்டிருந்த அம்மா அழுகையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தார்.

அம்மா, “ஏண்டா அவன் நல்ல பையனா இருந்தாலும், அவங்க வீட்டுல கல்யாணத்துக்கு ஒத்துக்குவாங்களா?”

உமா அவசரமாகக் குறுக்கிட்டாள், “ஒத்துக்கிட்டாங்கம்மா… நாலு நாளைக்கு முன்னாலதான் மினிஸ்டரைப் போயி மீட் பண்ணோம்...அர்ஜுனுக்கு அப்பா இல்லை, அம்மா மட்டுந்தான்...அம்மாவோட கூடப் பொறந்த அண்ணந்தான் சென்ட்ரல் மினிஸ்டர். அவரு நான் உங்களப் பிரிச்சிர மாட்டேன் கவலைப்படாத மலேசியா போயிட்டு வந்து உங்க கல்யாண விஷயமா பேசி முடிச்சிரலாம்னு சொல்லியிருக்காரு.”

அம்மா இன்னும் ஆறுதலடையாதவராய் குழப்பத்தோடு, “ஏம்ப்பா..அவங்க குலம், கோத்திரமெல்லாம்…?”

திரு நக்கலாக, “பார்த்தியா இந்தக் கெழவிய?… யம்மோய், இதெல்லாம் அவனுக பார்க்கணும் ..நம்ம பார்க்கக்கூடாது…" (உமா சிரிக்கிறாள்) “ஏம்மா உனக்கு ம.தே.எ.மு தெரியாதா? பாயும் குதிர, பாயும் குதிரன்னு போயி ஓட்டுப் போடுவியே, சின்னம் மட்டும்தான் தெரியும் வேற ஒரு மண்ணும் தெரியாது… நம்ம ஜாதிதாம்மா அவங்களும்…செம்பருதி தெரியாதா?”

செம்பருதியின் பெயரைச் கேட்டவுடனேயே அம்மாவின் முகம் பிரகாசித்தது. “செம்பருதி குடும்பமா… யம்ம்மாடி!” என்றார் ஆச்சரியமாக, “எனக்கு ஜாதி, குலம், கோத்திரமெல்லாம் ஒண்ணும் இல்லப்பா, ஆனா நம்ம சொந்தக்காரனுகளுக்கு பதில் சொல்லி மாய முடியாது. அப்பா வேற உயிரோட இல்லையா, நாக்குல நரம்பில்லாம பேசிருவானுக”.

உமா இயல்பு நிலைக்கு வந்தவளாய் அண்ணனிடம் கேட்டாள், “எப்படிடா கண்டுபிடிச்ச?”

திரு, “ மவளே..நீயெல்லாம் பேசாத...சொந்த அண்ணன் பொறந்தநாளுக்கு இதுவரைக்கும் ஒரு ஸ்மார்ட் போன்… இல்ல இல்ல, பேசிக் போனாவது வாங்கிக் குடுத்திருக்கியாடி...நேத்து வந்தவனுக்கு நெக்லஸை அடகுவச்சு ஒரு லட்ச ரூவாய்க்கு ஸ்மார்ட் கிளாசு..ம்ம்ம்? (உமா சிரிக்கிறாள்)

என் ஃபிரண்டு உன்னையும் அர்ஜுனையும் ரெஸ்டாரண்ட்டுல ஒண்ணா பார்த்துட்டு வந்து சொன்னான். அதுக்கப்புறம் நான் உனக்குத் தெரியாமலே உன்னை வாட்ச் பண்ண ஆரம்பிச்சுட்டேன். முதல்ல ரொம்ப கோபப்பட்டேன்..அர்ஜுன் கேரக்டர் தெரிஞ்சதுக்கப்புறம் கொஞ்சம் கூலாயிட்டேன்.

“அந்த நெக்லஸ் மேட்டரை எப்படிடா கண்டுபிடிச்ச” கொஞ்சம் ஆசுவாசமாகி கண்களை சேலை முந்தானையால் துடைத்தவாறே அம்மா கேட்டார்.

அது ஒண்ணும் இல்லம்மா...நேத்து ஏதாவது பைசா தேறுமான்னு இவ ஹேண்ட் பேக்கை நோண்டிகிட்டுருந்தேன்..அப்பத்தான் இவ ஒரு லட்ச ரூபாய்க்கு ஸ்மார்ட் கிளாஸ் வாங்கின பில்லு கிடைச்சுச்சு...நீயும் இன்னிக்கு நகையக் காணோம்னு கேட்டியா..லைட்டா போட்டு வாங்குனேன்..குட்டெல்லாம் வெளிய வந்திடுச்சு... “ உமாவும் அம்மாவும் சிரிக்கிறார்கள்.

*********** *********** ***********

அத்தியாயம்: 7

மேக்கப் இல்லா முகங்கள்

இரவு மணி 11.00 இருக்கும். இளங்கோ ஒரு டீஷர்ட்டும், ஷாட்சும் அணிந்தபடி சோபாவில் படுத்துக் கொண்டு தனது ஐபேடில் எதையோ பார்த்துக்கொண்டிருந்தான். சாதாரண பனியனும், லுங்கியும் அணிந்தவராய் கோப்பெருஞ்சோழன் வந்து அவனருகே இருந்த சோபாவில் அமர்ந்தார். யாரோ வந்திருக்கிறார்கள் என்பதை இளங்கோ உணர்ந்தாலும் அது பவானியாகத்தான் இருக்கும் என்ற நினைப்பில் தொடர்ந்து ஐபேடில் மூழ்கியிருந்தான்.

சிறிது நேரம் அவனைப் பார்த்துக்கொண்டே இருந்த கோப்பெருஞ்சோழன் “டேய்” என்றார். வந்திருப்பது அப்பா என்று தெரிந்ததும் சட்டென எழுந்து உட்காந்து “என்னப்பா” என்றான்.

கோப்பெருஞ்சோழன், “என்ன செய்யிற…”

“இல்லப்பா, நாளைக்கு பத்திரிக்கையில எடிட்டர் போஸ்ட்டுக்கு ஒரு இண்டர்வியூ இருக்கு, அதான் வந்திருக்க ரெஸ்யூம்ஸையெல்லாம் பார்த்துக்கிட்டு இருந்தேன்”, இளங்கோ முடிப்பதற்குள்…

“அந்த மீடியா எழவு கருமாந்திரத்தையெல்லாம் தூக்கி தூரப் போட்றா…” அந்த அமைதியான நேரத்தில் வீடே அதிரும்படி கோப்பெருஞ்சோழன் கத்தியதில் இளங்கோ சற்று வெலவெலத்துப் போனான். அப்பா நிச்சயமாக ஒரு அசாதரண மனநிலையில் இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டான். ஏனெனில் கோபப்பட்டாலும் கத்துவது அப்பாவின் இயல்பு அல்ல என்பது அவனுக்குத் தெரியும்.

சத்தம் கேட்டு ஓடி வந்த பவானி ஹாலில் மாமனாரும் கணவனும் அமர்ந்திருந்தது கண்டு சற்று தூரத்தில் நின்று கொண்டாள். அவள் முகத்தில் பதட்டம் படர்ந்திருந்தது. அவளைப் பார்த்த கோப்பெருஞ்சோழன் “ஒண்ணும் இல்ல நீ உன் ரூமுக்குப் போம்மா” என்றார். அதற்குள் என்னவோ ஏதோவென்று பதறியடித்து அங்கு மீனாட்சி அம்மாளும் வந்து சேர, கோப்பெருஞ்சோழன் மேலும் டென்ஷனாகி “அட உள்ள போங்கன்னு சொல்றேன்ல” என்று மீண்டும் கத்த, அடுத்த வினாடி அந்த இடத்தைக் காலி செய்த இருவரும் அவரவர்கள் அறையில் போய் தஞ்சம் புகுந்தார்கள்.

இளங்கோ கையிலிருந்த ஐபேடை எதிரே இருந்த டீப்பாயில் வைத்துவிட்டு, அப்பாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி “ஏம்ப்பா, என்ன ஆச்சு?” என்று கேட்க.

சற்று அமைதியான கோப்பெருஞ்சோழன், “ஏண்டா கட்சில என்ன நடக்குதுன்னே கவனிக்க மாட்டியா?”

அப்பா தொடர்ந்து பேசட்டுமென்று இளங்கோ அமைதியாக இருந்தான்.

அவன் கண்களைக் கூர்ந்து பார்த்த கோப்பெருஞ்சோழன் “உனக்கு எதுவுமே புரியலைல்ல, பட்டுனு நேரடியா விஷயத்த சொல்லட்டா? செம்பருதி கட்சிய உடைக்கப் ப்ளான் பண்றதா நம்பத்தகுந்த வட்டாரங்கள்ல இருந்து செய்தி வந்திருக்கு, போதுமா?”

அதிர்ச்சியடைந்த இளங்கோவைக் கோபமாகப் பார்த்தபடி “அதுக்குத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டு இருக்கேன். கட்சியே நம்ம கைய விட்டுப் போனப்புறம் இந்த பத்திரிக்கை, டிவியலாம் வச்சு நாக்கு வழிக்குறதுக்கா?”

இளங்கோ காட்டமாகக் கேட்டான், “என்னப்பா சொல்றீங்க, செம்பருதி கட்சிய உடைக்க ப்ளான் பண்றாரா?”

மௌனமாக ஆமோதித்து தலையாட்டினார் கோப்பெருஞ்சோழன், “டேய்...கடந்த ஒன்பது வருஷத்துல, சென்ட்ரல் மினிஸ்டரான பின்னே அவன் சைடுல இருந்து நமக்கு எவ்வளவுடா பங்கு வந்திருக்கும்?”

இளங்கோ சற்று யோசித்தவனாய், “ஒரு 1000 C இருக்கும்ப்பா”

கோப்பெருஞ்சோழன், “ஆனா ஊழல் நடந்தது எவ்வளோ தெரியுமா?”

இளங்கோ, “4,500 கோடி, இது மீடியாவுலயெல்லாம் வந்திருச்சே…”

கோப்பெருஞ்சோழன் தோளைக் குலுக்கி “ஹூம்” என்று ஒரு விரக்திச் சிரிப்பை உதிர்த்தார். “இதை பொதுமக்கள் சொன்னாப் பரவாயில்ல தம்பி, நீயும் நம்புற பாரு! அந்த அளவுக்கு, அவ்வளோ தெளிவா காசை அடிச்சிருக்கான், தில்லா சொல்றான்டா…ஒரு பய கண்டுபிடிக்க முடியாதுன்னு”

இளங்கோ கோபமும், பரபரப்பும் நிறைந்தவனாக, அப்பா தொடர்ந்து பேசட்டும் என்று அமைதியாக இருந்தான். “4,500 கோடி இல்லடா, கூட ஒரு சைபர சேத்துக்க…45,000 கோடி...அதுல இவன் அடிச்சது மட்டும் 30,000 கோடிக்கு மேல இருக்கும்... எனக்கு வந்த உறுதியான தகவல்படி…”

இளங்கோ அதிர்ந்தவனாக, “மை…காட்!”

கோப்பெருஞ்சோழன், “அந்த மயித்துக்குத்தான் சொல்றேன், இந்த டிவி வெங்காயத்தையெல்லாம் தூக்கிப்போட்டுட்டு கட்சிப் பதவிக்கு வாடான்னு”.

ஒரு விரக்தியான சிரிப்பை உதிர்த்தபடி, “ஹூம்..பொண்டாட்டி தாலியையும், கொஞ்சம் நெலத்தையும் வித்து ஒண்ணரைக் கோடி ரூபாயை நதிநீர் இணைப்புக்காக குடுக்குறேன்னு சொல்லி நடிச்சுட்டு… தக்காளி அடிச்சான் பார்றா முப்பதாயிரம் கோடிய…”

இளங்கோவின் மனதிற்குள் பூகம்பம் வெடித்ததை அவன் கண்கள் சொல்லியது

கோப்பெருஞ்சோழன், “கட்சிக்குள்ள எனக்கு இருக்கிற அதே செல்வாக்கு அவனுக்கும் இருக்கு தம்பீ. நம்மளவிட நிறைய பணமும் இப்ப அவன்கிட்ட இருக்கு. அந்த நம்பிக்கைலதான் இப்ப கட்சியக் கைப்பத்த களம் இறங்கிருக்கான். இப்பவே நிறைய அமைச்சர்கள், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் அவன் சூழ்ச்சி தெரியாம அவன் பக்கம் சாய ஆரம்பிச்சிட்டாங்க. இது நமக்கு ரொம்ப ஆபத்து....எமகாதகண்டா அவன்!”

கட்சியில் இவ்வளவு நடந்து கொண்டிருப்பது தனக்கு தெரியாது போனதை எண்ணி உள்ளுக்குள் புழுங்கினான் இளங்கோ. அவன் மனதில் ஓடிய எண்ணங்களை அவன் கண்கள் வழியாக படித்த கோப்பெருஞ்சோழன், “செம்பருதிய கண்காணிக்கிறதும், அவனை அடக்கி வைக்கிறது சாதாரண விஷயமில்ல தம்பி. அவனவிட பெரிய ஜித்தனா இருந்தாத்தான் அது முடியும். அவன் எதிர்த்திட்டு ஆள் சேர்க்குறவன் இல்ல, ஆள் சேர்த்துட்டு எதிர்க்குறவன். கடந்த ரெண்டு வருஷங்களா பல எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் பிள்ளைங்க கல்யாணத்துக்கு, பிசினஸ்க்குன்னு எக்கச்சக்கமா வாரி கொடுத்திருக்கான். அவங்க எல்லாரும் அவன் சூழ்ச்சி தெரியாம நம்ம மேல இருக்கிற அன்புலதான் அண்ணன் இதை செய்யிறாருன்னு நினைச்சு குளிர்ந்துபோய் அவன் காலை சுத்தி வர ஆரம்பிச்சுட்டாங்க.

திடீர்னு நாளைக்கு செம்பருதி ஒரு பிரச்சனையை கிளப்பி நமக்கு எதிரா போர்க்கொடி தூக்கினா அவன்கிட்ட வாங்கித் தின்ன நன்றிக்கு அவங்க எல்லாரும் அவன் பக்கம்தான் சாய்வாங்க புரியுதா?”

இளங்கோ ஆழமாக யோசித்தபடி, “யாரும் உங்களை விட்டுட்டு அவ்வளவு சீக்கிரம் அந்தாளு பக்கம் சாய்வாங்கன்னு எனக்கு தோணலப்பா, ஆனா அரசியல்ல அசந்தா எது வேணா நடக்கலாம்” என்றான்.

கோப்பெருஞ்சோழன், “இப்பப் புரியுதுல்ல, எது வேணா நடக்கலாம். இன்னைக்கு இருக்கிற சூழலைப் பார்க்காத. இது 20-20 மேட்ச் மாதிரி, திடீர்னு எல்லாம் மாறும், மேல இருக்கிறவன் திட்டம் என்ன? யாரை எப்ப, எப்படி ஆட்டிவைப்பான்னு யாருக்கும் தெரியாது.”

“அமைச்சரானதுக்கப்புறம் செம்பருதிக்கு இப்ப பெரிய பெரிய வெளிநாட்டு தொடர்பெல்லாம் வேற கிடைச்சிருக்கு, அவன் அந்த பணத்தை சுவிஸ் பேங்குல போட்டு வச்சிருக்க விவரமும் எனக்கு சமீபத்துலதான் உறுதியாச்சு, அதோட விபரங்களையெல்லாம் கவனிச்சுகிறது அவனோட மகன் தனா, அப்பனுக்கும் மகனுக்கும் ஆயிரம் உரசல் இருந்தாலும் பண விஷயத்துல அவனுங்களுக்குள்ள ஒரு அண்டர்ஸ்டேண்டிங் இருக்குமோங்கிற டவுட்டு எனக்கு கொஞ்ச நாளா இருந்துக்கிட்டே இருந்துச்சி. அதுவும் இப்ப கிளியர் ஆகிடுச்சு.”

இளங்கோ, “இதெல்லாம் உங்களுக்கு எப்படிப்பா தெரிஞ்சது”

கோப்பெருஞ்சோழன் தனது இருக்கையை விட்டு எழுந்து, இளங்கோவின் தோள்களில் கைவைத்து, “அதெல்லாம் நான் உனக்கு அப்புறம் சொல்றேன். இப்போதைக்கு பயப்படுறமாதிரி ஒண்ணும் இல்ல, ஆனா என்னோட கணக்குப்படி சீக்கிரமே கட்சிக்குள்ள பூகம்பம் வெடிக்கும், அதுக்கு முன்னாடி நாம தயார் ஆகுறது நல்லது, நைட்டெலாம் தூங்காத, யோசி” என்று சொல்லிவிட்டு கிளம்பினார். இளங்கோ அப்பா போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

*********** *********** ***********

அத்தியாயம்: 8

எதிர்பாராத நிகழ்வுகள்

அன்று இரவு உண்மையிலேயே இளங்கோவுக்கு தூக்கம் வரவில்லை, பக்கத்தில் திரும்பிப் பார்த்தான், பவானி ஒரு குழந்தை போல தூங்கிக்கொண்டிருந்தாள். அவ்வப்போது எழுந்து அறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். செம்பருதியின் மீது அவனுக்கு இப்போது கொலைவெறி ஏற்பட்டிருந்தது. ஃப்ளாஸ்கில் டீ இன்னும் சூடாக இருந்தது, அதை ஊற்றிக் குடித்தபடி அவனுக்குப் பிடித்த ஈசிச் சேரில் அமர்ந்து விட்டத்தை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கையிலிருக்கும் டீயை விட அவனது இரத்தம் இன்னும் அதிகமாகவே சூடேறியிருந்தது. அவனால் எதையும் நிதானமாக சிந்திக்க முடியவில்லை. தூக்கமும் வரவில்லை. அது நள்ளிரவு மணி இரண்டே முக்கால் என அவனுக்கு எதிராக மாட்டப்பட்டிருந்த சுவர்க் கடிகாரம் மெல்லிய விளக்கு ஒளியின் ஊடாக அவனுக்குக் காட்டியது. நாளை காத்திருக்கும் அலுவல்கள் நினைவுக்கு வரவே, “சரி இதற்கு மேல் விழித்திருப்பது நல்லதல்ல” என்று தனக்குள் சொல்லிக்கொண்டு டீயை கடைசியாக ஒரு சிப் உறிஞ்சிவிட்டு கட்டிலில் போய் படுத்தான்.

புரண்டு புரண்டு படுத்தும் தூக்கம் வரவில்லை. “ச்சே, இந்த நேரத்துல டீ குடிச்சிருக்கக் கூடாது “ என்று தன்னைத்தானே கடிந்து கொண்டு “வந்து தொலையேன்” என்று தூக்கத்திடம் கெஞ்சியபடி படுத்திருந்தான். இரவு மூன்றரை மணி வாக்கில் நித்திரை மெல்ல அவன்மீது படர்ந்தது.

ஒரு அரை மணிநேரம்தான் தூங்கியிருந்திருப்பான், அதிகாலை 4.00 மணி…

அறையின் கதவு முரட்டுத்தனமாக தட்டப்பட்டது..”இளங்கோ, இளங்கோ…” அறைக்கு வெளியே பயங்கர பதட்டத்துடன் அப்பா கத்தும் சத்தம்.

இளங்கோவும், பவானியும் அலறியடித்து எழுந்தார்கள். இளங்கோ ஓடிப்போய் கதவைத் திறந்தான். கோப்பெருஞ்சோழனும், மீனாட்சி அம்மாளும் நின்று கொண்டிருந்தார்கள். அம்மா அழுது கொண்டிருந்தார், அப்பாவின் முகம் இதுவரை தான் கண்டிராத அளவுக்கு துக்கத்தையும், அதிர்ச்சியையும் சுமந்திருந்தது. தனது வலதுகையால் நெஞ்சைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தார்.

இளங்கோ, “என்னப்பா..என்ன ஆச்சு..”

“டேய் செம்பருதி... மலேசியாவில இருந்து…” கோப்பெருஞ்சோழனால் மேற்கொண்டு பேசமுடியவில்லை...மூச்சு வாங்குகிறது.

“என்னப்பா ஆச்சு? பதறாம சொல்லுங்க…" அப்பாவின் நெஞ்சில் கை வைத்து தேய்த்துவிட்டபடி கேட்டான் இளங்கோ

முதல்வர் கோப்பெருஞ்சோழன் தன்னைத்தானே ஆசுவாசப்படுத்திக்கொண்டு, "செம்பருதி...மலேசியாவில இருந்து சென்னைக்கு திரும்பி வந்த விமானம் நடுவழியிலேயே கிராஷ் ஆகி கடல்ல விழுந்திருச்சாம்..யாரும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லைன்னு சொல்றாங்க.

இளங்கோவும், பவானியும் அதிர்ச்சியடைய… வீட்டு லேண்ட்லைன் இணைப்புகள், வீட்டிலிருந்த செல்போன்கள் அத்தனையும் ஒருசேர அலறத்தொடங்கின.

சில நிமிடங்களில் முதல்வரின் பி.ஏ உள்ளிட்ட அதிகாரிகள், கட்சியினர் அடுத்தடுத்து அங்கு வந்தபடி இருந்தனர், அவர்கள் அனைவரின் கண்களிலும் கண்ணீர். சிலர் உணர்ச்சிவசப்பட்டு சத்தமிட்டு புலம்பி அழுதனர். முதல்வர் பி.ஏவிடம் போன்கால்களை அட்டண்ட் பண்ணும்படி சைகையில் சொல்லிவிட்டு தள்ளாடியபடி தனது அறைக்குச் செல்ல முயல இளங்கோ, மீனாட்சி அம்மாள் இருவரும் அவரைத் தாங்கிப் பிடித்தபடி அழைத்துச் சென்று சோபாவில் அமரவைத்தனர்.

இளங்கோவுக்கு நடப்பவை கனவா, நனவா என்று புரியவில்லை, சில மணி நேரங்களுக்கு முன்னர் அப்பாவும் தானும் பேசியதும், அதன் பின்னர் தனது அறைக்குள் தூக்கமின்றி செம்பருதியின் மீது கொலைவெறியோடு அங்குமிங்கும் அலைந்ததும், யாரை அழிக்க வேண்டுமென்று நினைத்தானோ அதே நபர் இறந்ததாக சில மணி நேரங்களுக்குள் செய்தி வந்து சேர்ந்திருப்பதும் அவனுக்கு ஒரு விநோத உணர்வை ஏற்படுத்தியிருந்தன. ஒரு பக்கம் அவனுக்குள் இருந்த மிருகம் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருந்தது. அதே நேரத்தில் அவனது இன்னொரு உணர்வு அது தவறு என்று அந்த மிருகத்தை அடக்க முயன்று கொண்டிருந்தது. ஆனால் முடிவில் அந்த மிருகமே வென்றது. இளங்கோ செம்பருதி செத்தது நல்லதுதான் என்ற முடிவை இரகசியமாக மனதுக்குள் எடுத்துக்கொண்டான்.

ஆனால் அவன் அப்பாவைப் பார்த்தபோது, அவரது செயல்கள்தான் அவனுக்குப் புதிராக இருந்தது. மார்பில் அடித்தபடி அழுது கொண்டிருந்தார். “ஐய்யோ…உங்களுக்கு ஏதாவது ஆயிடப் போகுதுங்க, அழாதீங்க!” என்று அம்மா அவரைத் தேற்றிக்கொண்டிருந்தார். அப்பா, அம்மாவிடம் “45 வருஷ நட்புடி. அண்ணே! அண்ணேன்னு சுத்தி வருவானே, இனி அவன் இல்லாம கட்சிய எப்படி நடத்தப் போறேனோ, ஐயோ!” அப்பா சத்தம்போட்டு குழந்தைபோல அழுதது வீடே எதிரொலித்தது. மற்ற அனைவரும் அழுதபடி கோப்பெருஞ்சோழனின் அறையின் வாசலில் நின்றார்களேயொழிய உள்ளே நுழைந்து அவருக்கு ஆறுதல் சொல்ல யாருக்கும் தைரியம் வரவில்லை.

ஆயிரம்தான் இருந்தாலும் நண்பர், உடன்பிறவா தம்பி என்று 45 வருடம் பழகிய உறவை அகால மரணத்தில் இழப்பது மனதை நொறுக்கத்தான் செய்யும். அப்பாவின் இரும்பு மனதுக்குள்ளும் நட்புக்கு இவ்வளவு முக்கிய இடம் இருந்திருக்கிறது என்பது இளங்கோவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்தியாவுக்கு அந்த நாளின் பொழுது ஒரு சோகச் செய்தியோடு விடிந்தது.

“வணக்கம்! ஒரு துயரச் செய்தி, அரசுமுறை சுற்றுப்பயணமாக மலேசியா சென்றுவிட்டு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு.செம்பருதி மலேசியத் தலைநகர் கோலாலம்பூரிலிருந்து திரும்பி வந்த தனி விமானம் விபத்துக்குள்ளாகி கடலில் விழுந்ததாக தகவல் கிடைத்திருக்கிறது. அதில் அமைச்சர் திரு.செம்பருதி மரணமடைந்திருக்கலாம் என்று உறுதியாக நம்பப்படுகிறது. அதில் அவரோடு பயணம் செய்த அவரது செயலாளர் செல்வி.லீனா மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள், விமானிகள் உட்பட 8 பேர் உயிரிழந்ததாகவும் நம்பப்படுகிறது. அவர்களது சடலங்களையும், விமானத்தின் கருப்புப் பெட்டியையும் தேடும் பணியில் மலேசிய அரசு தற்போது முழுவீச்சில் இறங்கியுள்ளதாக கோலாலம்பூரிலிருந்து வரும் முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே, நாடு முழுவதும் ஏழு நாட்கள் துக்கம் அனுஷ்ட்டிக்கபடும் என்றும், தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்றும் மத்திய அரசு சார்பில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.”

*********** *********** ***********

அத்தியாயம்: 9

காற்றோடு கலந்த தலைவன்

ஐந்து நாட்கள் கழிந்து...

அமைச்சர் செம்பருதி உள்ளிட்ட 5 பேர்களின் உடல்கள் கடலில் இருந்து அதுவரை மீட்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த உடல்கள் இன்னும் சென்னைக்கு வந்து சேரவில்லை. சுவிட்சர்லாந்திலிருந்த செம்பருதியின் மகன் தனா சென்னைக்கு வராமல் நேராக மலேசியா சென்று தந்தையின் உடலை அங்கிருந்து சென்னைக்குக் கொண்டு வரும் பணியில் ஈடுபட்டிருந்தான். செய்தி கிடைத்த நாளிலிருந்து கல்யாணி அம்மாளுடன் அருகிலேயே பவானி, மீனாட்சி அம்மாள், அர்ஜுன், உமா, அர்ஜுனின் அம்மா(செம்பருதியின் தங்கை) அனைவரும் இருந்தனர். கல்யாணி அம்மாள் கிட்டத்தட்ட நடைப்பிணமாகிவிட்டிருந்தார். கணவரோடு கொண்ட இளவயதுக் காதலின் இனிமையான நினைவுகள் வந்து வந்து அவரைக் கொஞ்ச கொஞ்சமாகக் கொன்று கொண்டிருந்தது.

செம்பருதியின் உடல் வந்தவுடன் அது கட்சி அலுவலக வாசலில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலைக்குள் தகனம் செய்யப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருந்தது. அச்செய்தி அறிவிக்கப்பட்டவுடன் அலைகடலென தொண்டர்களும் பொதுமக்களும் சென்னையில் வந்து குவிந்தனர். முதல்வர் கோப்பெருஞ்சோழன், இளங்கோ, சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் மற்றும் முக்கியப்புள்ளிகள் ஏற்கனவே விமானநிலையத்தில் காத்திருந்தனர். சடலத்தைச் சுமந்து வந்த விமானம் சென்னை விமானநிலையத்தில் வந்து இறங்கி விட்டதாகச் செய்தி வந்ததும் கட்சி அலுவலகம் இருந்த பகுதியில் மேலும் பரபரப்பு தொற்றிக்கொண்டது. எள்ளு விழ இடமில்லை எனும் அளவுக்கு அந்தப் பகுதி மக்கள் வெள்ளத்தால் நிரம்பியது. கிட்டத்தட்ட சென்னை முற்றிலுமாக முடங்கியது.

இரண்டு மணி நேரத்துக்குப் பின்பு சைரன் சத்தத்துடன் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு அரசு வாகனங்கள் வரிசையாக வந்தன. அந்த வாகனங்களின் மையத்தில் நடுநாயகமாக ஒரு பெரிய கறுப்புநிற வேன் வந்து கொண்டிருந்தது. வேனின் முன் சீட்டில் டிரைவர் அருகே கோப்பெருஞ்சோழன் அமர்ந்திருந்தார். அதைப் பார்த்தவுடன் செம்பருதியின் உடல் அந்த வேனில்தான் இருக்கிறது என்று உணர்ந்த மக்கள் ஓலமிட்டு அழத் துவங்கினார்கள். கட்சி அலுவலக வாசலில் வைக்கப்பட்டிருந்த மேடையருகே வேன் வந்து நின்றது. மீடியாக்களின் கேமராக்கள் அந்த வேனைச் சுற்றி மொய்த்துக் கொண்டன. வேனின் பின்கதவு திறக்கப்பட்டதும் உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை தோளில் சுமந்தவாறு இறங்கிய இளங்கோவும், தனாவும், கட்சியின் சில முக்கிய பிரமுகர்களும் மேடையில் ஏறி உடலை அந்தப் பெட்டியிலிருந்து எடுத்து மேடையின் மீது இருந்த கண்ணாடிப் பேழையில் வைத்தனர். மக்களின் அழுகுரல் விண்ணைப் பிளந்தது.

உடலை வைத்தவுடன் தந்தையின் உடலின்மீது விழுந்து தனா கதறி அழுதான். இளங்கோ ஆற்றுப்படுத்தி அவனைத் தூக்கி அம்மாவிடம் அழைத்து வர, மறுபக்கமிருந்து அர்ஜுன் கல்யாணி அம்மாளைத் தாங்கிப் பிடித்தபடி செம்பருதியின் உடலருகே அழைத்துச் சென்று கொண்டிருந்தான். திடீரென்று அர்ஜுனின் முதுகைப் பிடித்து யாரோ உலுக்குவது போல இருந்தது. அர்ஜுன் சட்டென திரும்பிப் பார்க்க உமா அவன் முதுகில் விழுந்தவளாக அப்படியே சரிந்து மயங்கி விழுந்தாள். உமா மயங்கி விழுந்ததால் அந்த இடத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. கல்யாணி அம்மாளை பவானியின் கையில் ஒப்படைத்துவிட்டு அர்ஜுனும் வேறு சிலரும் உமாவுக்கு மயக்கத்தை தெளிவிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

சிறிது நேரத்தில் கூட்டத்தை விலக்கிவிட்டு வந்து நின்ற ஆம்புலன்ஸில் ஏற்றப்பட்ட உமா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

தனா கல்யாணி அம்மாளின் காலைக் கட்டிப்பிடித்துக் கதறி அழுதான். “என்னை மன்னிச்சிருங்கம்மா” என்று அவன் கதறிய சத்தம் அருகிலிருந்தவர்களுக்கு மட்டும் தெளிவாகக் கேட்டிருக்கும். கல்யாணி அம்மாள் உணர்ச்சியற்ற உடலாக நின்றிருந்தார். மீடியா வழியாக அன்றுதான் தமிழகம் செம்பருதியின் மகனான தனசேகரனை முதல் முறையாகப் பார்த்தது.

மாலையில் இராணுவ மரியாதையுடன் உடல் பேரணியாக எடுத்துச் செல்லப்பட்டு அவர்களது குல வழக்கப்படி தகனம் செய்யப்பட்டது.

இதற்கிடையே லீனா உள்ளிட்ட மூன்று பேரின் உடல்கள் எவ்வளவு தேடியும் கிடைக்காமல் போனதால் தேடும் பணியை முடித்துக் கொள்வதாக அறிவித்தது மலேசிய அரசு.

*********** *********** ***********

அத்தியாயம்: 10

பாதை மாறிய பயணம் - பிளாஷ்பேக்

தமிழக அரசியல் தலைவர்களிலேயே செம்பருதி - கல்யாணி போன்ற மனமொத்த தம்பதிகள் வேறு யாரும் இல்லை என்று அரசியல் வட்டாரத்தில் ஒரு பேச்சு உண்டு. ஆனால் கல்யாணி அம்மாளைப் பொறுத்தவரை அது பாதி அளவே உண்மை!

செம்பருதியை அவர் முதன் முதலாக சந்தித்தது தனது கல்லூரியில் நடந்த பேச்சுப் போட்டியில் ஆகும். அப்போது இருவருமே வெவ்வேறு கல்லூரிகளில் படித்துவரும் இளங்கலை மாணாக்கர்கள். “எதிர்கால இந்தியா” என்ற தலைப்பில் பேசிய செம்பருதியின் உரைவீச்சில் கல்யாணி மயங்கிப் போனார். இயல்பிலேயே நாட்டுப்பற்று மிகுந்த கல்யாணிக்கு செம்பருதியின் அனல்வீசும் பேச்சில் ஈர்ப்பு ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை.

செம்பருதி அப்போதெல்லாம் தாய்நாட்டுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்போடு காணப்பட்டார். அந்தத் துடிப்பு அவரது ஒவ்வொரு மேடைப் பேச்சுகளிலும் வெளிப்படும். மணந்தால் இதுபோன்றதொரு செயல்வீரனை மணக்க வேண்டும் என்று கல்யாணி மனதில் விழுந்த விதை விரைவிலேயே அவர்களுக்கிடையே காதலாகத் துளிர்த்தது. இரு பெற்றோரும் பச்சைக்கொடி காட்ட விரைவிலேயே காதலர்கள் இல்லறத்தில் இணைந்தார்கள்.

அதற்கு முன்பிருந்தே செம்பருதிக்கு கோப்பெருஞ்சோழனுடன் நட்பு இருந்தது. அப்போது கோப்பெருஞ்சோழன் வட்டார அளவில் இருந்த ஒரு அரசியல் இயக்கத்தில் ஒரு சின்னப் பொறுப்பில் இருந்தார். கல்லூரிப்படிப்பை முடித்த கையோடு செம்பருதி அந்த இயக்கத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டார். ஆரம்பகால அரசியலில் அடுத்தடுத்து விழுந்த அடிகளும், சிறைவாசங்களும் இருவரையும் சற்றே உலுக்கிப் போட்டது. இவர்கள் இருவராலும் நன்மைகளைப் பெற்றவர்கள் இவர்களைக் கண்டுகொள்ளவில்லை.

ஒருமுறை வேலூர் சிறையில் ஏழரை மாதங்கள் தொடர்ந்து இருக்க நேரிட்டது. இருவரும் ஒருவரையொருவர் சந்திக்க முடியாதபடி வெவ்வேறு செல்லில் அடைக்கப்பட்டிருந்தனர். இயக்கத்தில் தங்களுடன் இருந்தவர்கள் பணத்துக்காகவும், பதவிக்காகவும் செய்த பச்சை துரோகங்கள் இவர்கள் மனதை அறுத்து ரணமாக்கிக் கொண்டிருந்தது. தங்களுக்கு மேலிருந்த நிர்வாகிகளால் தங்களது உழைப்பு சுரண்டப்பட்டதை உணர்ந்தார்கள்.

அந்த முறை சிறை அனுபவம் அவர்களை முற்றிலும் மாற்றியிருந்தது. இருவரும் ஒரே நாளில் விடுதலை ஆனார்கள். சிறையின் அருகே ஒரு டீக்கடையில் ஒரு ஒன்-பை-டூ காபியை வாங்கி உறிஞ்சியபடி எதையோ சிந்தித்தவாறே பல நிமிடங்கள் பேசிக்கொள்ளாமல் அமர்ந்திருந்தனர். மௌனத்தைக் கலைத்து கோப்பெருஞ்சோழன் தயங்கியபடி பேச்சைத் துவக்கினார். “தம்பி நாம ரெண்டு பேரும் போய்க்கிட்டு இருக்க பாதை சரின்னு நெனைக்கிறியா?” செம்பருதி அமைதியாக இருக்க, கோப்பெருஞ்சோழன் தொடர்ந்தார் “கொஞ்சம் சுயவிமர்சனம், கொஞ்சம் தொலைநோக்குப் பார்வை, கொஞ்சம் நடைமுறை அறிவு இது மூணையும் கலந்து பார்த்தா நாம இதே பாதையில தொடர்ந்து போனா தியாகிகளாத்தான் வாழ்க்கைய முடிக்கப்போறோம்ணு தோணுது”.

கோப்பெருஞ்சோழன் சொன்னதை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த செம்பருதி “நான் தலைவனா முடிக்கணும்னு ஆசைப்படுறேன் அண்ணே!” என்றார். அந்த பதிலைக் கேட்ட கோப்பெருஞ்சோழனின் முகம் மலர்ந்தது.

அதற்குப் பின்பு இவர்களது அரசியல் அடியோடு மாறிப்போனது. எதிலும் ஏறுமுகம்தான். ஆனால் கணவரின் மாற்றம் கல்யாணிக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது. செம்பருதியின் விளங்கங்களை கல்யாணியால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இருவரது மனங்களும் அந்தப் புள்ளியில் பிரிந்தன. இருவருக்குமிடையே அடிக்கடி பிரச்சனைகள் வெடித்தது. ஒரு கட்டத்திற்குப் பிறகு கல்யாணி அடங்கிப்போனார். அதற்கு வேறொரு காரணமும் இருந்தது. செம்பருதியைப் பொறுத்தவரை அவர் அரசியலில் களங்கப்பட்டாலும் இல்லறத்தில் ஏகபத்தினி விரதனாகவே இருந்தார். கல்யாணியின் மீது கொண்டிருந்த காதல் அதற்கு ஒரு காரணம். கல்யாணி அந்த அன்புக்காகவே கணவரின் அரசியலோடு உடன்படாவிட்டாலும் அவருடன் இறுதிவரை பயணப்பட முடிவெடுத்தார்.

நாட்டு மக்களின் வயிற்றில் அடித்து சம்பாதிக்கும் கணவரின் பாவத்துக்கு பிராயச்சித்தம் செய்ய கல்யாணி அம்மாள் ஏதாவது ஒரு பொதுச்சேவையில், ஏழைகளுக்கு உதவுவதில் எப்போதும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டே இருப்பார். இதில் அவருக்கு அதிகம் உதவுவது அர்ஜுன்தான். அவனது நற்குணத்தின் மீது அளவற்ற நம்பிக்கை வைத்திருந்த கல்யாணி தனது மகன் தனாவைவிட அர்ஜுனையே அதிகம் நேசித்தார்.

*********** *********** ***********

அத்தியாயம்: 11

தர்மத்தில் பங்கு

செம்பருதியின் இறுதிச்சடங்கில் திடீரென மயங்கி விழுந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த உமா 12 மணி நேரங்கள் மருத்துவமனையில் இருத்தி வைக்கப்பட்டு சில சிகிச்சைகள் முடிந்த பின்னர் டிஸ்சார்ஜ் செய்யபட்டாள். ஓரிரு நாட்கள் ஓய்வெடுக்கும்படி அவளுக்கு டாக்டர் அறிவுறுத்தியிருந்தார்.

செம்பருதியின் இறுதிச் சடங்கு முடித்த ஒரு வாரம் ஆனபின்னர் உமாவும் அர்ஜுனும் ரெஸ்டாரண்ட்டில் சந்தித்தார்கள். அவர்களது வழக்கமான சந்திப்பு போல இனிமையானதாக அது இல்லை. அர்ஜுன் ரொம்பவே நொறுங்கிப் போயிருக்கிறான் என்பதை அவன் கன்னத்தில் பூசியிருந்த ஒருவார தாடி சொல்லியது. கல்யாணி அம்மாள் அந்த சூழலிலும் உமா மயங்கி விழுந்த காரணத்தையும், அவளது உடல் நிலையையும் பற்றி தன்னிடம் விசாரித்ததாகச் சொன்னான். அதைக் கேட்ட உமா கண் கலங்கினாள்.

அர்ஜுன் தனது லேப்டாப்பை திறந்து ஏதோ ஒன்றைப் பார்த்தவாறே உமாவிடம் பேசினான், “உமா எனக்கு ஒரு ஹெல்ப் பண்ண முடியுமா?”

உமா, “சொல்லுடா”

அர்ஜுன், “நான் உன் கையில ஒரு 15 லட்ச ரூபாய் தர்றேன். அதை உன்னோட அக்கவுண்ட் வழியா 3 பேருக்கு அனுப்பி வைக்க முடியுமா?”

அவனிடமிருந்து இப்படியொரு விநோதமான வேண்டுகோளை எதிர்பாராத உமா, “என்னடா? என்ன விஷயம்? யாருக்கு இவ்வளோ பெரிய அமவுண்ட் அனுப்புற?”

உமா கேட்டபோது அர்ஜுன் தனது லேப்டாப்பை திருப்பி அவளிடம் காட்டினான். அதில் மருத்துவமனையில் மோசமான நிலையில் இருந்த மூன்று பெண் குழந்தைகளின் போட்டோக்கள் இருந்தன. அதை பார்த்ததும் உமாவின் கண்கள் பரிதாபத்தால் நிறைந்தன.

அர்ஜுன், “கல்யாணி அத்தையும் நானும் சேர்ந்து நிறைய சமூக சேவைகள் செய்யிறோம்னு சொல்லியிருந்தேன்ல, இந்த மூணு குழந்தைகளுக்கும் வேற வேற பிரச்சனைகள். ஒரு குழந்தை கன்னியாகுமரில இருக்கு, இன்னோன்னு மிசோரம், இன்னோன்னு மத்திய பிரதேஷ். இந்த மூணு பேரோட ஆபரேஷனுக்கும் ஆளுக்கு தலா 5 லட்சம் தேவைப்படுது. மாமா மேல ஊழல் குற்றச்சாட்டு வந்ததற்கப்புறம் எங்க குடும்ப ஆட்களோட வங்கி நடவடிக்கைகளை அமலாக்கப் பிரிவு ரொம்பவே வாட்ச் பண்ண ஆரம்பிச்சிருச்சு. அதனால வேற வேற சோர்ஸ் வழியா இந்த மாதிரி உதவிகளை செஞ்சுக்கிட்டு இருக்கோம். இந்தக் குழந்தைகளுக்கு இன்னும் மூணு நாள்ல ஆபரேஷன் பண்ணனும். இந்த சூழ்நிலைல மாமா வேற இறந்துட்டதால எல்லாருமே அந்த சோகத்துல இருக்காங்க. யாரையும் காண்டாக்ட் பண்ண முடியல. அர்ஜண்ட்டா பணத்தை அனுப்பி ஆகணும். அதான் உமா, உன்னால முடியுமா? இல்லாட்டி நான் வேற சோர்ஸ் ஏதாச்சும் பார்த்துக்கிறேன்.”

உமா, அவனை செல்லமாக தட்டியவளாக, “ச்சீ ஏண்டா இவ்வளோ புனிதமான காரியத்துக்கு உதவி செய்யலைன்னா நானெல்லாம் இருந்து என்ன பிரயோஜனம். ஆனா இவ்வளோ பெரிய தொகையையெல்லாம் நான் யாருக்கும் இதுவரை அனுப்பியதில்ல. நீ பணத்தையும் அக்கவுண்ட் நம்பர்ஸையும் மட்டும் கொடு. என் குளோஸ் பிரண்டுதான் நான் அக்கவுண்ட் வச்சிருக்க பேங்க்கோட மேனேஜர். அவகிட்ட கொடுத்திடறேன். அவ பாத்துக்குவா!

அர்ஜுன் அவளிடம் சீரியஸாக, “கேர்ஃபுல் உமா, அந்தப் பொண்ணு நம்பிக்கையான ஆளுதானே? நாம் புண்ணிய காரியத்தைக்கூட திருட்டுத்தனமா செய்ய வேண்டிய நிலையில இருக்கோம். புரியுதுல்ல?…”

உமா, “டேய் நீ குடுடா, நான் பாத்துக்கிறேன்” என்றபடி அவன் கையிலிருந்த பணப்பையை பிடுங்கி தனது ஹேண்ட்பேகில் திணித்தபடி கிளம்பினாள்.

சட்டென்று அவள் கையைப் பிடித்த அர்ஜுன், உமா, உடம்ப நல்லா பாத்துக்கடி, எப்பவுமே உனக்கு நான் இருக்கேன். அன்னிக்கு நீ மயக்கம் போட்டு விழுந்ததைப் பார்த்ததும் எனக்கு உயிரே போன மாதிரி ஆகிடுச்சு” என்றான் கலங்கிய கண்களுடன்.

*********** *********** ***********

அத்தியாயம்: 12

விந்தையான உறவுகள்

முதல்வர் கோப்பெருஞ்சோழன், இளங்கோ இருவரும் தங்கள் கட்சி சேனலான அஸ்வா டிவியின் செம்பருதி பற்றிய நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள ஸ்டுடியோவுக்குச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் மும்பையிலிருந்து ஒரு அலுவல் காரணமாக சென்னை வந்த பவானியின் அண்ணன் தனஞ்செயன் தனது தங்கையைப் பார்க்க முதல்வர் வீட்டுக்கு வந்தான். பவானி வாசலுக்கு ஓடோடிச் சென்று அண்ணனை வரவேற்றாள்.

"எப்படி பவானி இருக்க?" என்று விசாரித்தபடி வந்தவனது shoulder bag-ஐ பிடுங்கி "நான் நல்லா இருக்கேண்டா? மும்பையெல்லாம் எப்படி இருக்கு? அம்மாவை ஏன் கூட்டிட்டு வரல? உக்காரு கொஞ்சம் வர்றேன்" என்று சொல்லி கிளம்பியவளிடம், "ஒண்ணும் பண்ணாத...நான் இப்பத்தான் சாப்டுட்டு வர்றேன்... உடனே கௌம்பணும்" என்றான் தனஞ்செயன்.

"ஏண்டா?" என்றாள் பவானி.

சென்னைக்கு ஒரு ப்ராஜெக்ட் விஷயமா வந்தேன்...அவசரம்..ஃப்ளைட்ட்ல வந்துட்டேன்..இன்னிக்கு சாயங்காலமே பழையபடி மும்பைக்கு கிளம்பணும்...அம்மா நல்லாதான் இருக்கு...அதுக்கு மும்பை புடிக்கல...உனக்காகத்தான் கோவில் கோவிலா சுத்திக்கிட்டு இருக்கு" (பேசியபடியே இருவரும் சோபாவில் அமருகிறார்கள்) "ஆனா அதுக்கு ஒரே ஒரு சந்தோஷம் படிச்சுட்டு வெட்டியா சுத்திக்கிட்டு இருந்த நான் இன்னிக்கு மும்பையில ஒரு சாப்ட்வேர் கம்பேனிக்கு ஓனரா செட்டில் ஆனதுதான். அதுக்கு அத்தான்தான் காரணம்னு அவரைப் பத்தித்தான் ஒரே பெருமையா பேசிக்கிட்டு கிடக்கும். ஆமா..அத்தான் எங்க பவானி?

பவானி டிவியை ஆன் பண்ணிவிட்டு "இந்தா வருவாரு பாரு"

தனஞ்செயன் டிவியைத் திரும்பிப் பார்த்து, "அல்வா டிவிலயா?" என்று கேட்க பவானி சிரித்தாள்,

தனஞ்செயன், "ஆமா..உன்னோட சி.எம் மாமனார் எப்படி இருக்காரு?"

பவானி உதட்டைப் பிதுக்கினாள். தனஞ்செயன் முகம் சற்று வாடியது. தங்கையை தேற்றும் விதத்தில், "சரி கவலப்படாத, போகப் போக எல்லாம் சரியாகிரும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே கோப்பெருஞ்சோழன் தனது கட்சிக்காரர்கள், அதிகாரிகள் புடைசூழ வீட்டினுள் நுழைந்தார். மாமனாரைப் பார்த்ததும் பவானி சட்டென எழுந்து நிற்க, அவளுடன் எழுந்து நின்ற தனஞ்செயன் பணிவாக "வணக்கங்க ஐயா" என்றான். முதல்வர் அதைக் கண்டுகொள்ளாமல் அவர்கள் பக்கமே திரும்பாமல் விரைப்பாகக் கடந்து செல்லவே இருவர் முகங்களும் சுருங்கியது. ஆனால் தனஞ்செயன் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தங்கையிடம் "விடு பவானி, ஏதாச்சும் டென்ஷன்ல கவனிக்காம போயிருப்பாரு" என்று சொல்ல, பவானியின் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது.

தனஞ்செயன், "சரி நான் கிளம்புறேன் பவானி, எதுக்கும் ஃபீல் பண்ணாத, நான் வந்துட்டுப் போனத அத்தான்கிட்ட சொல்லிடு. நான் வந்த டாக்ஸி வாசல்லயே காத்துக்கிட்டுருக்கு. சும்மா உன்னையும் அத்தானையும் ஒரெட்டு பார்த்திட்டுப் போயிடலாம்னுதான் வந்தேன். எனக்கு இன்னிக்கு ஈவினிங் ஃப்ளைட்டு." பேசிக்கொண்டே shoulder bag-ஐ எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

பவானி, “டேய் அவருகிட்ட ஒரு வார்த்தை நீயே பேசிட்டுப் போயிடுடா, இல்லாட்டி நல்லா இருக்காது”.

தனஞ்செயன், “ தெரியுது பவானி, பேசுனா அத்தான் என்னைப் போகவிடமாட்டாரு, இங்கேயே தங்கச் சொல்லுவாரு, அதான் பயமா இருக்கு. நாளைக்கு எனக்கு மும்பையில முக்கியமான கிளையண்ட் மீட்டிங் இருக்கு… சரி, டாக்ஸில போற வழியில அவருகிட்ட பேசிக்கிறேன்” என்றபடி கிளம்பிச் சென்றான்.

தனஞ்செயன் டாக்ஸியில் போகும் வழியில் இளங்கோவுக்கு இரண்டு முறை போன் செய்தான், இளங்கோ அப்போது டிவி நேரடி ஒளிபரப்பில் பேசிக்கொண்டிருந்ததால் இரண்டு முறையும் மணி ஒலித்து கட் ஆனது. தனஞ்செயனுக்கு இளங்கோவை சந்திக்க ஆசைதான். ஆனாலும் நாளை நடைபெறவிருக்கும் முக்கியமான மீட்டிங்கை கருத்தில் கொண்டு இளங்கோவுடன் பேசுவதை தவிர்க்க நினைத்தான். இளங்கோ போனை எடுக்காதது அவனுக்கு நல்லதாகப் பட்டது. “சரி இப்ப விட்டுட்டு ஈவினிங் ஏர்ப்போர்ட்ல இருந்து பேசிக்கலாம். ஏர்ப்போர்ட் போயிட்டேன்னு சொன்னா திரும்பி வரச்சொல்ல மாட்டாரு” என்ற நினைப்பில் செல்பேசியை பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

டிவி நிகழ்ச்சியை முடித்துவிட்டு மாலை இளங்கோ வீட்டுக்கு வந்தான். தனஞ்செயன் வந்துவிட்டுப் போன செய்தியை பவானி சொன்னதும் இளங்கோ அப்போதுதான் தனது செல்பேசியை திறந்து பார்த்து தனஞ்செயனிடமிருந்து இரண்டு அழைப்புகள் வந்திருப்பதைப் பார்த்தான். “அடடா எனக்கு மத்தியானமே கால் பண்ணியிருந்திருக்கான்” என்றவாறே தனஞ்செயனுக்கு போன் செய்தான்.

இளங்கோ போன் செய்த நேரத்தில் தனஞ்செயன் தனது பழைய நண்பன் ஒருவனுடன் சிறிது நேரம் செலவழித்துவிட்டு, ஒரு டாக்ஸியைப் பிடித்து விமான நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்தான். டாக்ஸி விமான நிலையத்தை நெருங்கும் வேளையில் இளங்கோவிடமிருந்து அழைப்பு வந்தது.

தனஞ்செயன் போனை எடுத்து, “அத்தான்” என்று சொல்ல, மறுமுனையில் இளங்கோ “ஏண்டா, அவ்வளவு பெரிய ஆளாய்ட்டியா? வந்துட்டு ஒருநாள் கூட தங்காம, என்னையும் பார்க்காம ஊருக்குப் கௌம்பிட்ட... வெண்ண…"

தனஞ்செயன், “இல்லங்த்தான்... நாளைக்கு ஒரு அவசரமான க்ளையண்ட் மீட்டிங், மிஸ் பண்ண முடியாது…அதான்…"

இளங்கோ, “என்னாடா பெரிய்ய கிளையண்ட் மீட்டிங்!...எவண்டா அந்த கிளையண்ட்?...என்ன ப்ராஜக்ட் அது? அந்தக் காசை நான் தர்றேன் வாடா…”

தனஞ்செயன், “ஐயோ இல்லங்த்தான்…” என்று இழுக்கவே, இளங்கோ, “ஒழுங்கு மரியாதையா மீட்டிங்க போஸ்ட்போன் பண்ணிட்டு இன்னும் அரை மணி நேரத்துல நீ இங்க வந்து சேருற… இல்ல?”

தனஞ்செயன், “இல்லங்த்தான்... ஃபிளைட் டிக்கட் புக் பண்ணிட்டேனே…”

இளங்கோ நக்கலாக சிரித்தபடியே, “என்னது புக் பண்ணிட்டியா?...டேய்...நீ ஏர்ப்போர்ட் போ, இன்னிக்கு எந்த ஃபிளைட்டு மும்பைக்கு கௌம்புதுன்னு பார்த்துடறேன்…”

தனஞ்செயன், “அய்யய்யோ...வேணாங்த்தான்..நான் திரும்பிடறேன்..ஊருக்குப் போகல..”

இளங்கோ, “அப்பிடி வா..வழிக்கு...டேய் உன்னையும் பார்த்து ரெண்டு மூணு மாசம் ஆச்சுடா...அதான் சொல்றேன்” கடைசியாக இளங்கோ சொன்ன வார்த்தையில் தனஞ்செயன் உருகிப்போனான்.

தனஞ்செயன், “சரிங்த்தான்… சரிங்த்தான்… இந்தா நான் இப்ப வீட்டுக்கு திரும்பி வந்துக்கிட்டே இருக்கேன்..

அதற்குள் டாக்ஸி டிரைவர் சரியாக விமான நிலையத்தில் வாசலில் கொண்டு வந்து காரை நிறுத்தியிருந்தார். தனஞ்செயன் அந்த டாக்ஸி டிரைவரை பரிதாபமாகப் பார்த்தபடி “அண்ணே! அப்படியே வண்டிய நேரா சி.எம் வீட்டுக்கு விடுண்ணே!” என்றான்.

*********** *********** ***********

அத்தியாயம்: 13

வேட்டை தொடங்கியது

தனஞ்செயன் பவானிக்கு அண்ணனாக இருந்தாலும் இளங்கோவை விட மூன்று வயது இளையவன். தனஞ்செயனது வெகுளித்தனமாக நக்கல் பேச்சுக்கள் இளங்கோவுக்கு மிகவும் பிடிக்கும். தனஞ்செயன் ரொம்ப யதார்த்தமானவன். கூழைக் கும்பிடு போட்டுக்கொண்டு, முகஸ்துதி செய்துகொண்டு தன்னைச் சுற்றி எப்போதும் இருக்கும் போலியான உறவுகளுக்கிடையில் ஒரு உண்மையான, ஜாலியான ஒரு நட்புக்காக இளங்கோவின் மனம் ஏங்கிக்கொண்டிருந்தது. மற்ற இளைஞர்களைப் போல மாப்ள, மச்சி என்று உரிமையோடு கூப்பிட்டு நட்பு கொண்டாட அவனுக்கு யாரும் இல்லை. அந்த நட்பு அவனுக்கு தனஞ்செயனிடம் கிடைத்தது. எனவே அவனோடு செலவிடும் நேரங்களை இளங்கோ மிகவும் விரும்பினான்.

இரவு உணவை முடித்துவிட்டு இளங்கோ, பவானி, தனஞ்செயன் மூவரும் வீட்டின் மொட்டை மாடியில் நிலவொளியில் அமர்ந்து ஜாலியாக நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்தார்கள். செம்பருதியின் மறைவையொட்டி ஏற்பட்ட தாங்கொண்ணா வேலைப்பளுவால் இளங்கோ ரொம்பவே களைத்துப் போயிருந்தான். அவனுக்கு இந்த அரட்டை அனுபவம் இதமாக இருந்தது. அதனாலேயே ஊருக்கு கிளம்பிச்சென்ற தனஞ்செயனை வம்படியாக இழுத்து வீட்டுக்குத் வரவழைத்தான்.

இளங்கோ சோம்பல் முறித்தபடி, “ஸ்ஸ்ஸப்பாடா… ... இப்படி ரிலாக்ஸ்டா உட்காந்து எவ்வளவு நாளாச்சு, அதுக்காகத்தான் இன்னிக்கு உன்னை இருக்கச் சொன்னேன். நீ என்னடான்னா...ஒரு லட்சம், ஒன்ணேகால் லட்சம் துக்கடா ப்ராஜக்ட்டுக்கெல்லாம் கிளையண்ட் மீட்டிங்னு ஓடிக்கிட்டு இருக்க... ஏண்டா ஒரு முதலமைச்சரோட மருமகனா இருந்துக்கிட்டு இப்படி ப்ராஜக்ட்டெல்லாமா எடுக்கிறது?

தனஞ்செயன், “இல்லங்த்தான்... கம்பேனி ஆரம்பிச்சு ஏழு மாசந்தானே ஆகுது...அதான் வர்ற எதையும் மிஸ் பண்ண வேண்டாமேன்னு…"

இளங்கோ, “அடப்போடா...இங்க பாரு...பத்து லட்சத்துக்கு கம்மியா ப்ராஜெக்ட் எடுக்காத...அதுக்கு நான் ஏற்பாடு பண்ணித் தாரேன்.. ஏண்டா மூணு கோடி செலவு பண்ணி கம்பேனி வச்சுக் குடுத்தேன்..இத செய்ய மாட்டேனா?”

தனஞ்செயன் பணிவாக தலையாட்டுகிறான், “சரிங்கத்தான்”

இளங்கோ, “இன்னும் ஒரு வாரத்துல பிரான்ஸ் போக வேண்டிய வேல இருக்கு, திரும்பி வரும்போது மும்பைல இறங்கி உன்னையும் அத்தையையும் வந்து பார்க்குறேன். உன் கம்பேனிக்கு ஏதாவது எக்கியூப்மெண்ட் வேணும்னா சொல்லு வாங்கிட்டு வர்றேன்.

பவானி இடமறித்து, “ஏங்க திடீர்னு பிரான்சுக்கு எதுக்கு போறீங்க?” என்று கேட்டாள்

இளங்கோ, “ப்ச்..அதெல்லாம் அரசியல்..ஏன் எதுக்குன்னெல்லாம் கேட்கக் கூடாது, உனக்கு என்னா வேணுமோ கேளு வாங்கிட்டு வர்றேன்”

பவானி, “ம்க்கும்..” என்று செல்லக்கோபத்துடன் முகத்தைச் சுழித்துக் கொண்டவளாய், “ஒண்ணும் தேவையில்ல” என்றாள். அந்த நேரத்தில் வீட்டில் இருக்கும் வயதான வேலைக்காரர் ஒருவர் பணிவாக இளங்கோவிடம் வந்து நின்று “ஐயா உங்கள பெரியய்யா கூப்பிடுறாக..” என்றார்.

இளங்கோ, “ம்ம்ம் வர்றேன் போங்க…” என்றவன் எழுந்து மாடிப்படி இறங்கினான். தனஞ்செயனும் பவானியும் மாடியில் அமர்ந்தபடியே தங்கள் அரட்டையைத் தொடர்ந்தார்கள்.

இளங்கோ, கீழே இறங்கி அப்பாவின் அறைக்குப் போய் அவர் அருகே இருந்த சோபாவில் அமர்ந்தான். முதல்வர் கோப்பெருஞ்சோழன் எதையோ ஆழமாக சிந்தித்தபடி அமர்ந்திருந்தார்.

கோப்பெருஞ்சோழன், “முதல்ல உன் மொபைல சுவிட்ச் ஆஃப் பண்ணு, போய் கதவைப் பூட்டிட்டு வா.

இளங்கோ திரும்பிச் சென்று அறைக் கதவைச் சத்திவிட்டு மொபைலை ஸ்விட்ச் ஆஃப் செய்துகொண்டே வந்து அவரது அருகில் அமர்ந்து கேட்டான், “என்னப்பா?"

கோப்பெருஞ்சோழன், “இங்க பாரு... கட்சிக்குள்ள நமக்கு சரிசமமா, போட்டியா இருந்தது செம்பருதி மட்டுந்தான். ஒருவேளை அவன ஓரங்கட்ட முடியலன்னா, முடிச்சிரலாமான்னு கூட எனக்குத் தோணுச்சி. ஆனா அந்தப் பாவத்த செய்ய மனசாட்சி இடங்கொடுக்கல, 45 வருஷ நட்பு இல்லையா, அதுனால நான் அவனை அடக்கனும்னுதான் நெனச்சேனே தவிர அழிக்கணும்னு நினைக்கல, எதிர்பாராவிதமா அவனே போய் சேர்ந்துட்டான். ஆனா, அவன் அடிச்ச பணம் கிட்டத்தட்ட முப்பதாயிரம் கோடி ரூபா ஏதோ ஒரு ஸ்விஸ் பேங்க்குலதான் இருக்கணும்..”

இளங்கோ, “ம்ம்ம்”

கோப்பெருஞ்சோழன், “அதுபத்தி நிச்சயமா அவன் பொண்டாட்டிக்கு தெரிஞ்சிருக்காது...ஏன்னா அவ ரொம்ப நீதி நியாயம் பேசுறவ.. அவளைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்...இதுல அவனோட பார்ட்னர் இன் க்ரைம் கண்டிப்பா ஸ்விட்சர்லாந்தில படிக்கிற அவனோட மகன் தனசேகரனாத்தான் இருக்க முடியும்... அந்தப் பொறுக்கிப் பயலுக்கு பணம் இருக்கிற விவரங்கள் தெரிஞ்சிருக்க நூறு சதவிகிதம் வாய்ப்புகள் இருக்கு…”

இளங்கோ தலையாட்டியபடி "எங்கிட்ட ஆல்ரெடி ப்ளான் ரெடியா இருக்குப்பா" என்றான்

கோப்பெருஞ்சோழன் ஆச்சரியமாக “ம்ம்ம்?” என்றார்.

இளங்கோ, “அப்பா சாவுக்கு வந்திருக்கிற தனா இன்னும் ரெண்டு நாள்ல சுவிட்சர்லாந்து திரும்பிப் போறான். அவன சுவிட்சர்லாந்தில வச்சே இரகசியமா மடக்கி அவனோட கம்ப்யூட்டர்ல இருந்தே அந்தப் பணம் மொத்தத்தையும் நம்ம ஸ்விஸ் அக்கவுண்டுக்கு ட்ரான்ஸ்ஃபர் பண்ணிட்டு அவன அங்க வச்சே போட்டுறணும்... அதுதான் ப்ளான்”.

கோப்பெருஞ்சோழன் அதிர்ச்சியாக மகனை நிமிர்ந்து பார்த்தார்.

இளங்கோ, “ஏம்ப்பா, செம்பருதி அங்கிளை கொல்ல மனசாட்சி இடங்கொடுக்கலன்னு சொன்னீங்க, அவர் மகனைக் கொல்றதுல உங்களுக்கு ஏதாவது பிரச்சனை இருக்கா?” என்று கேட்க…

கோப்பெருஞ்சோழன் அலட்சியமாக, “ப்ச், என்னைப் பொறுத்தவரைக்கும் செம்பருதி வேற, அவன் மகன் வேறடா, இவன்லாம் சாகவேண்டியவன். இந்த லோகத்துல இருந்து என்ன பண்ணப்போறான். சோத்துக்கு தண்டம், பூமிக்கு பாரம்”

இளங்கோ, “அப்புறம் ஏம்ப்பா என்னை அவ்வளோ அதிர்ச்சியா பார்த்தீங்க”

கோப்பெருஞ்சோழன், "இல்லடா...எப்படி? யாரை நம்பி இந்த வேலையக் கொடுக்கிறது? அதுவும் ஃபாரின்ல”

இளங்கோ, “ஃபாரின்ல… அதாம்ப்பா நமக்கு வசதி. யாரையும் நம்ப முடியாது, நானேதான் பண்ணனும்" கோப்பெருஞ்சோழன் அதிர்ச்சியில் உறைகிறார், ஏ.சி அறையிலேயே அவருக்கு வியர்த்தது, தனது தோளிலுள்ள துண்டால் நெற்றியைத் துடைத்தபடி, "டேய்..கிறுக்குத்தனமா நீ பாட்டுக்க ஏதாவது பண்ணி தொலைக்காத?”

இளங்கோ, “அப்பா, பயப்படாதீங்க..ப்ளான்லாம் பக்காவா போட்டாச்சு, எதுவும் மிஸ் ஆகாது. நான் நேரடியா சுவிட்சர்லாந்து போகப்போறதில்ல, அடுத்தவாரம் ‘Broadcast Europe’ தொழில்நுட்பக் கண்காட்சி பிரான்ஸ்ல நடக்குது, நான் அதுக்கு போறேன் அதுல கலந்துக்கிட்டு நம்ம சேனலுக்காக சில புது எக்கியூப்மெண்ட்ஸ் வாங்கப் போறேன். அத முடிச்சிட்டு பிரான்ஸ்ல இருந்து மாறு வேஷத்துல, போலி பாஸ்போர்ட்ல தரை மார்க்கமாவே சுவிட்சர்லாந்து போறேன்,. பாரீஸ்ல இருந்து தனா இருக்கிற சூரிச்சுக்கு கார்ல 7 மணி நேரந்தான் பிரயாணம். பிரான்ஸ்ல எனக்கு நம்பகமான ஒரு கேங் இருக்கு...ஈசியா வேலைய முடிச்சிட்டு அன்னிக்கே பிரான்ஸ் திரும்பி அங்க இருந்து இந்தியா வந்திருவேன்”

கோப்பெருஞ்சோழன், “அவனோட மர்டர் சம்பந்தமா விசாரணை அது இதுன்னு வந்திச்சுன்னா?”

இளங்கோ, “அவனுக்கென்ன பிரச்சனைக்கா பஞ்சம், எத்தனை பொண்ணுங்க மேட்டர் இருக்கு, அவனுக்கு அவன் படிக்கிற காலேஜுல இப்பக்கூட பொண்ணுங்க விஷயத்தில ஏகப்பட்ட பிரச்சனைகள் நடந்திருக்குன்னு ஏற்கனவே எனக்கு ஒரு தகவல் வந்திச்சு. அதனால அவன் விஷயத்துல அந்தக் கோணத்துலதான் விசாரணை நடக்கும். நமக்கு ஒண்ணும் பிரச்சனைகள் இருக்காது”.

கோப்பெருஞ்சோழன் இலேசாக சிரித்தபடி, “நான் இது மாதிரி ஆயிரம் சம்பவம் பண்ணிருப்பேண்டா, ஆனா நீயே இதுல நேரடியா இன்வால்வ் ஆகப்போறேன்னு நினைக்கும்போது உடம்பெல்லாம் நடுங்குது”

இளங்கோ, “வேற வழியே இல்லப்பா.. முப்பதாயிரம் கோடி மேட்டர்...யாரை நம்பி ஒப்படைக்க முடியும்? இன்னொன்னு இவ்வளவு பணம் தனசேகரன் கையில இருந்தா அதனால யாருக்கு என்ன லாபம்? அதவைச்சு எத்தனை பொண்ணுங்க வாழ்க்கையக் கெடுப்பானோ!..அவன் சாகணும் அந்தப் பணம் நம்ம கைக்கு வரணும்”

கோப்பெருஞ்சோழன் ஆமோதித்து தலையாட்டினார்.

*********** *********** ***********

அத்தியாயம்: 14

சிக்கியதா புதையல்?

அந்த வெள்ளை நிற வேன் பிரான்ஸிலிருந்து சுவிட்சர்லாந்தின் எழில்மிகு சூரிச் நகரை நோக்கி சென்று கொண்டிருந்தது. பின் சீட்டில் கறுப்பு ஜெர்க்கின் அணிந்தவனாக இளங்கோ அமர்ந்திருந்தான். அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு மாறுவேஷத்தில் இருந்தான். அவனுடன் டிரைவரையும் சேர்த்து வேனில் நான்கு பேர் இருந்தனர். அனைவரும் பிரஞ்சுக்காரர்கள். இளங்கோ தனது கையில் இருந்த போலி பாஸ்போர்ட்டைக் கண்களால் மேய்ந்து கொண்டிருந்தான். அவனது மற்றொரு கையில் இன்னொருவனது ஒரிஜினல் பாஸ்போர்ட் இருந்தது. அதையும் இதையும் ஒப்பிட்டு போலியின் தரத்தை ஆய்வு செய்து கொண்டிருந்தான்.

முடிவாக தனது புருவத்தை உயர்த்தி “ப்ரில்லியண்ட்” என்றான். அவன் சொன்னதைக் கேட்டு அவனுக்கு முன்சீட்டில் இருந்த குறுந்தாடி பிரஞ்சுக்காரன் திரும்பிப்பார்த்து பெருமையாக ஒரு சிரிப்பை சிந்தி வைத்தான். அதிலிந்து அந்த ஆசாமிதான் அந்த போலி பாஸ்போர்ட்டை தயாரித்துத் தந்தவன் என்பதை உணர முடிந்தது.

இளங்கோவின் மனது மின்னல் வேகத்தில் பல காரியங்களை சிந்தித்துக் கொண்டிருந்தது. தனது திட்டத்தில் எங்காவது ஓட்டை இருக்கிறதா என்று அவன் மனம் தேடலில் இருந்தது. இந்தத் திட்டத்தைத் அவன் தீட்டியபோதே பிரான்ஸ் - சுவிஸ் எல்லையில் உள்ள இம்மிகிரேஷன் அலுவலகத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் யாரும் இருக்கிறார்களா என்பதைக் கேட்டு, அப்படி யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டான். காரணம் தமிழகத்தையும் தாண்டி இவன் முகம் இந்திய அளவில் ஓரளவுக்கு பரிட்சயமானதாக இருப்பதால் தான் போலி பாஸ்போர்ட்டை நீட்ட, அந்த அதிகாரிக்கு தன்னை யாரென்று தெரிந்திருந்தால் செமத்தியாக மாட்ட வேண்டியதாயிருக்குமே! என்னதான் மாறுவேடத்தில் இருந்தாலும் சிலரது கண்களை ஏமாற்ற முடியாதல்லவா?

அதுமட்டுமன்றி இம்மிகிரேஷனில், கைரேகை, கண் கருவிழி போன்ற அடையாளங்களை எடுப்பார்களா என்பதையும் கேட்டு உறுதி செய்து கொண்டான். அங்கு வெறும் பாஸ்போர்ட் செக் மட்டுமே என்பதால் மாறுவேடமும், வேறு பெயரில் ஒரு போலி பாஸ்போர்ட் மட்டுமே அவனுக்கு போதுமானதாக இருந்தது. அதிலும் அவன் கூட வரும் நபர்கள் கடைந்தெடுத்த கிரிமினல்களானபடியால் அவர்களது திறமையின் மீது இளங்கோவுக்கு அதீத நம்பிக்கை இருந்தது.

அவர்கள் எல்லையைக் கடந்தது நள்ளிரவு நேரமானபடியால் இம்மிகிரேஷன் அலுவலகம் வெறிச்சோடிக் காணப்பட்டது. தூக்க மயக்கத்தில் இளங்கோவின் போலிக் கடவுச்சீட்டைப் பரிசோதித்த ஒரு வயதான அதிகாரி இளங்கோவின் முகத்தை உற்றுப்பார்த்துவிட்டு, பாஸ்போர்ட்டிலிருந்த பெயரைக் கஷ்ட்டப்பட்டு வாசிக்க முயற்சித்தார், “இல்லம்ம்மரான்”, இளங்கோ டக்கென்று “இளமாறன் தம்பிராஜா” என்று சொல்ல, அவர் சிரித்தபடி, “ஓ... ஓகே” என்றபடி அதில் முத்திரையிட்டு அவனை எல்லையைக் கடக்க அனுமதித்தார். நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி அந்தக் கேபினை விட்டு நகர்ந்தான் இளங்கோ.

வண்டி சூரிச் நகருக்குள் நுழைந்தது. அங்கு தனாவின் வீடு ஒரு தனிமையான இடம் என்பது இளங்கோவின் திட்டத்துக்கு வசதியாகப் போயிற்று. இளங்கோவின் ஆட்கள் தனா தனியாகத்தான் தங்கியிருக்கின்றான் என்பதை ஏற்கனவே மோப்பம் பிடித்து வைத்திருந்தார்கள். அந்தப் பகுதியில் உலவியபடியே கடந்த நான்கு நாட்களாக தனாவின் செயல்பாடுகளைக் கண்காணித்து வந்த லோக்கல் நபர் ஒருவன் அவ்வப்போது அந்த குறுந்தாடி பிரஞ்சுக்காரனுக்கு தகவல்களைக் கொடுத்துவந்தான்.

தனா இருக்கும் ஏரியாவுக்குள் வண்டி நுழைந்தபோது நள்ளிரவு சரியாக 3:00 மணி இருக்கும். வீட்டை அடையாளம் காட்ட வேண்டிய அந்த லோக்கல் நபர் 20 நிமிடம் தாமதமாக வந்தது இளங்கோவுக்கு எரிச்சலை ஊட்டியது. லேட்டாக வந்தவனை குறுந்தாடிக்காரன் டச்சு மொழியில் திட்டிக் கொண்டிருந்தான்.

இளங்கோ குறுந்தாடியிடம் "இவன் ஏன் லேட்டாக வந்தான்?" என்று ஆங்கிலத்தில் கேட்க, அவன் "துப்பாக்கியை எடுத்துவரச் சென்றிருந்திருக்கிறான்" என்று சொன்னான்.
லோக்கல் நபர் வண்டியில் ஏறிக்கொண்டு வழி சொல்ல அடுத்த 15 நிமிடங்களில் தனா வீட்டருகே ஒரு ஒதுக்குப்புறமாக வண்டி நின்றது. அந்தப் பகுதியில் வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தன. வண்டியிலிருந்து இறங்கும் முன்னர் அந்த லோக்கல் ஆசாமி தனது பையில் இருந்து சைலன்சர் பொருத்திய மூன்று ரிவால்வர்களை எடுத்து குறுந்தாடிக்காரன் கையில் கொடுக்கவே, அவன் அவற்றில் ஒன்றை இளங்கோ கையில் கொடுத்தான். அனைவருமே கையுறை அணிந்திருந்தனர்.

அனைவரும் வேனில் இருந்து இறங்கி மெதுவாக வீட்டை நோக்கி முன்னேறினர். இளங்கோ முன்னே சென்று கதவில் கையை வைத்து தள்ள எதிர்பாராத விதத்தில் கதவு திறந்து கொண்டது. ஆசாமி கதவைக்கூட பூட்டாமல் தூங்குகிறானே என்று ஒருவரை ஒருவர் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டனர். ஐவரில் ஒருவன் "மரண தேவதையை வரவேற்க கதவைத் திறந்தே வைத்திருக்கிறான்" என்று இளங்கோவுக்கும் புரியட்டும் என்று ஆங்கிலத்தில் கிசுகிசுவென கமண்ட் அடித்தான்.

ஆறு பேரும் ஹாலுக்குள் நுழைந்தனர். கடைசியாக நுழைந்தவன் வெளிக்கதவை ஓசையின்றி சாத்தினான். உள்ளே நுழைந்தவுடன் ஹால் மிகவும் இருட்டாக இருந்தது. என்ன செய்வது, அடுத்த அடி எப்படி எடுப்பது என்று தெரியாமல், இருள் சற்று விலகட்டும் என்று ஆறுபேரும் சில வினாடிகளில் அமைதியாக நின்றிருந்தனர். இருட்டான திரையரங்கினுள் நுழைந்து சில வினாடிகள் கழித்து இருக்கைகள் இலேசாக தெரிவது போல அறையில் இருந்த பொருட்கள் அனைவர் கண்களிலும் இலேசாக தெரிய ஆரம்பித்தன.

அந்த இருட்டில், அந்த அறையின் ஒரு ஓரத்தில் இருந்த டேபிளுக்குப் பின்னால் ஒரு உருவம் அமர்ந்திருப்பதை அனைவர் கண்களும் கவனித்தன. ரிவால்வரை வைத்திருந்த மூவரின் கரங்களும் அந்த உருவத்தை நோக்கி நீண்டன. குறுந்தாடி ஒரு கையில் ரிவால்வரை நீட்டியபடி இன்னொரு கையில் அந்த உருவத்தை நோக்கி டார்ச் அடிக்க...

டார்ச் வெளிச்சத்தில் அந்தக் காட்சியைக் கண்ட ஆறுபேரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அங்கே செத்தவனாக தனா உட்காந்திருந்தான், அவன் நெற்றிப்பொட்டில் ஒரு புல்லட் துளைத்திருந்தது. அவன் முகம் முழுவதும் இரத்தம் வழிந்து உறைந்திருந்தது.

*********** *********** ***********

அத்தியாயம்: 15

யாரைக் குற்றம் சொல்ல?

கொலையாளி இன்னும் அங்கே இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் குறுந்தாடி டார்ச்சை அங்கும் இங்கும் அடித்தான். வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆறு பேரும் மெல்ல நகர்ந்து தனாவின் சடலத்தினருகே சென்றனர். அவன் கையில் லேப்டாப் இருந்தது. அதன்மீதும் ஒரு புல்லட் பாய்ந்து திரை நொறுங்கிப்போயிருந்தது. அதாவது கொலையாளி வாசல் கதவினருகே இருந்து சுட்டிருக்க வேண்டும். அவன் சுடப்போவதைக் உணர்ந்த தனா சட்டென லேப்டாப்பை வைத்து மறைக்க முயன்றிருக்கிறான். கொலையாளி சுட்டதில் ஒரு குண்டு லேப்டாப்பையும் மற்றொன்று தனாவின் நெற்றியையும் பதம் பார்த்திருக்கிறது.

இளங்கோ ஏதோ உள்ளுணர்வினால் உந்தப்பட்டவனாக தனாவின் கையிலிருந்த லேப்டாப்பை உருவி கக்கத்தில் இடுக்கிக் கொண்டபடி “லெட்ஸ் மூவ்” என்றான். அனைவரும் அந்த இடத்திலிருந்து அவசரமாக வெளியேறினர்.

வேனில் ஏறி அனைவரும் அமர அது சீறிப்பாய்ந்து கிளம்பியது, சிறிது தூரம் கடந்த பின்னர் இளங்கோ அந்த லோக்கல் ஆசாமியின் சட்டையைப் பிடித்து அவன் நெற்றிப்பொட்டில் ரிவால்வரை வைத்து அழுத்தி “சொல்லுடா என்ன நடந்தது? உனக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கணும்” என்று ஆங்கிலத்தில் கத்தினான். அவன் “எனக்கு சத்தியமா தெரியாது, நான் கடந்த ஒரு மணி நேரமா ஸ்பாட்டுல இல்ல, சம்பவம் அந்த நேரத்துலதான் நடந்திருக்கணும்” என்றான். அதற்குள் வேனில் இருந்த மற்ற நால்வரில் அந்த லோக்கல் ஆசாமிக்கு நண்பனான பிரஞ்சுக்காரன் ஒருவன் தனது ரிவால்வரை எடுத்து இளங்கோவின் நெற்றியை நோக்கி நீட்டினான்.

நிலைமை விபரீதமாவதை உணர்ந்த குறுந்தாடி அனைவரையும் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டான். “நிச்சயமாக அவனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை இளங்கோ, அந்த சம்பவம் துரதிருஷ்டவசமா தற்செயலாத்தான் நடந்திருக்கனும். எங்களை நம்பு” என்று சொல்லியபடி அனைவர் கையில் இருந்த ரிவால்வர்களையும் பறித்து லோக்கல் ஆசாமியின் கையில் கொடுத்து அவனை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இறக்கிவிட்டான்.

இளங்கோவின் முகத்தில் கோபமும் ஏமாற்றமும் கொப்பளித்துக் கொண்டிருந்தது. தன்னுடன் வந்த டீம் இதைச் செய்திருக்க வாய்ப்பில்லை, இதில் அவர்களுடைய தவறு எதுவுமில்லை என்று உணர்ந்தவன் அமைதியாக உட்கார்ந்து கண்களை மூடி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். வேறு யார் இதைச் செய்திருக்க முடியும் என்ற கேள்வி அவன் மனதை துளைத்துக் கொண்டிருந்தது.

இளங்கோ டிரைவரிடமிருந்து tool-box-ஐ வாங்கி அமைதியாக அமர்ந்து தனாவின் லேப்டாப்பை பிரிக்க ஆரம்பித்தான். பிரித்து ஹார்ட் டிஸ்க்கை எடுத்து அதைத் தனது shoulder bag-ல் சொருகிக் கொண்டான். சுவிட்சர்லாந்திற்குள்ளேயே ஒரு ஆற்றுப் பாலத்தை வேன் கடந்தபோது வண்டியை நிறுத்தச்சொல்லி இறங்கிப்போய் தனாவின் நொறுங்கிப்போன லேப்டாப் பாகங்களை அந்த பாலத்திலிருந்து தண்ணீருக்குள் வீசி எறிந்தான். மீண்டும் வந்து அவன் வேனில் ஏறிக்கொள்ள வண்டி பிரான்ஸ் எல்லையை நோக்கிப் பறந்தது.

இதற்கிடையில் கோப்பெருஞ்சோழன் தனது அன்றாட அலுவல்களில் ஈடுபட முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார். இளங்கோவிடமிருந்து வரப்போகிற செல்பேசி அழைப்பை அவரது மனம் பதட்டத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அவருக்கு அன்று வழக்கத்தைவிட அதிகமான பணிகள் இருந்தன. ஆனால் எதிலும் லயிக்க முடியாமல் அனைத்தையும் கேன்சல் செய்து வீடு திரும்பிவிட்டார்.

பாரீசில் தனது ஹோட்டல் அறைக்கு வந்து சேர்ந்த இளங்கோ முதல் வேலையாக அப்பாவுக்கு போன் செய்தான். கோப்பெருஞ்சோழன், “என்னப்பா, போன காரியம் என்னாச்சு, சேனலுக்கு வாங்கணும்னு நெனைச்ச கருவிகளையெல்லாம் வாங்கிட்டியா?” என்று கேட்டார். மறுமுனையிலிருந்து இளங்கோ, “நினைச்சது கிடைக்கலப்பா, கிடைச்சத வாங்கிட்டு வந்திருக்கேன். அது நம்ம சேனலுக்கு யூஸ் ஆகுமா இல்லையான்னு தெரியல” என்றான்.

கோப்பெருஞ்சோழன், “அதிருக்கட்டும்ப்பா, நீ நல்லா இருக்கேல, உன் உடம்பெல்லாம் எப்படி இருக்கு? என்று கேட்க இளங்கோ, “நான் நல்லா இருக்கேம்ப்பா, கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு ஈவினிங் ஷாப்பிங் போயிட்டு வந்திருவேன். நைட்டு ஒரு மணிக்கு பாரீஸ்ல இருந்து மும்பைக்கு பிளைட்”. என்றான். “சரிப்பா, பத்திரமா வந்து சேரு”, என்றபடி போனைக் கட் செய்த கோப்பெருஞ்சோழன் தனக்குள் குழம்பிக் கொண்டார், “இவன் என்ன சொல்றான்? நினைச்சது கிடைக்கல, கிடைச்சத வாங்கிட்டு வந்திருக்கேங்குறான். ஒரு எழவும் புரியல. தக்காளி, இந்த போனை ஒட்டுக்கேக்குற பயபுள்ளைகளுக்குப் பயந்து எல்லாத்தையும் சங்கேதத்துலயே பேசிக்கிறாப்ல இருக்கு” என்று புலம்பியபடி தனது மெத்தையில் போய் படுத்துக்கொண்டார்.

*********** *********** ***********

அத்தியாயம்: 16

தூரத்தில் தெரியும் வெளிச்சம்

இளங்கோ பாரீசில் இருந்து மும்பை வந்து சேர்ந்தான். தனஞ்செயன் வீட்டுக்குப் போய் மாமியாரை குசலம் விசாரித்துவிட்டு நேராக மைத்துனனுடன் சேர்ந்து அவனது சாப்ட்வேர் கம்பேனிக்கு வந்துவிட்டான். மாலை ஏழு மணியாகி விட்டிருந்தது. வேலை நேரம் முடிந்து விட்டதால் அலுவலகம் வெறிச்சோடியிருந்தது. ஓரிருவர் மட்டும் இன்னும் வேலையில் மூழ்கியிருந்தார்கள்.

தனஞ்செயன், "அத்தான், கொஞ்சமாவது நீங்க ரெஸ்ட் எடுத்திருக்கலாம், ஜெட்லாக் கூட இன்னும் போயிருக்காது...

இளங்கோ, "ரெஸ்ட் அப்புறம் எடுத்துக்கலாம்டா... இப்ப ஒரு முக்கியமான விஷயம்." பேசிக்கொண்டே இருவரும் தனஞ்செயனது கண்ணாடி அறைக்குள் சென்றனர். இளங்கோ தாங்கள் பேசுவது வெளியே கேட்காதபடிக்கு கதவைப் பூட்டிக்கொண்டான். உள்ளே இருந்த சோஃபாவில் இருவரும் அமர்ந்தனர். அந்தக் கண்ணாடி அறை ஏ.சி குளிர்ச்சியுடன் மஸ்க் நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

இளங்கோ தனது பையிலிருந்து ஹார்ட் டிஸ்க்கை எடுத்து தனஞ்செயன் கையில் கொடுத்து, "இந்தா இதை ஏதாவது ஒரு கம்பியூட்டர்ல கனெக்ட் பண்ணு"

தனஞ்செயன் அந்த ஹார்ட் டிஸ்க்கை கையில் வாங்கி அலட்சியமாகப் பார்த்துவிட்டு, "இந்த இத்துப்போன ஹார்ட் டிஸ்க்கை வாங்குறதுக்கா பாரீஸ் போனீங்க?"

இளங்கோ, "ப்ச், விளையாடாதடா... மினிஸ்டர் செம்பருதி மகனை சுவிட்சர்லாந்துல வச்சு போட்டுட்டாய்ங்கன்னு நியூஸ் கேள்விப்பட்டேயில்ல"

தனஞ்செயன், "ஆமா"

இளங்கோ, "இது அவனோட பெர்சனல் லேப்ட்டாப்புல இருந்த ஹார்ட் டிஸ்க்கு"

ஷாக்கான தனஞ்செயன் கண்களை விரித்து, வாயைப் பிளந்தபடி சிலையாகி அமர்ந்திருக்க, இளங்கோ விலாவாரியாக நடந்தவற்றை விவரித்தான். தனஞ்செயனுக்கு உடல் லேசாக நடுங்க ஆரம்பித்தது. அவனது ரியாக்ஷனைக் கண்ட இளங்கோ, "டேய் எனக்கும் எங்கப்பாவுக்கும் தவிர்த்து இந்த விஷயத்தைத் தெரிஞ்ச மூணாவது ஆள் நீ மட்டுந்தான்...போய் வெளிய கிளிய உளறி வச்சேன்னு வச்சுக்க..."

தனஞ்செயன் இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி கும்பிட்டவாறு, "ஐய்யோ அத்தான் எனக்கு இப்பவே உடம்பெல்லாம் வெடவெடன்னு நடுங்குது... இந்த விஷயத்தை யாருக்கிட்டையும் இல்ல, நான் எங்கிட்டயேகூட சொல்லமாட்டேன்", பயத்தில் மைத்துனன் கிறுக்குத்தனமாக உளறுவது கண்ட இளங்கோ தனக்குள் சிரித்துக் கொண்டான்.

தனது கையை அவன் தோளில் போட்டு, "இங்க பாரு, பயப்படாத கேஷுவலா இரு... நீ பயப்படுறதைப் பார்த்தாலே எங்கயாச்சும் போய் உளறி வச்சிருவ போல இருக்கு... நான் தினமும் இது மாதிரி ஆயிரத்தெட்டு பிரச்சனைகளை டீல் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன். மன்னர்கள் காலத்துல இருந்து அரசியல்னா இப்படித்தான் இருக்கும். இந்த விஷயத்தை நான் ஏன் உங்கிட்ட சொன்னேன் தெரியுமா? இதுல எனக்கு உன் உதவி வேணும், உன்னைத்தவிர எனக்கு வேற நம்பிக்கையான ஆளு யாருமில்ல".

சற்று இயல்பு நிலைக்குத் திரும்பிய தனஞ்செயன், “சொல்லுங்கத்தான் நான் என்ன பண்ணனும்?”

இளங்கோ, “செம்பருதி சேர்த்துவச்ச கிட்டத்தட்ட 30,000 கோடி ரூபாய் சொத்துக்களைப் பத்தின விபரங்கள் ஏதாச்சும் இந்த ஹார்ட் டிஸ்க்கில இருக்கான்னு நோண்டிப் பார்க்கணும்… லாகின், பாஸ்வேர்ட் எதுவுமே எனக்குத் தெரியாது. எல்லாத்தையும் பிரேக் பண்ணித்தான் உள்ள போகணும்”.

தனஞ்செயன்,”ஃப்பூ இவ்வளவுதானா, அதெல்லாம் பிரச்சனையே இல்லத்தான். நான் பின்னி பெடலெடுத்திருவேன்”.

தனஞ்செயன் நேராக தனது டேபிளுக்குப் போய் அங்கிருந்த ஒரு லேப்ட்டாப்பையும், ஒரு ஸ்குரூ டிரைவரையும் எடுத்து அதைக் கழற்றியபடியே கேட்டான், “அத்தான் எனக்கு ஒரு டவுட்டு”

இளங்கோ, “என்ன டவுட்டு?”

தனஞ்செயன், “இல்ல, அந்தப் பையனை நீங்க கொல்லைன்னா வேற யாரு கொன்னுருப்பா? உங்ககூட வந்த அந்த பிரஞ்சுக்காரனுக நம்பிக்கையானவனுகதானா?”

இளங்கோ, “ப்ச், அதெல்லாம் ஒண்ணும் பிரச்சனை இல்லடா. குடும்பத் தகறாருக்காகத்தான் அவனைக் கொல்லப்போறதா சொல்லியிருந்தேன். இன்னொன்னு அவனுகளை எனக்கு ரொம்ப நாளாத் தெரியும்…நம்பிக்கையான பசங்கதான்..”.

தனஞ்செயன் பேசிக்கொண்டே தனாவின் ஹார்ட் டிஸ்க்கை தனது லேப்டாப்பில் பொருத்தி அதை ஆன் செய்தபடி இளங்கோவிடம் சொன்னான், “ஆனா டிவி நியூஸ்ல அவன் கல்லூரி மாணவர்களுக்கிடையே இருந்த முன்விரோதத்தின் காரணமா கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறதுன்னு சொன்னாங்கத்தான்.”

இளங்கோ, “அதுவே உண்மையாகவும் இருக்கலாம்”.

மும்மரமாக சில நிமிடங்கள் லேப்டாப்பில் மூழ்கியிருந்த தனஞ்செயன், வெற்றிப் புன்னகையோடு லேப்டாப்பை இளங்கோவிடம் திருப்பிக் காட்டி “அத்தான், இங்க பாருங்க உள்ள போயிட்டேன்”

இளங்கோ உற்சாகமானான், “வெரி குட்ரா, உள்ள தரோவா செக் பண்ணு… 30,000 கோடி…

தனஞ்செயன் ஆர்வமாக அந்த லேப்டாப்புக்குள் தேடத் தொடங்கினான், “யப்பா… அலிபாபா குகையத் திறந்து உள்ள போற ஒரு ஃபீலிங் இருக்குத்தான்… ம்ம்ம்… இண்டர்நெட் ஹிஸ்டரில எல்லாமே படிப்பு சம்பந்தப்பட்டதாத்தான் இருக்கு, இ-மெயில் கூட பிரைவேட் மோட்லதான் பார்ப்பான் போல, உஷாரான பயதான்…சரி, இருங்க ஒவ்வொரு ஃபோல்டரா செக் பண்ணிப் பார்த்துடலாம்”

இளங்கோ சட்டென ஏதோ நினைவு வந்தவனாக, “ அடேய், இண்டர்நெட்டோட கனெக்ட் பண்ணிடாத!”

தனஞ்செயன் “ச்சேச்சே, offline-லன்லதான் இருக்கேன் அத்தான். எனக்கு தெரியாதா!” என்றபடி சீரியஸாக ஆராய்ந்து கொண்டிருந்தான். “ம்ம்ம், என்னென்ன ஃபோல்டர்ஸெல்லாம் இருக்கு” “சைனீஸ், ஜாப்பனீஸ், பிளாக், ரஷ்யன், அமெரிக்கன், மல்லு, தமிழ்.. என்னது இதெல்லாம்…”, அவன் முகம் மாறுகிறது.

இளங்கோ, “என்னடா சீக்கிரம் சொல்லு”

தனஞ்செயன், “அத்தான், இனவாரியா ஃபோல்டர் ஃபோல்டரா பிரிச்சு வச்சு அழகா, நேர்த்தியா ஸ்டோர் பண்ணி வச்சிருக்கான்”

இளங்கோ.”என்ன?”

தனஞ்செயன், “எல்லாம் பலான படம்… அதைத்தவிர இந்த ஹார்ட் டிஸ்க்கில வேற எதுவுமே இல்ல”

இளங்கோ ஏமாற்றமாக தலையில் கைவைத்து, “அட நாதாரிப்பயலே!”

தனஞ்செயன், “அவன் ஃபாரின்ல இருந்தாலும் சொந்த மண்ணை மறக்கலங்கிறது மட்டும் நல்லா தெரியுதுங்கத்தான்”

இளங்கோ, “எப்படிடா சொல்ற?”

தனஞ்செயன், “தமிழ்ங்கிற ஃபோல்டர்ல மட்டும் 87 படம் இருக்கு”

இளங்கோ, “அடச்சீ..வெறுப்பேத்தாதடா…அவ்வளோதானா?”

தனஞ்செயன் அவ்வளவுதான் என்பதுபோல உதட்டைப் பிதுக்குகிறான்.

இளங்கோ, விரக்தியாக சோபாவில் சாய்ந்து பெருமூச்சு விட்டபடி “அப்ப முப்பதாயிரங்கோடி போச்சா? ச்சே…எவ்வளோ பிளான் போட்டு வச்சிருந்தேன்!”

தனஞ்செயன் நக்கலாக, “இப்பவும் ஒண்ணும் கெட்டுப்போகலத்தான், இந்த ஹார்ட் டிஸ்கில இருக்க படங்களையெல்லாம் அப்படியே நெட்டுல ஏத்தி ஒரு வெப்சைட் ரெடி பண்ணோம்னா பெரிய அமவுண்ட் பார்த்திரலாம்”

இளங்கோ, தனது சோர்வையும் விரக்தியையும் மறந்து வாய்விட்டு சிரித்தான், “மவனே… நான் உயிர வெறுத்து, மாறு வேஷத்துல நாடு விட்டு நாடு போயி ஜேம்ஸ்பாண்ட் ரேஞ்சுக்கு அட்வென்சர் பண்ணிட்டு வந்ததெல்லாம் வேஸ்ட்டாப் போச்சேன்னு உட்காந்திருக்கேன், உனக்கு காமெடியா இருக்கா?

தொடர்ந்து தேடிக்கொண்டிருந்த தனஞ்செயன், “இருங்கத்தான் ‘பெர்சனல்னு’ ஒரு போல்டர் இருக்கு”

இளங்கோ லந்தாகச் சிரித்தபடி, “ஓப்பன் பண்ணிராத, அது அவன் சொந்தப் படமா இருக்கப்போவுது”

“நானும் அப்படித்தான் நினைக்கிறேன்” என்றபடி திறந்து பார்த்த தனஞ்செயன் உதட்டைப் பிதுக்கியபடி, “இல்லத்தான் எல்லாமே ஃபோட்டோஸ், ஒரு பொண்ணுகூட சேர்ந்து எடுத்திருக்கான். லவ்வர் போல… இங்க பாருங்க” இளங்கோவிடம் காட்ட…

அதை எரிச்சலாகப் பார்த்த இளங்கோ, “ம்க்கும்..இந்த மூஞ்சிக்கு லவ்வர் ஒண்ணுதான் கேடு…வேற எதுவும் இல்லையா?

தனஞ்செயன், “இந்த ஃபோல்டர்ல வேற எதுவும் இல்லத்தான்”

இளங்கோ, “சரி… இப்பவே என் கண்ணு முன்னாடியே இந்த ஹார்ட் டிஸ்க்க எரிச்சிடு மாப்ள… யாரு கையிலயும் கிடைக்கக்கூடாது”

தனஞ்செயன், “இருங்கத்தான் மறந்துட்டேன், டாக்குமெண்ட் போல்டரை செக் பண்ணிப் பார்க்குறேன்”. சிலவினாடிகள் கழித்து, “அத்தான் இதுல ஒரு pdf file இருக்கு, இங்க பாருங்க 091076.pdf

இளங்கோ ஆர்வமாக, “ஏய் இத ஓப்பன் பண்ணு”

தனஞ்செயன் அந்த பைலை திறக்கிறான், இருவரும் ஆர்வமாக லேப்டாப் மானிட்டரைப் பார்க்கிறார்கள், இளங்கோ முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்பு எரிகிறது…அவன் உச்சகட்ட உற்சாகமாய்…”டேய்..ஸ்விஸ் பேங்க் டாக்குமெண்ட்டுடா…”

*********** *********** ***********

அத்தியாயம்: 17

துருப்புச்சீட்டின் விபரம்

இரத்தினக் குவியல் நிறைந்த குகைக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதை கண்ணுக்கு தென்பட்டதை எண்ணி இளங்கோ மகிழ்ச்சியில் துள்ளினான்.

தனஞ்செயன் ஆச்சரியமாக, “என்னங்கத்தான் சுவிஸ் பேங்க் டாக்குமெண்ட்டுன்னு சொல்றீங்க, பேங்க்கோட பேரு, லோகோ எந்த விபரமுமே இல்ல சும்மா வெள்ளைப் பேப்பர்ல மொழுக்கட்டீர்னு இருக்கு”

“டேய் இதென்ன அதிகாரபூர்வமான அக்கவுண்ட்டா எல்லாம் பக்காவா போட்டு வைக்க? இந்த டாக்குமெண்ட் அப்படித்தான் இருக்கும், இத ஒரு பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடு”

தனஞ்செயன், "ஒரு நிமிஷம் அத்தான். இந்த லேப்டாப்புல இருந்து பிரிண்ட்டருக்கு access கிடையாது (நிறைய கம்பியூட்டர்கள் இருக்கும் ஒரு அறையை காட்டி) அந்த first system மட்டுந்தான் பிரிண்ட்டரோட connect ஆகி இருக்கு"

அதற்குள் தனஞ்செயனுக்கு தங்கை பவானியிடமிருந்து போன்கால் வருகிறது... அவன் அதை எடுத்துப் பேச ஆரம்பிக்க, அவன் பேசி முடிக்கும்வரை பொறுமை காக்க முடியாத இளங்கோ ஒரு பென்-டிரைவில் அந்த டாக்குமெண்ட்டை காப்பி செய்து அந்த அறையை விட்டு வெளியேறி, தனஞ்செயன் சுட்டிக்காட்டிய கம்பியூட்டருக்குச் சென்று பென்-டிரைவைச் சொருகி அதை ஆன் செய்கிறான். அந்த கம்பியூட்டர் லாகின் செய்ய பாஸ்வேர்ட் கேட்கிறது.

யாரிடமாவது உதவி கேட்கலாம் என்று அவன் எழுந்து நிற்க, அந்த கம்பியூட்டருக்கு எதிர் கேபினிலிலேயே நாய்க்குடை காளான்போல சிகையலங்காரத்துடன் ஒரு கருப்பான ஒல்லி இளைஞன் அமர்ந்து வேலை செய்துகொண்டிந்தான். அவனைப் பார்த்து இளங்கோ “எக்ஸ்கியூஸ்மீ” என்று சொல்ல நிமிர்ந்து பார்த்தவன், இளங்கோவைப் பார்த்ததும் எழுந்து நின்று “குட் ஈவினிங் சார்” என்றான். இளங்கோ அவனுக்கு பதில் வணக்கம் வைக்காமல் “இதுக்கு பாஸ்வேர்ட் என்ன?” என்று ஆங்கிலத்தில் கேட்க, எதிரே நின்றவன் “876543” சார் 3 to 8 அப்படியே மாத்திப் போடணும் என்று ஆங்கிலத்தில் பதிலளித்தான்.

பிறகு இளங்கோவும் அந்த இளைஞனும் அமர்ந்து அவரவர் வேலையில் மும்மரமானார்கள். இளங்கோ அமர்ந்தபடியே “தமிழா?” என்று கேட்க, அந்த இளைஞன் மீண்டும் எழுந்து நின்று “ஆமாங்க சார், சென்னைதான், இங்க கிராஃபிக் டிசைனரா இருக்கேன்” என்றான்.

இளங்கோ, “அப்புறம் ஏன் இங்கிலீஷ்ல பதில் சொன்ன…பேரு என்ன?”

அந்த இளைஞன், “சேவியர் சார்”

இளங்கோ அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்காமல் அவனை அமரும்படி சைகையில் சொல்லிவிட்டு, அந்த கம்பியூட்டரில் இருந்து டாக்குமெண்ட்டை டெலீட் செய்து, பென்-டிரைவை உருவி, பிரிண்ட் அவுட்டையும் கையில் எடுத்துக்கொண்டு தனஞ்செயனது அறைக்குள் மீண்டும் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

தனஞ்செயன் இப்போது தனது சி.இ.ஓ இருக்கையில் அமர்ந்து ஆடியபடியே பவானியுடன் செல்பேசியில் தனது உரையாடலை தொடர்ந்து கொண்டிருந்தான். இளங்கோ உள்ளே நுழைந்து தனஞ்செயனுக்கு எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தான்

தனஞ்செயன், “அத்தான் இப்ப பிசியா இருக்காரு உங்கிட்ட அப்புறம் பேசுவாரு, மொக்க போடாத முதல்ல போனை வையி” என்று தங்கையை செல்லமாக அதட்டி போனை கட் செய்துவிட்டு இளங்கோவைப் பார்த்தான். இளங்கோ அந்த டாக்குமெண்ட்டை தனஞ்செயனிடம் நீட்டினான். தனஞ்செயன் அதை வாங்கி பங்கங்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு “என்னங்கத்தான் தல சுத்துது, ஒண்ணுமே புரியல, இதை வச்சு என்ன பண்றது?”

அதை வச்சு என்ன பண்றதுன்னு தனஞ்செயன் மட்டுமல்ல வாசகர்களும் புரிந்து கொண்டால்தான் இனி கதையோட்டத்துடன் கலந்து பயணிக்க வசதியாக இருக்கும். எனவே வாசக அன்பர்களே, இளங்கோ சொல்வதை சற்று நுட்பமாக கவனியுங்கள். அவன் சொல்றது புரியலைன்னா திரும்ப ஒரு தடவை படிங்க, அப்பவும் புரியலைன்னா ஒண்ணும் பிரச்சனை இல்லை கதையை தொடர்ந்து படிங்க, போற போக்குல தானா புரிஞ்சிடும்.

இளங்கோ, “இங்க பாரு மாப்ள, இதே சுவிஸ் பேங்க்குலதான் நமக்கும் ஒரு அக்கவுண்ட் இருக்கு, அதனால இதோட சிஸ்டம் எனக்கு நல்லாத் தெரியும். ஒருத்தர் புதுசா அக்கவுண்ட் தொடங்குனவுடனேயே அவங்களுக்கு அனுப்புற welcome message-தான் இந்த டாக்குமெண்ட்.

இந்த பேங்குல அக்கவுண்ட் தொடங்குனவுடனே உனக்கு ஒரு Code Number கொடுப்பாங்க. இங்க பணம் போடுறவங்க எல்லாம் கருப்புப் பணத்தைத்தான் போடுவாங்க. அதனால அவங்க பாதுகாப்புக்காக அக்கவுண்ட் போலிப் பெயர்லதான் இருக்கும், ஒரிஜினல் பெயரில இருக்காது. (அந்த டாக்குமெண்ட்டைக் காட்டி) இங்கபாரு செம்பருதியோட அக்கவுண்ட் Tim Joyson-ங்கிற பேருல இருக்கு. அந்த பேங்குக்கு மட்டும்தான் ஒரிஜினல் அக்கவுண்ட் ஹோல்டர் யாருன்னு தெரியும். அதையும் அவங்க சர்வ இரகசியமா வச்சிருப்பாங்க.

அந்த Code Number-ஐப் பயன்படுத்தி முதல் தடவையா உள்ள போகும்போது சிஸ்டம் நம்மை மூணு கேள்விகள் உருவாக்கச்சொல்லி, அந்த கேள்விகளுக்கான பதிலையும் நம்மளையே கொடுக்கச் சொல்லி கேட்கும். அதற்கு பிறகு நாம ஒவ்வொரு முறை லாகின் பண்ணும்போதும் சிஸ்டம் நம்ம கிட்ட அந்த மூணு கேள்விகளையும் ஒவ்வொண்ணா கேட்கும். மூணு கேள்விகளுக்கும் சரியா பதில் சொன்னாத்தான் அக்கவுண்ட் ஓப்பன் ஆகும். ஏதாவது ஒரு கேள்விக்கு தொடர்ந்து மூணு தடவை தப்பான பதிலைக் கொடுத்தா அக்கவுண்ட் உடனே அடுத்த 15 நாட்களுக்கு block ஆகிடும். எங்கிருந்தும் யாராலேயும் ஓப்பன் பண்ண முடியாது. அதன் மூலமா தன்னோட Code Number-ஐ வெளி ஆளுங்க யாரோ தெரிஞ்சுக்கிட்டு திறக்க முயற்சி பண்றாங்கன்னு அக்கவுண்ட் ஹோல்டர் தெரிஞ்சுக்கலாம். உடனே வங்கியை அணுகி வேற Code Number-ஐ மாத்திக்கலாம்.

இன்னொரு முக்கியமான விஷயம் அந்த மூணு கேள்விகளும் நாலு மாசத்துல expire ஆகிடும், அதுனால நாலு மாசத்துக்கு ஒரு தடவை நாம அந்த மூணு கேள்விகளையும் மாத்தி, புதுசா வேற கேள்விகள் கொடுக்கணும். அதை செய்யாட்டி அக்கவுண்ட் ஹோல்டருக்கு என்னவோ ஆயிருக்கலாம் அல்லது அவர் இறந்திருக்கலாம்னு கருதி அக்கவுண்ட்டை freeze பண்ணி வச்சிடுவாங்க.

“ஓ இவ்வளவு மேட்டர் இருக்கா” தனஞ்செயன் ஆச்சரியமாக புருவத்தை உயர்த்தியபடி அந்த டாக்குமெண்ட்டில் இருந்த Code Number-ஐப் பார்த்தான் “E0780711_0095502N_091076_1255” என்ற எழுத்துக்கள் மின்னின.

*********** *********** ***********

அத்தியாயம்: 18

முதல் நகர்வு

இளங்கோ, "சரி, இப்ப அந்த பேங்க்கோட வெப்சைட்டுப் போ" என்று சொல்ல, தனஞ்செயன் தனது டெஸ்க் டாப் கம்பியூட்டரில் அந்த வங்கியின் இணையதளத்தை ஓப்பன் செய்தான். அது வழக்கமான வங்கிகளின் இணையதளம் போலத்தான் இருந்தது.

இளங்கோ அவனது கீ போர்டை வாங்கி இணையதள முகவரிக்கு கடைசியில் ஒரு "/" போட்டு ஏதோ சில எண்களை டைப் செய்ய எந்த டிசைனும் இல்லாத மொழுக்கென்ற ஒரு வெள்ளைப்பக்கம் ஓப்பன் ஆனது. அதில் ஒரே ஒரு text box மட்டும் இருந்தது.

அதை ஆச்சரியமாகப் பார்த்த தனஞ்செயன், "என்னாங்கத்தான் இது?"

இளங்கோ. "மாப்ள, அந்த வெப்சைட் வந்து தலைவாசல், சாதாரண அக்கவுண்ட் வச்சிருக்கவுங்களுக்கு.... இது கொல்லைப்புறம், நம்மளை மாதிரி ஆட்களுக்கு"

தனஞ்செயன், "யப்ப்ப்ப்பா..."

இளங்கோ, "இப்ப இந்த டாக்குமெண்ட்டுல இருக்க Code Number-ஐ இதுல போடு" என்றபடி எண்களை வாசித்துக் காட்டினான்

தனஞ்செயன், "சாப்ட்வேர் சீரியல் நம்பர் கணக்கா இருக்குது" என்றபடி இளங்கோ சொல்லச் சொல்ல டைப் செய்து Enter Key-ஐ அழுத்த இன்னொரு டிசைன் இல்லாத வெள்ளைப்பக்கம் திறந்தது.

அதில் "Who is my favourite teacher?" என்ற கேள்வியும், அதனருகே பதிலை டைப் செய்ய ஒரு text box-ம் இருந்தது.

இளங்கோ, "வாவ்.. மாப்ள இதுதான் முதல் கேள்வி... இந்தக் கேள்விக்கான பதிலை சரியா கொடுத்துட்டோம்னா அடுத்த ரெண்டு கேள்வியையும் சிஸ்டம் ஒவ்வொண்ணா கேட்கும் அதுக்கும் சரியான பதிலைக் கொடுத்துட்டா அக்கவுண்ட் ஓப்பன் ஆகிடும், அப்புறம் அதுல இருக்கிற அத்தனை கோடிகளும் நமக்குத்தான்.

தனஞ்செயன், "சூப்பருங்க அத்தான் சாதிச்சிட்டீங்க...நீங்க ஜேம்ஸ்பாண்ட் வேலை பார்த்தது வீண் போகல..."

இளங்கோ, "இதுல இன்னும் ஒரு சிக்கல் இருக்குடா"

தனஞ்செயன், "என்னத்தான்?"

இளங்கோ, "ஒரு தடவை கொடுக்கிற கேள்விகள் 4 மாதத்துல expire ஆகிடும்னு சொன்னேன்ல, இந்த டாக்குமெண்ட்டில இருக்கிற தகவல்படி அவங்க அக்கவுண்ட்டை ஆரம்பிச்ச அந்த நாள்ல இருந்து நாலு நாலு மாசமாக் கணக்குப் பண்ணிப் பார்த்தா இப்போ இருக்கிற கேள்விகள் இன்னும் 66 நாள்ல expire ஆகிடும். கேள்விகளைப் புதுப்பிக்க இப்ப செம்பருதி, தனசேகரன் ரெண்டு பேருமே உயிரோட இல்ல. அதனால இன்னும் 66 நாட்கள்ல அக்கவுண்ட் freeze ஆகிடும்.

தனஞ்செயன் குழப்பமாக மோவாய்க்கட்டையை சொறிந்தபடி, “அடடா இதுல இப்படி ஒரு சிக்கல் இருக்கா?... ஒருவேளை அவங்க ரெண்டு பேரையும் தவிர மூணாவதா வேற யாருக்கும் தெரிஞ்சிருந்து அவங்க கேள்விகளை renew பண்ண வாய்ப்பிருக்குல்ல?”

இளங்கோ, “வாய்ப்பிருக்கு, அப்படி இருந்தா நாம அவனையும் தேடிப் பிடிச்சு போட வேண்டியதிருக்கும்”.

தனஞ்செயன், “ஆத்தாடி, என்னத்தான் ஆளைப் போடுறதை ஆம்ப்லேட் போடுற மாதிரி கூலா சொல்றீங்க”

இளங்கோ, “இன்னும் 66 நாள்தான் இருக்கு...முதல் கேள்விக்கான பதிலை இன்னும் ஒரு வாரத்துக்குள்ள நாம கண்டுபிடிச்சாகணும். நீ என்ன பண்ற, கம்பெனி வேலையெல்லாம் வேற யார் பொறுப்புலயாவது ஒப்படைச்சிட்டு, எங்கூட வந்து ஒரு வாரம் சென்னைல தங்கியிரு. எனக்கு உன் உதவி ரொம்ப தேவை”

தனஞ்செயன் ஆர்வமாகத் தலையாட்டினான், “சரிங்கத்தான்”

இளங்கோ ஆழமாக சிந்தித்தபடி, “Who is my favourite teacher-ங்கிறதுல இந்த ‘my’ -ங்கிறது யாரு? செம்பருதியா, தனசேகரனா?

தனஞ்செயன் நம்பிக்கையோடு சொன்னான், “நியாயமான டவுட்டுதான்...ரெண்டு கோணத்திலேயும் தேடுவோம் அத்தான், கண்டிப்பா கிளிக் ஆகிடும்”.

*********** *********** ***********

அத்தியாயம்: 19

குருவைத் தேடி...

அமைச்சர் செம்பருதியின் மகன் தனசேகரன் படுகொலை செய்யப்பட்ட விஷயம் தமிழகத்தில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இரு பெண்கள் தற்கொலை செய்துகொண்ட பழைய விஷயத்தில் தனாவின் செயல்பாடுகளை மோப்பம் பிடித்திருந்த அந்த புலனாய்வு இதழ் இப்போது மீண்டும் அந்தப் பிரச்சனையை தோண்டி எடுத்து பழைய ஆதாரங்களை இணைத்து ஒரு கவர் ஸ்டோரி எழுதியிருந்தது.

கல்யாணி அம்மாள் தனது கணவரையும், மகனையும் அடுத்தடுத்து பறிகொடுத்த அதிர்ச்சியில் ஏற்பட்ட மாரடைப்பால் சென்னையில் உள்ள பிரபல மருத்துவமனையொன்றில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். அர்ஜுன், அர்ஜுனின் அம்மா, உமாவின் அம்மா ஆகிய மூவரும் அவரை மருத்துவமனையிலிருந்து கவனித்துக் கொண்டனர். உமா - அர்ஜுன் குடும்பங்களுக்கிடையில் இப்போது ஒரு நல்ல பிணைப்பு உண்டாகியிருந்தது. உமா தனது வேலை விஷயமாக கோவா சென்றிருந்தாள்.

இளங்கோவும் தனஞ்செயனும் மும்பையிலிருந்து சென்னை வந்தடைந்த நேரத்தில் கோப்பெருஞ்சோழன் சிங்கப்பூர் சென்றிருந்தார். தென்-கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனங்களைச் சந்தித்து தமிழகத்தில் முதலீடு செய்ய அழைப்பு விடுக்கும் நிகழ்வு ஒன்று சிங்கப்பூரில் ஏற்பாடாகியிருந்தது. அதன்பிறகு அங்கிருந்து அவர் ஹாங்காங், ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு அரசுமுறை சுற்றுப்பயணமாக சென்றுவிட்டு ஒரு வாரத்தில் திரும்பி வருவதாக இருந்தது.

கோப்பெருஞ்சோழனுக்கு சுவிட்சர்லாந்தில் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளாமல் தலை வெடித்துவிடும் போல இருந்தது. தொலைபேசிப் பேச்சுக்கள் ஒட்டுக் கேட்கப்படுவதால் போனிலும் இதைக் குறித்து மகனுடன் பேச முடியாத நிலையில் அவர் இளங்கோவுக்கு போன் செய்து அவனை நேராக சிங்கப்பூர் வரும்படி அழைத்தார். அவன், “இல்லப்பா இங்க நிறைய வேலை இருக்கு. போன காரியம் ரொம்ப நல்லபடியா முடிஞ்சது, நீங்க வரும்போது உங்களுக்கு ஒரு குட் நியூஸ் சொல்றேன்” என்று சொல்ல அந்த பதிலில் திருப்தியடைந்த கோப்பெருஞ்சோழன் தனது பணிகளில் கவனம் செலுத்த துவங்கினார்.

இளங்கோவும், தனஞ்செயனும் சென்னை வந்ததிலிருந்து முதல் கேள்விக்கு விடை கண்டுபிடிக்கும் தீவிர முயற்சியில் இறங்கிருந்தனர். இளங்கோ தங்கள் கட்சிச் சேனலான அஸ்வா டிவியில் செம்பருதியின் நினைவைப் போற்றும் விதமாக ஒரு தொடர் நிகழ்ச்சியை ஆரம்பித்திருந்தான். அது அவனது கடவுச்சொல் வேட்டைக்குப் பெரிதும் கை கொடுத்தது.

அந்த நிகழ்ச்சியின் தயாரிப்புக்காக செம்பருதி குறித்த அனைத்து தகவல்கள், அவரது டிவி பேட்டிகள் அடங்கிய சிடிக்கள், கேசட்டுகள் அனைத்தையும் தரும்படி செம்பருதியின் அலுவலகத்திடம் இளங்கோ கேட்டிருந்தான். அவை இரண்டு பெரிய அட்டைப் பெட்டிகளில் வைக்கப்பட்டு அஸ்வா டிவி அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. தனஞ்செயன் அவை அனைத்தையும் ஒவ்வொன்றாக ஆராய்ந்து செம்பருதி தனக்கு பிடித்த ஆசிரியர் பெயரை எங்காவது குறிப்பிட்டிருக்கிறாரா என கண்டுபிடிக்கும் முயற்சியில் மூழ்கியிருந்தான்.

மூன்று நாள் தேடலுக்குப் பிறகு தனஞ்செயன் களைத்துப் போனான். அவனைப் பார்க்க கையில் ஒரு பெரிய சூட்கேசுடன் வந்த இளங்கோ, “என்னடா எப்படி போய்க்கிட்டு இருக்கு?” என்று கேட்க...

தனஞ்செயன் ஒரு சோம்பல் முறித்தபடி “எல்லா பேப்பர் கட்டிங்கையும் படிச்சிட்டேன்… எல்லா சிடியையும் பார்த்துட்டேன் அத்தான். இன்னிக்கு டேட்டுக்கு செம்பருதியைப் பத்தி அவர் பொண்டாட்டியை விட அதிகமா தெரிஞ்ச ஆள் நானாத்தான் இருக்க முடியும். அப்படி இருந்தும் அந்த teacher மேட்டர் மட்டும் இன்னும் புடிபடல… இன்னும் இந்த ரெண்டு மூணு பழைய வீடியோ கேசட்தான் பாக்கி. அதையும் போட்டுப் பார்க்க பிளேயர் கேட்டிருந்தேன் இன்னும் வரல என்றான்.

இளங்கோ, “அந்தப் பிளேயரைத்தான் இப்ப கொண்டு வந்திருக்கேன். இதை மட்டும் கடைசி முயற்சியா போட்டுப் பார்த்துட்டு போய் ரெஸ்ட் எடுத்துக்க, உன்னைப் பார்க்கவே பாவமா இருக்கு” என்று சொன்னபடி டிவியில் அந்த பிளேயரை கனெக்ட் செய்தான்.

அந்த இடைவெளியில் தனஞ்செயன் யாருக்கோ போன் செய்து கத்திக் கொண்டிருந்தான். “திடீர்னு வேலையை ரிசைன் பண்ணிட்டேன்னா உன் வேலையை நான் யாரை வச்சுடா பார்க்குறது? ஒரு மாசம் முன்னாடியே நோட்டீஸ் குடுக்கணும்னு தெரியாதா? உண்மையிலேயே அம்மாவுக்கு சீரியஸா இருக்கா இல்ல வேற எங்கயாச்சும் ஃபாரின்ல வேலை கிடைச்சுப் போறியா?”

அவன் இப்படி கத்திக் கொண்டிருக்கும்பொதே…

“சத்தம் போட்டு கத்துறவன்கிட்ட சரக்கு இருக்காதுன்னு என்னோட தமிழாசிரியர் அடிக்கடி சொல்லுவார். பேச்சில் எப்போதும் ஒரு நிதானம் இருக்கணும்…” வீடியோவில் பள்ளிக் குழந்தைகளிடையே செம்பருதி பேசத் துவங்கியிருந்தார். அது ஒரு பழைய வீடியோ, செம்பருதி ஒரு பள்ளியின் ஆண்டு விழாவில் பேசியது என்பதால் தாங்கள் எதிர்பார்ப்பது கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையுடன் இளங்கோவும், தனஞ்செயனும் அவரது பேச்சைக் கூர்ந்து கவனிக்கத் துவங்கினர்.

செம்பருதி தொடர்ந்தார், “வெற்றி பெற்ற ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அதற்குத் தூண்டுகோலாக ஒரு ஆசிரியர் இருந்திருப்பார். களிமண்ணைப் போல அறியாப் பாலகனான இருந்த என்னை அரிய பாத்திரமாக உருவாக்கிய குயவன்தான் என் தமிழாசிரியர் ஐயா இராமமூர்த்தி அவர்கள்.”

இளங்கோ டக்கென வீடியோவை pause செய்தான். இருவரும் உற்சாகமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இளங்கோ தனது லேப்டாப்பை எடுத்து வந்து செம்பருதியின் அக்கவுண்ட்டுக்குள் நுழைந்து “Who is my favourite teacher” என்ற முதல் கேள்விக்கு “ramamurthy” என்று பதிலை டைப் செய்ய அதை “சரியான பதில்” என்று ஏற்றுக்கொண்ட சிஸ்டம் அடுத்த கேள்வியில் சென்று நின்றது.

உச்சகட்ட மகிழ்ச்சியில் கட்டிப்பிடித்துக் கொண்ட இளங்கோவும், தனஞ்செயனும் அந்த அறைக்குள்ளேயே ஆனந்தக்கூத்தாடினர். இளங்கோ, “மாப்ள, இப்பப் போயி ரெஸ்ட் எடுத்துக்க. இன்னிக்கு ஈவினிங் உனக்கு ஒரு செம்ம ட்ரீட்டு இருக்கு…” தனஞ்செயன், “தேங்க்ஸ் அத்தான், இருங்க சந்தோஷத்துல அடுத்த கேள்விய பார்க்க மறந்துட்டோம்”இருவரும் லேப்டாப்பை நோக்கி கண்களைத் திருப்பினர்.

“The Darkness brought light, name it”

இளங்கோ, “வெளிச்சத்தைக் கொண்டு வந்த இருளா, என்னடா இது?” என்று குழப்பமாகக் கேட்க.. தனஞ்செயன் புரியாமல் விழித்தான்.

*********** *********** ***********

அத்தியாயம்: 20

பூகம்பத்தின் பின் அதிர்வுகள்

கல்யாணி அம்மாள் ஒரு வார சிகிச்சைக்குப் பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குத் திரும்பியிருந்தார். அவரைப் பார்த்துக்கொள்ள கூடவே இரண்டு செவிலியர் இருந்தார்கள். கல்யாணி அம்மாள் எதுவுமே பேசாமல் விட்டத்தைப் பார்த்து எதையோ சிந்தித்தபடியே அமர்ந்திருந்தது அனைவருக்கும் கவலை அளித்தது. அவருக்கு ஆறுதல் சொல்லி ஆற்றுப்படுத்த யாராலும் முடியவில்லை. கோவாவில் இருந்து திரும்பிய உமா தன் வீட்டுக்குக் கூட போகாமல் நேராக கல்யாணி அம்மாளைப் பார்க்க வந்திருந்தாள். உமா வந்ததை அறிந்த அர்ஜூனும் சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தான்.

இருவரையும் பார்த்த பிறகுதான் கல்யாணி அம்மாள் கொஞ்சம் வாயைத் திறந்து பேசினார், அர்ஜூனையும் உமாவையும் தவிர அனைவரையும் வெளியே காத்திருக்கும்படி சொல்லிவிட்டு இருவரிடமும் மெதுவாகப் பேச ஆரம்பித்தார், "எனக்கு இந்த உலகத்துல ஒண்ணுமே இல்ல, இனி வாழ்ந்தும் அர்த்தமில்ல. ஆனா ஒரேயொரு கடமை இருக்கு. அதை நிறைவேத்துறதுக்கு எனக்கு உன் உதவி தேவை அர்ஜூன்"

உமா அழுதபடி, "ஏம்மா அப்படிச் சொல்றீங்க, உங்க பிள்ளைங்க நாங்கள்லாம் இல்லையா?"

அர்ஜூன், "அவ்வளவு உறுதியான மனசு உள்ள நீங்களே இப்படி இடிஞ்சு போய் உட்காந்திருக்கிறதை பார்க்க என்னால முடியல அத்தை. தயவுசெஞ்சு இனிமே அப்படியெல்லாம் பேசாதீங்க, நான் என்ன செய்யணும் சொல்லுங்க"

கல்யாணி அம்மாள் தழுதழுத்த குரலில், "இல்லப்பா, என் நிலைமையை யாராலும் புரிஞ்சுக்க முடியாது" என்றபடி மெல்ல எழுந்துபோய் தனது பீரோவில் இருந்து ஒரு ஃபைலை எடுத்து வந்தார். அறைக்கதவை சாத்தும்படி உமாவிடம் கண்ணசைக்க உமா போய் சாத்திவிட்டு வந்து உட்காந்தாள்.

கல்யாணி அம்மாள் குரலைத் தாழ்த்தி, "அர்ஜூன், நான் இன்னும் உயிரைப் பிடிச்சு வச்சுக்கிட்டு இருக்கிறதுக்கு ஒரே ஒரு நோக்கம் இருக்கு. மாமா ஊழல் செஞ்சு சம்பாதிச்ச அத்தனை பணத்தையும் எப்படியாச்சும் திரும்ப மக்கள்கிட்டயே கொண்டு போய் சேர்க்கணும், அந்தக் கடைசிப் பைசாவையும் நான் கொடுத்து முடிச்சிட்டேன்னா என் கடன் தீர்ந்தது. நிம்மதியா கண்ணை மூடிருவேன்".

அர்ஜூனும் உமாவும் அவரை அதிர்ச்சியுடனும், ஆச்சரியத்துடனும் பார்த்தார்கள்.

கல்யாணி அம்மாள் தொடர்ந்தார், "மாமாவுக்கு தான் உயிருக்கு ஆபத்து இருக்கிங்கிறது எப்படியோ தெரிஞ்சிருந்துச்சு போல. போன வருஷம் என்னைக் கூப்பிட்டு, எனக்கு திடீர்னு ஏதாச்சும் ஒண்ணு ஆகிடுச்சுன்னா இதையெல்லாம் தனசேகரன்கிட்ட குடுத்திருன்னு சொல்லி இந்த ஃபைலை கொடுத்தாரு. இந்த ஃபைலை ஒரு சூட்கேஸ்குள்ளதான் வச்சிருந்தாரு. அதை திறக்கிற நம்பர் எனக்கும் தனாவுக்கும் மட்டும்தான் சொல்லி இருந்தாரு. வேற யாராவது நம்பர் போடாம திறக்க முயற்சி பண்ணா உள்ள இருக்கிற அத்தனை காகிதங்களும் பொசுங்கிப் போற மாதிரி அந்தப் சூட்கேசை டிசைன் பண்ணியிருந்திருக்காங்க.

நான் அதைப் பத்தி ஒண்ணும் பெரிசா கண்டுக்கல... ஆனா கடவுள் அவங்க ரெண்டு பேரு உயிரையும் எடுத்திட்டு, அநியாயமா வந்த செல்வத்தை போய் சேர வேண்டிய இடத்துக்கே சேர்க்கிற பொறுப்பை எங்கிட்டக் கொடுத்திருக்கான் அப்டிங்கிறது இப்பத்தான் எனக்கே புரியுது.

அர்ஜுன் அந்த ஃபைலை வாங்கி ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தான் பல ரியல் எஸ்டேட் தொடர்பான, பிசினஸ் தொடர்பான ஆவணங்கள் அதில் இருந்தன. கடைசியாக அர்ஜுன் கையில் அந்த டாக்குமெண்ட் சிக்கியது. அதை வித்தியாசமாகப் பார்த்து ஒன்றிரண்டு பக்கங்களை மேலோட்டமாகப் படித்துப் பார்த்தவன் பரபரப்பாக “அத்தை, இது ஏதோ ஃபாரின் பேங்குல மாமா வச்சிருக்க அக்கவுண்ட் பத்தின டாக்குமெண்ட். இதுல பல கோடி ரூபாய் கருப்புப் பணம் போட்டு வச்சிருக்க வாய்ப்பிருக்கு”

அதை வாங்கிப்பார்த்த கல்யாணி அம்மாள், “உமா இதைக் கொஞ்சம் தரோவா படிச்சிப் பாரு” டாக்குமெண்ட்டை உமாவிடம் கொடுத்தார். அவள் அதை கவனமாகப் படிக்க ஆரம்பித்தாள்.

கல்யாணி அம்மாள், “கடவுளோட விளையாட்டைப் பார்த்தியாப்பா, வருஷக்கணக்கா அந்த மனுஷன் கிட்ட எவ்வளவோ புலம்பிப் பார்த்தேன், அவர் காதுலயே வாங்கல. கலிகாலம் இப்படித்தான் இருக்கும்ணா நாமளும் அந்தப் போக்குலதான் போகணும் அப்பத்தான் வாழமுடியும்னு தர்க்கம் பண்ணுவாரு…இப்ப வாழ முடியாமலேயே போச்சே” கல்யாணி அம்மாள் அழத்தொடங்க அர்ஜுன் அவரை ஆறுதல்படுத்த முயன்று கொண்டிருந்தான்.

அடுத்த சில நிமிடங்களில் உமா டாக்குமெண்ட்டை தெளிவாகப் படித்து முடித்திருந்தாள். அர்ஜுனிடமும், கல்யாணி அம்மாளிடமும் அந்த வங்கிக் கணக்கு செயல்படும் விதத்தை விவரித்தாள்.

அர்ஜுன் லேப்ட்டாப்பை திறந்து அந்த வங்கியின் இணையதளத்திற்குப் போய் பார்க்க அவனுக்கு தலை சுற்றியது. டாக்குமெண்ட்டில் இருக்கும் Code Number-ஐ எங்கே பதிவிட்டு லாகின் செய்ய வேண்டும் என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். உமா திடீரென்று அந்த டாக்குமெண்ட்டின் பின் பக்கத்தில் பேனாவால் ஏதோ சில எண்கள் குறித்து வைக்கப்பட்டதைக் கவனித்தாள். அவளது சாஃப்ட்வேர் மூளைக்குள் பளிச்சென பல்ப் எரிந்தது. அந்த லேப்டாப்பைக் கொடு என்று சொல்லி அந்த வங்கியின் இணையதள முகவரியின் இறுதியில் ஒரு “/“ போட்டு அந்த எண்களைக் கொடுக்க அந்த வெள்ளைப் பக்கம் ஓப்பன் ஆனது.

உமாவுக்கும், அர்ஜுனுக்கும் நுட்பம் விளங்கிவிட்டது. உமா டாக்குமெண்ட்டில் இருந்த Code Number-ஐ அந்த text box-இல கொடுக்க முதல் கேள்வி ஓப்பன் ஆனது.

“Who is my favourite teacher?”

“ஓ, இதுதான் முதல் கேள்வியா?” என்ற அர்ஜுன், “அத்தை தனாவோட “favourite teacher” யாரு? என்று கேட்க, கல்யாணி விரக்தியாக, “நீயும் அவனும் ஒரே ஸ்கூல்லதான படிச்சீங்க, அவனுக்கும் டீச்சர்களுக்கும் இருந்த உறவு உனக்கே தெரியாதா? அவனை ஒரு மாணவனா எந்த டீச்சராவது மதிச்சிருக்காங்களா?” என்று கேட்க அர்ஜுன் தீவிரமாக சிந்தித்தபடியே அதை ஆமோதித்து தலையாட்டினான்.

*********** *********** ***********

அத்தியாயம்: 21

பதற வைத்த புதிய திருப்பங்கள்

தனது சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு சென்னை திரும்பிய கோப்பெருஞ்சோழன் தனது அறைக்கு இளங்கோவை அழைத்துப் பேசினார். இளங்கோ சுவிட்சர்லாந்தில் தனசேகரன் வீட்டிற்கு செல்வதற்கு முன்பாகவே அவன் கொல்லப்பட்டிருந்தது அவருக்கு அப்போதுதான் தெரிந்தது.

இளங்கோ சொன்னதைக் கேட்ட கோப்பெருஞ்சோழனின் முகம் வெளிறியது., “அவன் செத்தது நல்லதுதான்னு எடுத்துக்க முடியலடா, அவனை யாரு கொன்னுருப்பா? ஒருவேளை பொண்ணுங்க பிரச்சனையா இல்லாம கொலையாளிக்கு வேற நோக்கம் இருந்திருந்தா?”

இளங்கோ தலையைக் கவிழ்ந்தபடி, “தெரியலப்பா”

கோப்பெருஞ்சோழன், அதிருக்கட்டும்…உன் மச்சான் ஏன் இங்க வந்திருக்கான்..அவன்கிட்ட இதுபத்தி ஏதாவது சொன்னியா?

இளங்கோ, “இதுல எனக்கு அவன் உதவி தேவைப்பா”

கோப்பெருஞ்சொழன் டென்ஷனானார் பல்லைக்கடித்தபடி, “உன்னையெல்லாம் நம்பி ஒரு காரியத்தைக் கொடுத்தா அப்படித்தாண்டா, என் புத்திய செருப்பால அடிக்கணும்.”

இளங்கோ, “இந்த விஷயத்துல அவனை நம்பாம வேறு யாரை என்னால நம்ப முடியும்? அவன் நம்ம குடும்பத்து ஆளுதானப்பா”

கோப்பெருஞ்சோழனுக்கு கோபம் தலைக்கேறியது, “என்னது நம்ம குடும்பத்து ஆளா? உன் குடும்பத்து ஆளுன்னு வேணா சொல்லிக்க… என்னை ஏதாச்சும் அசிங்கமாப் பேச வச்சுராத…ஒண்ணு மட்டும் சொல்றேன், எழுதி வச்சுக்க… அவன் இந்த விஷயத்துல உன்னைக் கழுத்தறுக்கிறானா இல்லையாங்கிறதை மட்டும் பாரு.”

இளங்கோ, “அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லப்பா.. அவன் இல்லாட்டி என்னால அந்த முதல் கேள்விக்கு பதிலைக் கண்டுபிடிச்சிருக்கவே முடியாது…இங்க பாருங்க.”

இளங்கோ இணையதளத்தைத் திறந்து அந்த கோட் நம்மரைக் கொடுக்க, அவர்கள் கணினித் திரையைக் கண்டு ஆயிரம் இடி தாக்கியதுபோல அதிர்ந்து போனார்கள்.

“மூன்று முறை தொடர்ந்து தவறான பதில் அளிக்கப்பட்டதால் உங்கள் அக்கவுண்ட் அடுத்த 15 நாட்களுக்கு முடக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக வங்கியைத் தொடர்புகொள்ளவும்” என்ற செய்தி சிவப்பு நிற கொட்டை எழுத்துக்களில் வந்து நின்று கொண்டிருந்தது. இளங்கோவிற்கு வியர்த்துக் கொட்டியது.

கோப்பெருஞ்சோழன், “பார்த்தியா..இப்பத்தானே நான் சொன்னேன்… இந்த வேலையை அவனைத்தவிர வேறு யாரு பார்த்திருப்பான்னு நினைக்கிற?”

இளங்கோ, பதில் ஏதும் சொல்லாமல் அமைதியாக இருந்தான். அவனது மனம் கொதித்தது. ஆனாலும் அது தனஞ்செயனின் செயலாக இருக்கும் என்று அவனால் நம்பமுடியவில்லை.

கோப்பெருஞ்சோழன் அவனது தோளில் கைவைத்து, “உனக்கு இன்னொரு அதிர்ச்சிகரமான விஷயம் சொல்றேன் தம்பி கேளு…”

மேலும் ஒரு அதிர்ச்சியா என்பதுபோல இளங்கோ அப்பாவின் முகத்தைப் பார்த்தான்.

கோப்பெருஞ்சோழன், “செம்பருதியோட சாவு தற்செயலானது இல்ல தம்பி… ஏதோ ஒரு பெரிய சர்வதேச சதி இருக்கு. அதுக்கு லீனா உடந்தையா இருந்திருக்கணும்…அவ இன்னும் சாகலை மலேசியாலதான் பதுங்கி இருக்கா”

இளங்கோவுக்கு தூக்கிவாரிப் போட்டது, “என்னப்பா இது? என்ன நடக்குது உண்மையிலேயே?”

கோப்பெருஞ்சோழன், “அதாண்டா எனக்கும் புரியல, செம்பருதி சாவுக்குக் காரணமான அதே அயல்நாட்டுக் கும்பல் தனா சாவுக்கும் காரணமாக இருந்திருக்கலாம். இந்த அக்கவுண்ட் இப்ப பிளாக் ஆகியிருக்கிறதுக்கும் அவங்களே காரணமா இருக்கலாம். இந்த விஷயத்தில உன் மச்சினனை மட்டும் சந்தேகப்பட முடியாது. ஆனாலும் உனக்கு அவன் மேல ஒரு கண்ணு இருக்கட்டும்”.

இளங்கோ கோபத்துடன், “அப்பா உங்களுக்கு என்னைப் பத்தி தெரியும்ல, நம்ம லைன்ல டபுள் கிராஸ் பண்ண நினைச்சா அது என் மச்சினனே ஆனாலும் சாவடிக்கத் தயங்க மாட்டேன்”.

கோப்பெருஞ்சோழன், “இதே நிலைல இரு, அரசியல்ல குடும்பம், பாசமெல்லாம் இரண்டாம் பட்சம்தான். செம்பருதியோட இந்த ஸ்விஸ் பேங்க் அக்கவுண்ட் பத்தி லீனாவுக்கு தெரிஞ்சிருக்குமோன்னு எனக்கு டவுட்டா இருக்கு. அவளைக் சீக்கிரமா கண்டுபிடிச்சி அழிச்சே ஆகணும். அவளைக் கண்டுபிடிக்க மலேசியாவுக்கு ஒரு டீம் அனுப்பிச்சிருக்கேன். விடு ரெண்டுல ஒண்ணு பார்த்திரலாம்”.

*********** *********** ***********

அத்தியாயம்: 22

வேறொரு கோணம்

முதல் கேள்வியின் my favourite teacher என்ற பதத்தில் அந்த “my” என்பது யாரைக் குறிக்கிறது? செம்பருதியையா அல்லது தனாவையா என்று ஏற்கனவே இளங்கோ குழம்பித் தெளிந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அது செம்பருதியின் ஆசிரியராக இருக்கலாம் என்ற கோணத்தில் இளங்கோ தனது தேடலைத் துவங்கி சரியான விடையைக் கண்டுபிடித்திருந்தான்.

ஆனால் அர்ஜுன் என்ன நினைத்தானோ “my” என்பது தனாவின் ஆசிரியராகத்தான் இருக்க வேண்டும் என்ற கோணத்தில் தனது தேடலைத் துவங்கியிருந்தான். தனாவை ஓரளவுக்கு அன்புடன் நடத்திய இரு பள்ளி ஆசிரியர்களின் பெயர்களை போட்டுப் பார்த்தான் சிஸ்டம் தவறு என்று காட்டியது. மூன்றாவது முறையும் தவறான பதிலைக் கொடுத்தால் அக்கவுண்ட் பிளாக் ஆகிவிடும் என்ற பயத்தில் அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டு தனது தேடலை தீவிரப்படுத்தத் திட்டமிட்டான். தனாவுக்கு பிடித்த ஆசிரியர் சுவிட்சர்லாந்தில் அவன் படித்த கல்லூரியின் பேராசிரியர்களில் ஒருவராகக்கூட இருக்கலாம் என்ற கோணத்தில் சிந்தித்தவன் சுவிட்சர்லாந்துக்கு சென்று அவனது வகுப்புத்தோழர்களில் யாரையாவது சந்தித்து விசாரிக்கலாம் என்று எண்ணியிருந்தான்.

அன்று காலையில் அர்ஜுனுக்கு கல்யாணி அம்மாளிடமிருந்து ஒரு போன்கால் வந்தது. அவனை அவசரமாக வரச்சொல்லி அழைத்திருந்தார். உடனடியாகச் சென்று அத்தையைப் பார்த்த அர்ஜுனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அக்கவுண்ட் அடுத்த 15 நாட்களுக்கு பிளாக் செய்யப்பட்டிருந்ததை கல்யாணி அவனிடம் காட்டினார். இதை யார் செய்திருப்பார் என்று கலங்கியவனாய் சிந்தித்தவனுக்கு இன்னொரு விஷயம் மனதில் பொறிதட்டியது. கல்யாணி அம்மாள் உமாவை அழைக்காமல் தன்னை மட்டும் வரச்சொல்லி இருந்தது அத்தைக்கு உமாவின்மீது சந்தேகம் இருக்குமோ என்ற எண்ணத்தை அவனுக்கு உண்டாக்கியிருந்தது.

அதை அத்தையிடம் நேரடியாகவே கேட்டுவைக்க, “சேச்சே அதெல்லாம் இல்லப்பா, உமாவைப் பார்த்தாலே எனக்கு மகள் இல்லாத குறையைப் போக்க வந்த மகாலட்சுமி மாதிரி தெரியுது” அவளைப் போயி சந்தேகப்படுறதாவது என்றவர்… சில நிமிடங்கள் கழித்து, “இதேபோலத்தான் காதலிக்கும்போது உங்க மாமா மேலேயும் நம்பிக்கை வச்சேன்”. என்று அழத்தொடங்கினார்.

அர்ஜுன் உண்மையிலேயே குழம்பிப் போனான். “அத்தை உமாவை நம்புகிறாரா, நம்பவில்லையா? இரண்டு விதமாகவும் பேசுகிறாரே” என்று தனக்குள் கலங்கியவன், “அத்தை கவலைப்படாதீங்க, இந்த வேலையை நிறைவேற்றச்சொல்லி கடவுள் உங்ககிட்ட கொடுத்ததா நம்புறீங்கள்ல? அந்தக் கடவுள் அருளால என் உயிரைக் கொடுத்தாவது நான் அந்தக் கடமையை நிறைவேற்றுவேன். இதில காதல், குடும்பம், உறவு எல்லாமே எனக்கு இரண்டாம் பட்சம்தான். எவனோ ஒரு கண்ணுக்குத் தெரியாத புது எதிரி கிளம்பிருக்கான்..அவன் எங்கிட்ட சீக்கிரமே சிக்குவான்” என்று தீர்க்கமாகச் சொல்லிவிட்டு கிளம்பினான். அவன் மனதின் ஓரத்தில் உமாவின் மீது ஒரு நூலிழை அளவு சந்தேகம் நிழலாடத் துவங்கியது.

அக்கவுண்ட் பிளாக் ஆன செய்தியைக் கேட்டு உமா ஷாக் ஆனாள். தொழில்முறை துப்பறிவாளனான அர்ஜுன் சிலரது கண்களை வைத்தே அவர்கள் குற்றவாளிகளா இல்லையா என்பதை எடை போட்டுவிடுவான். எப்படிப் பார்த்தாலும் உமாவிடத்தில் எள்ளளவுகூட குற்றவாளிக்கான அறிகுறிகளை அவனால் பார்க்க முடியவில்லை. தன்னை உயிராக நேசிக்கும் காதலி மீது தனக்கு வந்த மெல்லிய சந்தேகத்திற்க்காக தன்னைத்தானே நொந்து கொண்டான்.

சில நாட்கள் கழிந்தன, பிளாக் செய்து வைக்கப்பட்டிருந்த செம்பருதியின் சுவிஸ் வங்கி அக்கவுண்ட் மறுபடி ஆக்டிவேட் ஆகி இருந்தது. இளங்கோ இரண்டாவது கேள்விக்கான தேடலிலும், அர்ஜுன் முதல் கேள்விக்கான தேடலிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

ஒரு சனிக்கிழமை மாலையில் தங்கள் வழக்கமான கடற்கரை சந்திப்புக்காக உமாவும் அர்ஜுனும் பைக்கில் சென்று கொண்டிருந்தனர். பின்னால் உட்காந்திருந்த உமா திடீரென்று திட்டத்தை மாற்றி இன்னைக்கு ஒரு சேஞ்சுக்கு மகாபலிபுரம் பீச்சுக்கு போகலாம்டா என்று சொல்லவே, அர்ஜுன் கூகுள் மேப் உதவிக்காக தனது ஸ்மார்ட் கிளாசை அணிந்து கொண்டான்.

வழியில் ஒரு குப்பத்தின் ஊடாக கடந்து செல்ல வேண்டியிருந்தது. அங்கு சில சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தனர். ஒரு பையன் ஓங்கி அடித்த பந்து தனது முகத்தை நோக்கிப் பறந்து வருவதை தனது ஸ்மார்ட் கிளாஸின் வழியாகக் கண்ட அர்ஜுன் சட்டென வண்டியை ஒடிக்க பந்து அவனது காதுகளையும், உமாவின் காதுகளையும் உரசியபடி விர்ரென்று கடந்து சென்றது.

..ண்ணா! சாரிண்ணா, சாரிண்ணா என்று கத்தினர் சிறுவர்கள். சில அடி தூரங்கள் கடந்து சென்ற அர்ஜுன் சட்டென வண்டியை “யு டர்ன்” அடிக்க அர்ஜுன் தங்களை அடிக்கத்தான் வண்டியைத் திருப்புகிறான் என்று எண்ணிய சிறுவர்கள் ஓட்டம் பிடித்தனர். உமாவும்கூட அப்படித்தான் நினைத்தாள். ஆனால் அர்ஜுனது வண்டி நிற்காமல் வந்த பாதையிலேயே திரும்பப் பறந்தது.

“ஏய் ஏண்டா வண்டிய திருப்புன” என்று காதோரத்தில் கத்திய உமாவுக்கு அர்ஜுனிடமிருந்து பதில் வரவில்லை.

நேராகப் போனவன் ஒரு காஃபி டேயில் பைக்கை நிறுத்தினான். “ஒரு முக்கியமான மேட்டர் உமா, வா சொல்றேன்” என்று அர்ஜுன் கூற ஒன்றும் புரியாதவளாக உமா அவன் பின்னே சென்றாள்.

அங்கு நுழைந்தவன் இருவருக்கும் ஒரு காபி ஆர்டர் கொடுத்துவிட்டு தனது லேப்டாப்பை எடுத்து நேராக செம்பருதியின் அக்கவுண்ட்டுக்குள் நுழைந்தான். முதல் கேள்விக்கு “ramamurthy” என்று பதிலை டைப் செய்ய அதை “சரியான பதில்” என்று ஏற்றுக்கொண்ட சிஸ்டம் அடுத்த கேள்வியில் சென்று நின்றது.

அர்ஜுன், உமா இருவர் முகங்களும் ஓராயிரம் விளக்குகள் ஒளிர்ந்ததுபோல பிரகாசித்தது… “ஏய், என்ன பாஸ்வேர்ட் இது, எப்படிக் கண்டுபிடிச்சே?” என்று கேட்ட உமாவிடம் அர்ஜுன் “நீ இன்னிக்கு பிளானை மாத்தி மகாபலிபுரம் போகலாம்னு சொன்னதாலதான் இன்னிக்கு இந்தப் பாஸ்வேர்டை கண்டுபிடிக்க முடிஞ்சிச்சுடி செல்லம்” என்று குதூகலமாகச் சொன்னான்.

உமா, “டேய், புரியலடா, கொஞ்சம் தெளிவா சொல்லேன்.”

அர்ஜுன், “நானும் செம்பருதி மாமாவோட பையன் தனசேகரனும் ஒரே ஸ்கூல்லதான் படிச்சோம். அவன் என்னைவிட ஏழு வருஷம் ஜுனியர். அப்ப மாமாவும் சரி, அவங்க கட்சியும் சரி அரசியல்ல பிரபலமடையாத நிலையிலதான் இருந்தது. நானும் தனாவும் ஒரே சைக்கிள் ரிக்ஷாவுலதான் ஸ்கூலுக்குப் போவோம். அப்படி இருக்கும்போது அவன் ரொம்பநாளா ஏன் ஸ்கூலுக்கு வரலைன்னு சொல்லி அவன் கிளாஸ் டீச்சர் வீட்டுக்கு லெட்டர் அனுப்பிருந்தாங்க.

எங்க எல்லோருக்கும் ஒரே ஷாக், காலைல என் கூட ஒண்ணாத்தானே சைக்கிள் ரிக்ஷாவுல வர்றான், திரும்பி நாங்க ரெண்டு பேரும் ஒண்ணாத்தான் வீட்டுக்கு போறோம் அப்படி இருக்கும்போது வகுப்புக்கு வரலைன்னு டீச்சர் சொல்றாங்களேன்னு அவனை விசாரிச்சுப் பார்த்தோம். எவ்வளோ அடிச்சும் அவன் வாயில இருந்து உண்மையை வரவழைக்க முடியல. அப்பவே அவ்வளோ அழுத்தக்காரன் அவன்.

அப்பத்தான் எங்க ரிக்ஷா ஓட்டுற தாத்தா மூலமா ஒரு க்ளூ கிடைச்சது. அவனை ரெண்டு மூணு தடவை ஸ்கூலுக்குப் பக்கத்துல இருக்க குப்பத்துல பார்த்ததா அவர் சொன்னாரு. அங்க போயி விசாரிச்சுப் பார்த்த போதுதான் தெரிஞ்சது இவன் ஸ்கூலுக்கு வந்தும் வகுப்புக்குப் போகாம கட் அடிச்சிட்டு பக்கத்துல இருந்த குப்பத்துக்குப் போயி அங்க இருக்கிற பசங்களோட கோலிக்குண்டு, பம்பரம், கில்லி தாண்டு எல்லாம் ஆடிட்டு இருந்திருக்கான்.

இவனுக்கு அதெல்லாம் ஒழுங்கா ஆடத்தெரியாததால பசங்க இவனை அலட்சியமா ஒதுக்கினதும் அழுதபடியே அவங்க விளையாட்டை வேடிக்கை பார்த்தபடியே உட்காந்திருந்திருக்கான். அப்ப அங்க இருந்த ராமமூர்த்திங்கிறவர் அவனை பார்த்துக்கிட்டே இருந்திருக்கார். அவர் ஒரு குடிபோதைக்கு அடிமையான ஆள். ஒரு கலவரத்தில அவரு வீட்டுல இல்லாதப்ப அவரு குடிசையை கொளுத்திட்டாங்க, அதுல அவரோட மனைவியும், தனா வயசுலயே இருந்த அவரோட மகனும் கருகி செத்துட்டாங்க".

உமா பரிதாபமாக, "ஐய்யய்யோ"

அர்ஜூன், "அதுல இருந்து அவர் குடிபோதைக்கு அடிமையாகி அவங்க குடிசை எரிஞ்ச அந்த இடத்துலயேதான் உட்காந்திருப்பாராம். அவர் தனாவைப் பார்த்ததும் அவரோட செத்துப்போன மகன் நினைவு வந்ததோ என்னவோ தெரியல, தனாவைக் கூப்பிட்டு அவனோட இவர் கில்லி தாண்டு, கோலி குண்டெல்லாம் ஆடிருக்காரு. அவருகிட்ட விளையாண்டு கில்லி தாண்டுல தனா எக்ஸ்பர்ட் ஆகிட்டான். அவரைப் பார்க்காம தனாவால இருக்கவே முடியாதுங்கிற அளவுக்கு ரெண்டு பேரும் நெருக்கம் ஆகிட்டாங்க.

அதுக்கப்புறம் வீட்டுல உண்மையை கண்டுபிடிச்சு அவனைப் போகவிடாம தடுத்தாச்சு. அப்படியிருந்தும் தனா அப்பப்ப எப்படியாச்சும் போய் அவரைப் பார்த்திடுவான். இதற்கிடையில ராமமூர்த்தி பத்தி விசாரிச்ச கல்யாணி அத்தை பரிதாபப்பட்டு அவருக்கு உதவியெல்லாம் செய்ய ரொம்ப முயற்சி பண்ணாங்க. எந்த உதவியையும் ராமமூர்த்தி ஏத்துக்கல, எனக்கு ஒண்ணுமே வேணாம், வாரம் ஒரு தடவையாச்சும் உங்க பையனைப் பார்க்க அனுமதி கொடுங்கன்னு கேட்டாராம். அதுக்கப்புறம் மாமா வீட்டுல இல்லாத சனி, ஞாயிறு நாட்கள்ல ராமமூர்த்தியைப் போய் பார்க்கிறதுக்கு தனாவை அத்தையே அனுப்பி வைப்பாங்க அவனுக்கு துணைக்கு நானும் போவேன். ஆனா அதுக்கப்புறம் ஒரு சில மாதங்கள்ல குடிப்பழக்கம் அவர் உடம்பை ரொம்பவே பாதிச்சதால இறந்துட்டார்.

அந்த பிளாஷ்பேக்கைக் கேட்ட உமா சற்றே சீரியஸ் ஆகிவிட்டாள், "ச்சே…ரொம்ப பாவமா இருக்குப்பா, நம்ம கல்யாணி ஆண்ட்டிக்குத்தான் எவ்வளோ நல்ல மனசுல்ல…அதுசரி அவரோட பேரை ஏன் தனா favourite teacher-ங்கிற கேள்விக்கு பதிலா வைச்சான். அவரு என்ன டீச்சரா?"

அர்ஜூன் மெலிதாக புன்னகைத்தபடி, "நான்கூட சுவிட்சர்லாந்துக்குப் போயி அவங்க காலேஜ்ல எல்லாம் விசாரிக்கலாம்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஆனா ஒரு விஷயத்தை நல்லா புரிஞ்சுக்கணும் உமா, இத்தனை கோடி பணத்தை திருட்டுத்தனமா பதுக்கி வைக்கிறவன் செக்யூரிட்டிக்காக கொடுக்கிற பஸ்வேர்டை யாராச்சும் தேடி கண்டுபிடிச்சு போடுற அளவிலேயா கொடுப்பான்? நல்லா யோசிச்சுப் பார்க்கணும்…இதுல இருந்து நமக்கு என்ன தெரியுதுன்னா அடுத்த ரெண்டு கேள்விகளும் இதே அளவு சிக்கல் நிறைஞ்சதாத்தான் இருக்கும். நேரடியா யோசிச்சா கதைக்கு ஆகாது, குறுக்கு வழிலதான் யோசிக்கணும். ஆனா இதுல ஒரு நேரடி உண்மையும் இருக்கு, தனா அந்த வயசுல எதைப் பெரிசா நினைச்சானோ அதை அவனுக்கு கத்துக்கொடுத்த வாத்தியார் ராமமூர்த்திதானே?".

உமா ஆமோதித்து தலையாட்டியபடி, "இட் மேக்ஸ் சென்ஸ்"

அர்ஜுன் லேப்டாப்பின் தொடுபலகையில் விரலை உரச power saver mode-ல் இருந்த மடிக்கணினியின் திரை மீண்டும் உயிர் பெற்றது. அப்போதுதான் ஏற்கனவே இரண்டாவது கேள்வி வந்து நின்றிருந்ததை இருவரும் கவனித்தார்கள்.

“The Darkness brought light, name it”

உமா, “வெளிச்சத்தைக் கொண்டு வந்த இருளா?” என்னடா இது?”

அர்ஜுன், நான் சொல்லல? முதல் கேள்வியை விடப் பெரிய சேலஞ்ச் இது!”

*********** *********** ***********

அத்தியாயம்: 23

உள்ளே நுழைந்த பகையாளி

முதலமைச்சரின் அலுவலகம் அன்று வழக்கமான பரபரப்பில் இருந்தது. ஜீன்ஸ், டெனிம் ஷர்ட் அணிந்த ஒரு டீசண்ட்டான நபர் முதல்வரின் அறைக்குள் எட்டிப்பார்த்து அவருக்கு வணக்கம் வைத்தான். அந்த நேரத்தில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த முதல்வர் அந்த நபரை சற்று காத்திருக்கும்படி கண்ணில் சைகை காட்டினார்.

அந்த நபர் வந்திருப்பதை முதல்வர் கவனித்ததும் பேச்சுவார்த்தை சட்டென வேகமெடுத்தது. அடுத்த 15 நிமிடத்தில் அவசர அவசரமாக கலந்துரையாடலை முடித்த கோப்பெருஞ்சோழன் அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு, தனது உதவியாளரை அழைத்து அந்த ஜீன்ஸ் நபரை உடனே உள்ளே அனுப்பும்படி சொன்னார். உதவியாளர் அந்த ஆளை உள்ளே அனுப்பி வெளியிலிருந்து கதவைச் சாத்திக்கொண்டார். முதல்வரும் அவனுக்குமான இரகசிய சந்திப்பு 20 நிமிடங்கள் நடந்திருக்கும். அதற்குப் பின் அவன் வெளியேற, முதல்வரின் அறைக்குள் இளங்கோ நுழைந்தான்.

இளங்கோ, “என்னப்பா திடீர்னு வரச்சொன்னீங்க, அந்த ஆள் வேற வந்திருக்கான் பார்த்தேன். ஏன் ஆஃபீசுக்கெல்லாம் வர்றான்? எதுவும் முக்கியமான விஷயமா?”

கோப்பெருஞ்சோழன் முகத்தை சீரியாக வைத்துக்கொண்டு நெற்றியை சொறிந்தபடி, “லீனா மலேசியாவுல இருந்து தரை மார்க்கமா தப்பிச்சு தாய்லாந்துக்குள்ள நுழைஞ்சிட்டதா தெரியவந்திருக்கு”

இளங்கோவின் முகம் சுருங்கியது, “எப்படிக் கண்டுபிடிச்சாங்க?”

கோப்பெருஞ்சோழன், “அவ மலேசியாவை எப்படி கிராஸ் பண்ணி தாய்லாந்துக்குள்ள நுழைஞ்சான்னு தெரியாது. ஆனா தாய்லாந்து பார்டர்ல அதிகாரிகள் அவளை சந்தேகப்பட்டு பிடிச்சிருக்காங்க, ஒரு மணி நேரம் அவளை அங்கேயே வச்சு விசாரிச்சிருக்காங்க. அதுக்கப்புறம் யாரோ வந்து அதிகாரிகள்கிட்ட பேசி அவளை மீட்டுட்டுப் போயிருக்காங்க. அது கண்டிப்பா பெரிய செல்வாக்கு உள்ள சிலராத்தான் இருக்கணும், அது யாருன்னு தெரியல. அதுக்கப்புறம் அவ எங்க போனான்னும் தெரியல. நம்மாளுங்க தேடிக்கிட்டு இருக்காங்க”

இளங்கோ குழப்பமாக பெருமூச்சு விட்டபடி, “ரொம்ப மர்மமா இருக்குப்பா, அவளை சீக்கிரம் உயிரோட பிடிச்சாகணும். எதிரி நம்மளை விட ரொம்ப பெரிய பலசாலியா இருப்பானோன்னு தோணுது.”

கோப்பெருஞ்சோழன் உதட்டைப் பிதுக்கியபடி ஆமோதித்து தலையசைத்தார்.

தனது அஸ்வா டிவி அலுவலகத்துக்கு திரும்பிய இளங்கோ தீவிர சிந்தனையில் இருந்தான். அவனுக்கு அருகே இருந்த இருக்கையில் தனஞ்செயன் அமர்ந்திருந்தான். அவன் இன்று மீண்டும் மும்பைக்கு கிளம்புவதாக இருந்தது. திடீரென மர்மமான முறையில் அக்கவுண்ட் பிளாக் ஆனதிலிருந்து தன்மீது இளங்கோவுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்குமோ என்ற பயம் அவனுக்குள் உள்ளூர உருவாகியிருந்தது. அதை அவனது முகம் காட்டிக்கொடுக்கவே இளங்கோ அவனிடம் நேரடியாகவே கேட்டுவிட்டான், “ஏண்டா இஞ்சி தின்ன கொரங்கு மாதிரியே உட்காந்திருக்க? அக்கவுண்ட் பிளாக் ஆன மேட்டர்ல உன்னை சந்தேகப்படுவனோன்னு பயப்படுறியா?”

தனஞ்செயன் அமைதியாக இருந்தான். அவனுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

இளங்கோ, “அடேய் கிறுக்கா! உன்னைப்போய் நான் சந்தேகப்படுவேனா? இங்க வேற மேட்டர் நிறைய ஓடிக்கிட்டு இருக்கு. அதெல்லாம் உங்கிட்ட சொல்ல முடியாது. நான் எதிரிக்கு ஒரு பெரிய கண்ணியா வச்சிருக்கேன் சீக்கிரமே சிக்குவான். அதனால நீ தேவையில்லாம மனசைப் போட்டு குழப்பிக்காம சந்தோஷமா ஊருக்குப் போய் சேரு”.

தனஞ்செயன் சற்று ஆறுதலடைந்தவனாக, “சரிங்கத்தான்” என்று தலையாட்டினான்.

அன்று இளங்கோவின் மனம் வேலையில் லயிக்கவில்லை. லீனாவைக் குறித்த செய்திகள் அவனுக்கு பெரிய குழப்பத்தை உண்டாக்கியிருந்தது. அப்போது திடீரென அலுவலக வாசலில் ஏதோ சத்தம் கேட்க ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தான். வெளியே மழை லேசாக தூறிக்கொண்டிருந்தது. வாசலில் சில ஆட்கள் எதிர்கட்சியின் கொடியைப் பிடித்து கோஷம் போட்டுக்கொண்டிருந்தார்கள் அவர்களுக்கும் இளங்கோவின் கட்சிக்காரர்களுக்கும் தள்ளு முள்ளு நடந்து கொண்டிருந்தது.

அலுவலகத்தில் இருந்த கட்சிப் பெரியவர் ஒருவரை இளங்கோ கூப்பிட்டு, வெளியே என்ன நடக்கிறதென்று விசாரிக்கவே, “நேற்று நம்ம டிவில அவங்க கட்சி நிர்வாகி ஒருத்தரைப்பத்தி தப்பா நியூஸ் போட்டுட்டதா சொல்லி போராட்டம் பண்றாங்க தம்பி, நீங்க கவலைப்படாதீங்க நாங்க பார்த்துக்கிறோம்” என்று சொல்லவே இளங்கோ மீண்டும் தனது இருக்கையில் வந்து அமர்ந்தான்.

அப்போது ரிஷப்ஷனில் இருந்து இளங்கோவுக்கு போன் வந்தது. சார் உங்களைப் பார்க்க “_______” -னு ஒருத்தர் வந்திருக்காரு…

இளங்கோ, “அவனை நான்தான் வரச்சொன்னேன், உள்ள அனுப்புங்க…”

உள்ளே நுழைந்தவன் யார் என்பது கதையின் முக்கியமான திருப்பம். அந்த முடிச்சை இன்னொரு அத்தியாயத்தில் அவிழ்க்கலாம்.

*********** *********** ***********

அத்தியாயம்: 24

ஒரு சின்ன பிரேக் - பிளாஷ்பேக்

“The Darkness brought light, name it”

என்ற இரண்டாம் கேள்விக்கு பதில் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஒருபக்கம் இளங்கோவும் இன்னொரு பக்கம் அர்ஜுனும் மும்மரமாக ஈடுபட்டிருப்பது நமக்குத் தெரியும். கதையின் திருப்பமாக ஒரு புதிய ஆள் வேறு நுழைந்திருக்கிறான். கதையின் அடுத்தடுத்த அத்தியாயங்கள் இனி டாப் கியரில் எகிறப் போகிறதென்பதை வாசகர்கள் உணர்ந்திருப்பீர்கள். இப்போது ஒரு சின்ன பிரேக் எடுத்துவிட்டு இளங்கோ-பவானியின் இனிமையான காதல் கதையின் பிளாஷ்பேக்கை சொல்லிவிட்டு பின்னர் கதையின் பரபரப்பை தொடரலாம் என்று நினைக்கிறேன்.

பவானி பிறந்து சில நாட்களிலேயே அவள் அப்பா ஒரு விபத்தில் காலமாகிவிட்டார். அவள் அம்மாதான் தனஞ்செயனையும், பவானியையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து ஆளாக்கினார். வறுமைக்கோட்டிற்கும் நடுத்தர வர்க்கத்துக்கும் இடையில் கிடந்து அல்லாடும் சராசரிக் குடும்பம் என்று ஏற்கனவே எழுதியிருந்தேன். எதையுமே போராடிப் பெற்றுக்கொள்ளும் நிலைதான் சிறுவயதிலிருந்தே பவானிக்கு இருந்தது. அதற்கு அவள் மனதளவில் பழகிவிட்டிருந்தாள்.

பவானியின் வீடு இருந்த தெரு ரொம்பவே கலகலப்பானது. பெண்கள் எல்லோரும் சேர்ந்து கோவிலுக்குப் போவது, சினிமாவுக்குப் போவது, அரட்டை அடிப்பது என்று எப்போதும் மகிழ்ச்சிக்குப் பஞ்சமிருக்காது. அந்தத் தெருவின் முதல் வீடே பவானியின் வீடுதான். அதிலிருந்து ஐந்தாம் வீட்டில் மதி ஆண்ட்டி இருந்தார்கள், அவரது கணவர் சேதுராமன் ஒரு யோகா டீச்சர் ஆவார். பவானிக்கு அவர்தான் ஆன்மீக ஆசான். மதி ஆண்ட்டி முகத்தில் விழித்தால் ராசி என்பது பவானியின் நம்பிக்கை. அதற்கு எதிர்வீட்டில் பார்கவி ஆண்ட்டி இருந்தார்கள். அவரது ரகு கணவர் ஒரு பெரிய கடை வைத்திருந்தார். பார்கவி ஆண்ட்டியும் அவரது மகள் ஸ்வாதியும் பவானிக்கு ரொம்பவே நெருக்கம். பவானியின் பொழுதுபோக்கு இவர்கள் வீட்டில்தான்.

பார்கவியின் கணவர் ரகு ஆளுங்கட்சியில் இருந்ததால் அவர்கள் வீட்டில் எப்போதும் அஸ்வா டிவி ஓடிக்கொண்டிருக்கும். ஆமா அதென்ன அஸ்வா டிவி? வேற பேரு கிடைக்கலையா என்று வாசகர்கள் யாருக்காவது சந்தேகம் எழுந்திருந்தால் அதைத் தீர்க்கும் சரியான இடம் இதுதான். அஸ்வம் என்றால் குதிரை என்று பொருள். ஆளுங்கட்சியின் சின்னம் பாயும் குதிரை என்பதால் இரத்தின சுருக்கமாக தங்கள் சேனலுக்கு அஸ்வா டிவி என்று நாமகரணம் சூட்டியிருக்கின்றனர், அவ்வளவுதான்!. பார்கவி வீட்டில்தான் பவானி அஸ்வா டிவியில் அடிக்கடி இளங்கோவைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவளையும் அறியாமல் அவளுக்கு இளங்கோ மீது ஒரு ஈர்ப்பு ஏற்ப்பட்டது. அதன்பிறகு அவள் வீட்டிலும் அஸ்வா டிவி ஓட ஆரம்பிதது.

இன்று மூச்சுக்கு முந்நூறு தடவை “சொல்லுங்த்தான், ஆமங்த்தான், இல்லீங்த்தான்” என்று குழையும் தனஞ்செயன் அன்று தனது வீட்டில் அஸ்வா டிவி ஓடும்போதெல்லாம் பவானியின்மீது எரிந்து விழுவான். அதிலும் டிவியில் இளங்கோவைப் பார்த்தால், “இந்த ரெவுடிப்பய பேசுறத எதுக்குடி காலங்காத்தால சுப்ரபாதம் கேட்குற மாதிரி உட்காந்து கேட்டுக்கிட்டு இருக்க?” என்று ஆரம்பித்து இளங்கோவை அச்சிலேற்ற முடியாத வார்த்தைகளால் அர்ச்சிப்பான். எல்லாவற்றுக்கும் மனதில் ஊறியிருந்த சாதிப் பிணக்கே காரணம். ஆனால் அதே தனஞ்செயன் இப்போது இளங்கோவை தனது தந்தையின் ஸ்தானத்தில் வைத்துப் பார்ப்பது வேறு விஷயம்.

இளங்கோமீது பவானிக்கு ஏற்பட்ட ஈர்ப்பின் காரணமாக கற்பனைகளில் அடிக்கடி வந்துபோகும் 'எதிர்காலக் கணவன்' என்ற பாத்திரத்தின் உருவமாக இளங்கோ மாறியிருந்தான். எதிர்காலக் கணவனை அவன் உருவில் கற்பனை செய்தவள் போகப்போக அவனே தனக்கு எதிர்காலக் கணவனாக வேண்டுமென உள்ளூர ஏங்க ஆரம்பித்துவிட்டாள்.

மதி ஆண்ட்டியும், அவரது கணவர் சேதுராமனும் பவானியை ரொம்பவே நேசித்தனர். தகப்பன் இல்லாத பெண்ணாக இருந்து ஒவ்வொன்றுக்கும் அவள் போராடுவதை அவர்கள் அறிந்திருந்தனர். குடும்பக் கஷ்டம் காரணமாக ஏதாவது வேலைக்குச் செல்ல பவானி முயன்று கொண்டிருந்தாள். அதிலும் அவளுக்கு தோல்வியே மிஞ்ச, அவள்மீது பரிதாபப்பட்ட சேதுராமன் அவளுக்கு ஆழ்மனதிலிருக்கும் எதிர்மறை எண்ணங்களை விலக்குவது, விரும்பியவற்றை பிரபஞ்சத்திலிருந்து ஈர்ப்பது போன்ற சில ஸ்பெஷல் தியானங்களைக் கற்றுக்கொடுத்தார்.

நேர்மறை எண்ணங்கள், ஈர்ப்புவிதி போன்ற நியூஏஜ் சிந்தனைகள் அப்போதுதான் தமிழகத்தில் பரவத் தொடங்கியிருந்தன. பவானிக்கோ இளங்கோவைத் தவிர இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எதையும் ஈர்க்க விருப்பமில்லை. தியானத்துக்கென்று கண் மூடினால் புருவமத்தியில் இளங்கோவே வந்து பிடிவாதமாக புன்னகைத்து நின்றான். முடவன், கொம்புத்தேன் பழமொழி வேறு அடிக்கடி குறுக்கே புகுந்து மனக்கோட்டையை அவள் கட்டடக்கட்டக் கலைத்துக் கொண்டிருந்தது.

இந்தச் சூழலில்தான் பார்கவி ஆண்ட்டியின் மகள் ஸ்வாதி பவானிக்கு ஒரு ஐடியா கொடுத்தாள். "ஏண்டி நீதான் college culturals-லயெல்லாம் வெளுத்து வாங்குறேல, அழகா வேற இருக்க. நீ ஏன் டிவி ஆங்கரா try பண்ணக்கூடாது"

பவானியின் தலைக்குள் பளிச்சென ஒரு பச்சைப் பல்பு எரிந்தது, "ஆமா ஏன் try பண்ணக்கூடாது, அதையும் ஏன் அஸ்வா டிவிலயே பண்ணக்கூடாது?"

பார்கவி ஆண்ட்டி ஃபைனான்ஸ் பண்ண, அடுத்த நாளே செயலில் இறங்கினாள் பவானி. ஸ்டுடியோவுக்குப் போய் அழகாக ஒரு போட்டோ, நிகழ்ச்சியைக் கேம்ப்பியரிங் செய்வது போல ஒரு சாம்பிள் வீடியோ, ரெஸ்யூம் என்று பக்காவாக ரெடிபண்ணினாள். ஆளுங்கட்சியில் இருந்த பார்கவி ஆண்ட்டியின் கணவர் ரகு வழியாக அது பல கைகளைக் கடந்து அஸ்வா டிவி அலுவலகத்தை அடைந்தது. அதன் பின்னர் பவானி இளங்கோவுக்காக சின்சியராக தியானத்தை ஆரம்பிக்க அந்த தியானத்துக்கு இளங்கோவே பெரிய இடைஞ்சலாய் இருந்தான். அவனது நினைவுகளை மீறி அவளால் தனது சிந்தையை ஓரிடத்தில் குவிக்க முடியவில்லை. அப்போதுதான் இளங்கோ தன்னில் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறான் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

ஆறு மாதம் கழித்து திடீரென அஸ்வா டிவியில் இருந்து அவளுக்கு இண்டர்வியூவுக்கு அழைப்பு வந்தது. பவானிக்கு சொர்க்கவாசல் திறந்ததுபோல இருந்தது. அப்போதுதான் அவள் அங்கு வேலைக்கு விண்ணப்பித்திருந்தது வீட்டுக்கு தெரிய வந்தது. தனஞ்செயன் அவளை "இனதுரோகி" என்ற ரேஞ்சுக்கு தாறுமாறாக திட்டினான்.

பவானி, "ஏண்டா நான் என்ன பாகிஸ்தான் ராணுவத்துலேயா சேரப்போறேன்?, பக்கத்து ஏரியால இருக்கிற டிவி ஸ்டேஷனுக்குத்தானடா வேலைக்குப் போறேன். இதுக்குப் போய் ஏன் இவ்வளோ குதிக்கிற?"

தனஞ்செயன், "போடி, போ…நீ இண்டர்வியூல செலக்ட் ஆனாலும் கடைசியா உன் கம்யூனிட்டி சர்ட்டிபிக்கேட்டைப் பார்த்துட்டு உன் பொடணிலயே அடிச்சு வெளிய துரத்தி விடுவானுக பாரு. அப்பத்தான் உனக்கெல்லாம் புத்தி வரும்"

பவானி நம்பிக்கை இழந்தவளாக இண்டர்வியூவுக்கு சென்றாள். ஆனால் மதி ஆண்ட்டி முகத்தில் விழித்துச் சென்ற ராசியோ என்னவோ தெரியவில்லை எல்லாம் தனஞ்செயன் சொன்னதற்கு நேர்மாறாக நடந்தது. எல்லா தேர்வுகளிலும் எளிதாக பாஸ் ஆனவள் வேலைக்கு தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டாள். அவளுக்கு நடப்பதெல்லாம் கனவு போல இருந்தது.

“அந்த கான்ஃபரன்ஸ் ரூம்ல வெயிட் பண்ணுங்க கொஞ்ச நேரத்துல ஆஃபர் லெட்டர் தர்றோம் வாங்கிட்டு கிளம்புங்க” என்று ஹெச்.ஆர் சொல்ல, அந்த அறையில் காத்திருந்தாள். அவள் மனதுக்குள் அனிருத் பாடலுக்கு ஆயிரம் பேர் சேர்ந்து குத்தாட்டம் ஆடிக்கொண்டிருந்தது போல ஒரு உணர்வு இருந்தது. ஆனாலும் ஒரு பக்கம் “ச்சே…முதல் தடவையா வந்து நம்ம ஆளை நேருல பார்க்க முடியாம போச்சே..” என்று நினைவு ஓடிக்கொண்டிருந்தபோதே அறையின் கதவு திறக்கப்பட்டது.

ஆஃபர் லெட்டரை கையில் கொண்டு வந்தது இளங்கோ….

அவனைப் பார்த்த வினாடியில் சப்தநாடியும் ஒடுங்கிப்போனாள். ஏசி அறையில் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. இளங்கோ அவள் இருந்த நிலையை விந்தையாய்ப் பார்த்துப் புன்னகைத்தபடி அவளிடம் ஆஃபர் லெட்டரை நீட்டி,

“வெல்கம் டூ அவர் ஃபேமிலி” என்றான்.

அந்த வார்த்தையைக் கேட்டது தன் காதுகள்தானா? தன் கண்கள் காண்பது நிஜம்தானா என்று அவளுக்கு எதுவுமே புரியவில்லை. அவன் ஃபேமிலி என்று சொன்னது அலுவலகத்தைத்தான் என்று அவளுக்கு தெரிந்திருந்தாலும் அவன் தனது குடும்பத்துக்குள் மனைவியாக வரவிடுக்கும் அழைப்பாகவே அது அவள் மனதுக்குள் திரும்ப திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது. இப்போது மனதுக்குள்ளிருந்த அந்த ஆயிரம் பேரும் குத்தாட்டத்தை நிறுத்திவிட்டு இசைஞானியின் டியூனுக்கு இதமாக வயலின் வாசிக்கத் தொடங்கிருந்தனர். பவானி இசைஞானியின் தீவிர ரசிகையும் கூட…

நாட்கள் நகர்ந்தன…பவானி அங்கு வேலைக்குச் சேர்ந்த ஏழு மாதங்களில் அதே கான்ஃபரன்ஸ் அறைக்குள் வைத்து இளங்கோவின் வாயிலிருந்து மறுபடியும் அதே வார்த்தைகள் வந்தன. இம்முறை இளங்கோவுக்கு வேர்த்துக் கொட்டியிருந்தது. காரணம் அப்போது அவன் உண்மையாகவே பவானியை தனது குடும்பத்துக்குள் அவனது மனைவியாக வர அழைப்பு விடுத்திருந்தான்.

அதன் விளைவாக பவானியின் அகத்தினுள் தென்றலும், தமிழக அரசியலில் புயலும் வீசத் தொடங்கியது.

*********** *********** ***********

அத்தியாயம்: 25

கிடைத்தும் கிடைக்காத தீர்வு

அந்தப் புயலையெல்லாம் சமாளித்து இளங்கோ பவானியை திருமணம் செய்து கொண்டது வேறு விஷயம். சரி, மீண்டும் இப்போது நிகழ்காலத்துக்கு வருவோம்…

அன்று அதிகாலை ஐந்து மணிக்கு இளங்கோவின் அறைக்கதவு தட்டப்பட்டது. மீண்டும் அதே பதட்டத்துடன் அப்பாவின் குரல். இந்தமுறை பவானி ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

இளங்கோ பதட்டத்துடன் எழுந்து பவானிக்கு பின்னாலே வந்து "என்னப்பா, என்ன இந்த நேரத்துல"

கோப்பெருஞ்சோழன் சற்று பதட்டமாக, "சாரிப்பா, உடனே என் ரூமுக்கு வா, ஒரு பெர்சனல் விஷயம்… அவசரம் என்றார்".

இளங்கோ வேகமாக அவர் பின்னே போனான். கோப்பெருஞ்சோழன் தனது அறையைத் திறந்து இளங்கோவை உள்ளே விட்டு கதவை சாத்தி தாழிட்டார். அவரது அறையின் உள்ளே அவரது லேப்டாப்பில் ஏதோ வீடியோ ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அதன் அருகில் சென்று கண்ட காட்சி இளங்கோவுக்கு தூக்கிவாரிப்போட்டது…

அது வீடியோ அல்ல, ஸ்கைப் மாதிரி ஒரு மெசேஞ்சரில் லைவாக ஓடிக்கொண்டிருந்த காட்சி. லீனா பித்துப் பிடித்தவளாக அமர்ந்திருந்தாள். அவள் பின்புறம் ஒரு ஆசாமி முகமூடி அணிந்தவனாக அவள் பின்னந்தலையில் துப்பாக்கியை வைத்து அழுத்தியபடி நின்று கொண்டிருந்தான், இன்னொரு கையில் அவளது முடியை கொத்தாகப் பிடித்திருந்தான். அவளது வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இரண்டு முகமூடி ஆசாமிகள் நின்று கொண்டிருந்தனர்.

இளங்கோ அதிர்ச்சியோடு அப்பாவை நிமிர்ந்து பார்த்தான்…

கோப்பெருஞ்சோழன், "அவளை நேத்து இராத்திரிதான் மியான்மர்ல வச்சு மடக்கிப் பிடிச்சிருக்காங்க. ஆனா அவளை அவங்க பிடிச்சபோதே சித்த பிரம்மை பிடிச்சவ மாதிரிதான் இருந்திருக்கா. என்ன ஆச்சுன்னு தெரியல சுயநினைவு சுத்தமா இல்ல. அவகிட்ட இருந்து எந்த ஒரு தகவலும் வாங்க முடியல".

வீடியோவில் லீனாவின் இடதுபுறத்தில் நின்றிருந்த முகமூடி ஆசாமி, "சார் என்ன செய்யட்டும், சீக்கிரம் சொல்லுங்க" என்றான்.

கோப்பெருஞ்சோழன், அந்த மெசேஞ்சரில் "Finish her" என்று டைப் செய்தார்.

அடுத்த வினாடி பின்னந்தலையில் சுட்டவனது குண்டு லீனாவின் நெற்றியைத் துளைத்து முன்னால் வந்து விழுந்தது. மூளையோடு சேர்த்து அறையெங்கும் தெறித்த இரத்ததுளிகளில் ஒன்று அவர்களது கேமரா லென்சில் பட்டு கோப்பெருஞ்சொழனின் கணினித் திரையை சிவப்பாக்கியது.

இளங்கோ, "ச்சே! விடியக்காலையில பார்க்க வேண்டிய காட்சியா இது" என்றவன் கோப்பெருஞ்சோழனிடம் "அப்பா, என்ன சாஃப்ட்வேர் இது? உங்களுக்கு எப்படி கிடைச்சது எவ்வளவு safe இது?" என்று கேட்க, கோப்பெருஞ்சோழன் "அவர்களிடமே கேள், பேச முடியாது டைப் பண்ணு" என்றார்.

இளங்கோ அந்த கேள்வியை டைப் செய்து அனுப்ப, அங்கிருந்த ஒருவன் முகமூடிக்குள்ளிருந்து ஆங்கிலத்தில் பதிலளித்தான். மற்ற இருவரும் லீனாவின் உடலை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தது வீடியோவில் தெரிந்தது.

“சார் இது நாங்களே தயாரிச்ச சாப்ட்வேர், யாராலயும் ட்ராக் பண்ண முடியாது, ரொம்ப சேஃப், உங்களால டைப் பண்ண மட்டும்தான் முடியும். உங்க ஆடியோவோ, வீடியோவோ எங்களுக்கு வராது. ஆனா எங்க ஆடியோ வீடியோவை நீங்க பார்க்கலாம். நீங்களோ நாங்களோ எதையுமே ரெக்கார்ட் பண்ண முடியாது. வேலை முடிஞ்சவுடனே நாங்களே ரிமோட்ல உங்க கம்பியூட்டர்க்குள்ள வந்து அதில இருந்து இந்த சாஃப்ட்வேரை அழிச்சிருவோம். எந்த ட்ரேஸூம் இருக்காது” என்றான்.

இளங்கோ அப்பாவைப் பார்த்து டென்ஷனாக, “என்னப்பா இவங்க ரிமோட்ல இருந்து உங்க கம்பியூட்டருக்குள்ள வந்து அந்த சாப்ட்வேரை நிறுவியிருக்காங்க, அப்புறம் அவங்களே அதை டெலீட்டும் பண்றாங்க. உங்க கம்பியூட்டருக்குள்ள வந்தவங்க அதுக்குள்ள இருக்கிற உங்க தகவல்களைத் திருட எவ்வளவு நேரம் ஆகும்? அல்லது நமக்கே தெரியாம உள்ள ஒரு ஸ்பை சாஃப்ட்வேரை நிறுவி வைக்க எவ்வளவு நேரமாகும்? எனக்கு தெரியாம இதையெல்லாம் ஏன் பண்ணீங்க?” என்று கேட்க.

கோப்பெருஞ்சோழன், “பதறாத தம்பி, இது புது கம்பியூட்டர். இதுல எதுவுமே இல்ல, என் பெர்சனல் லேப்டாப் அங்க இருக்குது பாரு. உங்க பாதுகாப்புக்காக இ-மெயில் கூட இதுல லாகின் பண்ணிடாதீங்கன்னு அவனுகளே சொல்லிட்டானுங்க” என்று காட்டினார். அதைப்பார்த்த பின்னர் இளங்கோ சற்று சமாதானமடைந்தான்.

இளங்கோ, “ச்சே! என்னப்பா இது, இந்த லீனா மேட்டர் முடிஞ்சும் முடியாத மாதிரி இருக்கு. இவ செம்பருதி கூட விமானத்துல வராம எப்படி தப்பிச்சா? மலேசியாவில இருந்து எப்படி தாய்லாந்துக்குள்ள நுழைஞ்சா? அங்க அவளை அதிகாரிங்ககிட்ட இருந்து காப்பாத்துனது யாரு? அதுக்கப்புறம் எப்படி மியான்மருக்கு வந்தா? இடையில என்ன ஆச்சு? எப்படி புத்தி பேதலிச்சிச்சு? ஒண்ணுமே புரியலையே, எல்லாமே புதிரா இருக்கு”

கோப்பெருஞ்சோழன் நிதானமாக, “நடக்குறதெல்லாம் நல்லதாவே நடக்குதுன்னு நினைப்போம்”

அப்பா சொன்னதை காதில் வாங்காதவனாக இளங்கோ, “எதிரி கண்ணுக்கு தெரிஞ்சா அவன் பலசாலியா இருந்தாலும் வெற்றியோ தோல்வியோ மோதிப் பார்த்திடலாம்ப்பா, ஆனா கண்ணுக்கே புலப்படாத எதிரியை எப்படி சமாளிக்கிறது?”.

இளங்கோவின் நியாயமான கேள்விக்கு பெருமூச்சு மட்டுமே கோப்பெருஞ்சோழனிடமிருந்து பதிலாக வந்தது.

*********** *********** ***********

அத்தியாயம்: 26

செந்தேற்பாக்கம் - மரணக்குழி

தனஞ்செயன் ஊருக்குப் போய் ஒரு வாரமாகியிருந்தது. இளங்கோவுக்கு இரண்டாம் கேள்விக்கான க்ளூ இன்னும் பிடிபடாமல் இருந்தது. இரவு வெகுநேரம் அதையே சிந்தித்தபடி படுத்திருந்தான். கொஞ்ச நேரம் மட்டும் தூங்கிவிட்டு வழக்கம்போல காலை 6.00 மணிக்கு கண் விழித்தான். பல் துலக்கிக் கொண்டிருந்த வேளையில் அவன் மனம் “இராத்திரியில் பூத்திருக்கும் தாமரைதான் பெண்ணோ” என்ற பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. பவானியோடு சேர்ந்து இசைஞானியின் பாடல்களைக் கேட்டுக் கேட்டு அவரது பாடல்களில் பல அவனுக்கும் favorite ஆக மாறியிருந்தது.

அதுகூட அவனுக்குப் பிடித்த பாடல்தான், ஆனாலும் அதை நேற்று எங்கும் கேட்ட நினைவில்லை. பின்னர் இந்தப்பாடலை ஏன் உள்ளுக்குள் முணுமுணுக்கிறேன் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டான். சட்டென அவனுக்கு இரண்டாவது கேள்வியின் நினைவு வந்தது.

The Darkness brought light, name it”
வெளிச்சத்தைக் கொண்டு வந்த இருள்

“இருளுக்கும் பெண்ணுக்கும் ஏன் சம்பந்தம் இருக்கக்கூடாது?”

“இருள் என்று பொருள்படும் பெயரைக் கொண்ட பெண்ணாக ஏன் இருக்கக்கூடாது?”

பளிச்சென தோன்றிய அந்த மின்னல் அவனை உடனே செயல்பட வைத்தது. நேராக அப்பாவின் அறைக்கதவைத் தட்டினான். அப்பாவுக்கு அதிகாலை 4.00 மணிக்கே எழுந்துவிடும் பழக்கம் இருந்தது. அந்த நேரத்திலேயே கோப்பெருஞ்சோழன் கோப்புகளில் மூழ்கியிருந்தார்.

அப்பாவிடம் போய் அமர்ந்த இளங்கோ தனக்கு கிடைத்த க்ளூ பற்றி சொன்னான். “அப்பா செம்பருதி வாழ்க்கையில கல்யாணி அம்மாளைத் தவிர வேற எந்தப் பொண்ணாவது இருக்காங்களா?”

கோப்பெருஞ்சோழன் உறுதியான குரலில், “சான்சே இல்லடா, பொம்பளைங்க விஷயத்தில செம்பருதி சுத்தம்ன்னு உனக்கே தெரியாதா?”

இளங்கோ, “தெரியும்ப்பா.. ஒருவேளை ஆரம்ப நாட்கள்ல ஏதாவது காதல் விவகாரம் இருந்துச்சான்னு கேட்டேன்”

கோப்பெருஞ்சோழன். “நிச்சயமா கல்யாணியைத் தவிர வேற யாருமே இல்ல. ஆனா…இந்தக் கல்யாணிங்கிற பேருல இருள், இரவுங்கிற அர்த்தம் வரலயே”

இளங்கோ, “ஆமப்பா, ஆனா அந்தப் பெண் மனைவியாவோ, காதலியாவோத்தான் இருக்கணும்ங்கிற அவசியம் இல்லையே…”

“அதுவும் நியாயந்தான்” என்ற கோப்பெருஞ்சோழன் சட்டனெ ஏதோ நினைவு வந்தவராக, “ஏய்…இரு, செம்பருதி குடும்பம் சின்ன வயசுல வறுமையில இருந்த காலத்துல அவனையும் அவன் தங்கச்சியையும் ஒரு டாக்டரம்மாதான் படிக்க வச்சாங்கன்னு சொல்லிருக்கான். ஆனா அந்தம்மா பேரு எனக்கு தெரியாது”

இளங்கோ, "ம்ம்ம்… 'ஒளி'-ங்கிற வார்த்தைக்கும் கல்விங்கிற வார்த்தைக்கும் சம்பந்தம் இருக்குப்பா… அப்ப அர்ஜுன் அம்மாவோட(செம்பருதியின் தங்கை) வாயைக் கிளறினா அந்த லேடி டாக்டர் பெயரை வாங்கிடலாம்ல"

கோப்பெருஞ்சோழன், "சாத்தியமிருக்கு"

கொஞ்சம் யோசித்த இளங்கோ, "இல்லப்பா, நாளைக்கு செம்பருதி பத்தின அந்த தொடர் நிகழ்ச்சி ஷூட்டிங்குக்காக அவர் சொந்த ஊருக்கு போறேன். அங்க அவரோட சித்தப்பா இன்னும் உயிரோடதான் இருக்காரு. அவர் வாயில இருந்து பதிலை வரவைக்க முடியுமான்னு பார்க்குறேன். முடியாத பட்சத்துக்கு அர்ஜுன் அம்மாகிட்ட ட்ரைப் பண்ணலாம்" சொல்லிவிட்டு அவரது அறையிலிருந்து கிளம்பிய இளங்கோவை கோப்பெருஞ்சோழன் கூப்பிட்டார்.

"டேய்"

இளங்கோ, "என்னப்பா"

கோப்பெருஞ்சோழன் , "இந்த டிவி, பத்திரிக்கையெல்லாம் சீக்கிரமே வேற யாரு கையிலயாவது ஒப்படைச்சிரு. ஜோசியர் நாள் குறிச்சு குடுத்திட்டாரு, வர்ற மூணாம் தேதில இருந்து நீ ஒரு முழுநேர அரசியல்வாதி"

இளங்கோ, "சரிப்பா" என்றபடி அவர் அறையை விட்டு வெளியேறினான்.

அன்று மதியம் அஸ்வா டிவி அலுவலகத்தில் மாதந்தோறும் வழக்கமாக நடைபெறும் staff meeting நடந்து கொண்டிருந்தது. நிர்வாகிகள் பேசுவதை இளங்கோ கூர்மையாக கவனித்தபடி மனதுக்குள் அவர்களை எடை போட்டுக்கொண்டிருந்தான். அப்பா சொன்னதுபோல வெகு சீக்கிரத்தில் வேறு ஒருவரை நியமித்துவிட்டு அவன் முழுநேர அரசியலில் இறங்க வேண்டியிருந்தது. இவர்களில் ஒருவரை தேர்ந்தெடுக்கலாமா அல்லது வேறு சேனலில் இருந்து ஒரு பிரபலமான ஆளை எடுக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் அவனது ஜீன்ஸ் பாக்கெட்டில் வைப்ரேஷன் மோடில் இருந்த செல்போன் அதிர்ந்தது. எடுத்து நம்பரைப் பார்த்தவன் சட்டென்று அந்த அறையை விட்டு வெளியேறி "என்ன விஷயம்?" என்றான்.

மறுமுனையில் இருந்த நபர் ஏதோ கூற, இளங்கோ ஷாக்கடித்தவன் போல "என்னது ஆள் சிக்கிட்டானா, யார் அவன்?"

மறுமுனையில் இருந்தவன் ஒரு பெயரைக் கூற…

இளங்கோ புரியாமல் யோசித்தவன், "அவன் ஃபோட்டோவை எனக்கு வாட்ஸப்புல அனுப்பு"

சில நிமிடங்களில் வாட்ஸாப்பில் அந்த நபரின் படம் அனுப்பப்பட்டது. அதைப் பார்த்த இளங்கோ ஆயிரம் இடிகள் தாக்கியதுபோல சிலையாகி நின்றான். அவன் உயிரையே உறிஞ்சி எடுத்தது போல இருந்தது… மெல்ல நடந்து அருகே இருந்த ஒரு இருக்கையில் அமர்ந்தான்.

மறுமுனையில் போனில் இருந்தவன் சில நிமிடங்களாக இளங்கோவிடம் ரெஸ்பான்ஸ் இல்லாத காரணத்தால், "சார்…" என்றான்.

இளங்கோ, "ம்ம்ம்…அவனை செந்தேற்பாக்கம் கடற்கரைக்குக் கொண்டு போங்க, நான் இப்ப கிளம்பி வர்றேன், தப்பிக்க விட்டுடாதீங்க"

"பாஸ்வேர்டை கண்டுபிடிக்க முயன்று வரும் எதிரியைப் பிடிக்க கண்ணி வைத்திருக்கிறேன். அவன் அதில் விரைவில் சிக்குவான்" என்று தனஞ்செயனிடம் இளங்கோ சொல்லியிருந்தானல்லவா? அந்த எதிரி சிக்கிவிட்டதாகத்தான் தற்பொழுது அவனுக்கு தகவல் வந்திருந்தது.

இளங்கோ தன்னுடன் நான்கு ரவுடிகளை மட்டும் அழைத்துக் கொண்டு செந்தேற்பாக்கம் கடற்கரைக்கு விரைந்தான்.

மூன்று மணி நேரப் பயணத்துக்குப் பின்னர் ஆள் அரவமற்ற செந்தேற்பாக்கம் கடற்கரைப் பகுதிக்குள் இளங்கோவின் கார் நுழைந்தது. பாறைகளும் புதர்களும் நிறைந்த கடற்கரைப் பகுதி அது. இப்பகுதியில் கொடிய விஷம் நிறைந்த செந்தேள்கள் அதிகம். இளங்கோவின் கார் வந்துவிட்டதை அறிந்த அங்கிருந்த இளங்கோவின் ஆட்கள் தாங்கள் பிடித்து வைத்திருந்த நபரை இளங்கோவின் கார் அருகே இழுத்துக் கொண்டுவந்தனர். அவர்கள் அவனை அடித்த அடியில் அவனுக்கு ஏற்கனவே கிட்டதட்ட கால்வாசி உயிர் போயிருந்தது.

அந்த நபர் இளங்கோவின் கார் அருகே வந்து நின்றான்,

அந்த நபர்….

சேவியர்….

மும்பையில் தனஞ்செயன் அலுவலகத்தில் இளங்கோவுக்கு பிரிண்ட்-அவுட் எடுக்க பாஸ்வேர்ட் சொன்னானே, நாய்க்குடை காளான் ஹேர்ஸ்டெயில் வைத்திருந்த இளைஞன்… அவனேதான்…

பயங்கரமாக அடிவாங்கி கிட்டதட்ட நொறுங்கிய நிலையில் இருந்தவன் இளங்கோவைக் கண்டு ஆங்காரமாகக் கத்தியபடியே வந்து அவன் கழுத்தைப் பிடித்தான். இளங்கோவின் கழுத்தைப் பிடித்ததால் ஆத்திரமடைந்த இளங்கோவின் ஆள் ஒருவன் பெரிய கத்தியை சேவியரின் முதுகில் இறக்கினான். சேவியர் இளங்கோவின் கால்களில் சரிந்து விழ… இளங்கோ குத்தியவனின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்.

இளங்கோ சேவியரைப் பிடித்து உலுக்கினான், "டேய் சேவியர், சேவியர்…உன்னை அனுப்பிச்சது தனஞ்செயன் தானே! சொல்லுடா..சொல்லுடா.."

சேவியர் உயிரை விட்டிருந்தான்…

கடல்ல வீசிருங்க… என்று சொன்னபடி இளங்கோ மீண்டும் காரில் ஏறி சென்னை திரும்பினான். அவன் மனம் தனஞ்செயன் மீது கோபத்தில் தகித்துக் கொண்டிருந்தது.

இளங்கோவின் ஆட்கள் சேவியரின் பிணத்தை செந்தேற்பாக்கம் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த தங்களுக்கு நம்பிக்கையான நபர்களிடம் ஒப்படைந்துச் சென்றனர். அவர்கள் சேவியரின் உடலை தங்கள் மோட்டார் படகில் ஏற்றினர்.

படகு நடுக்கடலை நோக்கி விரையத் துவங்கியது.

படகில் சேவியரின் உடலருகே அமர்ந்திருந்த இருவரும் அவனது உடலைப் பார்த்துப் பேசிக்கொண்டார்கள், “சின்ன வயசுதாம்ப்பா இருக்கும்…இல்ல?” என்றான் முதலாவது நபர்.

இரண்டாவது ஆள், “இவனுககிட்ட என்ன ஏழரைய இஸ்த்தானோ...அந்த கல்ல எடுத்து பாடில கட்டுடா...பக்கெட்டில ஏதா கீதா செக்பண்ணு…

அந்த நேரத்தில் படகு அலைகளால் ஊசலாடியது. அதில் சேவியரின் காட்டன் சட்டைப் பாக்கெட்டின் மேல் மூடியிருந்த கவர் திறந்து கொள்ள, அந்தக்கால பேஜர் சைசில் இருந்த ஏதோ ஒன்று பாக்கெட்டுக்கு வெளியே எட்டிப் பார்த்தது.

முதலாவது ஆள் “டேய், அதென்னடா பாட்டுக் கேக்குற மிஷின் மாரி கீது பாரு”

அதை எடுத்துப் பார்த்த இரண்டாமானவன், “டேய்! இது செல்போன்ரா.. தம்மா துண்டா கீது…” அதிலிருந்த குட்டித் திரையைப் பார்த்து அதிர்ச்சியடைந்தவன், “ டேய்.. யாருக்கோ கால் போய்ணு இருக்குடா.. (காதருகே வைத்து) அலோ, அலோ” என்று கத்த மறுமுனை துண்டிக்கப்பட்டது.

படகிலிருந்த இருவருக்கும் அல்லையைப் பிடித்தது, இரண்டாவது ஆள் அரண்டு போனவனாய், “இதை இவன் வச்சிருந்ததை அவனுக எப்படி கவனிக்காம விட்டானுகன்னு தெரியலையே…டேய் இது பெரிய இடத்து மேட்டருடா… ஒழுங்கா அவனுகளப் பார்த்து இந்த போனை ஒப்படைச்சிருவோம்.” என்றான்.

*********** *********** ***********

அத்தியாயம்: 27

அரபிக்கடலில் அமிழ்ந்த மர்மம்

அந்த நேரம் மும்பையில் மூண்டிருந்த பயங்கர மதக்கலவரம் காரணமாக மாநகர் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. சொந்த விஷயமாக டெல்லி செல்வதாக வீட்டில் சொல்லிவிட்டு மும்பைக்குப் பறந்தான் இளங்கோ. அவனால் தனஞ்செயனை மன்னிக்க முடியவில்லை. வெறிச்சோடிக் கிடந்த ஒரு மதிய நேரத்தில் தனஞ்செயன் அவனது அலுவலகத்தில் தனியாக ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். திடீரென்று அழைப்பு மணி ஒலிக்க கதவைத் திறந்தவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. வெளியே இளங்கோ நின்றிருந்தான்.

“அத்தான்! என்ன surprise இது? எப்படி வந்தீங்க? உள்ள வாங்க, உள்ள வாங்க”

உள்ளே நுழைந்த இளங்கோ, “அதிருக்கட்டும், ஊரே 144 போட்டிருக்காங்க, நீ இங்க தனியா ஆஃபீஸ்ல உட்காந்து என்ன பண்ற, எதுவும் சீக்ரெட் ப்ராஜெக்ட் போகுதோ?”

“இளங்கோ கேட்ட கேள்வியின் குதர்கத்தை அறியாத தனஞ்செயன், “உங்களுக்குத் தெரியாம அப்படி என்ன அத்தான் சீக்ரெட் இருக்கப் போகுது. அடுத்தவாரம் பெங்களூர்ல ஒரு presentation இருக்கு. அதுக்கு ரெடி பண்ணிக்கிட்டு இருக்கேன்”

இருவரும் பேசிக்கொண்டே தனஞ்செயனின் கண்ணாடி அறைக்குள் நுழைந்தனர்.

தனஞ்செயன், “நீங்க 144 போட்டிருக்க நேரத்துல எப்படி சர்வ சாதாரணமா வந்தீங்கங்கிறதுதான் எனக்கு ஆச்சரியமா இருக்குத்தான்…அதான் பொலட்டிகல் பவர்ங்கிறது!”

இளங்கோ தனஞ்செயனின் கண்களை கூர்ந்து பாத்து, “அந்த பொலட்டிகல் பவர் என்னன்னு தெரிஞ்சேதான் எங்கூட விளையாண்டியா?

தனஞ்செயன் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தான் அவன் குரலில் நடுக்கம் தெரிந்தது, “என்னத்தான் சொல்றீங்க? ஒண்ணும் புரியலயே!”

இளங்கோ டேபிளில் இருந்த ஒரு ஃபைலை எடுத்து தனஞ்செயன் முகத்தில் வீசி அடித்தான், “ நீ எங்கிட்ட எத்தனை கோடி வேணும்னு கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பேனே, அத விட்டுட்டு எங்கப்பா சொன்ன மாதிரியே கழுத்தறுத்திட்டியேடா துரோகி!” அந்த ஃபைலினுள் இருந்து விடுபட்ட காகிதங்கள் அறை முழுவதும் பறந்தன…

அவர்களுக்குள் என்ன பேசிக்கொண்டார்களோ தெரியவில்லை அடுத்த சிறிது நேரத்தில் இறுகிய முகத்துடன் இளங்கோ அங்கிருந்து வெளியேறினான். தனஞ்செயன் கைகளில் முகம் புதைத்து குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தான்.

அன்று இரவு…

மும்பையை ஒட்டிய ஆள் அரவமற்ற ஒரு கடற்கரையில் தனஞ்செயன் கைகள் பின்புறம் கட்டப்பட்டு முழங்காலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தான். அவன் உடல் முழுவதும் இரத்த காயங்கள் இருந்தன. அவன் போட்டிருந்த வெள்ளைச்சட்டை ஆங்காங்கே இரத்ததில் நனைந்திருந்தது. கடல் அலை அவ்வப்போது அவன் முழங்காலைத் தழுவி சீக்கிரம் வந்துவிடு என்று அழைப்பு விடுத்துச் சென்றது.

அவனை சுற்றிலும் ஆயுதங்களோடு ஏழெட்டுப் பேர் நின்றிருந்தனர். அதில் ஒருவன் கையிலிருந்த துப்பாக்கி தனஞ்செயனது நெற்றியை நோக்கி நீட்டப்பட்டிருந்தது.

தனஞ்செயன் அவர்களிடம் அரைகுறை ஹிந்தியில் கெஞ்சினான். “ப்ளீஸ் கடைசியா ஒரே ஒரு தடவை இளங்கோ சார் கிட்ட பேச வாய்ப்பு கொடுங்க”

தனஞ்செயனது கெஞ்சலை சட்டை செய்யாத அந்த நபர் துப்பாக்கியின் விசையை அழுத்த, விடுபட்ட தோட்டா நேராக அவனது நெற்றியை துளைத்து தலைக்குள் புகுந்து தஞ்சமடைந்தது. உயிரற்று மண்ணில் வீழ்ந்தான் தனஞ்செயன்.

சேவியருக்குச் செய்தது போலவே அவனது உடலையும் எடுத்து அதில் கல்லைக் கட்டி நடுக்கடலுக்குள் எடுத்துச் சென்று வீசினர். அவன் உடல் அரபிக்கடலின் ஆழங்களுக்குள் அமிழ்ந்தது

ஆனால் கல்லோடு சேர்த்து உடலைப் பிணைத்திருந்த கட்டு எப்படியோ விடுபட்டுவிட, மேலே எழும்பிய தனஞ்செயனின் உடல் அலைகளுக்குள் சிக்கி சின்னாபின்னமான நிலையில் மூன்று நாட்களுக்குப் பிறகு வேறொரு கரையில் ஒதுங்கியது.

அவன் பிசினஸ் விஷயமாக அடிக்கடி அலைந்து கொண்டிருப்பவனாதலால் மூன்று நாட்களாக வீட்டுக்கு வராததை அம்மா பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அவனது உடல் கைப்பற்றப்பட்ட பிறகே அவனது மரணம் உலகுக்குத் தெரியவந்தது. அப்போது மும்பையில் கலவரம் தீவிரமடைந்திருந்ததால் எதேச்சையாக கலவரக்காரர்களிடம் சிக்கி அவன் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அனைவராலும் நம்பப்பட்டது.

தனஞ்செயன் மறைவால் இளங்கோவின் வீட்டில் ஏற்பட்ட பயங்கர அதிர்வுகளை இன்னொரு அத்தியாயத்தில் பார்க்கலாம்.

*********** *********** ***********

அத்தியாயம்: 28

கையருகே வந்த மூன்றாம் சாவி

உமா வேலை விஷயமாக கோவா வந்திருந்தாள். அவளோடு சேர்ந்து அர்ஜுனும் வந்திருந்தான். உமா கம்பேனி கொடுத்த வீட்டில் தங்கியிருந்தாள். அர்ஜுன் சற்று தொலைவிலிருந்த ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தான். இருவரும் அவ்வப்போது சந்தித்துக் கொள்வது வழக்கம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, காலை வெயிலில் இதமாகக் காய்ந்தபடி அர்ஜுனும் உமாவும் கோவா கடற்கரை மணலில் படுத்திருந்தார்கள். அர்ஜுன் sea food சாப்பிடணும் போல இருக்கு என்று சொல்லவே உமா அதற்காக நல்ல ரெஸ்டாரண்ட்டை மொபைலில் தேடிக்கொண்டிருந்தாள்.

உமா, "ஏம்ப்பா... இன்னும் ஒரு மாசம் கோவாவுலதான் இருக்கப் போறோம்...என்ன ப்ளான்?"

அர்ஜுன் சலிப்புடன், "ம்மக்கும்..நீதான் ஒரே ரூம்ல தங்கக்கூடாதுன்னு strict-ஆ சொல்லிட்ட அப்புறம் என்னத்தப் ப்ளான்பண்ணி, என்னத்தப் பண்ண?"

உமா அவன் கன்னத்தில் கிள்ளி, "அடேய்... திருட்டுப் பையா! உனக்கு அப்படி வேற ஒரு ஐடியா இருக்கா?...கொன்னுடுவேன்..நானே இங்க ஆஃபீஸ் வேலை விஷயமா வந்திருக்கேன்..சரி கம்பேனிக்கு ஆள் இருக்கட்டுமேன்னு கூட கூட்டிட்டு வந்தா நீ வேற ஐடியாவோட இங்க வந்தியா?"

அர்ஜுன், "ஏய்...சும்மா சொன்னேண்டி...நானா அப்படி செய்யிற ஆளு?"

உமா கிண்டலாக, "அதான பார்த்தேன்…அப்படியே செஞ்சிட்டாலும்..."

அர்ஜுன் அவளை சட்டென்று திரும்பிப்பார்த்து, "ஏய்...இப்ப நீ வேணாங்கிறியா இல்ல வேணுங்கிறியா?"

உமா, "ம்ம்ம்?... மொதல்ல உங்கம்மாவைக் கூட்டிட்டு என் வீட்டுக்கு வந்து பொண்ணு கேளுன்னு சொல்றேன்"

அர்ஜுன், "இன்னும் கொஞ்ச நாட்கள்தான் இருக்கு உமா. அதுக்குள்ள அடுத்த ரெண்டு பாஸ்வேர்டையும் உடைச்சு உள்ளபோயி பணத்தை எடுத்தாத்தான் உண்டு...இல்லைன்னா அத்தைக்கு குடுத்த வாக்கை காப்பாத்த முடியாது...பல ஆயிரம் கோடி மக்கள் பணம் மக்கள்கிட்ட திரும்ப சேராமலேயே வேஸ்ட்டாப் போயிடும். அதுபோக இப்பத்தான் ரெண்டு அகால மரணங்கள் எங்க வீட்டுல நடந்திருக்கு. இந்த சூழ்நிலைல கல்யாணத்தைப் பத்தியெல்லாம் என்னால யோசிக்கவே முடியாது… சாரிடா செல்லம்"

உமா சுரத்தையற்றவளாக, "என்னால புரிஞ்சுக்க முடியுதுடா, ஃபீல் பண்ணாத…"

அர்ஜுன், "அதுசரி… அந்த ரெண்டாவது கேள்விக்கு ஏதாச்சும் க்ளூ கெடச்சுச்சா உனக்கு?"

உமா, "ப்ச், இல்லடா, இங்க வேலையே செம்ம ஹெக்டிக், எதையும் யோசிக்கக்கூட நேரம் கிடைக்கல… நீயே பெரிய டிட்டெக்டிவ்தானே? உனக்கே இன்னும் ஒண்ணும் ஸ்டிரைக் ஆகலையா?"

அர்ஜுன், “அந்தக் கேள்விக்கான பதில் ஏதாச்சும் பொண்ணு பேரா இருக்கலாமோண்ணு நினைக்கிறேன் உமா, அந்த பொண்ணோட பேரு இருள், இரவுங்கிற அர்த்தத்துல இருக்க வாய்ப்பிருக்கு”

உமா, “ம்ம்ம்…நல்ல யூகம்தான், ஆனா அந்த பாழாப்போனவன் வாழ்க்கையில ஒண்ணு ரெண்டு பொண்ணுங்க இருந்தா ஈசியா கண்டுபிடிக்கலாம்… அவன்தான் வெளிச்சமா இருந்த பல பொண்ணுங்களோட வாழ்க்கையில இருளைக் கொண்டு வந்திருக்கானே தவிர, அவன் வாழ்க்கையில எந்த பொண்ணு வெளிச்சத்தை கொண்டு வந்திருக்கப்போறா?”

அர்ஜுன், “அதைத்தான் தேடணும், அவன் இன்ஸ்டாகிராம்ல ஒரு சைனீஸ் பொண்ணு நிறைய ஃபோட்டோஸ்ல அவன்கூட இருக்கா. அவனோட எல்லாப் பதிவுகள்லயும் அவ கமெண்ட் பண்ணிருக்கா. கூடப் படிக்கிறவங்கிறது நல்லா தெரியுது. ஆனா அவளுக்கும் அவனுக்கும் காதல் இருக்குமாங்கிற முடிவுக்கு என்னால வர முடியல. அவங்க அப்பா அரசியல்ல பெரிய ஆளா இருக்கிறதால தனா சோஷியல் மீடியால ரொம்பவே அடக்கி வாசிப்பான். அவன் சேட்டையெல்லாம் அந்தரங்கத்துலதான்”

உமா, “சரி அந்தப் பொண்ணு பேரு என்ன?”

அர்ஜுன், “ஏதோ வாய்க்குள்ள நுழையாத பேரு, இரு பார்க்குறேன்”

தனது ஸ்மார்ட் கிளாசை எடுத்து கண்களில் மாட்டி அதை ஆன் செய்தான். இருவரும் கடற்கரையில் மல்லாக்கப் படுத்திருந்ததால் மேகத்திரையில் ஸ்மார்ட் கிளாசின் எழுத்துகள் அழகான மின்னின. voice commands மூலம் இன்ஸ்டாகிராமைத் திறந்தவன் அதில் தனசேகரனோடு இருக்கும் அந்த சீனப்பெண்ணின் பெயரை வாசித்தான். “அவ பேரு Ning Shao”

உமா, “அழகா இருக்காளா”

அர்ஜுன், இப்ப அதுவா முக்கியம், அவ பேருக்கு கூகுள்ள அர்த்தம் கண்டுபிடிக்க முடியுமான்னு பாரு”

உமா கொஞ்ச நேரம் மொபைலில் தேடிவிட்டு, “Ning Shao-ங்கிற பேருக்கு சாந்தமும் இளமையும் உடையவள்னு அர்த்தம்”

அர்ஜுன் ஏமாற்றமாக, “ஓ அப்படியா”, திடீரென்று அவன் மனதில் ஏதோ தோன்ற…
“உமா அவ பேரோட முதல் வார்த்தையில இருக்க முதல் இரண்டு எழுத்தையும், இரண்டாவது வார்த்தையில இருக்க முதல் மூணு எழுத்தையும் சேர்த்தா என்ன வருதுன்னு பாரு”

உமா உற்சாகமாக, “Nisha - ன்னு வருது… ஏய், இந்தியில நிஷான்னா ராத்திரின்னு அர்த்தம்டா”

அர்ஜுன் உடனடியாக தனது லேப்டாப்பை எடுத்து இரண்டாவது கேள்விக்கு “Nisha” என்ற பதிலை டைப் செய்தான். அந்த பதிலை சரி என்று ஏற்றுக்கொண்ட சிஸ்டம் மூன்றாவது கேள்வியில் போய் நின்றது.

அர்ஜுனும் உமாவும் மகிழ்ச்சியில் கத்தியபடி கட்டிப்பிடித்து உருள கடற்கரையில் சூரியக்குளியல் போட்டுக்கொண்டிருந்த அத்தனைபேர் பார்வையும் அவர்கள் பக்கம் திரும்பியது.

“அர்ஜுன், ஏய் கடைசிக் கேள்வி என்னன்னு பார்க்கலாம்…” இருவரும் வந்து மடிக்கணினியின் திரையைப் பார்க்க…

மூன்றாவது கேள்வி…

Who is my mom’s favourite poet?

அர்ஜுனின் முகம் மகிழ்ச்சியில் ஒளிர்ந்தது…. “உமா, அத்தைக்கிட்ட இப்ப போன் போட்டு கேட்டாக்கூட மூணாவது கேள்விக்கும் பதில் கிடைச்சிரும்”

குதூகலமடைந்த உமா உடனடியாக கல்யாணி அம்மாளுக்கு போன் செய்ய அவரது மொபைல் ஸ்விட்ச் ஆஃப் மோடில் இருந்தது..

*********** *********** ***********

அத்தியாயம்: 29

இன்னும் ஒருவன் இருக்கிறான்

செம்பருதியின் சொந்த ஊர் திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. இளங்கோவை வரவேற்க பேனர்கள், பிளக்ஸ் போர்டுகள் என்று அந்த ஊர்காரர்கள் அமர்க்களப்படுத்தி இருந்தார்கள்.

செம்பருதியின் சித்தப்பாவுக்கு 87 வயதிருக்கும். பல்லில்லாத வாயில் அவர் பேசியது எதுவும் தெளிவாக இல்லை. ஆனாலும் இளங்கோ தனக்குத் தேவையான பதில் வேண்டுமென்பதற்காக பொறுமையோடு அவரிடம் கேள்விகளைக் கேட்டு பதில் பெற்றுக்கொண்டிருந்தான்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல அங்கு சுற்றி இங்கு சுற்றி பெரியவரே விஷயத்துக்கு வந்தார், "அப்பெல்லாம் புள்ளைகள படிக்க வைக்கக்கூட எங்ககிட்ட வசதியில்ல சாமி, ஒரு டாக்குடரம்மாதான் செம்பருதி, அவன் தங்கச்சி அப்புறம் எங்க புள்ளைங்க மூணு பேரையும் அவுக சொந்த செலவுல படிக்க வச்சாக"

இளங்கோவுக்கு இன்ப அதிர்ச்சி, "அந்த டாக்டரம்மா பேரு என்னங்கையா?"

பெரியவர் மறந்துபோய், "அவுக பேரு, அவுக பேரு…" என்று இழுக்க

பெரியவரின் மனைவி கூட்டத்திலிருந்து "ரசனீ" என்று கத்தினார்.

இளங்கோவுக்கு வேண்டியது கிடைத்துவிட்டது. அடுத்து வெறும் சம்பிரதாயத்துக்கு மேலும் ரெண்டு கேள்விகள் கேட்டுவிட்டு பேட்டியை முடித்துக் கொண்டு சென்னை கிளம்பினான். காரில் அவனோடு மேலும் இருவர் இருந்த காரணத்தால் நேராக வீட்டுக்குப்போய் அப்பா முன்னிலையில் பாஸ்வேர்டை பரிசோதித்துப் பார்க்கலாம் என்ற முடிவில் அமைதியாக இருந்தான்.

காரில் வந்து கொண்டிருக்கும்போது தன்னுடைய மொபைலில் "Rajani name meaning" என்று கூகுளிடம் வினவ அது "இருள்" என்று அவனுக்கு பதில் சொல்லியிருந்தது.

இளங்கோ சென்னை வந்தடைய நள்ளிரவு ஆகிவிட்டது. வீட்டுக்கு வந்து அப்பாவுக்கு போன் செய்ய அவரது அறையின் கதவு திறக்கப்பட்டது.

உள்ளே போய் உட்காந்த இளங்கோ மடிக்கணினியைத் திறந்து வெற்றிப்புன்னகையுடன், "பதில் கிடைச்சிருச்சுப்பா" என்றான்.

கோப்பெருஞ்சோழன் மகிழ்ச்சியுடன், "கேட்டவுடனே தூக்கமெல்லாம் போயிருச்சி தம்பி" என்றார்.

இளங்கோ இணையதளத்தைத் திறந்து அந்த கோட் நம்பரைக் கொடுக்க, " மூன்று முறை தொடர்ந்து தவறான பதில் அளிக்கப்பட்டதால் உங்கள் அக்கவுண்ட் அடுத்த 15 நாட்களுக்கு முடக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக வங்கியைத் தொடர்புகொள்ளவும்" என்ற செய்தி சிவப்பு நிற கொட்டை எழுத்துக்களில் வந்து நிற்க இருவரும் அதிர்ச்சியில் உறைந்தார்கள்.

இளங்கோவுக்கு பேச்சு வரவில்லை…"என்னப்பா இது?"

கோப்பெருஞ்சோழன் அதிர்ச்சியிலிருந்து மீளாதவராக உதட்டைப் பிதுக்கினார்.

இளங்கோ மனதுக்குள் குழம்பினான், “பாஸ்வேர்டை கண்டுபிடிக்க முயற்சி பண்றவங்கன்னு நாம சந்தேகப்பட்ட யாரும் இப்ப உயிரோட இல்ல… நம்மகிட்ட சிக்காம இன்னும் வேற ஒருத்தன் இருக்கானா?”

இளங்கோ, இன்னும் 20 நாள்தாம்ப்பா இருக்கு, இப்ப பதினஞ்சு நாள் பிளாக் ஆகிடுச்சு, அது திரும்ப ஆக்டிவேட் ஆகி அதுக்கப்புறம் ஒரு 5 நாளுக்குள்ள ரெண்டு கேள்விக்கும் நம்ம சரியான பதில் கண்டுபிடிச்சு கொடுத்தாகணும். இல்லாட்டி அக்கவுண்ட் freeze ஆகிடும்.

கோப்பெருஞ்சோழன் அவனது தோளில் தட்டிக்கொடுத்தபடி, “விடு தம்பி, நம்ம கைக்கு கிடைக்கணும்னு இருந்தா கிடைக்கும். கட்சியில நமக்கு செம்பருதி ரூபத்துல இருந்த பெரிய ஆபத்து விலகிருச்சு. பதவிக்கு இனி பிரச்சனை இல்ல. அடுத்து வரப்போற லோக்சபா தேர்தல் வேலைகளை கவனி. நம்ம பரம்பரைக்கே தேவையான பணத்தை ஏற்கனவே நாம சம்பாதிச்சாச்சு. இந்தப் பணத்தைப் பத்தின கவலைய விட்டுட்டு ஆக வேண்டியதைப் பாரு…”

அப்பாவின் அறிவுரையை இளங்கோவின் மனம் ஏற்கவில்லை. அது அவன் கூடப்பிறந்த சுபாவம். அமைதியாக மடிக்கணினியை மூடிவிட்டு அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

சில நாட்கள் நகர்ந்தன…

அன்று மதியம் இளங்கோவின் அலுவலகம் வழக்கத்தைவிட சற்று பரபரப்பாக இருந்தது. சமீபத்தில் அவனது அலுவலக வாசலில் அவன் கட்சியினருக்கும் எதிர்கட்சியினருக்கும் நடந்த தள்ளுமுள்ளு பற்றி தனது கட்சியினரிடம் விசாரித்துக் கொண்டிருந்தான். அன்று நடந்த சம்பவம் மீடியாக்களால் சற்றே பெரிதாக்கி விடப்பட்டிருந்தது. நீங்க கவலைப்படாதீங்க தம்பி நாங்க பார்த்துக்கிறோம் என அன்று வீராப்பு பேசிய பெரியவர் அவன் முன்னால் தொங்கிய முகத்துடன் நின்று கொண்டிருந்தார்.

அன்று வாசலில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளைப் பார்த்தபடி சம்பவத்தில் தொடர்புடைய எதிர்கட்சி ஆட்கள் பற்றி இளங்கோ விசாரித்துக் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் சிசிடிவி கேமராவில் தற்செயலாகப் பதிவாகியிருந்த அந்தக் காட்சி இளங்கோவின் கண்களில் சிக்கியது. பேசிக்கொண்டே சிசிடிவி காட்சிகளைப் பார்த்து கொண்டிருந்த இளங்கோ ‘அந்தக் காட்சியைக்’ கண்டவுடன் சட்டென பேச்சை நிறுத்தினான். சுற்றி நின்ற அனைவரும் அமைதியானார்கள்.

இளங்கோ, “கொஞ்சம் எல்லாரும் வெளிய நில்லுங்க…” என்று கட்டளையிட அனைவரும் இடத்தைக் காலி செய்தனர்.

அந்தக் காட்சியில் கட்சிக்காரர்களிடையே மோதல் நடந்து கொண்டிருந்தது. லேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. சற்று தூரத்தில் ஒரு பைக் வந்து நிற்க, அந்த பைக்கில் பின்னால் அமர்ந்திருந்தவன் சேவியர். அவன் இறங்கி நின்றபடி பைக்கை ஓட்டி வந்தவனோடு பேசிக்கொண்டிருந்தான். இளங்கோ அந்தக் காட்சியை ஜூம் செய்ய பைக்கை ஓட்டியவனது முகம் தெளிவாகத் தெரிந்தது. அந்த முகம் இளங்கோவுக்கு பரிட்சயமானது அல்ல. சேவியர் பைக்கில் அமர்ந்தவனை கட்டி அணைத்து ஏதோ சொல்லிவிட்டு திரும்பி இளங்கோவின் அலுவலகத்தை நோக்கி வருகிறான். அவன் போவதை அமைதியாக பார்த்துக்கொண்டிருந்த பைக்கில் இருந்தவன் சில வினாடிகள் கழித்து பைக்கை கிளப்பிக்கொண்டு செல்கிறான். அதுவரை அந்த காட்சி பதிவாகி இருந்தது.

இளங்கோ காட்சியை ரீவைண்ட் செய்து வண்டியில் அமர்ந்திருந்தவனது முகத்தை மீண்டும் ஜூம் செய்து பார்த்தபடி இருந்தான். அப்போது அவனது டெலிபோன் ஒலித்தது. யாரோ வந்திருப்பதாக ரிசப்ஷனிஸ்ட் கூற, இளங்கோ “உடனே உள்ளே அனுப்பு” என்றான்.

உள்ளே வந்த நபர் சேவியர் கொலை சம்பவத்துக்கு இளங்கோவுடன் காரில் செந்தேற்பாக்கம் வந்த ரவுடிகளில் ஒருவன். வந்தவன் பணிவாக, “சார், ஒரு முக்கியமான விஷயம்”

இளங்கோ, “சொல்லு”

அந்த ரவுடி, “அன்னிக்கு ஒருத்தனை செந்தேற்பாக்கத்துல வச்சு போட்டோம்ல சார், அந்தப் பையன் பாக்கெட்ல இந்த மினி செல்போன் இருந்திருக்கு. அத நம்ம ஆளுங்க கவனிக்காம விட்டிருக்காங்க. பாடியை கடல்ல தூக்கிப்போடப் போன படகுக்காரனுங்க அதைப் பார்த்து எடுத்து வந்து இன்னிக்கு காலைலதான் எங்கிட்ட கொடுத்தானுங்க”

இளங்கோ அதைக் கையில் வாங்கிப் பார்த்து அவனை முறைத்தான்.

இளங்கோவின் முறைத்ததைப் பார்த்த அந்த ரவுடி மேலும் கொஞ்சம் பயத்தோடு, “சார் இன்னொரு விஷயம், சம்பவம் நடந்தப்ப அந்த போன் கிட்டத்தட்ட ரெண்டு மணி நேரத்துக்கு மேல ஏதோ ஒரு நம்பரோட கனெக்‌ஷன்லயே இருந்து இருக்கு.”

இளங்கோவின் முகம் மேலும் சீரியஸானது, “என்னடா சொல்ற, அப்படீன்னா என் வாய்ஸ் முதற்கொண்டு எல்லாமே அதுல ரெக்கார்ட் ஆகிருக்கா”

அந்த நபர் அமைதியாக இருக்க… இளங்கோ, “பரதேசி நாய்களா! ஒரு வேலையவாச்சும் உங்களால உருப்படியா செய்ய முடியுதா? எந்த நம்பருக்கு கால் போயிருக்கு? receiver யாருங்கிறதையாச்சும் trace பண்ணியா இல்லையா?

அந்த நபர் ஒரு பேப்பர் கத்தையை நீட்டியபடி, “பண்ணிட்டேன் சார், அவன் சிம்கார்டு வாங்கின அந்த ஆஃபீஸ்லயே போயி அந்த ஆளோட அப்ளிகேஷனையே ஒரு பிரிண்ட் அவுட் எடுத்துட்டு வந்துட்டேன். இதுல அட்ரஸ் முதற்கொண்டு எல்லாமே இருக்கு”. அதை வாங்கி, அதில் இருந்த போட்டோவைப் பார்த்த இளங்கோ பரபரப்பானான்… அந்த அப்ளிகேஷனில் இருந்த முகமும், சிசிடிவி பதிவில் பைக்கை ஓட்டி வந்தவனின் முகமும் ஒன்றுதான்”

இளங்கோ அப்ளிகேஷனில் இருந்த பெயரைப் படித்தான்… அந்தப் பெயர்…

“திருநாவுக்கரசு செண்பகராமன்”

இந்தப் பெயரை கதையில் எங்கேயோ கேட்டது போல நினைவிருக்கா வாசகர்களே! உமாவின் அண்ணன் திருநாவுக்கரசு…அவனேதான்!

இளங்கோ, “இன்னும் ரெண்டு மணி நேரத்துக்குள்ள இவனை நீங்க புடிச்சாகணும். ஆளைப் புடிச்சவுடனே எனக்கு தகவல் கொடுத்துட்டு செந்தேற்பாக்கம் கொண்டு போயிடு, போன தடவ நடந்த மிஸ்டேக் திரும்ப நடந்துச்சி உங்க எல்லாரையும் தொலச்சிருவேன்”

*********** *********** ***********

அத்தியாயம்: 30

நிறம் மாறும் மனிதர்கள்

திருநாவுக்கரசு சென்னையில் ஒரு பூங்காவின் சிமெண்ட் பலகையில் படுத்திருந்தான். முகத்தில் முள்ளுச்செடி போல தாடி வளர்ந்திருந்தது. அவன் முகத்தில் எப்போதும் இருக்கும் துறுதுறுப்பும், குறும்புத்தனமும் மொத்தமாக மிஸ்ஸிங். கடந்த இரண்டு மூன்று நாட்களாக தூக்கம் இல்லை, மரத்தின் குளிர்ச்சியான நிழலில் சற்று கண்ணயர்ந்தான். அப்போது அதையும் கெடுக்கும் விதமாக அவனது செல்போன் சிணுங்கியது.

அழைத்தது எதிர்வீட்டு அங்கிள்...

திருநாவுக்கரசு, “ஹலோ, சொல்லுங்க அங்கிள்”

மறுமுனையில், “திரு, என்னப்பா உன்னைத் தேடி மூணு பெரிய கார்ல ஆளுங்கட்சி ஆட்கள் வந்து விசாரிச்சிட்டுப் போறாங்க? (திருநாவுக்கரசுக்கு தூக்கிவாரிப் போட்டது, சட்டெனெ எழுந்து உட்காந்தான்) அவங்களைப் பாத்தா ரவுடிங்க மாதிரி இருந்ததால நீ எங்க இருக்கன்னு தெரியாதுன்னு சொல்லிட்டேன். உங்கம்மாவை கேட்டாங்க அதுவும் தெரியாதுன்னுட்டேன். அவங்க என் மனைவியோட சேர்ந்துதான் திருப்பதிக்கு போயிருக்காங்கன்னு தெரியும். ஆனா நான் எதுவும் சொல்லிக்கல...தம்பி, அவங்க வந்த கார்ல ஒண்ணு இன்னும் உங்க வீட்டாண்டயேதான் நிக்குது... எதுவும் பிரச்சனையாப்பா?”

திருநாவுக்கரசு தனது பயத்தைக் காட்டிக்கொள்ளாமல், “பிரச்சனையெல்லாம் ஒண்ணும் இல்ல அங்கிள், அவங்க கேட்டா உங்களுக்கு தெரியாதுன்னே சொல்லிருங்க... ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்”

திருநாவுக்கரசு சற்றும் தாமதமின்றி வெளியேறி ஒரு ஆட்டோவில் ஏறி அமர்ந்து, “கோயம்பேடு போங்கண்ணா” என்றான். கோயம்பேடு சென்றவன் பஸ்ஸைப் பிடித்து பெங்களூரு போனான், அங்கிருந்து விமானத்தில் கோவாவுக்குப் பறந்தான்.

மறுநாள் காலை...

“உமா உன்னைப் பார்க்க ஒரு விசிட்டர் வந்திருக்காங்க”, என்ற அழைப்பையடுத்து ரிசப்ஷனுக்கு வந்த உமா அங்கு தனது அண்ணன் திருநாவுக்கரசு உட்காந்திருந்தது கண்டு ஆச்சரியமடைந்தாள். கோவாவில் நள்ளிரவில் வந்து இறங்கிய திருநாவுக்கரசு ஒரு ரூம் எடுத்து தங்கிவிட்டு, முகத்தை ஷேவ் செய்து, நல்ல ரெடிமேட் ஆடை ஒன்றை வாங்கி அணிந்து உமாவைப் பார்க்க டிப்டாப்பாக வந்திருந்தான்.

உமா, “டேய், என்னடா சர்ப்பிரஸ் இது! என்னைப் பார்க்குற சாக்குல கோவாவை எஞ்சாய் பண்ண வந்துட்டியா? சரி வா கேண்ட்டீன் போகலாம்”

எழுந்தவன் கால் நொண்டிக்கொண்டே நடந்து வந்ததை அப்போதுதான் கவனித்தாள் உமா, “டேய் கால்ல என்னாச்சு?”

திரு, “அது ஒண்ணுமில்ல, தேள் கொட்டிருச்சு”

உமா அதிர்ச்சியாக, “தேள் கொட்டிருச்சா, எங்க கொட்டுச்சு, எப்ப?”

திரு, "ப்ச், அது ஒண்ணுமில்லடி... வா சொல்றேன்"

கேண்டீனில் உமா இரண்டு ஜூஸ் ஆர்டர் கொடுத்தாள், இருவரும் போய் ஒரு டேபிளில் உட்காந்தனர். உமா திருவை நோக்கி, "என்னடா ஆச்சு சொல்லு?"

திருநாவுக்கரசு நா தழுதழுக்க, "ஒரு பெரிய சிக்கல்ல மாட்டிக்கிட்டேன் உமா" சொன்னவன் தனது பேக்கில் இருந்து ஒரு டாக்குமெண்ட்டை எடுத்து உமாவிடம் நீட்டினான். அதைப் பார்த்த உமா அதிர்ந்தாள், அது செம்பருதியின் ஸ்விஸ் வங்கி டாக்குமெண்ட்...

உமா அதிர்ச்சியடைந்தவளாய் அவன் முகத்தைப் பார்த்தாள், திருநாவுக்கரசு தொடர்ந்தான், "இன்னிக்கு என் உயிருக்கு பிரச்சனை வந்திருப்பதே இதாலதான் உமா".

உமாவுக்கு இடி விழுந்தது போல இருந்தது, "என்னடா சொல்ற, இந்த டாக்குமெண்ட் எப்படி உன் கையில கிடைச்சுச்சு?"

திருநாவுக்கரசு, "ம்ம்ம்...சேவியர் ஞாபகம் இருக்கா? என்னோட பழைய ஸ்கூல் பிரண்டு, நீ கூட மஷ்ரூம் மண்டையன்னு கிண்டல் பண்ணுவியே"

உமா, "ஆமா"

திரு, "அவன் மும்பையில இளங்கோவோட மச்சினன் வச்சிருக்க சாஃப்ட்வேர் கம்பேனிலதான் வேலை செஞ்சான். ஒருநாள் அங்க வந்த இளங்கோ இந்த டாக்குமெண்ட்டை அங்க ஒரு கம்பியூட்டர்ல வச்சு ப்ரிண்ட்-அவுட் எடுத்திருக்கான். சேவியருக்குத்தான் அடுத்தவங்க என்ன செய்யுறாங்கன்னு நோட்டம் பார்க்குற புத்தி இருக்கே, இளங்கோ அப்படி என்னத்தை பிரிண்ட் அவுட் எடுத்திருப்பாருங்கிறத தெரிஞ்சுக்கிற ஆசையில ஏதோ ஒரு ரிக்கவரி சாஃப்ட்வேர் போட்டு நெட்வொர்க் வழியா அந்த ஃபைலை நோண்டி எடுத்திட்டான். பார்க்கும்போதுதான் தெரிஞ்சுருக்கு அது ஒரு பெரிய ஃபாரின் பேங்க்கோட டாக்குமெண்ட்டுன்னு, அதுக்கப்புறம் அவன் என்னை ஒரு பெரிய ஹேக்கர்னு நம்பி இதை என்கிட்ட கொண்டுவந்தான்"

உமா பேயறைந்தவளைப்போல அசைவற்றவளாக அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

உமாவும் திருநாவுக்கரசும் பேசிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் அர்ஜூன் தனது ஹோட்டல் அறையில் பெரிய குழப்பத்தில் இருந்தான். கடந்த ஒரு வாரமாக கல்யாணி அம்மாவுக்கு மொபைலில் பலமுறை முயன்று பார்த்தும் அவரது செல்பேசி ஸ்விட்ச் ஆஃப் மோடிலேயே இருந்தது. அவரது வீட்டு போனையும் யாருமே எடுத்து பேசவில்லை. அத்தைக்கு என்ன ஆச்சு, அவரது வீட்டிலிருக்கும் எல்லோரும் எங்கே போனார்கள்? அர்ஜூன் தனது அம்மாவுக்கு போன் செய்தான். அவனது அம்மா, "அண்ணி இராமேஸ்வரம் போயிருக்காங்களாம்டா, எனக்கே இன்னிக்கு காலைலதான் இந்த விஷயம் தெரியும். அவங்க என்கிட்ட பேசியே ரொம்ப நாளாச்சு. எப்ப வருவாங்கன்னு தெரியல. வேலைக்காரங்களையெல்லாம் லீவு கொடுத்து வீட்டுக்கு அனுப்பிச்சிட்டாங்க போல இருக்கு. அவங்க வீட்டுல இருந்த வேலக்காரி ஒருத்திகிட்ட கேட்டேன். அவங்க நாளை மறுநாள் காலைலதான் எங்களை வரச்சொன்னாங்கன்னு சொன்னா"

அர்ஜூன் குழம்பிப் போனான்...சட்டென்று தனது ஸ்மார்ட் கிளாஸ் வழியாக ஸ்கைப்பை கனெக்ட் செய்தவன் வெகு நாட்களுக்குப் பிறகு அன்று கல்யாணி அம்மாள் ஆன்லைனில் இருப்பது கண்டு அவருக்கு அதில் கால் செய்தான். அந்தக் கால் முதல் தடவை கட் செய்யப்பட்டது. இரண்டாவது முறை மீண்டும் கால் செய்தபோது கல்யாணி அம்மாள் லைனில் வந்தார். அவரது முகம் மிகவும் இருண்டு இருந்தது.

அர்ஜுன், “அத்தை, உங்க மொபைலுக்கு எத்தனை தடவை ட்ரை பண்றது, உங்களுக்கு என்ன ஆச்சு? ஏன் யாருகிட்டையும் சொல்லாம இராமேஸ்வரம் போனீங்க?”

கல்யாணி அம்மாள் அப்போது ஹோட்டல் அறையில் இருந்தார். அர்ஜுனிடம் வேண்டா வெறுப்பாகப் பேசியது போல இருந்தது, “ஒண்ணும் இல்ல, திடீர்னு கோவிலுக்கு வரணும்னு தோணுச்சு வந்துட்டேன்”

அர்ஜுன், “அந்த அக்கவுண்ட் விஷயமா..” கல்யாணி டக்கென்று கையைக்காட்டி நிறுத்தும்படி சொன்னார்.

கல்யாணி அம்மாள், “அர்ஜுன், அந்த அக்கவுண்ட் விஷயத்தை இத்தோட விட்டுரு, இனி நீ ஒண்ணும் பண்ண வேண்டாம்”

கல்யாணி அம்மாளின் வார்த்தை அர்ஜுனை உலுக்கியது, “என்னங்கத்தை சொல்றீங்க, ஏன்? கடைசி கேள்வி எங்கமாவுக்கு பிடிச்ச கவிஞர் யாருங்கிறது. அதுக்கு மட்டும் பதில் கொடுத்துட்டா அக்கவுண்ட்டுக்குள்ள போயிடலாம். ஆனா ஏன் கடைசி நேரத்துல வேணாங்கிறீங்க?”

கல்யாணி அம்மாள், “உனக்கு விளக்கம் கொடுக்க எனக்கு விருப்பமில்ல, இதுபத்தி போன்லயோ அல்லது வேற எந்த மீடியம் வழியாவும் பேசக்கூடாதுன்னு டிட்டெக்டிவ்வா இருக்க உனக்கு தெரியாதா? இனிமேல் என்னை இது விஷயமா contact பண்ணாத” தொடர்பு துண்டிக்கப்பட்டது.

ஒரு மூணாவது மனுஷனிடம் பேசுவது போல அத்தை தன்னிடம் பேசியது அர்ஜுனின் மனதை அறுத்தது. அவனால் அந்த அதிர்ச்சியை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அத்தையின் நடவடிக்கையில் ஏற்பட்ட இந்த திடீர் மாற்றத்திற்கான காரணமும் அவனுக்குப் புரியவில்லை.

இங்கே கேண்டீனில் உமாவிடம் திருநாவுக்கரசு அந்த அக்கவுண்ட் சேவியர் மூலமாக தன்னிடம் வந்த கதையை தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தான். வாசகர்களே! அவன் சொல்வதை அடுத்த அத்தியாயத்திலிருந்து ப்ளாஷ்பேக் வடிவில் பார்ப்போம். காரணம் முந்தய அத்தியாயங்களில் போடப்பட்ட பல்வேறு முடிச்சுகளை அவிழ்க்க எனக்கு ப்ளாஷ்பேக்தான் வசதியாக இருக்கும்.

*********** *********** ***********

அத்தியாயம்: 31

குறுக்குச்சால் ஓடிய கதை - பிளாஷ்பேக்

இளங்கோ பிரிண்ட்-அவுட் எடுத்த அந்த ஸ்விஸ் பேங்க் டாக்குமெண்ட்டை சேவியர் இலாவகமாக கைப்பற்றி உமாவின் அண்ணன் திருநாவுக்கரசிடம் கொண்டுவருகிறான். இருவரும் பழைய பள்ளி நண்பர்கள். திருநாவுக்கரசு ஒரு ஹேக்கராக இருப்பதால் அவனால் தனக்கு உதவமுடியும் என்று நம்பிய சேவியர், கிடைக்கும் பணத்தில் ஆளுக்குப் பாதி பங்கிட்டுக் கொள்ளலாம் என்று திருவுக்கு ஆசை காட்டுகிறான். திருநாவுக்கரசு அவனைத் திட்டுகிறான்.

திருநாவுக்கரசு, "ஏண்டா என்னவொரு கொழுப்பு இருந்தா… நீ இளங்கோகிட்ட அடிவாங்கி சாகபோறதுமல்லாம என்னையும் சேர்த்து கோர்த்துவிடப் பார்ப்ப? அவிங்க எவ்ளோ மோசமானவய்ங்க தெரியும்ல?

சேவியர், "மச்சி புரிஞ்சுக்கடா, வேலைய நேர்த்தியா பண்ணோம்னா எந்த சிக்கலும் இல்ல. லைஃப்ல செட்டில் ஆயிடலாம்… ரிஸ்க் எடுத்தவன்தான் வாழ்க்கையில ஜெயிச்சிருக்கான் மச்சி. எனக்கு மூணு தங்கச்சிடா; உனக்கே தெரியும்ல, இன்னும் மூத்தவளைக்கூடக் கரையேத்த முடியல, இப்படி ஏதாச்சும் பெரிய அமவுண்ட் கிடைச்சாத்தான் ஏதாச்சும் பண்ண முடியும். நீயும் அமெரிக்கா போகணும்னு முயற்சி பண்ணிக்கிட்டு இருக்கேல, நாம அந்தப் பணத்தை மட்டும் அடிச்சிட்டோம்னா எல்லாமே சாத்தியம்டா!"

பேசிக்கொண்டிருக்கையில் சேவியருக்கு ஏதோ போன் வந்தது, அதை எடுத்துப் பார்த்தவன் சற்று சீரியஸானான், "என்னோட பாஸ்டா ஒரு நிமிஷம் இரு", என்றவன் போனை காதில் வைக்க மறுமுனையில் தனஞ்செயன், "திடீர்னு வேலையை ரிசைன் பண்ணிட்டேன்னா உன் வேலையை நான் யாரை வச்சுடா பார்க்குறது? ஒரு மாசம் முன்னாடியே நோட்டீஸ் குடுக்கணும்னு தெரியாதா? உண்மையிலேயே அம்மாவுக்கு சீரியஸா இருக்கா இல்ல வேற எங்கயாச்சும் ஃபாரின்ல வேலை கிடைச்சுப் போறியா?"

சேவியர், "ஐயய்யோ! அதெல்லாம் ஒண்ணும் இல்லசார், எங்கம்மாவை பார்த்துக்கிற வேற யாருமே வீட்ல இல்ல சார். அதான் நானே கிளம்பி வர வேண்டியதாயிடுச்சு…" அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே மொபைல் கட் ஆனது. திரும்ப சேவியர் கால் செய்து பார்த்தான். தனஞ்செயன் எடுக்கவில்லை.

சேவியர் மொபைலை ஜீன்சில் திணித்துவிட்டு திருவைப் பார்த்து, "நீ பயப்படுற மாதிரி ஒண்ணும் நடக்காது மச்சி, கவனமா இருந்தா ஈசியா ஜெயிச்சிரலாம்"

திருநாவுக்கரசு, "சரி நான் ஒரு கேள்வி கேக்குறேன், இந்தக் கேள்விக்கு மட்டும் நீ பதில் சொல்லு, அது எனக்கு திருப்தியா இருந்துச்சின்னா நானும் உன்கூட சேர்ந்துக்குறேன்"

சேவியர், "கேளு"

திரு, "இப்ப நீ சொல்ற மாதிரியே அந்த மூணு கேள்விக்கும் நாம சரியான பதில் கொடுத்து அக்கவுண்ட்டுக்குள்ள போயிட்டோம்னே வச்சுக்க. அதில ஒரு நூறு கோடி ரூபாய் இருக்கு, அந்தப் பணத்தை எப்படி எடுப்ப? எந்த அக்கவுண்ட்டுக்கு டிரான்ஸ்ஃபர் பண்ணுவ? சரி அதை நீ ஒரு அக்கவுண்ட்டுக்கே டிரான்ஸ்பர் பண்ணாலும் இளங்கோ குரூப் அதை கண்டுபிடிச்சு உன்னை தேடிவந்து போட்டுத்தள்ள எவ்வளோ நேரம் ஆகும்?

சேவியர், “டேய், இதெல்லாம் நான் யோசிக்காமலா இருந்திருப்பேன். இந்த டாக்குமெண்ட் கையில கிடைச்சவுடனே நான் என்ன பண்ணேன்னு மட்டும் கேளு, அதுக்கப்புறம் நான் தெளிவான ஆளா? இல்லையா, என்னை நம்பி என்கூட வரலாமா வேணாமாங்கிற முடிவ நீயே எடுத்துக்க…

திரு, “சரி சொல்லித் தொல…”

சேவியர், “இந்த டாக்குமெண்ட்ல வெறும் Code Number-ம், எப்படி இந்த சிஸ்டம் இயங்குதுங்கிற விவரமும் மட்டும்தான் இருக்கு. இந்த அக்கவுண்ட் எந்த பேங்குக்கு உரியதுங்கிற விபரம் கூட இல்ல பார்த்தியா? நானும் பல பேங்குகளோட வெப்சைட்லாம் போயி பார்த்தேன் ஒண்ணும் ஒர்க் அவுட் ஆகல”.

திரு, “ம்ம்ம்”

சேவியர், “அப்புறம் மும்பைல எனக்கு ஒரு நண்பன் இருக்கான் தீரேந்திரா-ன்னு, அவங்க பெரியப்பா அங்க ரொம்ப பெரிய கை, கிரிதர்பாய்னா மும்பையே நடுங்கும். மும்பை அண்டர்கிரவுண்ட்ல அவரு கண்ணசைவில்லாம அணு கூட அசையாது. அவ்வளோ பெரிய ஆளு; ஆனா வெளிய பார்க்க சாதாரணமாத்தான் இருப்பாங்க. நான் தீரேந்திராட்ட டாக்குமெண்ட்டை காண்பிச்சேன். அவன் ஒரு வெப்சைட்டுக்குள்ள போயி அதோட அட்ரஸோட சேர்த்து ஒரு நம்பர் கொடுத்தான். அப்பத்தான் எனக்கு எப்படி உள்ள போகணும்னே விளங்குச்சு…

திரு அரண்டுபோய், “அடப்பாவி, இதத்தான் தெளிவான வேலைன்னு சொன்னியா? அரசியல்வாதிங்க கிட்டத்தான் அடிவாங்கப்போறன்னு நினைச்சேன், இப்ப மாஃபியா கிட்டயும் மிதி வாங்கப்போறேன்னு தெரியுது. என்னை உட்ருடா சாமி!”

சேவியர், “டேய், சொல்றத முழுசா கேட்டுட்டு பேசுடா, நான் அவன்கிட்ட இந்த டாக்குமெண்ட்ட குடுக்கல, இதே மாதிரி வேற ஒண்ணு, நான் கிராஃபிக் டிசைனர்டா… இந்த வெள்ளைப்பேப்பர் டாக்குமெண்ட் மாதிரி இன்னொன்னு ரெடிபண்ண எனக்கு எவ்வளவு நேரம் ஆகும்?”

அதுவரை சேவியரை ஒரு முட்டாள் போல நினைத்து வேண்டா வெறுப்பாக அவன் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த திரு அவனை நிமிர்ந்து பார்த்தான்.

சேவியர் தொடர்ந்தான், “இங்கபாரு ஒரிஜினல் டாக்குமெண்ட்ல இருக்க Code Number: E0780711_0095502N_091076_1255, நான் தயாரிச்ச டூப்ளிகேட்ல ஒரே ஒரு சின்ன மாற்றம் மட்டும் செஞ்சேன் E0780711_0095502N_090776_1255 அவ்வளோதான்!

திரு, “அப்புறம் என்னாச்சு?”

சேவியர், “இந்த Code Number-ஐ தீரேந்திரா போட்டுப் பார்க்கும்போது “இப்படி ஒரு அக்கவுண்ட்டே இல்லைன்னு” அந்த வெப்சைட் காட்டிச்சு. இந்த பேங்க் அக்கவுண்ட்டை குளோஸ் பண்ணிட்டாங்க போலடானு சொல்லி எங்கிட்ட அவன் இந்த டாக்குமெண்ட்டை திருப்பி கொடுத்துட்டான், ஆனா அவன் எந்த பேங்க்கோட வெப்சைட்டுக்குப் போனானோ அதையும், அதுல அவன் ‘/‘ போட்டு அதுக்கப்புறம் குடுத்த நம்பரையும் நான் பார்த்துட்டேன்”

திருநாவுக்கரசு சற்று சமாதானமடைந்தான், “தெளிவாத்தான் மச்சான் வேலை பார்த்திருக்க, அதுசரி இந்த டாக்குமெண்ட் உனக்கு எப்படி கிடைச்சுச்சுன்னு கேட்டானுகளா?”

சேவியர், “பின்ன கேட்காம இருப்பானுகளா? ஒரு U.S Client கொடுத்தனுப்பிச்ச ஹார்ட் டிஸ்க்ல இருந்த டாக்குமெண்டுகளோட இருந்துச்சு, தெரியாம இதையும் சேர்த்து அனுப்பிச்சிடாய்ங்க போலன்னு

சொல்லிட்டேன், அது யாரு என்னன்னு கேட்டானுக, என்னோட பழைய U.S Client ஒருத்தனோட பேர சொல்லிட்டு வந்துட்டேன்"

"அதுமட்டுமில்ல மச்சி, நான் தீரேந்திரா குருப்புகிட்ட போனதுக்கு வேற ஒரு காரணமும் இருக்கு. நீ கேட்டேயில்ல, இதுல இருக்கிற பணத்தை எந்த அக்கவுண்ட்டுக்கு நீ டிரான்ஸ்பர் பண்ணுவேன்னு? இதுல இருக்கிற கருப்புப் பணத்தை அவனுகளோட Illegal account-க்கு டிரான்ஸ்பர் பண்ணித்தான் நாம ஷேர் வாங்கிக்க முடியும். வேற வழியே இல்ல.

திரு, "அவனுக ஏமாத்திட்டாய்ங்கன்னா?"

சேவியர், "அதெப்படிடா, இதுல நூறு கோடி இருக்குன்னு வச்சுக்க, அவனுக 99 கோடி எடுத்துக்கிட்டு நமக்கு ஒரு கோடி கொடுத்தாக்கூட நமக்கு அது பெரிய அமவுண்ட் ஆச்சேடா? அது கூடவா தரமாட்டாய்ங்க?

திருநாவுக்கரசு ஆழமாக யோசித்தபடி அவன் சொன்னதற்கு ஆமோதித்து தலையாட்டினான்.

சேவியர், "நான் இன்னும் அந்த Code Number-ஐ போட்டு உள்ள போய் பார்க்கலடா, ஏன்னா நம்மளோட IP Address அதுல பதிவாக வாய்ப்பிருக்கு. அப்புறம் ஈசியா மாட்டிக்குவோம். அதனாலதான் நான் உன்கிட்ட வந்தேன்"

திருநாவுக்கரசு, "அது ஒண்ணும் பிரச்சனை இல்லடா, IP Address-ஐ மறைச்சுட்டு உள்ள போறதெல்லாம் நமக்கு கைவந்த கலை. அதுக்கெல்லாம் பக்கா சாஃப்ட்வேர் வச்சிருக்கேன். இன்னொரு விஷயம் நம்ம சொந்த நெட் கனெக்ஷன்ல உள்ளே போறதை விட ஏதாவது Free Wifi இருக்கிற இடத்துல உட்காந்து அங்க இருந்து வேல செய்யுறது ரொம்ப பாதுகாப்பு. அந்த இடத்தையும் நாம மாத்திக்கிட்டே இருக்கணும்.

சேவியர், "பிரச்சனையே இல்ல மச்சி, கை நிறைய காசு இருக்குது, ஜாலியா நாடு முழுக்க சுத்தலாம், எங்க போகணுமோ சொல்லு, ஊட்டில இப்ப சீசன் நல்லா இருக்காம், போகலாமா?

திரு உற்சாகமாக, "கிளம்பு மச்சான் ஜமாய்ச்சிரலாம்..நமக்கு சுக்கிரதசை வந்திருச்சுன்னு நெனச்சுக்க"

*********** *********** ***********

அத்தியாயம்: 32

மிரட்டிய கனவு

தனக்கு வந்திருப்பது சுக்கிரதசை அல்ல மாரகதசை என்பதை அறியாத சேவியர் ஊட்டிக்கு குதூகலமாகக் கிளம்பினான். இருவரும் ஊட்டியில் ஒரு நல்ல ஹோட்டலில் ரூம் போட்டு தங்கினர். மாலை அங்கிருந்த ஒரு பெரிய ரெஸ்டாரண்ட்டுக்கு சென்றனர். அங்கு இருந்த Wifi -யில் திரு தனது லேப்டாப்பை இணைத்தான்.

இங்கே வாசகர்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம்; அந்த டாக்குமெண்ட் இளங்கோ வழியாக இவர்கள் கையில் வந்து சேர்ந்ததால் இது கோப்பெருஞ்சோழன் குடும்பத்தின் வங்கிக்கணக்கு என்றே சேவியரும், திருநாவுக்கரசும் நினைத்திருந்தனர்.

சேவியர் வங்கி இணையதளத்தின் கொல்லை(ள்ளை) வாசலுக்குப் போய் அந்த Code Number-ஐப் போட முதல் கேள்வி வந்து நின்றது.

“Who is my favourite teacher?”

திருநாவுக்கரசு சேவியரிடமிருந்து லேப்டாப்பை பிடுங்கி, “டேய் என்னடா டீச்சர் பேரு கேட்குது? நம்ம கோப்பு ஸ்கூல்லயெல்லாமா படிச்சாரு?

சேவியர், “யாரு கோப்பெருஞ்சோழனா, மழைக்குக் கூட ஒதுங்கிருக்க மாட்டாருடா” திடீரென ஏதோ ஞாபகம் வந்தவனாக, டேய் டீச்சர்னா தமிழ்ல என்ன? வாத்தியார்… தமிழ்நாட்ல வாத்தியார்னா ஒரே ஒருத்தர்தான்”

திரு, “ஆமால்ல…சரி, அவரோட முழுப்பேரு என்ன?”

சேவியர், “அடப்பாவிகளா தமிழ்நாட்ல அதுக்குள்ள அவர மறந்துட்டீங்களேடா. அவரோட முழுப்பேரு… ராமமூர்த்தி”

திருநாவுக்கரசு ramamurthy என்று டைப் செய்துவிட்டு enter key-யைத் தட்டப் போனவன், ஏதோ ஞாபகம் வந்தவனாக, “ஏண்டா மஷ்ரூம் தலையா, என்னைச் சொல்லிட்டு நீயே தப்பா சொல்றியா, அவர் பேரு ராமச்சந்திரன்டா” என்று சொல்லிவிட்டு ramamurthy-யை அழித்துவிட்டு ramachandran என்று டைப் செய்து enter செய்தான்..சிஸ்டம் பதிலை தவறு என்று புறக்கணித்தது.

பிறகு மீண்டும் அவரது இனிஷியலைச் சேர்த்து mgragmachandran என்று டைப் செய்ய அதையும் சிஸ்டம் தவறு என்று டைப் செய்தது.

திருநாவுக்கரசு இங்கே ஏற்கனவே இரண்டு முறை முயன்று தோற்றுவிட்டதை அறியாத சேவியர் சிக்கன் சூப்பை உறிஞ்சுவதில் மும்மரமாக இருந்தான்.

திருநாவுக்கரசு தனக்குள், “ஒருவேளை கோப்பு நடிகர் திலகத்தோட இரசிகரா இருப்பாப்லயோ? காசா பணமா அதையும் போட்டுப் பார்த்திருவோம்” என்று எண்ணியபடி sivajiganesan என்று டைப்செய்ய சிஸ்டம், ““மூன்று முறை தொடர்ந்து தவறான பதில் அளிக்கப்பட்டதால் உங்கள் அக்கவுண்ட் அடுத்த 15

நாட்களுக்கு முடக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக வங்கியைத் தொடர்புகொள்ளவும்” என்ற செய்தி சிவப்பு நிற கொட்டை எழுத்துக்களில் வந்து நின்றது.

அக்கவுண்ட் முதல் முறை பிளாக் ஆனது இப்படித்தான்.

திருநாவுக்கரசு கேஷுவலாக, “என்ன மச்சி ப்ளாக் ஆகிருச்சு?” என்று கேட்க, பதைபதைத்தவனாக சேவியர், “அடப்பாவி… என்னாடா பண்ண?”

திருநாவுக்கரசு, “மூணுவாட்டி தப்பான ஆன்ஸர் குடுத்தேன், புட்டுக்கிச்சு”

சேவியர் கோபத்தில் திருவின் மண்டையில் பட் பட்டென்று அடித்தவாறே, “மூணுவாட்டி தப்பான ஆன்ஸர் கொடுத்தா பின்ன புட்டுக்காம என்னடா பண்ணும்?”

திருநாவுக்கரசு பரிதாபமாக, “இந்த மேட்டர நீ எங்கிட்ட சொல்லவே இல்லையேடா…”

சேவியர் தலையில் கை வைத்து அமர்ந்தான், “ரொம்ப பெரிய தப்பு பண்ணிட்டோம் மாப்ள, இந்நேரம் அலர்ட் ஆகிருப்பானுகளே…ப்ச்..நான் அந்த டாக்குமெண்ட்டை உங்கிட்ட முழுசா படிச்சு காட்டியிருக்கணும்”

திருநாவுக்கரசு, “சரிடா, விடு ப்ளாக் ஆனாலும் அவனுகள நம்மளால கண்டுபிடிக்க முடியாது, நாமதான் proxy software போட்டிருக்கோமே”

சேவியர், “போடாங்…உன்ன மாதிரித்தான் உன் proxy software-ம் இருக்கும். உன்னைப் போயி நம்புனேன் பாரு, நல்ல வேளை பலபேரு வந்துபோற ரெஸ்டாரண்ட்டுல வந்து இண்டெர்நெட்டை யூஸ் பண்ணோம் இல்லாட்டி…” பேசியவாறே மேலே பார்த்தவன் அவர்கள் தலைக்கு மேலே அவர்களை கவனித்துக் கொண்டிருந்த சிசிடிவி கேமராவை அப்போதுதான் பார்த்தான். “போச்சுடா…கொய்யால செத்தாம்” என்றவன் திருவை இழுத்துக் கொண்டு வேகமாக பில்லைக் கட்டிவிட்டு அந்த ரெஸ்டாரண்ட்டை விட்டு வெளியேறினான்.

இருவரும் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு வந்தனர். அதுவரை கேஷுவலாக இருந்த திருநாவுக்கரசு அப்பொழுதுதான் தனது தவறை உணர்ந்தான். ஒருவேளை தனது proxy software ஒழுங்காக வேலை செய்யாமல் இருந்திருந்தால் என்ன செய்வது என்ற பயம் அவனுக்கு வந்திருந்தது. நாளைக்கே ஊட்டியை காலி செய்துவிட்டு சிம்லாவுக்கு சென்றுவிடலாம் என்று இருவரும் தீர்மானித்தபடி படுக்கைக்கு சென்றனர்.

சேவியர் ஒரு படகில் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் கிடந்தான். அவனது உடலை பல நூறு தேள்கள் மொய்த்த வண்ணம் இருந்தன. அவன் இருந்த படகை இளங்கோ வேகமாக துடுப்புப் போட்டு நடுக்கடலை நோக்கி ஓட்டிக்கொண்டிருந்தான். இளங்கோவின் பின்பக்கம் மட்டுமே சேவியருக்கு தெரிந்தது. அவன் இளங்கோவிடம் கெஞ்சினான், சார் என்னால தேள்கடிய பொறுக்க முடியல என்னை விட்டுடுங்க, தண்ணியில குதிச்சாவது உயிரை விட்டுடுறேன், ப்ளீஸ்…அவன் கதறிய சத்தத்தை காதில் வாங்காமல் இளங்கோ படகின் துடுப்பை இன்னும் வேகமாக செலுத்தினான்.

சார் நான் சாகணும் அவ்வளவுதானே, கொஞ்சம் என்னை திரும்பிப் பாருங்க சார், பார்த்தா உங்களுக்கே இரக்கம் வந்திரும்… நானே கடல்ல குதிச்சி செத்துடறேன் சார்! கொஞ்சம் திரும்பிப் பாருங்கசார்… ஒரு மனுஷனால இத்தனை தேள் கொட்டுறதை எப்படி சார் தாங்க முடியும்…

இளங்கோ தனது முகத்தை இலேசாக சேவியரை நோக்கித் திருப்பினான்..

சேவியர் இளங்கோவின் முகத்தைப் பார்த்தான்...

அவன் முகம்....

அவன் முகம்...

ஆஆஆஆ....

அலறியடித்து எழுந்தான் சேவியர், ஏற்கனவே கட்டிலின் ஓரத்தில் தூங்கிக்கொண்டிருந்த திருநாவுக்கரசு பதட்டத்தில் கட்டிலிலிருந்து உருண்டு கீழே விழுந்தான். எழுந்து உட்காந்த சேவியர் அழுதபடியே கை கால் முகம் அனைத்தையும் கையால் தேய்த்தான். அவனது உடலை இன்னும் தேள்கள் மொய்த்துக் கொண்டிருந்தது போலவே உணர்வு இருந்தது...

“ச்சீ..கனவா?”

தரையிருந்து எழுந்து உட்காந்த திருநாவுக்கரசு, “டேய்..ஏண்டா காலங்காத்தால இப்படி பீதியக் கௌப்புற?”

இருவரும் மணியைப் பார்த்தார்கள். காலை 9:00 மணியாகிவிட்டிருந்தது.

சேவியரின் இதயத்துடிப்பின் வேகம் இன்னும் குறையவில்லை. அவன் திருவிடம் எதுவுமே பேசவில்லை.

அவன் நிலையை உணர்ந்து கொண்ட திருநாவுக்கரசு, “சரி மாப்ள கிளம்பு breakfast முடிச்சிட்டு கோயமுத்தூர் போயிடலாம். அதுக்கப்புறம் அங்கிருந்து எப்படி சிம்லா போறதுன்னு பிளான் பண்ணலாம். எதுக்கும் பயப்படாத, எல்லாம் நல்லபடியா நடக்கும்”

இருவரும் குளித்துவிட்டு ரூமுக்கு டீயை வரவழைத்துக் குடித்துக் கொண்டிருந்தனர். தனது கனவை திருவிடம் சொன்னால் அவன் கிண்டல் செய்வான் என்பதால் சேவியர் அவனிடம் சொல்லவில்லை.

திடீரென்று சேவியரின் செல்பேசி சிணுங்கியது...

அதை எடுத்த சேவியர் ஷாக் ஆனான், “என் பாஸ் தனஞ்செயண்டா”, மொபைல் ஸ்பீக்கரை ஆன் செய்தான்.

தனஞ்செயன் போனில் அதிகாரமாக, “டேய் சேவியர் எங்கடா இருக்க?”

சேவியர், “சா..சார்.. நா..நா.. சென்னைலதான் இருக்கேன்”

தனஞ்செயன், “இரு உங்கிட்ட இளங்கோ சார் பேசணுமாம்”...

சேவியர், திருநாவுக்கரசு இருவரும் பயத்தில் உறைந்தனர், இளங்கோவுக்கு தன்னுடன் பேச என்ன இருக்கிறது? சேவியரின் இதயத்துடிப்பு எகிறியது...

அடுத்து லைனில் வந்த இளங்கோ, “சேவியர் சென்னைலதான் இருக்கியா?”

சேவியர் நடுங்கியபடியே, “ஆ..ஆமாங் சார்”இளங்கோ, “சரி, இப்ப உடனே என்னை ஆஃபீஸ்ல வந்து பாரு” திருநாவுக்கரசு “ஐயய்யோ” என்று கையை உதறினான்…நடுக்கத்தில் சேவியரின் கையில் இருந்த டீ கிளாஸ் நழுவி விழுந்தது.

மறுமுனையில் இருந்த இளங்கோ திடீரென என்ன நினைத்தானோ, “இரு இரு எனக்கு இப்ப வேறொரு அப்பாயிண்ட்மெண்ட் இருக்கு, நீ என்ன பண்ற நாளைக்கு காலைல 11.00 மணிக்கு என்ன வந்து பார்க்குற” என்றபடி போனைக் கட் செய்தான்.

சேவியர், திருநாவுக்கரசு இருவருக்கும் உயிர்போய் தற்காலிகமாக திரும்பி வந்தது போல இருந்தது.

என்ன நடந்திருக்கலாம் என்பதை திருநாவுக்கரசு யூகித்தான், “ மாப்ள நேத்து அக்கவுண்ட் பிளாக் ஆனதுமே இவனுங்க அந்த பேங்க்கை contact பண்ணியிருந்திருப்பானுக. அந்த பேங்க்காரன் என்னோட IP Address அல்லது நாம ஆக்ஸஸ் பண்ண இண்டர்நெட்டோட சர்வீஸ் ப்ரவைடர் யாருன்னு சொல்லிருப்பான். அவனுங்க மூலமா அந்த ரெஸ்டாரண்ட்டை புடிச்சு சிசிடிவி கேமரா பதிவைப் பார்த்து உன்னைக் கண்டுபிடிச்சிருப்பானுக. நீதான் தேடிக் கண்டுபிடிச்சு கேமராவுக்கு நேராவே போய் உட்காந்தியே!..”

சேவியர் எரிச்சலில் கத்தினான், “டேய், சும்மாருடா.. உன் கற்பனையெல்லாம் பயங்கரமாயிருக்கு..உனக்கு அவனுகளே பரவாயில்ல போல”

சேவியர், “நல்ல வேளைடா, என்ன நெனச்சானோ நாளைக்கு வந்து மீட் பண்ணுன்னு சொல்லிட்டான். இல்லைன்னா ஊட்டில இருந்துக்கிட்டு சென்னையில இருந்தோம்னு பொய் சொன்னதுக்கு செத்திருப்போம்”

திருநாவுக்கரசு கோபமாக, “செத்திருப்பேன்னு சொல்லு… கொய்யால, இந்த ரிஸ்கெல்லாம் வேணாம்னு அடிச்சுக்கிட்டேனேடா? கேட்டியா..எனக்கென்னமோ அவனுக நீ இன்னும் ஊட்டிலதான் இருக்கியான்னு trace பண்ணத்தான் உனக்கு போன் அடிச்சிருப்பானுகளோன்னு தோணுது. அவனோட அடியாட்கள் இப்ப இந்த ஹோட்டல் வாசல்ல கூட நம்மை பிடிக்க ரெடியா நின்னுக்கிட்டு இருக்கலாம், நமக்கு இன்னிக்கு உறுதியா சங்குதாண்டி.

சேவியர் கையெடுத்துக் கும்பிட்டு, “ஐயா சாமி! உன் கால்ல வேணாலும் விழுகிறேன்… கொஞ்சம் வாய வச்சிக்கிட்டு சும்மாயிரு, உன்கூட இருக்கிறதுக்கு பேசாம அவனுங்க கையிலேயே போய் மாட்டிரலாம் போல இருக்கு… ஏண்டா IP Address-ஐயெல்லாம் எவனும் கண்டுபிடிக்க முடியாதுன்னு பீலா உட்ட, இன்னிக்கு பேங்குகாரனே உன் IP Address-ஐ குடுத்திருப்பான்னு சொல்ற”

திருநாவுக்கரசு, “அதான் மச்சி எனக்கே டவுட்டா இருக்கு, அது நெட்ல இருந்து ஃப்ரீயா டவுன்லோடு பண்ண சாஃப்ட்வேரு. ஒழுங்கா ஒர்க் பண்ணுதா இல்லையான்னு இதுவரைக்கு டெஸ்ட் பண்ணி பார்த்ததில்ல”

சேவியர், “என்னாது?…ஏன் டெஸ்ட் பண்ணிப் பார்க்கல?” திருநாவுக்கரசு, “எப்படி டெஸ்ட் பண்ணனும்னு தெரியாதே” சேவியர், “அடப்பாவி மவனே, இன்னொருவாட்டி நீ உன்னை ஹேக்கர்னு சொல்லிக்கிறத என் காதால கேட்டேன்… வாயப் புடிச்சி கிழிச்சி வச்சிருவேன்”

*********** *********** ***********

அத்தியாயம்: 33

அழைத்த நோக்கம் புரிந்தது

மறுநாள் காலை 11.00 மணிக்கு சந்திக்க வேண்டுமென்பதால் சேவியரும், திருநாவுக்கரசும் உடனடியாக ஊட்டியில் இருந்து சென்னைக்குக் கிளம்பினர். பயணத்தின்போது அவர்களுக்குள் நடந்த உரையாடல்கள் வரப்போகும் சூழலை எதிர்கொள்ளும் பக்குவத்தை அவர்களுக்குக் கொடுத்திருந்தது.

விடிவதற்கு முன்பாகவே இருவரும் சென்னை கோயம்பேடு பஸ்நிலையத்திற்கு வந்து சேர்ந்திருந்தனர். அங்கு ஒரு சூடான காபியைப் பருகிக்கொண்டே பேசிக்கொண்டனர்.

சேவியர், "இன்னைக்கு காலைல இளங்கோவைப் பார்க்கப் போகும்போது நீ வரவேணாம் மச்சி, வாழ்வோ சாவோ நானே தனியா போறேன்"

திருநாவுக்கரசு, "ஏன் மாப்ள இப்படி பிரிச்சு பேசுற? ஒருவேளை அந்தக் காசை அடிச்சிருந்தோம்னா ரெண்டு பேரும் சமமாத்தானே பங்கு போட்டிருப்போம்? அப்படியிருக்கும்போது ஆபத்துல மட்டும் நான் எப்படிடா உன்னைக் கழட்டி விடுவேன். எது வந்தாலும் வரட்டும்...வா சேர்ந்தே நின்னு பார்த்திடுவோம்"

சேவியர் எவ்வளவு சொல்லியும் திருநாவுக்கரசு கேட்கவில்லை. காலை பத்து மணியளவில் அவன் பைக்கை எடுத்துக்கொண்டு சேவியரின் வீட்டுக்கு வந்தான். இருவரும் சேர்ந்து கிளம்பி சரியாக காலை 11.00 மணிக்கு அஸ்வா டிவி அலுவலகத்தை வந்தடைந்தனர்.

அந்த நேரம் இலேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. டிவி அலுலகத்தின் முன்னர் சிலர் எதிர்கட்சிக் கொடியைப் பிடித்து கோஷம் போட்டுக்கொண்டிருக்க அந்த நேரத்தில் தள்ளுமுள்ளு ஆரம்பித்திருந்தது.

அலுவலகத்தின் வாசலில் வண்டியை நிறுத்திய திரு சேவியரிடம், "மாப்ள பயப்படாம போயிட்டு வா, நான் அந்த தெருமுனையில இருக்க ஜூஸ் கடையில உட்காந்திருக்கேன். எதுனாலும் எனக்கு கால் பண்ணு."

அதுவரை கொஞ்சம் தைரியமாக இருந்த சேவியர் முகத்தில் மரணபயம் இலேசாகப் படந்திருந்தது, "கண்டிப்பா கால் பண்ணமாட்டேன் மச்சி, எனக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா லூசு மாதிரி நீயும் வந்து மாட்டிக்காத, எஸ்கேப் ஆயிரு...ஆனா ஒரே ஒரு விஷயம்டா.. எங்கம்மாவையும் , தங்கச்சிகளையும் பார்த்துக்கடா, அவங்களுக்கு வேற யாருமே இல்ல" அவனுக்குள் இருந்து அழுகை வெடித்துக் கிளம்பியது..." திரு அவனை அணைத்துக் கொண்டான்.

திருநாவுக்கரசு, "மாப்ள ஏண்டா ஏதேதோ கற்பனை பண்ற, எல்லாம் நல்லபடியா நடக்கும்டா..நீ கிளம்பு"

சேவியர் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு அலுவலக வளாகத்தினுள் நுழைந்தான். அவன் போவதை சில நிமிடங்கள் பார்த்துக்கொண்டே இருந்த திருநாவுக்கரசு அங்கிருந்து கிளம்பி, அந்தத் தெருமுனையில் இருந்த ஜூஸ்கடையில் போய் வண்டியை நிறுத்தினான். சேவியர் கடைசியாக சொன்ன விஷயங்களைக் கேட்டு அழுகையை அடக்கிக் கொண்டிருந்தவன் வண்டியில் அமர்ந்தபடியே குனிந்து பைக்கின் பெட்ரோல் டாங்கில் படுத்தபடி கைகளில் முகம் புதைத்து அழுதான்.

சேவியர் உள்ளே நுழைந்ததும் அவனை விசாரித்த ரிஸப்ஷனிஸ்ட் இளங்கோவுக்கு போன் செய்தார், "

"சார் உங்களைப் பார்க்க சேவியர்னு -னு ஒருத்தர் வந்திருக்காரு...

இளங்கோ, “அவனை நான்தான் வரச்சொன்னேன், உள்ள அனுப்புங்க…”

சேவியர் அடுத்த வினாடி என்ன நடக்குமோ என்ற பயத்துடன் இளங்கோவின் அறைக்கதவை திறந்து உள்ளே நுழைந்தான். அங்கு இளங்கோவுடன் தனஞ்செயனும் உட்காந்திருந்தான். சேவியர் இருவருக்கும் பணிவாக வணக்கம் வைக்க, இளங்கோ எதிரே இருந்த இருக்கையில் அமரும்படி அவனை கை காட்டினான்.

இளங்கோ, “என்ன சேவியர் உங்க அம்மாவுக்கு இப்ப உடம்பு எப்படி இருக்கு?”

சேவியர், “பரவாயில்ல சார், இப்பக் கொஞ்சம் நல்லா இருக்காங்க”

இளங்கோ, “இனி திரும்ப மும்பைக்குப் போற ஐடியா இல்லையா, அடுத்து வேலைக்கு என்ன செய்யப்போற?”

சேவியர், “இல்லசார், வீட்ல அம்மாவைப் பார்த்துக்கிற ஆள் இல்ல, மூணு தங்கச்சிங்க இருக்கிறாங்க மூணுபேருமே படிக்கிறாங்க, ஏதாச்சும் ஒண்ணுன்னா ஆம்பளை துணை இல்ல…அதான் சார்…இனி சென்னையிலேயேதான் எங்கயாவது வேலை தேடணும்”

இளங்கோ, “சரி வேற எங்கேயும் தேட வேணாம், நம்ம பத்திரிக்கைக்கு ஒரு கிராஃபிக் டிசைனர் ரொம்ப அர்ஜண்ட்டா தேவைப்படுது…அதுக்குத்தான் உன்னை வரச்சொன்னேன்”

சேவியருக்கு ஜீவன் திரும்ப வந்ததுபோல இருந்தது…

இளங்கோ, “வர்ற ஒண்ணாம் தேதில இருந்து ஜாயின் பண்ணிக்க, இப்ப போயி HR-ஐப் பார்த்து பேசிட்டுப் போ…”

சிறிது நேரத்தில் துள்ளலுடன் வெளியே வந்த சேவியர் வேகமாக திருநாவுக்கரசு நின்றுகொண்டிருந்த ஜூஸ் கடையை நோக்கி விரைந்தான். கடையில் நின்று டிவி அலுவலகத்தின் வாசலையே பதபதைப்புடன் பார்த்துக் கொண்டிருந்த திருநாவுக்கரசு சேவியர் நடந்து வருவதை கவனித்தான். சேவியர் அருகில் வரவர அவன் முகத்தில் இருந்த சிரிப்பையும் மகிழ்ச்சியையும் பார்த்த திருவுக்கு மனதில் ஒரு நிம்மதி பிறந்தது.

திரு, “என்னடா மச்சி ஆச்சு?”

சேவியர், “மாப்ள, அந்தப் புண்ணியவான் எனக்கு பத்திரிக்கையில வேலை குடுக்கிறதுக்காக வரச்சொல்லி இருந்திருக்காண்டா”

அந்த நேரம் இருவருக்கும் மகிழ்ச்சிகரமான நேரமாக மாறியது. இரண்டு நாட்களாக மனதை அழுத்திக் கொண்டிருந்த பயமும், பாரமும் மொத்தமாக விடைபெற்றது.

சேவியர், “மாப்ள லஞ்ச் தலப்பாகட்டி பிரியாணி, அப்புறம் மேட்னி ஷோ…நேரா வண்டிய நுங்கம்பாக்கம் விடு…

போகும் வழியில் பைக்கை ஓட்டியபடியே சேவியரிடம் திருநாவுக்கரசு கேட்டான், “அடுத்து என்ன மாப்ள? அந்த அக்கவுண்ட் மேட்டரை விட்ருவோமா இல்ல கண்ட்டினியூ பண்ணுவோமா?

பின்னாலிருந்து சேவியர், “சாவோட விளிம்ப எட்டிப் பார்த்துட்டு வந்துட்டேன் மச்சி, சாவு பயம் எனக்கு சுத்தமா போயிடுச்சு… இனி இத நான் விடுறதா இல்ல…நாம ரொம்ப தேவையில்லாம IP address அது இதுன்னு பயந்துக்கிட்டு இருந்துட்டோம். அதெல்லாம் ஒண்ணும் இல்ல…தைரியமா இறங்கலாம்… என்ன சொல்ற?

திரு, “உன் மூணு தங்கச்சிங்களை கரையேத்தணும்னு நீ காலையில அழறதைப் பார்க்குற வரைக்கும் எனக்கும் உயிர் பயம் ரொம்பவே இருந்துச்சு மச்சி…இப்ப நானும் துணிஞ்சுட்டேன். அந்த அக்கவுண்ட்டை ஓப்பன் பண்ணிட்டா ஒருபக்கம் உன் தங்கச்சிங்களைக் கரை ஏத்திடலாம். இன்னொரு பக்கம் நானும் அமெரிக்கால செட்டில் ஆன மாதிரி இருக்கும். இங்க வேலை வெட்டியில்லாம வீட்ல திட்டு வாங்கி அசிங்கப்பட்டுட்டு உயிர் வாழ்றத விட துணிச்சலா ஒரு விஷயத்துல இறங்கி ரிஸ்க் எடுக்கிறது மேல். மயிரக் கட்டி மலைய இழுப்போம். வந்தா மலை, போனா உயிரு விடு…”

சேவியர், “அந்த வாத்தியார் பேரை கண்டுபிடிக்க எங்கிட்ட ஒரு செம்ம ஐடியா இருக்கு மச்சி, அதுல எந்த ரிஸ்க்கும் இல்ல, ஈசியா ஒர்க்-அவுட் ஆகிடும்”.

திருநாவுக்கரசு, “அப்படியா… சூப்பர் மச்சி”

சேவியர், “ஆனா நான் உனக்கு பேசுனபடி 50% ஷேர் கொடுக்கனும்னா ஒரே ஒரு கண்டிஷன்”

திருநாவுக்கரசு, “நான் என்ன பண்ணனும்னு சொல்லு”

சேவியர், “நீ எதுவுமே பண்ணாம இருக்கணும்…முக்கியமா ஹேக்கர்னு சொல்லிக்காத, உன் ரீல் அந்து ரெண்டு நாளாச்சு”

*********** *********** ***********

அத்தியாயம்: 34

சிலந்தி வலைக்குள் சிக்கிய தருணம்

மூன்று நாட்களுக்குப் பிறகு திருநாவுக்கரசும், சேவியரும் அதிகாலையிலேயே கிளம்பி கோப்பெருஞ்சோழன் பிறந்த மாவட்டத்தின் தலைநகரை நோக்கி பைக்கில் சென்று கொண்டிருந்தனர். ஒரு பத்திரிக்கை நிருபர் போல அம்மாவட்டக் கல்வி அதிகாரியை சந்தித்து கோப்பெருஞ்சோழனின் பள்ளிப் பருவம், அவரது ஆசிரியர்கள் குறித்த விபரங்களை வாங்குவது சேவியரின் திட்டம். அதற்காக பாயும் குதிரை பத்திரிக்கையின் நிருபர் போல ஒரு போலி ஐடி கார்டை தயாரித்திருந்தான்.

அலுவலகத்தின் எதிரே இருந்த டீக்கடையில் திருநாவுக்கரசை நிற்க வைத்துவிட்டு, சேவியர் மட்டும் உள்ளே போய் அதிகாரியைச் சந்தித்தான்.

“வணக்கம் சார் என் பெயர் நந்தகுமார், பாயும் குதிரை பத்திரிக்கை நிருபர். நம்ம முதல்வர் ஐயாவைப் பத்தி ஒரு தொடர் எழுதணும். அதுக்கு அவரோட மாணவப்பருவம் பத்தின விபரங்கள் தேவை. அதான் உங்களைப் பார்த்து விபரங்கள் வாங்கிட்டுப் போகலாம்ணு வந்தேன்.

அதிகாரி, அப்படீங்களா தம்பி, பாயும் குதிரை பத்திரிக்கையா?…உங்க ஐடி கார்டை குடுங்க…

சேவியர் அதை அவரிடம் நீட்டினான். அந்த அதிகாரி தனது பியூனை அழைத்து இந்த ஐடி கார்டை ஒரு ஸ்கேன் பண்ணி ஒரு பிரிண்ட்-அவுட் எடுத்துட்டுவா என்று கொடுக்க, சேவியருக்கு பக்கென்று இருந்தது.

சேவியர், “எதுக்கு சார் என்னோட ஐடி கார்டை பிரிண்ட் எடுக்கிறிங்க?”

அதிகாரி, “அது சும்மா ஒரு ஃபார்மாலிட்டிக்காக தம்பி, ஒரு பெரிய வி.ஐ.பியோட விபரங்களை குடுக்கிறோம்ல. நாளைக்கு யாராவது வந்து கேட்டா நாங்க பதில் சொல்லணும்ல… அதுக்குத்தான்”.

“ஐயயோ. இதெல்லாம் நாம யோசிக்கவே இல்லையே” தனக்குள் நொந்து கொண்டான் சேவியர். எதிரியின் கோட்டையில் ஒரு தடையத்தை விட்டுச் செல்லுகிறோமே என்று அவன் மனம் அடித்துக் கொண்டது.

பியூன் பிரிண்ட்-அவுட்டை அதிகாரியிடம் கொடுக்க அவர் அதை வாங்கி டேபிளில் வைத்துக்கொண்டு ஐடி கார்டை சேவியரிடம் திருப்பிக் கொடுத்து. “நீங்க கொஞ்சம் வெளியில வெயிட் பண்ணுங்க தம்பி, திரும்ப கூப்பிடுறேன்” என்றார்.

முக்கால் மணி நேரம் கழித்து ஒரு ஆஜானுபாகுவாக நபர் அங்கு வந்தான். “சார் நீங்கதான் பாயும் குதிரை நிருபரா?” சேவியர் “ஆமா” என்றான்.

அந்த நபர், “கொஞ்சம் என் கூட வாங்க…ஐயாவைப் பத்தின தகவல்களெல்லாம் இந்த ஆஃபீஸ்ல இல்லையாம், தாலுகாவோட தலைமை அலுவலகத்திலதான் இருக்காம். உங்களை அங்க கொண்டுபோய் விட்டுட்டு வரச் சொன்னாங்க..”

சேவியர், “அப்படியா”,

சேவியர் ஒரு ஆஜானுபாகுவான ஆளோடு வெளியே கிளம்பிப் போவதை டீக்கடைக்குள் இருந்து பார்த்துவிட்ட திருநாவுக்கரசு வெளியே வந்தான். அந்த ஆள் சேவியரைக் கூட்டிக்கொண்டு ஒரு வெண்ணிற சுமோவை நோக்கி நடந்தான். அந்த சுமோவுக்குள் ஏற்கனவே சில ஆட்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அனைவர் கண்ணும் சேவியரையே நோக்கியிருந்தது.

சேவியருக்கு இலேசான சந்தேகம் ஏற்பட்டது. “இவங்கள்லாம் யாரு?” என கேட்க, அந்த அந்த ஆஜானுபாகு “எல்லாரும் அதே ஆபீஸ் போறவங்கதான் சார்” என்றான். ஏற்கனவே சுமோவின் ஓர சீட்டில் உட்காந்திருந்த ஒரு ஆள் இறங்கி, வெளியே வந்து சேவியரை நடுவில் உட்காரும்படி சைகை செய்ததும் சேவியருக்கு சந்தேகம் வலுத்தது. “இல்ல நான் இதுல வரலை…என் வண்டிலயே வந்துக்கிறேன்” என்று சொல்லி நகர முற்பட, அடுத்த வினாடி அவன் கன்னத்தில் இடிபோல ஒரு அறை விழுந்தது. அந்த ஆஜானுபாகு ஆசாமி சேவியரை கழுத்தைப் பிடித்து வண்டிக்குள் தள்ளி தானும் ஏறி உட்காந்தான். வண்டி சீறிப்பாய்ந்து கிளம்பியது…

இந்தக் காட்சியைக் கண்டு அதிர்ந்த திருநாவுக்கரசு உடனடியாக பைக்கைக் கிளப்பி அந்த சுமோவைப் பின் தொடர்ந்தான். வண்டிக்குள் கிட்டதட்ட 6 அடியாட்கள் இருந்தனர். வண்டிக்குள்ளேயே சேவியருக்கு மாறி மாறி அடி விழுந்தது. அவனிடம் இருந்த செல்போன், மணிப்பர்ஸ் இரண்டையும் பிடுங்கிக் கொண்டனர்.

சேவியர் வண்டியின் மிர்ரர் வழியாக பின்னால் தொடரும் திருநாவுக்கரசைப் பார்த்துவிட்டான். அவனுக்கு பகீர் என்றிருந்தது. “ஐய்யோ…தப்பிச்செல்லாமல் இவன் ஏன் கூட வருகிறான்…இவனைப் போகச் சொல்ல வேண்டுமே!”

சேவியர் தனது சட்டைப் பாக்கெட்டில் இருந்த மினி மொபைலை யாருக்கும் தெரியாமல் பாக்கெட்டுக்கு வெளியிலிருந்து தடவிப்பார்த்தான். அதிலிருந்து கடைசியாக திருவுக்கு நேற்று இரவு கால்செய்தது நினைவுக்கு வந்தது…நடுவில் இருக்கும் பட்டனை மட்டும் இருமுறை அழுத்தினால் கடைசியாக கால் செய்த எண்ணுக்கே திரும்பவும் அழைப்பு போகும். நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அழுவது போல பாக்கெட்டிற்குள் இருக்கும் மினி மொபைலில் நடு பட்டனை இரு முறை அழுத்த திருநாவுக்கரசுக்கு அழைப்பு போனது..

அந்த நேரத்தில் கடவுளே அழைத்தாலும் பேசும் நிலையில் திருநாவுக்கரசு இல்லை. தனது காதில் மாட்டியிருந்த புளூடூத்தில் ரிங்டோன் சத்தம் வந்ததால் வண்டி ஓட்டியபடியே அழைப்பை துண்டிக்க முயன்றவன் தெரியாமல் அழைப்பை accept செய்யவே, சேவியரின் அழுகுரல் bluetooth headset வழியாக அவன் காதுகளில் கேட்டது. அதிர்ச்சியடைந்தவனாய் போனை எடுத்துப் பார்க்க அது சேவியரின் மினி மொபைல் நம்பரில் இருந்து அவனுக்கு வந்த அழைப்பு…

“டேய்..நீ போடா, போயிருடா….நீ ஏண்டா வர்ற…போடா…முழங்காலில் முகம் புதைத்துக் கொண்டு சேவியர் கதறினான்”

சேவியர் ஏற்கனவே அடி வாங்கி கதறிக்கொண்டிருந்தபடியால் அவன் அதே தொனியில் பேசியதை வண்டியில் இருப்பவர்களால் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லை. திருநாவுக்கரசு சேவியரின் கெஞ்சலுக்கு செவிசாய்க்காமல் அந்த சுமோவைப் பின் தொடர்ந்தபடி இருந்தான்.

திடீரென்று பின்சீட்டில் இருந்தவன் தனது பலத்தையெல்லாம் திரட்டி சேவியரின் முதுகில் ஓங்கி குத்தி, “..த்தா நிமிந்து உட்கார்டா” என்று கட்டளையிட்டான்.

வலி தாங்க முடியாமல் சேவியர் அம்மாவென்று அலறினான்... அதற்குப் பிறகு அவனது முனகல் சத்தம் மட்டுமே திருநாவுக்கரசுக்கு கேட்டது. அவனால் சாலையைப் பார்த்து பைக்கை ஓட்டமுடியாதபடிக்கு அவன் கண்களில் இருந்தது கண்ணீர் பெருக்கெடுத்து வடிந்து கொண்டிருந்தது. இந்த தடியர்கள் எங்கேயாவது வண்டியை நிறுத்திவிட்டு இறங்க மாட்டார்களா? சேவியரை காப்பாற்ற ஒரு தருணம் கிடைக்காதா என்ற எதிர்பார்ப்பில் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் அவன் அந்த சுமோவைத் தொடர்ந்தபடியே இருந்தான்.

வண்டி சென்னையின் எல்லையைக் கடந்தது...

செம்பருதியைப் பற்றி அல்லது அவரது மாணவப் பருவம் பற்றி நேரடியாகவோ, தொலைபேசி, இமெயில் மூலமாகவோ யாராவது விசாரித்தால் உடனே தனக்கு தகவல் கொடுக்கும்படி ஒரு போலீஸ் அதிகாரி மூலம் அந்த மாவட்டத்தில் இருக்கும் கல்வி அலுவலகங்களுக்கு இரகசிய தகவல் அனுப்பப்பட்டிருந்தது. தான் எதிரிக்கு வைத்த கண்ணி என இளங்கோ தனஞ்செயனிடம் சொன்னது இதைத்தான். சேவியர் வந்து கேட்டது கோப்பெருஞ்சோழனுடைய மாணவப் பருவம் குறித்துத்தான் ஆனாலும் கடமை(!) தவறாத அந்தக் கல்வி அதிகாரி அதையும் போட்டுக்கொடுக்கவே துரதிஷ்டவசமாக சேவியர் சிக்க வேண்டியதாயிற்று.

அந்த நேரத்தில் நெடுஞ்சாலையில் வாகனங்கள் குறைவாக இருந்ததால் சுமோவில் இருந்தவர்களுக்கு தன்மீது சந்தேகம் வராதபடி திருநாவுக்கரசு வெகுதூரம் பின்தங்கியே அவர்களைத் தொடர்ந்து கொண்டிருந்தான். ஆனால் சுமோவில் ஒவ்வொருவர் பேசுவதும் bluetooth headset வழியாக அவனுக்குத் தெளிவாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

செந்தேற்பாக்கம் வரும்படி இளங்கோவிடமிருந்து வந்த கட்டளை, சுமோவிலிருந்தவர்கள் படகுக்காரர்களை செந்தேற்பாக்கத்துக்கு அழைத்தது ஆகிய அனைத்தையும் திரு கேட்டபடியே அவர்களைத் தொடர்ந்து கொண்டிருந்தான். சுமோ தேசியநெடுஞ்சாலையை விட்டு குண்டும் குழியுமான ஒரு பழைய சாலையில் பயணிக்கத் துவங்கியது. திருநாவுக்கரசு முன்னைவிட இன்னும் ஜாக்கிரதையாக, சுமோவின் மிர்ரரில் தான் சிக்கிவிடாதபடி மிக எச்சரிக்கையாக முன்னேறினான்.

சிறிதுநேரப் பயணத்துக்குப் பின்னர் கடற்கரையையொட்டி முட்புதற்கள் அடர்ந்த ஒரு இடத்தில் சுமோ நின்றது. சற்று தொலைவில் ஒரு புதருக்குள் வண்டியை சாய்த்துவிட்டு மறைந்து மறைந்து முன்னேறிய திருநாவுக்கரசு, நடப்பவைகளைப் பார்க்கும் தொலைவில் ஒரு புதருக்குள் மறைந்து கொண்டான். அந்த நேரத்தில் அடியாட்கள் காட்டுத்தனமாக சேவியரைத் தாக்கத் தொடங்கியிருந்தார்கள். சேவியரின் ஒவ்வொரு அலறலும் திருவின் உயிரை உலுக்கியது.

அவனை அடித்துப் போட்டுவிட்டு அவனருகே இரண்டுபேரை நிறுத்துவிட்டு மற்றவர்கள் ஒரு மரத்தடியே நின்று தம்மடித்துக் கொண்டிருந்தார்கள். சேவியர் ஈனஸ்வரத்தில் முணகிக்கொண்டிருந்தான். அந்த சத்தத்தைக் கேட்டு திரு புதருக்குள் அமர்ந்தபடியே தேம்பித்தேம்பி அழுதுகொண்டிருந்தான்.

கொஞ்ச நேரத்தில் அங்கு ஒரு கார் வந்து நின்றது. திரு நினைத்தபடியே அதிலிருந்து இளங்கோ இறங்கினான். அந்த நேரத்தில் திருவின் சாக்ஸுக்குள் ஏதோ முணுமுணுவென உணர குனிந்து பார்ப்பதற்குள் ஒரு மரணவலியை உணர்ந்தான்... பதறியடித்து கால்களை உதற ஒரு பெரிய செந்தேள் வந்து விழுந்தது. வலியில் கொஞ்சம் சத்தம் போட்டாலும் கொலைகாரக் கும்பலிடம் சிக்கிக் கொள்ள வேண்டியதிருக்கும்... வலியைப் பொறுத்துக்கொண்டு, தேளை மிதித்துக் கொன்றுவிட்டு நிமிர்ந்து பார்க்க, அதற்குள் சேவியர் முதுகில் பெரிய கத்தியைத் தாங்கி இளங்கோவின் காலடியில் சரிந்து கிடந்தான்.

திருவுக்கு தலைசுற்ற அந்த இடத்திலேயே உட்காந்தான்…கால்களில் கொடூர வலி எடுத்துக் கொண்டிருந்தது…அடுத்து கொஞ்ச நேரம் நடந்தவைகள் எதுவும் அவனுக்கு உணர்வில்லை. மீண்டும் சிறிது நேரம் கழித்து உணர்வு வந்தவன் எட்டிப்பார்க்க யாரும் இல்லை…அவர்கள் வந்த சுமோ கிளம்பிச் சென்றிருந்தது… சேவியர் இறந்திருந்தாலும் அவன் பாக்கெட்டில் இருந்த மினி மொபைல் இன்னும் உயிர்ப்புடன்தான் இருந்தது. திருநாவுக்கரசு புதரை விட்டு வெளியே வந்தான் தேள்கடி வாங்கிய அந்தக் கால் உணர்வற்று இருந்ததை அவன் உணர்ந்தான். தூரத்தில் கடலில் ஒரு படகு சென்று கொண்டிருந்தது.

தனது காதுகளில் headset வழியாக கேட்ட ஒலியைக் கொண்டு அந்தப் படகில்தான் சேவியரது உடலை எடுத்துச் செல்லுகிறார்கள் என்பதை திரு உணர்ந்து கொண்டான். சில நிமிடங்களில் இரு நபர்கள் பேசிக்கொள்வது சிக்னல் குறைந்துவிட்டதால் அவன் காதுகளில் பலவீனமாகக் கேட்டது.

“சின்ன வயசுதாம்ப்பா இருக்கும்…இல்ல?”

“இவனுககிட்ட என்ன ஏழரைய இஸ்த்தானோ...அந்த கல்ல எடுத்து பாடில கட்டுடா...பக்கெட்டில ஏதா கீதா செக்பண்ணு…

“டேய், அதென்னடா பாட்டுக் கேக்குற மிஷின் மாரி கீது பாரு”

“டேய்! இது செல்போன்ரா.. தம்மா துண்டா கீது…”

“டேய்.. யாருக்கோ கால் போய்ணு இருக்குடா..

“அலோ, அலோ”

அரண்டு போய்…சட்டென தொடர்பை துண்டித்த திருநாவுக்கரசு, சிம்கார்டை எடுத்து வாயில் போட்டு கடித்து துப்பிவிட்டு, கால்களை நொண்டியபடியே பைக்கை நிறுத்திய புதரைத் தேடிச்சென்றான்..

பைக்கை எடுத்துக்கொண்டு வேகமாக கிளம்பியவன், அருகே இருந்த டவுனில் ஒரு மருத்துவமனையில் தேள்கடிக்கு ஊசி போட்டுவிட்டு இரவோடு இரவாக சென்னை விரைந்தான். அவன் மனம் இளங்கோ மீது கொலைவெறியில் கொதித்துக் கொண்டிருந்தது.

சம்பவம் நடந்து ஓரிரு நாட்கள் கடந்தும் திருநாவுக்கரசு வீட்டுக்குப் போகவில்லை. பாண்டிச்சேரி போனான், துக்கத்தை மறக்க நிறைய குடித்தான். ஆத்திரம் தீர இளங்கோவையும் கோப்பெருஞ்சோழனையும் திட்டினான். அதற்கு மேல் என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்த நேரத்தில் ஸ்கூலில் படித்துக் கொண்டிருக்கும் சேவியரின் கடைசி தங்கை திருவுக்கு கால் செய்தாள். “திரு அண்ணா, எங்கண்ணன் மூணு நாளா வீட்டுக்கு வரலண்ணா, அவங்க போனும் ஸ்விட்ச் ஆஃப்லயே இருக்கு. எங்க போனாங்கன்னு தெரியல.. அம்மாவுக்கு வேற உடம்புக்கு முடியல.. உங்களுக்கு எதுவும் தெரியுமா?

திரு, “இல்லம்மா நான் ஒரு வேலை விஷயமா பாண்டிச்சேரி வந்திருக்கேன்.. நானே அவன்கிட்ட பேசி நாலு நாளாச்சு என்றான்”

“சரிங்கண்ணா, எங்களுக்கு ரொம்ப பயமா இருக்குண்ணா, உங்க ப்ரண்ட்ஸ் கிட்ட அண்ணனைப் பத்தி விசாரிச்சுப் பாருங்கண்ணா”, மறுமுனை கட் ஆனது

திருநாவுக்கரசு தலையில் அடித்துக் கொண்டு அழுதான்…என்ன செய்வதென்று தெரியாமல் கோபத்தில் லேப்டாப்பை எடுத்து அந்த அக்கவுண்ட்டுக்குப் போய் திரும்ப மூன்று முறைகள் தப்பான பாஸ்வேர்ட் போட சிஸ்டம் அக்கவுண்ட்டை பிளாக் செய்து வைத்தது.

திரு முகத்தில் ஆத்திரம் கொப்பளிக்க "..த்தா இந்தப் பணத்துக்காகத்தானடா அந்த உயிர துடிக்கத் துடிக்க கொன்னீங்க? இந்த அக்கவுண்ட்டுக்குள்ள உங்களைப் போகவே விடமாட்டேண்டா… இன்னும் எவனோ ஒரு கண்ணுக்குத் தெரியாத எதிரி இருக்காங்கிற குழப்பத்துலேயே கிடந்து சாவுங்கடா… தே***** பசங்களா! "

இளங்கோ கோப்பெருஞ்சோழன் முன்னிலையில் இரண்டாம் கேள்விக்கு தான் கண்டுபிடித்த 'ரஜனி' என்ற கடவுச்சொல்லைப் போட முயன்ற போது சிஸ்டம் பிளாக் ஆகியிருந்தது இப்படித்தான்…

*********** *********** ***********

அத்தியாயம்: 35

இதயத்தை பிளந்த துரோகம்

கோவாவில் உமாவின் அலுவலகத்தின் கேண்ட்டீனில் வைத்து திருநாவுக்கரசு தனக்கு நடந்ததை உமாவிடம் விளக்கிக் கொண்டிருந்தான். “நான் கூட அந்த தேள் கடிச்சத ஆரம்பத்துல சீரியஸா எடுத்துக்கல, சும்மா ஒரு ஊசி மட்டும் போட்டுட்டு விட்டுட்டேன்… இப்ப அடிக்கடி திடீர்னு மயக்கம் வருது உமா”

உமா அழுதாள், “என்னடா இப்படி பண்ணிட்டு வந்து நிக்கிற..இன்னிக்கே ஹாஸ்பிட்டல்லுக்கு போயி உன் உடம்பை செக் பண்ணணும்…சரி அம்மா திருப்பதில இருந்து எப்ப வர்றாங்க?”

திரு, “அவங்க இன்னிக்கு சென்னைக்கு திரும்ப வேண்டியது… நான் போன் பண்ணி, பெங்களூர்ல இருக்க சித்தப்பா வீட்டுக்குப் போயி நான் சொல்ற வரைக்கும் அங்கேயே தங்கியிரு, சென்னைக்கு போகாதேன்னு சொல்லிட்டேன். காரணத்தை சொல்லல, வழக்கம்போல திட்டுச்சு… வேற ஒண்ணும் பிரச்சனை இல்ல”

உமா அழுகையை நிறுத்தி கண்களைத் துடைத்துக்கொண்டே, “உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? நீ நினைக்கிற மாதிரி அது கோப்பெருஞ்சோழனுடைய அக்கவுண்ட் இல்ல, செம்பருதி அங்கிளோட அக்கவுண்ட்… அதுல நூறு கோடியெல்லாம் இல்ல, பல ஆயிரம்கோடி இருக்கு”

உமா சொல்லியதைக் கேட்டு திரு ஷாக் ஆனான், “என்ன உமா சொல்ற?”

உமா தொடர்ந்தாள், “ஆனா அந்த டாக்குமெண்ட் எப்படி இளங்கோ குரூப் கையில் கிடைச்சுச்சுன்னுதான் எனக்கு குழப்பமா இருக்குடா, என்ன நடக்குமோன்னு பயமா இருக்கு”

திருநாவுக்கரசு அதைக் காதில் வாங்காமல், “கடைசியில அது செம்பருதி அக்கவுண்டா உமா?” என்றபடி பைத்தியக்காரன் போல சத்தம் போட்டு சிரித்தான்…உமா அதட்டினாள், “டேய் ஏன் லூசு மாதிரி சிரிக்கிற…எல்லாரும் பார்க்குறாங்க..” அந்த துக்கத்திலும் அவன் திடீரென இப்படி நடந்து கொண்டது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

திருநாவுக்கரசு, “இல்ல உமா என் தங்கச்சி சொத்தையே நான் கொள்ளையடிக்கப் பார்த்திருக்கேன், அத நினைச்சு சிரிச்சேன்”

உமா, “என்னது தங்கச்சி சொத்தா? வெளுத்திருவேன்… அந்தப் பணத்தை கைப்பத்தி பிரதமரோட நதிநீர் இணைப்பு ஃபண்டுல சேர்க்குறதுக்குத்தான் நானு, அர்ஜூன், கல்யாணி ஆண்ட்டி எல்லாம் சேர்ந்து ட்ரைப் பண்ணிக்கிட்டு இருக்கோம்.. ரெண்டு கேள்விக்கு பதில் கண்டுபிடிச்சிட்டோம்… இன்னும் ஒரே கேள்விதான் இருக்கு…

டென்ஷனான திரு, “என்னாது நதிநீர் இணைப்பு ஃபண்டுலயா? ஏண்டி…உன்னை மருமகளா choose பண்ணும்போதே நெனச்சேன் அது கண்டிப்பா லூசு குடும்பமாத்தான் இருக்கணும்னு…அது சரி, செம்பருதி அக்கவுண்ட்டுங்கிற, கல்யாணி ஆண்ட்டிக்கே அதோட பாஸ்வேர்ட்லாம் தெரியாதா?”

உமா, “இல்லடா ஆண்ட்டி ரொம்ப நேர்மையானவங்க, அந்த பாஸ்வேர்ட் செம்பருதி அங்கிளுக்கும் அவங்க மகனுக்கும் மட்டும்தான் தெரிஞ்சுருக்கு, முதல் ரெண்டு கேள்விக்கு நானும் அர்ஜுனும் ரொம்ப கஷ்டப்பட்டுத்தான் ஆன்ஸர் கண்டுபிடிச்சோம்”.

திரு சீரியஸாக முகத்தை வைத்துக்கொண்டு, “சரி உமா, அதுல இருக்க ஆயிரம் கோடிகூட நதிநீர் ஃபண்டுக்கு போகட்டும், ஒரே ஒரு 5 கோடி மட்டும் எடுத்து எனக்கு குடுத்துருடி… சேவியர் இதுக்காக கொடூரமா உயிரைக் கொடுத்திருக்கான். அவனோட மூணு தங்கச்சிகளை படிக்க வச்சு கரையேத்தணும், அவங்கப்பா உயிரோட இல்ல, அம்மா ஒரு நோயாளி…ப்ளீஸ் உமா…எனக்குக்கூட இதுல ஒரு சல்லிக்காசு வேணாம்… அவங்கம்மாவும் செத்துட்டா அந்த மூணு பொம்பளைப் பிள்ளைங்க கதியை நினைச்சுப் பாரு…கொஞ்சம் மனசு வை…அந்தப் பொண்ணுங்களோட அண்ணனா நான் உன் கால்ல கூட விழுகிறேன்” திரு அவள் காலைப் பிடிக்கப்போக…

உமா பதறியடித்து, “டேய் என்ன காரியம்டா பண்ற? சரி நான் என்ன செய்யணும் சொல்லு”

திருநாவுக்கரசு, “நீங்க கண்டுபிடிச்ச அந்த ரெண்டு பாஸ்வேர்டையும் குடு உமா, மூணாவது பாஸ்வேர்டை முயற்சி பண்ணிப் பார்ப்போம், ஓப்பன் ஆகிடுச்சுன்னா வெறும் 5 கோடியை மட்டும் எடுத்துட்டு பேங்க்கோட transaction history-ஐ டெலீட் பண்ணிருவோம், இருக்கிற ஆயிரம் கோடில ஒரு 5 கோடி போனது யாருக்கும் தெரியாது. கடல்ல இருந்து ஒரு பக்கெட் தண்ணிய எடுத்த மாதிரிதான் இது…

உமா யோசித்தாள், “சரி அந்தப் பணத்தை அக்கவுண்ட்டுக்கு transfer பண்ணுவ?

திருநாவுக்கரசு, “நீ போனவருஷம் ஒரு ப்ராஜக்ட் விஷயமா UK-க்கு போயி அங்க ஒரு 6 மாசம் இருந்தேல, அங்க உனக்கு ஒரு அக்கவுண்ட் ஓப்பன் பண்ணேல, அது இன்னும் ஆக்ட்டிவ்வா இருக்கா?”

உமா, “ஆமா இருக்கு, அந்த விசா எனக்கு இன்னும் முடியலைல”

திரு, “ம்ம்ம்…அப்ப அந்த அக்கவுண்ட்டுக்கு பண்ணிரலாம்”

உமா தலையசைத்தாள், “சரி சீக்கிரம் உன் லேப்டாப்பை எடு… இங்க பாரு, நீ என்ன காரணம் சொன்னாலும் நீயும் சேவியரும் சேர்ந்து இந்தப் பணத்தை கொள்ளையடிக்க முயற்சி பண்ணது மகா பெரிய தப்பு. இந்த உதவியை நான் உனக்காகவோ சேவியருக்காகவோ பண்ணல, அந்த சேவியர் குடும்பத்துக்காகப் பண்றேன்”

திரு தனது மடிக்கணினியை திறக்க உமா முதல் இரண்டு கேள்விகளுக்கான கடவுச்சொற்களையும் அவனிடம் சொன்னாள்…

முதல் கேள்விக்கான பதில் ‘இராமமூர்த்தி’ என்று அறிந்தபோது திருநாவுக்கரசு நொந்து போனான், “ச்சே இந்த பதிலைத்தான் உமா, சேவியர் அன்னிக்கு சொன்னான். அது தப்புண்ணு நான் மாத்தி, சரியாப் போட்டதால எல்லாமே தப்பாகிடுச்சு…”

இரண்டு கேள்விகளுக்கான பதிலையும் ஏற்றுக்கொண்டு சிஸ்டம் மூன்றாவது கேள்வியில் வந்து நின்றது.

மூன்றாவது கேள்வி...

Who is my mom's favourite poet?

திருநாவுக்கரசு "இந்த மூணாவது கேள்விக்கு பதில் என்ன உமா?"

உமா, "அதுதான் இன்னும் தெரியல..."

அந்த நேரத்தில் அர்ஜுனிடமிருந்து உமாவுக்கு செல்பேசி அழைப்பு வந்தது. "உமா எங்க இருக்க? நான் உங்க ஆபீஸ்க்குத்தான் வந்துக்கிட்டு இருக்கேன்..ஒரு முக்கியமான விஷயம் பேசணும்..."

உமா "சரி நேரா கேண்ட்டீனுக்கு வந்திரு..." என்று சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தாள்.

அர்ஜுன் வருவதாகத் தெரிந்ததும் பரபரப்பானான் திரு, "உமா, அர்ஜுன்-இளங்கோ ரெண்டுபேரும் ஒருத்தனுக்கொருத்தன் தெரிஞ்சவனுகதான். விஷயம் தெரியாம நான் இங்க இருக்கிற விஷயத்தை அர்ஜுன் இளங்கோகிட்ட உளறி வைக்க வாய்ப்பிருக்கு... அவன் என்னைப் பார்க்க வேண்டாம், நான் கிளம்புறேன், எனக்கு சில பிரபலமான கவிஞர்கள் பேரையும் உன் UK அக்கவுண்ட் நம்பரையும் என் இன்னொரு நம்பருக்கு SMS அனுப்பு (அவனது அம்மாவின் பெயரில் இருந்த சிம்கார்டையும் திருநாவுக்கரசே பயன்படுத்தி வந்தான். அதைத்தான் தனது இன்னொரு நம்பர் என்று உமாவிடம் சொன்னான்) ... நான் ரூம்ல போயி ட்ரை பண்ணிப் பார்க்குறேன்."

சரியென்று தலையாட்டிய உமா, "டேய் மூணு தடவை தப்பா பாஸ்வேர்டை குடுத்துறாத. இந்தவாட்டி பிளாக் ஆனா அவ்வளோதான். இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு. அதுக்குள்ள நாம அக்கவுண்ட்டுக்குள்ள போகலைன்னா யாருக்குமே இந்தப் பணம் கிடைக்காம போயிடும்"

திருநாவுக்கரசு, "ஓகே உமா, எனக்கு ஏற்கனவே பட்ட அனுபவம் இருக்கு கவலைப்படாதே", என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியேறினான்.

அவன் வெளியேறி, அர்ஜுன் வந்து சேருவதற்குள் கிடைத்த நேரத்தில் உமா அவனுக்கு முதல் இரண்டு கேள்விகளுக்கான பதிலையும், சில தமிழ் கவிஞர்களுடைய பெயரையும் அவனுக்குக் குறுஞ்செய்தி அனுப்பியிருந்தாள்.

திருநாவுக்கரசு உமாவின் அலுவலகத்தில் இருந்து வெளியேறுவதை சற்று தூரத்தில் டாக்ஸியில் வந்த அர்ஜுன் கவனித்து விட்டான். நேராக கேண்ட்டீன் சென்றவன் உமாவின் எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்தான். டேபிளில் இரண்டு ஜூஸ் குடித்த கோப்பைகள் இருந்தன.

உமா, "என்ன சார் திடீர் விஜயம், அப்படி என்ன தல போற விஷயம்?"

அர்ஜுன், அது இருக்கட்டும்...என்ன ரெண்டு கிளாஸ் இருக்கு, யாருகூடவும் பேசிக்கிட்டு இருந்தியா, நான் வந்து டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?"

உமா, சேச்சே..அதெல்லாம் இல்லடா. என்னோட ஃப்ரண்டு நேகா இருந்தா, நீ வர்றதா தெரிஞ்சதும் இப்பத்தான் போனா.. நீ என்ன விஷயம்னு சொல்லு, நான் வந்தும் ரொம்ப நேரமாச்சு சீக்கிரம் போகணும்"

அர்ஜுனுக்கு சற்று அதிர்ச்சியாக இருந்தது, “உமா ஏன் தன்னோட அண்ணன் திருநாவுக்கரசு வந்துட்டுப் போன விஷயத்தை எங்கிட்ட மறைக்கிறா”, மனதிற்குள் குழம்பினான். மேலும் அவள் முகத்தில் எப்போதும் இருக்கும் வெள்ளேந்தித்தனம் அன்று மிஸ் ஆகியிருப்பதை அவன் கவனிக்கத் தவறவில்லை.

உமா, “என்னடா இன்னிக்கு ரொம்ப restless-ஆ இருக்க, ஒரு எக்ஸ்பிரஸ்ஸோ ஆர்டர் குடுக்கட்டுமா? உனக்கு ரொம்ப பிடிக்குமே!

அர்ஜுன் தலையாட்ட உமா எழுந்து கேண்ட்டீன் கவுண்ட்டரை நோக்கி செல்ல, அந்த நேரத்தில் வைப்ரேட்டர் மோடில் இருந்த உமாவின் மொபைலுக்கு வந்த ஒரு குறுஞ்செய்தியால் டேபிள் அதிர்ந்தது. அர்ஜுன் லேசாக மொபைலை எட்டிப்பார்த்தான் அதில் திருநாவுக்கரசு ““received, send your UK bank account details without fail” என்று செய்தி அனுப்பியிருந்தான்.

“திருநாவுக்கரசு எதை ‘received’ என்கிறான், உமா அவனுக்கு என்ன அனுப்பியிருந்தாள்” என்பதை அறிந்துகொள்ள அர்ஜுனின் துப்பறியும் மூளை அவனைத் தூண்டியது. உமா கவுண்ட்டரில் பிசியாக இருப்பதை உறுதி செய்துகொண்டு அந்த செய்தியை விரலால் தீண்ட அது அந்த SMS Thread-ஐத் திறந்து காட்டியது.

உமா திருநாவுக்கரசுக்கு அனுப்பியிருந்த செய்தி…

1. ramamurthy
2. nisha

bharathiyar
bharathisasan
kannadasan
kambar
manickavasakar
sekkizhar

அர்ஜுனின் இதயத்தில் ஆயிரம் இடிகள் இறங்கியது போல இருந்தது…

“அடி துரோகி…” அவன் மனம் அலறியது…

உமா வருவதற்குள் அவளது மொபைலில் ஸ்கிரீனை ஆஃப் செய்துவிட்டு எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக உட்கார்ந்தான்.

உமா காஃபி எக்ஸ்பிரஸ்ஸோவைக் கொண்டு வந்து அவனிடம் நீட்டி, “யுவர் ஃபேவரைட்…குடி எல்லா டென்ஷனும் பறந்துடும்” என்றாள் கேஷுவலாக.

அர்ஜுன் அவள் கண்களை ஊடுருவி பார்த்தபடி காஃபியை வாங்கி ஒரு சிப் குடித்துவிட்டு டேபிளில் வைத்தான்…

டேபிள் மீண்டும் அதிர்ந்தது, இந்த முறை கால்…

உமா செல்பேசியை எடுத்து “ஹலோ” என்று சொல்ல, மறுமுனையில் இருந்த குரல் பேசியதைக் கேட்ட அவள் முகம் மாறியது…

பதற்றத்துடன் “konsa hospitalme admit kiya?” என்று கேட்டவள், மறுமுனையில் இருந்த குரல் மருத்துவமனையின் பெயரைச் சொன்னதும் “bahut shukriya" என்று சொல்லி கட் செய்தாள்.

அர்ஜூன், “என்ன உமா யாருக்கு, என்ன ஆச்சு?

உமா முகத்தில் பதட்டத்துடன் குற்ற உணர்வும் சேர்ந்து கொண்டது…”இல்ல அர்ஜூன், என் அண்ணன் திருநாவுக்கரசு வந்திருந்தான். ஆட்டோ பிடிச்சு அவன் தங்கியிருந்த ரூமுக்கு போற வழியில திடீர்னு ஆட்டோவுக்குள்ளயே மயக்கம் போட்டு விழுந்துட்டானாம். அந்த டிரைவர் அவனை கொண்டு போய் மணிப்பால் ஹாஸ்பிட்டல்ல சேர்த்துட்டு அவன் மொபைல்ல இருந்து எனக்கு கால் பண்ணாரு”

அர்ஜூன், “ஐயய்யோ…சரி உடனே கிளம்பு”

உமா, “சாரி அர்ஜூன், அவன் ஒரு சின்ன லோக்கல் பிரச்சனையில சிக்கி எஸ்கேப் ஆகி இங்க வந்திருந்தான். அதான் உங்கிட்ட சொல்லல…”

அர்ஜூன், “அதெல்லாம் பரவாயில்ல உமா, மொதல்ல கிளம்பு, ஹாஸ்பிட்டலுக்கு போகலாம்”

*********** *********** ***********

அத்தியாயம்: 36

கடைசி கேள்வி, கடைசி நிமிடங்கள்…

அர்ஜுனும் உமாவும் ஒரு டாக்ஸி பிடித்து மணிப்பால் மருத்துவமனைக்கு விரைந்தார்கள். “உமாவா இப்படி!” என்ற கேள்வி அர்ஜுனின் மனதைக் குத்தி இரணமாக்கிக் கொண்டிருந்தது. இதுவரை அக்கவுண்ட் இரண்டு முறை பிளாக் ஆக திருநாவுக்கரசுதான் காரணம் என்று அவன் புரிந்து கொண்டான். டாக்ஸியில் பக்கத்தில் அமர்ந்திருந்த உமாவின் முகத்தைத் திரும்பிப் பார்க்கக்கூட அவனுக்கு அருவருப்பாயிருந்தது. இன்னொரு பக்கம் கல்யாணி அத்தையின் சமீபத்திய மாற்றம் அவனுக்கு ஒரு பெரும் குழப்பத்தையும் உண்டாக்கி இருந்தது.

மருத்துவமனையை அடைந்தவர்கள் திருநாவுக்கரசு சேர்க்கப்பட்டிருந்த அறையை விசாரித்து கண்டுபிடித்து உள்ளே நுழைந்தார்கள். அப்போது சுயநினைவுக்கு வந்து ஓரளவு தெளிவுடன் திருநாவுக்கரசு படுக்கையில் அமர்ந்திருந்தான். அர்ஜுனைப் பார்த்ததும் அவனுக்கு பகீரென்றிருந்தது.

அர்ஜுன் அவனருகே வந்து அவன் தோளைத் தொட்டு “இப்ப எப்படி இருக்கு?” என்றான்.

திருநாவுக்கரசு, “இப்பக் கொஞ்சம் தேவல, நல்லா இருக்கு” என்றான்.

அந்த நேரத்தில் ஒரு நர்ஸ் வந்து உமாவிடம், “பேஷண்ட்டுக்கு இந்த மருந்துகளையெல்லாம் வாங்கிட்டு வரணும்” என்று சொல்லி ஒரு சீட்டை நீட்ட, அதை நர்ஸ் கையிலிருந்து பறித்த அர்ஜுன் “நான் போயி வாங்கிட்டு வர்றேன்” என்று சொல்லி கிளம்பினான். வெளிப்பார்வைக்கு தன்னை எப்போதும்போல காட்டிக்கொண்டாலும் உமாவையும் திருவையும் அடுத்து எப்படி ஹேண்டில் செய்வது என்பது பற்றி உள்ளூர தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தான்.

திருநாவுக்கரசு உமாவிடம், “என்ன உமா அர்ஜுன்கிட்ட என்ன சொன்ன?”

உமா, “நீ நம்ம ஏரியாவுக்குள்ள நடந்த ஒரு பிரச்சனையில சிக்கி இங்க எஸ்கேப் ஆகி வந்திருக்கன்னு சொல்லிருக்கேன். ஒண்ணும் பிரச்சனை இல்ல… எதுக்கும் கவலைப்படாத”.

மருந்துகளை வாங்கி வந்த அர்ஜுன் உமாவின் அருகே இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து, “என்ன திரு, என்ன பிரச்சனை சொல்லுங்க… ஆளுங்கட்சி குடும்பத்துல இருந்துக்கிட்டு லோக்கல் பிரச்சனைக்கெல்லாம் பயந்து கோவாவுக்கு ஓடி வந்திருக்கீங்க. (மொபைலை கையில் வைத்து நோண்டியபடி) ஏதாச்சும் சீரியஸான பிரச்சனைன்னா சொல்லுங்க…இளங்கோவுக்கு ஒரு கால் போட்றேன் அப்புறம் எல்லாம் அவர் பாத்துக்குவாரு”

இளங்கோ பெயரைக் கேட்டதும் ஆடிப்போன திரு, “ஐய்யோ அதெல்லாம் ஒண்ணும் வேணாங்க, கொஞ்ச நாளைக்கு நான் தங்க ஒரு பாதுகாப்பான இடம் வேணும் அவ்வளவுதான்.”

அர்ஜுன், “அவ்வளவுதானே! விடுங்க… நீங்க டிஸ்சார்ஜ் ஆனவுடனே நான் உங்களை அனுப்பப்போற இடத்துக்கு ஒரு ஈ, காக்காகூட வரமுடியாது”.

அர்ஜுன் திருநாவுக்கரசை என்ன செய்யப்போகிறான் என்பதை அறிந்து கொள்ள திரு டிஸ்சார்ஜ் ஆகும் வரை கொஞ்சம் பொறுத்திருப்போம். இதற்கிடையே சென்னையில் இளங்கோ என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதை பார்ப்போமா?

திருநாவுக்கரசு குறித்த அத்தனை தகவல்களும் ஏற்கனவே இளங்கோவிடம் வந்து சேர்ந்திருந்தது. திரு உமாவின் அண்ணன், உமா அர்ஜுனின் காதலி என்பதை அறிந்த இளங்கோ அவர்கள் தற்சமயம் கோவாவில் இருப்பதையும் தெரிந்து கொண்டான். திருநாவுக்கரசு அர்ஜுனின் பாதுகாப்பை நாடி கோவா சென்றிருக்கக்கூடும் என்பதை யூகித்த அவன் திருவைப் பிடிக்க அன்றுதான் ஒரு கும்பலை கோவாவுக்கு விமானத்தில் அனுப்பியிருந்தான்.

இளங்கோ கஷ்டப்பட்டு கண்டுபிடித்த 'ரஜனி' என்ற பெயர் தவறான பதில் என்று சிஸ்டம் புறக்கணித்திருந்தது. அதுமட்டுமன்றி இன்னும் 7 நாட்களுக்குள் நீங்கள் புதிய கேள்விகளை மாற்ற வேண்டும் என்ற warning message-ம் அன்றிலிருந்து அந்தப் பக்கத்தில் மின்னத் தொடங்கியிருந்தது. அதைப் பார்த்ததும் இளங்கோ நிம்மதி இழந்தான்.

தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த இளங்கோவுக்கு மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது. "அந்த இருள் என்னும் பெயருடைய பெண்ணை ஏன் செம்பருதியுடன் மட்டும் தொடர்புபடுத்தி ஆராய வேண்டும்? ஒருவேளை அந்தக் கேள்விகளை தனா வடிவமைத்திருந்தால்? ஆனால் தனா வடிவமைத்திருந்தால் முதல் கேள்வி செம்பருதியின் ஆசிரியரை எப்படி குறித்திருக்க முடியும்? ஒரே குழப்பமா இருக்கே!".

தனாவிடம் கைப்பற்றிய ஹார்ட் டிஸ்கை அவன் எடுத்துப் பார்த்தான். அதை ஒரு லேப்டாப்பில் மீண்டும் பொருத்தினான். அதன் லாகின் பாஸ்வேர்டுகளை தனஞ்செயன் ஏற்கனவே நீக்கியிருந்ததால் இளங்கோவால் எந்த சிக்கலுமின்றி நேராக உள்ளே நுழைய முடிந்தது. அவன் பெர்சனல் என்ற போல்டருக்குள் போனான். அந்த போல்டர் முழுவதும் தனா ஒரு சீனப்பெண்ணுடன் எடுத்திருந்த போட்டோக்கள் இருந்தது. அந்த புகைப்படங்களுக்கு தனசேகரன் வைத்திருந்த பெயர்

"nisha_001", "nisha_002", "nisha_003"…

இளங்கோ கூகுளிடம் நிஷா என்ற பேருக்கு அர்த்தம் என்னவென்று வினவ அது அவனுக்கு "இருள், இரவு" என்று பதிலளித்திருந்தது. இளங்கோவை ஒருவித பரபரப்பு தொற்றிக்கொண்டது.. அக்கவுண்ட்டுக்குச் சென்று இரண்டாம் கேள்விக்கு nisha என்று பதிலளிக்கவே அது சரியான பதில் என்று ஏற்றுக்கொண்டு மூன்றாம் கேள்வியில் போய் நின்றது.

மூன்றாவது கேள்வி…

Who is my mom's favourite poet?

***********   ***********   ***********

அத்தியாயம்: 37

மிருகவதம் நிகழ்ந்ததன் பின்னணி

சேவியரைக் காணவில்லை என்று அவன் தாயார் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அவனது உற்ற நண்பனான திருநாவுக்கரசு அந்த நேரத்தில் தலைமறைவாக இருந்தபடியால் போலீசுக்கு அவன் மீது சந்தேகம் எழுந்தது. அவனுக்கு வலைவீசத் தொடங்கியிருந்தார்கள்.

கோவா விமான நிலையத்துக்கு அர்ஜுன், உமா, திருநாவுக்கரசு ஆகிய மூவரும் வந்திருந்தனர். அர்ஜுன் திருநாவுக்கரசை மிசோரம் மாநிலத்தின் Aizawl நகருக்கு அனுப்பப் போவதாகவும், அங்கு அவனுக்கு நம்பகமான குடும்பம் ஒன்று இருப்பதாகவும் அவர்கள் திருவைப் பத்திரமாக பார்த்துக்கொள்வார்கள் என்றும் சொல்லியிருந்தான். Goa to Aizawl செல்லும் விமானம் தயாராக இருப்பதாக அறிவிப்பு வரவே திருநாவுக்கரசு கிளம்பிப்போனான். உமா அவனைக் கண்ணீருடன் வழியனுப்பி வைத்தாள். இளங்கோவின் ஆட்கள் நடப்பவற்றை விமான நிலையத்தில் உலவியபடி கண்காணித்துக் கொண்டு இருந்தனர். அர்ஜுனுடன் இருக்கும்போது திருநாவுக்கரசின்மீது கை வைக்க வேண்டாம் என்று இளங்கோ அவர்களிடம் சொல்லியிருந்தான்.

திரு போய் ஒரு மணி நேரத்தில் சென்னை விமானம் புறப்படத் தயாராகவே அர்ஜுனும் கிளம்ப, உமா அவனை வழியனுப்பிவிட்டு தனியாக விமான நிலையத்தைவிட்டு வெளியேறினாள். திருநாவுக்கரசு தப்பிச் சென்றதை தனது அடியாட்கள் மூலம் கேள்விப்பட்ட இளங்கோ ஏமாற்றமும் கோபமும் அடைந்தான்.

சென்னை திரும்பிய அர்ஜுன் நேரடியாக கல்யாணி அம்மாள் வீட்டுக்குச் சென்றான். அவன் வந்திருப்பதை அறிந்த கல்யாணி அம்மாள் அவனை காத்திருக்கச் சொல்லிவிட்டு அரை மணி நேரம் கழித்து அவரது அறையிலிருந்து கீழே இறங்கி வந்தார்.

அர்ஜுன், “எப்படிங்கத்த இருக்கீங்க?”

கல்யாணி அம்மாள் விரக்தியாக அவனது முகத்தைப் பார்க்காமல், “ம்ம்ம்…இருக்கேன்”

அர்ஜுன், “என்ன ஆச்சு அத்தை உங்களுக்கு, பழைய கல்யாணி அத்தையா இன்னைக்கு உங்களைப் பார்க்க முடியலையே… ஏன் நான் ஏதாவது தப்பு பண்ணிட்டேனா… எதுவா இருந்தாலும் தயவுசெஞ்சு மறைக்காம சொல்லுங்க அத்தை”

கல்யாணி அம்மாள் அழுதபடி, “நீ எந்தத் தப்பும் பண்ணலப்பா, எல்லாத் தப்பும் பண்ணது நான்தான்… சுத்தியிருந்த எல்லாரையும் நம்புனேன்ல. நான்தானே அந்த அக்கவுண்ட்ல இருக்கிற பணத்தை மக்கள்கிட்ட சேர்க்கிற வேலையை உனக்குக் கொடுத்தேன், இப்ப நானே சொல்றேன் அந்த வேலையை விட்டுரு”.

அர்ஜுன், “அதான் ஏன்னு கேட்குறேன், இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு, நாம கஷ்டப்பட்டு இரண்டு கேள்விக்கான பதிலை கண்டுபிடிச்சாச்சு, மூணாவது கேள்வி ரொம்ப ஈசி, உங்களுக்கு பிடிச்ச கவிஞர் யாருங்கிற பதிலை மட்டும் போட்டு உள்ளே போயிட்டோம்னா அத்தனை பணத்தையும் மக்களுக்கே கொண்டுபோய் சேர்க்கிற பெரிய வேலையை முடிச்சிரலாம்… இந்த நேரத்துல ஏன் இப்படிப் பண்றீங்க”

கல்யாணி அம்மாள், “அந்தப் பெரிய வேலையை உன் கையால செய்ய வேண்டாம்னு நினைக்கிறேன். நீ செஞ்ச காரியத்துக்கு நீ போயி இருக்க வேண்டிய இடம் வேற…”

அர்ஜுன் முகம் மாறியது, “புரியல”

கல்யாணி அம்மாள், “புரியல? இன்னம் கொஞ்ச நேரத்துல இங்க வரப்போற போலீஸ் உனக்கு எல்லாத்தையும் புரிய வைப்பாங்க”

அர்ஜுனுக்கு கோபம் தலைக்கேற அதற்கு மேல் பொறுக்க முடியாதவனாக, “இல்ல, என்ன விஷயம்னு இப்ப நீங்களே எங்கிட்ட சொல்லி ஆகணும்”

கல்யாணி அம்மாள், “சொல்லலைன்னா என்ன பண்ணுவ? என் மகனை கூலிப்படை வச்சு கொன்ன மாதிரி என்னையும் கொலை பண்ணிருவியா?”

அர்ஜுனுக்கு மின்னல் தாக்கியதுபோல இருந்தது, அவன் உடல் நடுங்கியது…

கல்யாணி அம்மாள் அதற்குமேல் அழுகையை அடக்கமுடியாமல் சத்தம்போட்டு அழுதார், “என் சொத்து முழுக்க வேணும்னாலும் நான் உனக்கு எழுதிக் கொடுத்திருப்பேனேடா படுபாவி… பெத்த மகனைவிட உன்னைத்தானே மலைபோல நம்பியிருந்தேன்…” அதற்கு மேல் பேசமுடியாதபடி அழுகை அவரது தொண்டையை அடைத்தது.

மரத்துப்போன ஜடம் போல உட்காந்திருந்த அர்ஜுன், கல்யாணி சொத்துக்களை தருவதாகச் சொன்னவுடன் கோபத்தில் வெடித்தான், “சொத்துக்காகவா அத்தை அவன நான் கொல பண்ணேன்? அதை கொலைன்னு சொல்லக்கூடாது, சம்ஹாரம்… உங்க குடும்பத்தோட பணத்தை தொட்டாலே தீட்டுன்னு நினைக்கிறவன் நான்…நீங்க என்ன பெரிய மகாத்மாவையா பெத்து வச்சிருக்கீங்க….தேர்ட் ரேட்டட் கிரிமினல், அவன் இந்நேரம் சாகாம இருந்திருந்தா இத்தனை கோடி ஊழல் பணத்த பிரதமர் நதிநீர் இணைப்பு ஃபண்டுக்கு கொடுக்கச் சொல்லிருப்பீங்களா, இல்ல அவன் தான் உங்களைக் கொடுக்க விட்டிருப்பானா?”

அர்ஜுன் கத்தியதில் கல்யாணி சற்று அரண்டு போனார். அவன் வந்ததிலிருந்து அவன் முகத்தை திரும்பிக் கூடப் பார்க்காதவர் அழுகையை நிறுத்திவிட்டு அவன் முகத்தைப் பார்த்தபடி,

“அதுக்காக?” என்று கேட்க…

அர்ஜுன், “அதுக்காக மட்டும் நான் அவனை அழிக்கல அத்தை, தன்னோட குடும்ப கஷ்டத்தை போக்கணும்கிறதுக்காக வேலைக்குப் போன ஒரு அப்பாவி நடுத்தர வர்க்கத்துப் பொண்ணு, அவ அழகா இருந்தாங்கிற ஒரே காரணத்துக்காக அவளை சிதைச்சிருக்கு நீங்க பெத்த அந்த மிருகம்…”

தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு அர்ஜுன் தொடர்ந்தான், “அந்தப் பொண்ணு வேலை பார்த்த கம்பேனி முதலாளியோட ப்ரண்டுதான் உங்க பையன் தனா…போன வருஷத்துக்கு முந்தின வருஷம் தனசேகரன் இந்தியாவுக்கு வந்தப்ப தன்னோட நண்பனை அவனோட கம்பேனியில போய் சந்திச்சிருக்கான். அப்பத்தான் அங்க வேலை செஞ்ச அந்தப் பொண்ணை பார்த்திருக்கான். அவ எனக்கு வேணும்னு கேட்டிருந்திருக்கான்.

அந்த முதலாளி சொல்லியிருக்கான், “போன வாரம்தான் வேலைக்கு சேர்ந்திருக்கா..அவ அந்த மாதிரிப் பொண்ணு இல்லை”-ன்னு. அப்படி சொன்னதற்குப் பிறகும் உங்க மகன் பிடிவாதமா இருந்திருக்கான். மினிஸ்டர் மகனாச்சே தட்ட முடியுமா?

அதுக்கப்புறம் அந்த முதலாளி மறுநாள், அந்தப் பொண்ணுகிட்ட வந்து ஒரு அர்ஜண்ட் வேலைம்மா, எவ்வளவு லேட்டானாலும் பரவாயில்ல இருந்து முடிச்சிட்டுப் போ, நான் டின்னர், டாக்ஸியெல்லாம் ஏற்பாடு பண்ணி தர்றேன்னு சொல்லிருக்கான். அவளும் சரிங்க சார்னு சொல்லிட்டு சின்சியரா வேலை பார்த்திட்டு இருந்திருக்கா. நைட்டு 10.00 மணிக்கு குடிக்கிறதுக்கு கூல்டிரிங்க்ஸ் வந்திருக்கு…. குடிச்ச கொஞ்ச நேரத்துல அவளுக்குத் தல சுத்திருக்கு, மயங்கி விழுந்திருக்கா.. மயக்கம் தெளிஞ்சதுக்கப்புறம் முழிச்சுப் பார்த்தா….” அர்ஜுனுக்கு அதற்கு மேல் வார்த்தைகள் வரவில்லை…தொண்டை அடைக்கிறது…

உங்க மகனால பாதிக்கப்பட்டது வேற யாரும் இல்ல அத்தை, நீங்க மூச்சுக்கு முந்நூறு தடவை மகள் இல்லாத குறையைப் போக்க வந்த மகாலட்சுமின்னு சொல்லுவீங்கள்ல… அவதான்….உமாதான் அந்தப் பொண்ணு”

“ஐய்யோ”, அதிர்ச்சியைத் தாங்க முடியாத கல்யாணி அம்மாள் கைகளினால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுகிறார்.

அர்ஜுன், “அதுக்கப்புறம் அந்த முதலாளி வந்து அவ கால்ல விழுந்து கெஞ்சிருக்கான், ரொம்ப பெரிய இடத்துப் பையன்மா என்னால தட்ட முடியலன்னு…உமா அவன் முகத்துல காறி துப்பிட்டு வேலையை ரிசைன் பண்ணிட்டு இப்ப வேலை செய்யிற கம்பேனியில ஜாயின் பண்ணிருக்கா… அந்த சம்பவம் நடந்ததுக்குப் பின்னாடிதான் நானும் அவளும் அறிமுகமானோம், கொஞ்ச நாளிலேயே தனக்கு நடந்த இந்த பயங்கரத்தை என்கிட்ட சொல்லிட்டா… ஆனா அவளுக்கு தன்னைக் கெடுத்த அந்த மிருகத்தோட முகம் மட்டும்தான் தெரிஞ்சதே தவிர ஆள் யாருன்னு தெரியல…”

“உமா அடுத்து அவனைப் பார்த்தது மாமாவோட இறுதிச் சடங்கு நிகழ்ச்சிலதான், அவனைப் பார்த்ததுமே அதிர்ச்சியில ஓடிவந்து என்கிட்ட சொல்ல வந்தவ மயக்கமாகிட்டா”

கல்யாணி அம்மாளுக்கு செம்பருதியின் இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் திடீரென உமா மயங்கி விழுந்தது ஞாபகம் வந்தது.

அர்ஜுன், “அப்பத்தான் நான் நினைச்சேன் அவன் இனி இந்த உலகத்துல இருக்கக்கூடாதுன்னு… அதனால இரண்டு நன்மைகள் இருக்கு. ஒண்ணு பல பெண்களோட வாழ்க்கை இனியும் பாதிக்கப்படாம இருக்கும். இன்னொன்னு மாமா சம்பாதிச்ச சொத்துக்களை அவன் உயிரோட இல்லாட்டி திரும்ப மக்கள்கிட்ட கொண்டு போறது ஈசி… அதுக்காக நீ சட்டத்தை கையில எடுத்துக்குவியான்னு கேட்பீங்க… நானும் சட்டத்துக்கு கட்டுப்பட்டவன்தான் அத்தை…ஆனா சில குற்றவாளிகளை சட்டம் தண்டிக்கிறவரைக்கும் நாம காத்திருக்க முடியாது. திரும்ப சொல்றேன், நான் பண்ணது கொலை இல்ல, சம்ஹாரம்”

அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே வீட்டுக்குள் திபு திபுவென போலீஸ் நுழைந்தது. அர்ஜுன் கைது செய்யபட்டு அழைத்துச் செல்லப்பட்டான்.

கல்யாணி அம்மாள் பேச்சற்று, உயிரற்ற சிலை போல அமர்ந்திருந்தார்.

*********** *********** ***********

அத்தியாயம்: 38

சிறுத்தையிடம் தப்பி சிங்கத்திடம் சிக்குதல்

“அம்மா எப்படி இருக்கீங்க, உங்க ஹெல்த் எல்லாம் எப்படி இருக்கு” இளங்கோ கல்யாணி அம்மாளுக்கு போன் செய்தான்.

கல்யாணி அம்மாள், “கடவுள் புண்ணியத்துல ஏதோ இருக்கேன்பா, நீ எப்படி இருக்க… பவானியும் அம்மாவும் எப்படி இருக்காங்க”

இளங்கோ, “நல்லா இருக்காங்க, அர்ஜுன் விஷயம் கேள்விப்பட்டேம்மா, மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருந்துச்சு, பயங்கர கோபமும் வந்துச்சு… நான் நேரடியா உங்களை சந்திக்கணும்… இந்த நேரத்துல உங்களை தொந்தரவு பண்றதுக்கு கஷ்டமாதான் இருக்கு. ஆனா ஐயா பத்தின டிவி நிகழ்ச்சிக்கு உங்ககிட்ட இருந்து கொஞ்சம் தகவல்கள் வாங்கணும்..அதான்”

கல்யாணி அம்மாள், “அதெல்லாம் ஒண்ணும் பிரச்சனை இல்லப்பா, நாளைக்கு மதியத்துக்கு மேல வரமுடியுமா, முடிஞ்சா பவானியையும் கூட்டிட்டு வாயேன்”

இளங்கோ “பவானி இப்ப அமெரிக்காவுல இருக்காம்மா, திரும்பி வந்தவுடனே ஒருநாள் கூட்டிட்டு வர்றேன். நாளைக்கு நான் வந்து உங்களை பார்க்குறேன், ரொம்ப நன்றி” இணைப்பு துண்டிக்கப்பட்டது.

கோவாவில்…

“உமா உடனே கொஞ்சம் ரிசப்ஷனுக்கு வரமுடியுமா?”, வரவேற்பறையிலிருந்து போன்…

வெளியே வந்த உமா நான்கு பெண் போலீசார் தன்னைத் தேடி வந்திருப்பதைக் கண்டு குழம்பியவளாக, “எஸ் மேடம்”

பெண் போலீஸ் அதிகாரி, “நீங்கதான் உமாவா?”. உமா தலையாட்ட…

அந்த பெண் போலீஸ் அதிகாரி, “ஒரு கொலை கேஸ் விஷயமா உங்ககிட்ட கொஞ்சம் விசாரிக்கணும்”

தான் மதிப்பு மரியாதையுடன் வலம் வந்த அலுவலகத்தின் வாசலில் வைத்து போலீஸ் ஜீப்பில் ஏற்றப்பட்டது உமாவுக்கு மிகுந்த அவமானமாக இருந்தது. ரொம்பவே அழுதாள், “என்னை ஸ்டேஷனுக்கு கூப்பிட்டிருந்தா நானே வந்திருப்பேனே மேடம், ஏன் ஆஃபீக்கு வந்து இப்படிக் கூட்டிட்டுப் போறீங்க?”

அந்த பெண் அதிகாரி பொறுமையாக பதில் சொன்னார், “யாரையாச்சும் சாதாரணமா விசாரிக்கனும்னா போன்ல கூப்பிட்டு ஸ்டேஷனுக்கு வரச்சொல்லி விசாரிப்போம்மா, ஆனா கொலைக்கு உடந்தையா இருந்ததா உன்னை இப்போ சந்தேகத்தின் பேர்ல அரஸ்ட் பண்ணிருக்கோம்”

உமா, “நான் கொலைக்கு உடந்தையா, என்ன மேடம் சொல்றீங்க? எந்தக் கொலை, அதுல எனக்கு என்ன சம்பந்தம்?”

போலீஸ் அதிகாரி, “மத்திய அமைச்சர் செம்பருதி மகன் தனசேகரன் கொலையில உனக்கு சம்பந்தம் இல்லைன்னு சொல்றியா? ஸ்ட்ராங்கான ஆதாரம் இருக்கு. ஸ்டேஷனுக்கு வா காட்டுறேன்”

உமாவுக்கு தூக்கிவாரிப் போட்டது, “என்னது தனசேகரன் கொலையிலேயா?”

அதுவரை உமா சேவியர் காணாமல் போனது விஷயமாக திருநாவுக்கரசை விசாரிப்பதற்கு போலீசார் முயன்றிருக்கலாம், அவனை தொடர்பு கொள்ள முடியாததால் அவனைப்பற்றி தெரிந்து கொள்ள தன்னை விசாரிக்க வந்திருக்கலாம் என்றே நினைத்துக் கொண்டிருந்தாள்.

போலீஸ் ஸ்டேஷனில் வண்டி நின்றது, போலீசாரும் உமாவும் ஜீப்பில் இருந்து கீழே இறங்கினார்கள். உமாவுக்கு என்ன நடக்கிறதென்று சுத்தமாகப் புரியவில்லை. “மேடம் என்னோட லவ்வர் அர்ஜுனுக்கு ஒரு போன் பண்ணனும், அனுமதிப்பீங்களா ப்ளீஸ்”

போலீஸ் அதிகாரி, “கொலைகாரன் உன் லவ்வர்னு நீயே ஒத்துக்கிட்டயேம்மா, அவனை சென்னைல வச்சு ஏற்கனவே அரஸ்ட் பண்ணியாச்சு. அந்தக் கொலையைப் பண்ண கூலிப்படைக்கு உன் பேங்க் அக்கவுண்ட்ல இருந்துதான் 15 லட்ச ரூபாய் பணம் போயிருக்கு. மிசோரம், மத்திய பிரதேசம், தமிழ்நாட்ல கன்னியாகுமரி மூணு ஊருல இருந்த அக்கவுண்ட்ஸ்க்கு தலா 5 லட்சம் நீ அனுப்புனியா?”

உமாவுக்கு வானமே இடிந்து தலையில் விழுந்தது போல இருந்தது…போலீஸ் ஸ்டேஷன் வாசலில் மயங்கி விழுந்தாள்.

உடனே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உமா, மறுநாள் விமானத்தில் சென்னைக்கு கொண்டுவரப்பட்டு டிஜிபி அலுவலகத்தில் வைத்து விசாரிக்கப்பட்டாள். உமா கைது செய்யப்பட்டு சென்னைக்கு கொண்டுவரப்படுவது தெரிந்ததும் கல்யாணி அம்மாள் டிஜிபி அலுவலகத்துக்கு விரைந்தார். செம்பருதியின் மனைவி என்பதால் அவருக்கு அந்த அலுவலகத்தில் உரிய மரியாதை தரப்பட்டது. நேராக உயரதிகாரியைச் சென்று சந்தித்தார். அதற்குள் உமாவிடம் ஒரு சுற்று விசாரணை நடந்து முடிந்திருந்தது.

கல்யாணி அம்மாள் போலீஸ் அதிகாரியிடம், “அவ ரொம்ப அப்பாவி சார், அவளைப் பார்க்கத்தான் வந்திருக்கேன்”

போலீஸ் அதிகாரி, “முதல் சுற்று விசாரணையிலேயே அவ அப்பாவின்னு தெரிஞ்சிருச்சு மேடம், ஒண்ணும் பிரச்சனை இல்ல, அவளை நீங்க தாராளமா கூட்டிட்டே போகலாம்”

கல்யாணி அம்மாள், “ரொம்ப நன்றி சார், அவளை யாரும் harsh-ஆ treat பண்ணலையே!”

போலீஸ் அதிகாரி, “சேச்சே! அதெல்லாம் ஒண்ணும் இல்லங்க மேடம், அந்தப் பொண்ணு விசாரணைக்கு நல்லாவே ஒத்துழைச்சா”

அதற்குள் உமாவை கல்யாணி அம்மாளிடம் அழைத்து வந்திருந்தனர். உமா மனதளவில் சுக்குநூறாக நொறுங்கிப் போயிருந்தாள்.

என் காதலன்தான் உங்கள் மகனைக் கொன்றான் என்ற உணர்வோடு கல்யாணி அம்மாளைப் பார்ப்பது உமாவுக்கு குற்ற உணர்வாக இருந்தது. என் மகன்தான் உன்னைக் கற்பழித்தான் என்ற உணர்வோடு உமாவைப் பார்ப்பது கல்யாணி அம்மாவுக்கு பெருத்த அவமானமாக இருந்தது. இருவருக்கும் உள்ளூர கடுமையான மனப்போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமலேயே காரில் ஏறி அமர்ந்தனர். சிறிது நேரம் கழித்து கல்யாணி அம்மாள் உமாவின் தலையை வருடி, “எப்படிம்மா இருக்க?” என்றார். உமா கல்யாணி

அம்மாளின் தோளில் சாய்ந்து அதுவரை தேக்கி வைத்திருந்த கண்ணீர் முழுவதையும் கொட்டித் தீர்த்தாள்.

அழுது ஓய்ந்தவளுக்கு அந்த நேரத்தில் அண்ணன் திருநாவுக்கரசின் ஞாபகம் வந்தது. அர்ஜுனை நம்பி அவனை மிசோரமுக்கு அனுப்பி வைத்திருந்தாள்…அதன் பின்னர் அவனிடமிருந்து தற்சமயம் வரை ஒரு போன் கால்கூட வரவில்லை. அவனுக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. கல்யாணி அம்மாளிடம் உதவி கேட்கலாமா? வேறு வழியே இல்லை. இந்த நேரத்தில் அவரைத் தவிர வேறு யாரும் தனக்கு உதவ முடியாது என்று நினைத்தாள்.

உமா, “ஆண்ட்டி, நீங்க எனக்கு ஒரு பெரிய உதவி செய்யணும்”

கல்யாணி அம்மாள், “சொல்லும்மா நான் என்ன செய்யணும்?”

உமா, “என்னோட அண்ணன் திருநாவுக்கரசு ஒரு லோக்கல் பிரச்சனையால சென்னையில இருந்து தப்பி கோவாவுக்கு வந்திருந்தான். அர்ஜுன் அவனை பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி வைக்கிறேன்னு சொல்லி மிசோரோம்க்கு அனுப்பி வச்சுட்டான். அவன் அங்க போனதுக்கப்புறம் இப்ப வரைக்கும் ஒரு போன்கால் கூட வரல. இப்ப எங்க இருக்கான், என்ன ஆனான்னு தெரியல. ரொம்ப பயமா இருக்கு ஆண்ட்டி…”

கல்யாணி அம்மாள் சீரியஸாக, “ஐயய்யோ…ஒண்ணும் கவலைப்படாதம்மா உங்க அண்ணனுக்கு ஒண்ணும் ஆயிருக்காது, இந்தப் பிரச்சனையை இளங்கோகிட்ட சொல்றேன். அவன் பார்த்துக்குவான்”. அதற்குள் கார் கல்யாணி அம்மாளின் வீடு வந்து சேர்ந்திருந்தது…

உமாவுக்கு பகீரென்று இருந்தது, மனதுக்குள் நொந்து கொண்டாள்…”போச்சு…ச்சே! இவங்ககிட்ட சொல்லாமலேயே இருந்திருக்கலாம். திரு யாருக்கு பயந்து ஓடுனானோ அவன்கிட்டயே மாட்டி விடப் போறாங்களே! இந்தப் பிரச்சனையை இளங்கோகிட்ட சொல்ல வேணாம்னு சொன்னா; ஏன் சொல்ல வேணாம்னு கேட்பாங்க, எப்படியாவது இவங்க திருநாவுக்கரசு பற்றி இளங்கோவிடம் சொல்லும் முன்னர் தடுத்து நிறுத்தியாக வேண்டும்”

சிந்தித்தபடியே கல்யாணி அம்மாவுடன் சேர்ந்து வீட்டுக்குள் நுழைய…

ஹாலில் கம்பீரமாக இளங்கோ உட்காந்திருந்தான். கல்யாணி அம்மாளைப் பார்த்து எழுந்து வந்து அவர் காலைத் தொட்டு வணங்கிவிட்டு, பக்கத்தில் நின்ற உமாவை ஒரு பார்வை பார்த்தான். அந்தப் பார்வையில் பயங்கர ஆக்ரோஷம் தெரிந்தது.

உமாவுக்கு ஈரக்கொலை நடுங்கியது….

*********** *********** ***********

அத்தியாயம்: 39

புதுக்கணக்கு தொடக்கம்

கல்யாணி அம்மாள், “உட்காருப்பா”

இளங்கோ உட்காந்தான்… கல்யாணி அம்மாள் அவனிடம், “இளங்கோ நாம மத்த விஷயங்கள் பேசுறதுக்கு முன்னாடி உங்கிட்ட ஒரு அவசர உதவி… இந்தப் பொண்ணு பேரு உமா, அர்ஜுனை நம்பி ஏமாந்த பொண்ணு (கல்யாணி அம்மாள் சொன்னவிதம் உமாவுக்கு அவமானமாக இருந்தது, தலை கவிழ்ந்தாள்). இவங்க அண்ணனை அர்ஜுன் மிசோரம் மாநிலத்துல ஏதோ ஒரு இடத்துல அடைச்சி வச்சிருக்கானாம். கொஞ்சம் உதவி செய்ப்பா”

இளங்கோ உமாவைப் பார்த்தான், உமா அழுதுகொண்டே அவனைத் தன் கையெடுத்து கும்பிட்டாள். அவள் கும்பிட்டதன் உள் அர்த்தம் ‘சரண்டர்’ என்பதை இளங்கோவால் புரிந்து கொள்ள முடிந்தது. அந்த நேரத்தில் உமாவுக்கு ஒரு செல்பேசி அழைப்பு வர உமா அதை எடுத்து “ஹலோ” என்றாள்

மறுமுனையில் பேசியது திருநாவுக்கரசு, அவன் குரலில் பயங்கர பதற்றம் தெரிந்தது… “உமா, அந்த அர்ஜுன் நீ நினைக்கிற மாதிரி நல்லவன் இல்ல உமா, அவன் இங்க ஒரு குடும்பம் இருக்கிறதா சொன்னதெல்லாம் பொய் உமா, இது ஒரு கேங் மாதிரி இருக்கு. அவனுங்க என்கிட்ட இருந்து மொபைல், லேப்டாப் எல்லாத்தையும் புடுங்கி வச்சுக்கிட்டாய்ங்க”

உமா முகம் வெளிறியதைப் பார்த்த கல்யாணி அம்மாள் போன்ல யாரு என்று சைகையில் கேட்க உமா “திருநாவுக்கரசு” என்றாள்.

இளங்கோ டக்கென்று தனது இருக்கையில் இருந்து எழுந்து உமாவிடமிருந்து மொபைலை பறித்து அதை காதில் வைத்து “ஹலோ தம்பி நான் இளங்கோ பேசுறேன்” என்றபடி நடந்து சற்று தூரம் தள்ளிப்போய் நின்று பேசினான். உமாவுக்கு நடுக்கம் அதிகரித்தது, இலேசாக தலை சுற்றியது. நடந்து கொண்டிருக்கும் பிரச்சனையை அறியாத கல்யாணி அம்மாள் உமாவின் தொடையில் தட்டி ‘இனி எல்லாம் அவன் பாத்துக்குவான்’ என்று சைகையில் சொன்னார்.

மறுமுனையில் திருநாவுக்கரசிடமிருந்து எந்த பதிலும் இல்லை. இளங்கோவின் குரலைக் கேட்டதும் அவன் என்னவாகியிருந்திருப்பான் என்று வாசகர்களுக்குப் புரிந்திருக்கும்.

இளங்கோ சற்று தொலைவில் அமர்ந்திருந்த கல்யாணி அம்மாளுக்கும், உமாவுக்கும் கேட்காத வண்ணம் குரலைத் தாழ்த்திப் பேசினான், “ஏய் திருநாவுக்கரசு, நான் பேசுறது கேக்குதா இல்லையா?”

திரு மறுமுனையில் நடுங்கிய குரலில், “கேக்குது சார்”

இளங்கோ, “நீ யாரு, என்ன செஞ்சுக்கிட்டு இருக்கன்னு எனக்கு எல்லாம் தெரியும். உன்னை இங்க தமிழ்நாடு போலீஸ் வலைவீசி தேடிக்கிட்டு இருக்கு. நீ அங்கேயிருந்து தப்பிச்சு வந்தாலும் இங்க போலீஸ்கிட்ட மாட்டுவ… நான் சொல்றதை மட்டும் கேட்டேனா இன்னிக்கு நைட்டு நீ இங்க இருப்ப, போலீஸ் பிரச்சனையையும் நானே தீர்த்து வச்சிருவேன். என்ன சொல்ற?”

திருநாவுக்கரசு, “நீங்க என்ன சொன்னாலும் நான் செய்யுறேன் சார்”

இளங்கோ, “இங்க பாரு, அந்த அக்கவுண்ட் expire ஆக இன்னும் அஞ்சு நாள்தான் இருக்கு. அதுக்குள்ள திரும்ப அதை ப்ளாக் பண்ணி வச்சித் தொலச்சிராத”

திருநாவுக்கரசு, “ஐயோ இப்ப எங்கிட்ட லேப்டாப், மொபைல் எதுவுமே இல்ல சார், நான் சத்தியமா இனி அந்த விஷயத்துல எதுவும் செய்ய மாட்டேன். அவங்க என்னை அடச்சி வச்சிருந்த ரூமை விட்டு தப்பிச்சு, ஒரு பஸ் ஏறி, பக்கத்துல இருந்த சில்சார்ங்கிற ஊருக்கு வந்து அங்கிருந்து கவுஹாத்தி போற டிரெயின் ஏறி வித்தவுட்ல போய்க்கிட்டு இருக்கேன், ட்ரெயின்ல பக்கத்துல இருந்தவர்கிட்ட மொபைல ஓசி வாங்கி பேசிக்கிட்டு இருக்கேன் சார்”

இளங்கோ, “சரி அடுத்த ஸ்டேஷன் எதுன்னு உன் பக்கத்துல இருக்கவங்க கிட்ட கேளு”

அருகில் இருந்தவர்களிடம் கேட்ட திருநாவுக்கரசு “சல்சப்ரா”-ன்னு சொல்றாங்க சார் என்றான்.

இளங்கோ அங்கிருந்து திரும்பி கல்யாணி அம்மாளும் உமாவும் உட்காந்திருக்கும் இடத்துக்கு நடந்து வந்தான். இப்போது தான் பேசுவது அவர்களுக்கு கேட்கும்படியே சத்தமாகவே பேசினான், “சரி அந்த ஸ்டேஷன்ல இறங்கி அங்கேயே வெயிட் பண்ணு, அந்த ஸ்டேஷன்ல இருந்து உன்னை கவுஹாத்திக்கு கார்ல கூட்டிட்டுப் போய், அங்க இருந்து சென்னைக்கு ஃப்ளைட்ல அழைச்சிட்டு வர நான் ஏற்பாடு பண்றேன். இன்னிக்கு மிட்நைட் நீ வீட்டுல இருப்ப ஓகேயா?”

போனை உமாவிடம் திருப்பிக் கொடுத்தவன், அடுத்து தனது செல்போனிலிருந்து யாரிடமோ பேசினான். பின்னர் “எல்லாப் பிரச்சனையும் சால்வ் ஆகிடுச்சு உமா, இனி நீ பயப்படத் தேவையில்லை” என்றான். “எல்லாப் பிரச்சனையும்” என்றதன் அர்த்தம் உமாவுக்குப் புரிந்தது. சற்று ஆறுதலடைந்தவளாய் மீண்டும் கைகூப்பி அவனுக்கு நன்றி சொன்னாள். இளங்கோ அவளைப் பார்த்து புன்னகைத்தான். அவன் கண்களில் முன்னர் இருந்த ஆக்ரோஷம் இப்போது மறைந்துவிட்டிருந்தது.

கல்யாணி அம்மாள், “கடவுள் மாதிரி வந்து காப்பாத்துனப்பா, ரொம்ப ரொம்ப நன்றி!”

இளங்கோ, “எதுக்கும்மா நன்றியெல்லாம் உங்களுக்காக நான் இதைக்கூட செய்ய மாட்டேனா?”

கல்யாணி அம்மாள் இளங்கோவிடம் , “நீ வந்த விஷயத்தை இப்பச் சொல்லுப்பா, சாரி உன்னை ரொம்ப நேரம் காக்க வச்சுட்டேன்”

இளங்கோ, “அதெல்லாம் ஒண்ணும் இல்லைம்மா, ஐயா பத்தின நிகழ்ச்சியில உங்களைப் பத்தி ஸ்பெஷல்லா ஒரு எபிசோட் போடலாம்னு நினைச்சிருந்தோம். அதுல உங்க பயோடேட்டா மாதிரி ஒரு செக்மெண்ட் வருது அதுக்குத்தான் உங்ககிட்ட அந்த கேள்விகளை கொடுத்து கையோட பதில்களை வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்”. கல்யாணி அம்மாளிடம் ஒரு தாளை நீட்டினான்…

அதை வாங்கிப் பிரித்து சத்தமாகப் படித்த கல்யாணி அம்மாள், “பிடித்த பாடல், பிடித்த ஊர், பிடித்த உணவு, பிடித்த புத்தகம், …பிடித்த கவிஞர்”

பிடித்த கவிஞர் என்பதை வாசித்துவிட்டு கல்யாணி அம்மாள் இளங்கோவின் கண்களை ஊடுருவிப் பார்த்தார். இளங்கோவுக்கு ‘பக்’ கென்றிருந்தது.

கல்யாணி அம்மாள், “இளங்கோ, இந்த நிகழ்ச்சி எப்ப ஒலிபரப்பாகுது”

இளங்கோ, “இன்னும் நாலு நாள்லம்மா”

கல்யாணி அம்மாள், “இந்த வாரம் வேணாம்ப்பா, நானே நடைப்பிணம்போல இருக்கேன், அடுத்தடுத்த தாங்கமுடியாத அதிர்ச்சிகள்… இன்னும் நான் மீளல. இந்த நிகழ்ச்சியை தள்ளி வச்சிருப்பா அடுத்த வாரம் பார்த்துக்கலாம், இந்த நிலையில என்னால பேட்டியெல்லாம் தர முடியாது. இந்த வாரம் ஏதாச்சும் பழைய நிகழ்ச்சியை மறு ஒளிபரப்பு செஞ்சுருங்க, அப்படி அடிக்கடி செய்யுறது நம்ம சேனல்ல வழக்கம்தானே!”

இளங்கோவுக்கு மொத்த சுருதியும் இறங்கியதுபோல இருந்தது, “அப்படீங்களாம்மா, சரி பரவாயில்ல..இப்ப இந்த கேள்விகளுக்கு மட்டும் பதில் வாங்கிட்டுப் போயிடுறேன். இதை வச்சு டிசைனர்ஸ் முதல்ல ஒர்க் பண்ணட்டும், மத்ததெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம்”

கல்யாணி அம்மாள், “ரொம்ப சாரிப்பா, என் நிலைமை உனக்குத் தெரியும்ல..இப்ப நான் எதுவுமே செய்யிற நிலைமையில இல்ல…நீ கேள்விகளை குடுத்துட்டுப் போயேன், நான் உனக்கு பதில்களை மெயில்ல அனுப்பி வைக்கிறேன்”

இளங்கோ நொந்து போனான், “எப்ப அனுப்புவீங்கம்மா?”

கல்யாணி அம்மாள், “கண்டிப்பா இந்த வாரம் கிடையாதுப்பா, தயவு செய்து அம்மாவை மன்னிச்சிரு”

இளங்கோவுக்குள் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை கல்யாணி அம்மாள் கவனித்த வண்ணம் இருந்தார். இளங்கோ வாடிய முகத்துடன் எழுந்தான். “சரிங்கம்மா, நான் கிளம்புறேன்”

கிளம்பிச் சென்றவன் வாசலை அடைவதற்குள்…

“இளங்கோ…”

கல்யாணி அம்மாள் கூப்பிட்ட குரல் கேட்டு திரும்பிய இளங்கோ, “சொல்லுங்கம்மா என்றான்”.

கல்யாணி அம்மாள், “இதுல இருக்க ‘எனக்கு பிடிச்ச கவிஞர் யாரு’ ங்கிற கேள்விக்கு மாத்திரம் இப்ப நான் பதில் சொன்னா சந்தோஷப்படுவியா?”

இளங்கோ பேயறைந்தவன் மாதிரி நின்றான், அதைப் பார்த்த கல்யாணி அம்மாள் மனதில் இருந்த சந்தேகம் உறுதியானது.

கல்யாணி அம்மாள், “இங்க வந்து உட்காரு, உமா என்னோட லேப்டாப்பை எடு” கல்யாணி அம்மாளின் குரலில் ஒரு கம்பீரம் தெரிந்தது.

உமா லேப்டாப்பை எடுத்து வந்து கொடுக்க முதல் கேள்விக்கு பதிலைப் போட்ட கல்யாணி அம்மாள் இரண்டாவது கேள்விக்கு பதிலை எதிர்பார்த்து உமா முகத்தைப் பார்க்க அவள் வந்து nisha என்று டைப் செய்ய மூன்றாவது கேள்வி வந்து நின்றது. அதற்கு பதிலைப் போட்டு கல்யாணி அம்மாள் அக்கவுண்ட்டின் உள்ளே சென்றார்.

எதிரில் அமர்ந்திருந்த இளங்கோவுக்கு நடப்பது ஒன்றும் புரியவில்லை. ஒரு 10 நிமிடங்கள் கழித்து கல்யாணி அம்மாள் அவனிடம் தனது லேப்டாப்பைத் திருப்பிக் கட்டினார். அதைப் பார்த்த அவன் கண்கள் விரிந்தன. செம்பருதியின் அக்கவுண்ட்டில் ரூ.36 ஆயிரம் கோடி இருந்தது.

கல்யாணி அம்மாள், “எவ்வளோ பணம் இருக்கு பார்தேயில்ல” என்றார். மலைப்பிலிருந்து விடுபடாத இளங்கோ தலையாட்டினான். மீண்டும் லேப்டாப்பை தன்பக்கம் திருப்பி அந்த அக்கவுண்ட்டை log-out செய்து மூடி வைத்தவர்…

இளங்கோவை நோக்கி, “நாம இப்ப நாம ஒரு அரசியல் டீல் பேசிக்கலாமா?” என்றார்.

கல்யாணி அம்மாளின் வாயிலிருந்து வந்த அந்தக் கேள்வியை சற்றும் எதிர்பாராத இளங்கோவும், உமாவும் ஒரு கணம் மிரண்டே போனார்கள்

*********** *********** ***********

அத்தியாயம்: 40

அதிரடியான அரசியல் டீல்

இளங்கோவுக்கு நடப்பது என்ன என்பது புரிபடவில்லை. ஒரு பிழைக்கத்தெரியாத பிடிவாத நேர்மைவாதியாக அவன் இதுவரை பார்த்திருந்த கல்யாணி அம்மாளிடமிருந்து இதுபோன்ற ஒரு அதிரடியை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.

இளங்கோ கல்யாணி அம்மாளின் கண்களை கூர்ந்து பார்த்தபடி, "என்ன டீல் சொல்லுங்க"

கல்யாணி அம்மாள், "எனக்குப் பிடிச்ச கவிஞர் உமர் கய்யாம். ஆனா அந்த பதில் இனி உனக்கு பயன்படாது. ஏன்னா நான் இந்த மூணு கேள்வியையும் மாத்தி புது கேள்வி-பதில் கொடுத்துட்டேன்"

இளங்கோ மனதில் ஏற்பட்ட உணர்வுகளை முகத்தில் காட்டாமல் கல்யாணி அம்மாளின் முகத்தைப் பார்த்தபடி அமைதியாக உட்காந்திருந்தான்.

கல்யாணி அம்மாள், "இப்பவும் இளங்கோ, என்னோட இரண்டு கண்டிஷனுக்கு ஒத்துக்கிட்டா இந்த 36 கோடியையும் நான் உனக்கே கொடுத்துடறேன். அப்புறம் இந்த அக்கவுண்ட் உன்னது… நான் கொடுத்த வாக்கை மீறமாட்டேன்னு உனக்கு தெரியும்ல"

இளங்கோ, "தெரியும்மா சொல்லுங்க, என்ன கண்டிஷன்?"

உமா நடப்பது எதுவுமே புரியாமல் கல்யாணி அம்மாளின் வாயைப் பார்த்தபடி உட்காந்திருந்தாள்.

கல்யாணி அம்மாள், "முதலாவது, என் கணவர் விட்டுட்டுப்போன மத்திய நீர்வளத்துறை அமைச்சர் பதவி எனக்கு வேணும்"

இளங்கோ சிரித்தான், "இந்த லோக்சபாவோட பதவிக்காலம் இன்னும் 9 மாசத்துல முடியுது. அதுக்குள்ள அமைச்சராகி என்ன செய்யப்போறீங்க?…இனி இடைத்தேர்தல் நடக்கக்கூட வாய்ப்பில்ல"

கல்யாணி அம்மாள், "ஆனா ராஜ்யசபான்னு ஒண்ணு இருக்கு தெரியும்ல தம்பி! அதுதான் என்னோட இரண்டாவது கண்டிஷன். இன்னும் இரண்டு மாசத்துக்குள்ள நம்ம கட்சி ராஜ்யசபா உறுப்பினர் செல்வபாரதியோட பதவிக்காலம் முடியுது. அந்த இடத்துக்கு என்னை நியமிக்கணும். இதை வெளிப்படையா உங்க அப்பா அறிவிக்கணும். நான் மத்திய நீர்வளத்துறை அமைச்சரா பதவி ஏற்றுக்கொண்ட அன்னிக்கே இந்த மூணு கேள்விக்குமான பதிலை நான் உன் கையில கொடுத்துருவேன்…டீல் ஓகேயா?"

இளங்கோ, இணங்கினான், "சரிங்கம்மா அப்பாகிட்ட பேசுறேன்…ஒண்ணும் பிரச்சனை இருக்காதுன்னு நினைக்கிறேன்"

கிளம்பத் தயாரான இளங்கோ ஏதோ கேட்க நினைத்தவனாக தயங்கியபடி, "அம்மா ஒரு நிமிஷம்… இந்த அக்கவுண்ட் விஷயத்துல உங்களுக்கு என் மேல எப்படி சந்தேகம் வந்தது?"

கல்யாணி அம்மாள், "தெரியலப்பா, இந்த அக்கவுண்ட் பத்தின விஷயம் தெரிஞ்ச, என்கூட இருந்த எல்லோரும் ரொம்ப நம்பிக்கையானவங்கதான். அதுனாலதான் இந்த அக்கவுண்ட் இரண்டு தடவை

ப்ளாக் ஆனப்ப எனக்கு என்னமோ உன் மேலதான் இலேசான சந்தேகம் வந்தது, இன்னிக்கு நீ எழுதி கொண்டு வந்த கேள்விகளைப் பார்த்தவுடனே எனக்கு அந்த சந்தேகம் வலுவாயிருச்சு…அதான்".

இளங்கோ இலேசாக சிரித்தபடி உமாவை ஒரு விஷமப் பார்வை பார்த்தான். உமா திருடனுக்கு தேள் கொட்டியதுபோல விழித்தாள். கல்யாணி அம்மாளின் பதிலும், இளங்கோவின் பார்வையும் அவளுக்குள் குற்ற உணர்வை அதிகரித்திருந்தது. திருநாவுக்கரசின்மீது அவளுக்கு கோபம் வந்தது.

கோப்பெருஞ்சோழன் வீடு…

இளங்கோ வீட்டிற்குப் போய் கோப்பெருஞ்சோழனிடம் இந்த விஷயத்தைச் சொன்னதும் அவர் வாய்விட்டுச் சிரித்தார், "என்ன ஆச்சு அந்த அம்மணிக்கு…தமிழ் சினிமா ரொம்ப பார்க்க ஆரம்பிச்சிட்டான்னு நினைக்கிறேன்"

இளங்கோ, "எது எப்படியோப்பா, இப்ப அந்தம்மா சொன்னபடி செஞ்சுட்டா அந்த அக்கவுண்ட் நம்ம கைக்கு வர வாய்ப்பிருக்கு. கொஞ்ச நஞ்சம் இல்ல 36 ஆயிரம் கோடி ரூபாய்…பணம் வந்ததுக்கப்புறம் பார்த்துக்கலாம்..ஒரு ஒன்பது மாசந்தானே!"

கோப்பெருஞ்சோழன் யோசித்தார், "அப்படி விட முடியாது தம்பி, கல்யாணி ரொம்ப நீதி நேர்மைன்னு பேசுறவ… என்ன திட்டத்தோட அமைச்சர் பதவி கேக்குறான்னு நமக்குத் தெரியாது. அரசியல் அனுபவமும் அவளுக்கு சுத்தமா கிடையாது. மத்திய அமைச்சர் பதவிங்கிறது சின்னப்புள்ளைங்க விளையாட்டு கிடையாது. அவ பதவியேற்ற பின்னாடி ஆர்வக்கோளாறுல ஏதாவது சொதப்பிட்டா அது நமக்கு அடுத்த தேர்தல்ல பெரிய சிக்கலாகிடும். நாம பணத்தையும் கைப்பத்தணும் அவகிட்ட வளைஞ்சும் போகக்கூடாது. அப்படி ஏதாவது வழி இருந்தா சொல்லு."

இளங்கோ, "இல்லப்பா, அந்தம்மா மூணு கேள்வியையும் மாத்திருச்சு. இனி பழையபடி என்னால முதல்ல இருந்து ஆரம்பிக்க முடியாது. அவங்க பதவி ஏற்கிறதுக்கும் ராஜ்யசபா உறுப்பினர் நியமனத்துக்கும் இடையில இரண்டு மாச இடைவெளி இருக்கு. அவங்க சொதப்புனா அதைக் காரணம் காட்டியே பதவியை விட்டு தூக்கிரலாம். என்ன சொல்றீங்க?"

கோப்பெருஞ்சோழன் யோசித்தபடி…"அப்படி நடந்தா அதுவும்கூட நமக்கு மைனஸ்தான். ஆனா அந்த 36 ஆயிரம் கோடிக்காக அதைவேணா நாம எப்படியாவது சரிகட்டிக்கலாம். சரி நாளைக்கு நான் பிரதமர்கிட்ட பேசிட்டு முறைப்படி அறிவிச்சுத் தொலைக்கிறேன். அவகிட்ட நீ ரொம்ப ஜாக்கிரதையா டீல் பண்ணு. எங்கிட்ட கேட்காம எந்த முக்கிய முடிவும் எடுக்காதே"

இளங்கோ, "சரிப்பா"

*********** *********** ***********

அத்தியாயம்: 41

நூற்றாண்டுக் கனவு நிறைவேறியது

டெல்லியில் குடியரசுத்தலைவர் மாளிகை களை கட்டியிருந்தது. அமைச்சரவை விரிவாக்கத்தையொட்டி கல்யாணி அம்மளுடன் சேர்த்து 6 புதிய மத்திய அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்துவைக்கும் விழா அங்கு ஏற்பாடாகியிருந்தது. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் கல்யாணி அம்மாள் ராஜ்யசபா உறுப்பினராக தனது கட்சியால் முன்னுறுத்தப்படுவார் என்று அதிகாரபூர்வமாக கோப்பெருஞ்சோழன் அறிவித்திருந்தார்.

கல்யாணி அம்மாள் மத்திய நீர்வளத்துறை அமைச்சராக குடியரசுத் தலைவரால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். செம எரிச்சலில் இருந்த முதல்வர் கோப்பெருஞ்சோழன் விழாவுக்கு வரவில்லை. அவர் சார்பாக இளங்கோவும் வேறுசில மூத்த அமைச்சர்களும் வந்திருந்தனர்.

இளங்கோ உமாவுக்கு வாக்குக் கொடுத்தபடியே திருநாவுக்கரசு பத்திரமாக சென்னைக்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டான். இளங்கோவின் தலையீட்டால் சேவியர் விவகாரத்தில் திருநாவுக்கரசு ஒரு கண்துடைப்புக்காக அழைத்து விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டான். சேவியரின் கேஸ் ஊத்தி மூடப்பட்டது. பதவியேற்பு விழாவுக்கு உமா, திருநாவுக்கரசு இருவரும் டெல்லிக்கு வந்து கலந்து கொண்டிருந்தனர்.

பதவியேற்பு விழா முடிந்ததும் முக்கிய தலைவர்கள் அனைவரும் வந்து கல்யாணி அம்மாவுக்கு மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். இளங்கோ ஒரு பெரிய ஆளுயர மாலை கொண்டு வந்து கல்யாணி அம்மாளுக்கு அணிவித்து கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தான். அவனிடம் மாலையைப் பெற்றுக்கொண்ட கல்யாணி அம்மாள் பக்கத்திருந்த உமா கையிலிருந்து ஒரு அழகாக அலங்கரிக்கப்பட்ட கிஃப்ட் பார்சலை வாங்கி இளங்கோவிடம் கொடுத்தார். இளங்கோ அதை வாங்கி ஆச்சரியமாக அவர் முகத்தைப் பார்க்க, கல்யாணி அம்மாள் அவன் முகத்தைப் பார்த்து பொருள் பொதிந்த புன்னகை ஒன்றை உதிர்த்து வைத்தார்.

ஆர்வம் தாங்காத இளங்கோ வேகமாக தனது அறைக்குச் சென்று அந்தப் பார்சலைப் பிரிக்க அதில் பவளத்தால் இழைக்கப்பட்டது போன்ற அழகான செந்நிற முன்னோக்கிப் பாயும் குதிரையின் சிற்பமொன்று இருந்தது. அதன் வயிற்றுப் பகுதியைத் திறந்து பார்த்தபோது அழகான மூன்று குட்டிச்சாவிகள் இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் மூன்று கேள்விகளுக்கான பதில்களும் எழுதப்பட்டிருந்தது. இளங்கோவின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

சற்று நேரத்தில் செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. உடனடியாக மீண்டும் விழா நடந்த அரங்கத்துக்குத் திரும்பிய இளங்கோ கல்யாணி அம்மாள் அருகில் அமர்ந்து கொண்டான்.

செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கல்யாணி “எனது கனவு, இலட்சியம் எல்லாமே தேசிய நதிநீர் இணைப்பு மற்றும் நீர்வழிச்சாலை திட்டம்தான். இந்த நாட்டை உண்மையாக நேசித்த பல உன்னதத் தலைவர்களின் ஏக்கம் இது. நிறைவேற்றுவதில் பல சவால்கள் இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் அதற்காக நமது நாட்டை சொர்க்கபூமியாக மாற்ற வல்லமையுள்ள இந்த திட்டத்தை தொடங்குவதில் இனியும் தாமதித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமிலை.

சுற்றுச்சூழலுக்கு எந்தவித பங்கமும் ஏற்படாத வகையில், அனைத்து மாநில நலனையும் கருத்தில் கொண்டு வெகு அற்புதமான ஒரு திட்டத்தை வெகு விரைவில் உங்கள்முன் சமர்ப்பிக்கவிருக்கிறேன். உறுதியாக இனி எந்த சுணக்கமும், தடையும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இருக்காது.”

கல்யாணி அம்மாளின் கண்களில் இருந்த நேர்மையையும், பேச்சில் இருந்த உறுதியையும் கண்ட செய்தியாளர்கள் இது அரசியல்வாதிகளின் வாயிலிருந்து வழக்கமாக வரும் சடங்காச்சாரமான பேச்சு அல்ல என்பதை உணர்ந்தவர்களாய் தங்களுக்குள் பேசிக்கொண்டனர், “இந்தம்மா பயங்கர straight forward-ன்னு சொல்லிக்கிறாங்க சார், இந்தத் துறை இப்ப ஒரு நல்லவங்க கையில் போயிருக்கு, நல்லது நடக்கும்னு நம்புவோம்…நல்லா பாசிட்டிவாவே எழுதுவோம்… அதைப் படிக்கிற நம்ம விவசாயிகளுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கட்டும்”

*********** *********** ***********

அத்தியாயம்: 42

திறந்திடு சீசேம்!

கோப்பெருஞ்சோழனின் வீட்டு வாசல்முன்னர் ஒரு கார் கிறீச்சிட்டு நின்றது. அதிலிருந்து இறங்கிய இளங்கோ வேகமாக வீட்டிற்குள் நுழைந்தான். கோப்பெருஞ்சோழன் அவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து வீட்டில் காத்திருந்தார். அன்றைக்கான அவரது அனைத்து அலுவல்களும் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அறைக்குள் நுழைந்து தாளிட்ட இளங்கோ, தனது பாக்கெட்டில் இருந்த மூன்று சாவிகளையும் எடுத்து கோப்பெருஞ்சோழனிடம் கொடுத்தான். அதை வாங்கிப் பார்த்து பெருமூச்சு விட்ட அவர் “இந்த மூணு வார்த்தையைத் தெரிஞ்சுக்கத்தான் இத்தனை பாடுபட்டோமா?” என்றார்.

இளங்கோ தனது மடிக்கணினியைத் திறந்து அந்த சுவிஸ் வங்கியின் இணையதளத்துக்குள் போய் அந்த Code Number-ஐக் கொடுக்க அது முதல் கேள்வியில் வந்து நின்றது.

இளங்கோ மடிக்கணினியை கோப்பெருஞ்சோழன் கையில் கொடுத்து “அப்பா உங்க கையால நீங்களே ஓப்பன் பண்ணுங்கப்பா..” என்றான்.

கோப்பெருஞ்சோழன் கடவுச்சொற்களை ஒவ்வொன்றாகப் போட கதவுகள் எதிர்ப்பின்றி ஒவ்வொன்றாகத் திறந்தன. மூன்றாவது கதவை திறந்து அக்கவுண்ட்டுக்குள் போய் பார்த்தவர்களுக்கு....

இதயம் வெடித்துவிடும்போல இருந்தது... வங்கிக் கணக்கில் இருப்புத் தொகை 00.00 என்று காட்டியது...

கோப்பெருஞ்சோழனின் முகம் சிவந்தது...இளங்கோவைப் பார்த்தார், அவன் அசைவின்றி சிலைபோல அமர்ந்திருந்தான். வேகமாக transaction history-யைச் சென்று பார்த்தவன். அங்கு அத்தனை விபரங்களும் டெலீட் செய்யப்பட்டிருப்பதைக் கண்டான்.

கோப்பெருஞ்சோழன், “வழிச்சு துடைச்சிட்டு நம்மகிட்ட குடுத்திருக்காடா...” இளங்கோவின் முகத்தில் கோபக்கனல் வீசியது... மொபைலை எடுத்து கல்யாணி அம்மாளுக்கு போன் செய்தான். அவர் போனை எடுக்கவில்லை...

இளங்கோ, “ரொம்ப தெளிவா நம்மள ஏமாத்திட்டாப்பா அந்தப் பொம்பளை...”

கோப்பெருஞ்சோழன், “இதுக்குத்தாண்டா சொன்னேன், அவகிட்ட ரொம்ப ஜாக்கிரதையா டீல் பண்ணுன்னு, நீ செஞ்ச வேலை இன்னிக்கு அவ சென்ட்ரல் மினிஸ்டரா உட்காந்திருக்கா...”

இளங்கோ, “நம்ப வச்சு கழுத்தறுத்துட்டாப்பா...”

கோப்பெருஞ்சோழன் உக்கிர கோபத்துடன், “அரசியல்ல நேத்து முளைச்ச காளான்...என்னோட சுயரூபம் தெரியாம விளையாடிப் பார்த்துட்டா... இனி விடமாட்டேன். இனி வாங்கப்போற அடிய சாகுற வரைக்கும் அவ மறக்கக்கூடாது”

*********** *********** ***********

அத்தியாயம்: 43

(ஹார்ட்) பிரேக்கிங் நியூஸ்

கோப்பெருஞ்சோழனைப் பொறுத்தவரையில் அரசியல் வாழ்க்கையில் தான் சந்தித்த மிகப்பெரிய அவமானமாக இதை கருதினார். அவருக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. “பெரிய பெரிய நேஷனல் லெவல் தலைவர்கள் கண்ணுலயெல்லாம் விரலை விட்டு ஆட்டுன என்னை, நேத்து அரசியலுக்கு வந்த ஒரு பொம்பள முட்டாளாக்கிட்டாளே!

36 ஆயிரம் கோடி பணத்தை அடையமுடியவில்லை என்ற வருத்தத்தைவிட ஒரு பெண்ணிடம் தாம் அவமானப்பட்டு விட்டோமே என்ற எண்ணம் அவரை ரொம்பவே வதைத்தது. வழக்கமாக காலை 4.00 மணிக்கே எழுந்துவிடும் அவருக்கு அன்று 4.00 மணிக்குத்தான் தூக்கமே வந்தது.

காலை 7.00 மணி…

திடீரென்று கோப்பெருஞ்சோழனின் அறையில் இருந்த டெலிபோனும், அவரது இரண்டு செல்போன்களும் ஒருசேர அலற, திடுக்கிட்டு எழுந்தவர் தனது இரு செல்போன்களில் அலறலயும் நிறுத்திவிட்டு டெலிபோனை எடுத்து காதில் வைத்தார்…

மறுமுனையில் சற்று பதட்டமாகப் பேசிய குரல் சொன்னதைக் கேட்டு கோப்பெருஞ்சோழன் பொறுமையின்றி கத்தினார், “ஏய்..இரு ..இரு…நீ என்ன சொல்றேன்னே எனக்குப் புரியல. கொஞ்சம் தெளிவா சொல்லு”

ம்ம்…

ம்ம்…

ம்ம்ம்…

போனைக் கட் செய்துவிட்டு…குழப்பத்துடன் தனது மடிக்கணினியைத் திறந்தவர் ஃபேஸ்புக்குக்குச் சென்று பார்த்த காட்சியை அவர் கண்களாலேயே நம்ப முடியவில்லை.

அந்தப் பதிவு ஃபேஸ்புக்கில் சரியாக அரை மணி நேரத்துக்கு முன்புதான் போஸ்ட் செய்யப்பட்டு இருந்தது. அதற்குள் 56 பேர் அதைப் பகிர்ந்திருந்தார்கள். ஒரு சில கமெண்ட்டுகள் இருந்தன… அந்தப் பதிவை இட்டிருந்தவன் அன்றுதான் ‘ராபின்ஹூட்’ என்ற பெயரில் அந்த பேஸ்புக் அக்கவுண்ட்டை தொடங்கியிருந்தான். பழைய ராபின்ஹூட் படத்தில் நடித்த நடிகர் Errol Flynn பச்சை நிற உடையில் ராபின்ஹூட் வேடத்தில் தோன்றும் படத்தை Profile Picture-ஆக வைத்திருந்தான்.

அந்த ஆங்கிலப் பதிவின் தமிழாக்கம் இதுதான்:

இந்திய மக்களுக்கு வணக்கம், நான் ராபின்ஹூட். எந்த தேச எல்லைகளுக்குள்ளும் கட்டுப்படாதவன், ஏழைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிரானவன். மக்களைச் சுரண்டும் கருங்காலிகளைக் கருவறுக்க வந்த சைபர் சூப்பர்மேன்… இங்கே ராபின்ஹூட் என்பது தனிமனிதன் அல்ல…நாங்கள்

உலகம் முழுவதுதிலிருந்தும் சுரண்டலுக்கும் ஊழலுக்கும் எதிராக இணையம் வழியாக அணிதிரண்டுள்ள சைபர் போராளிகள், ஹேக்கிங் நிபுணர்கள்!

இந்தியா மக்கள் வெள்ளையர்களிடம் சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் ஆன பின்னரும் இன்னும் கொள்ளையர்களிடம் சிக்கித் தவிப்பதை நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இப்போதெல்லாம் கத்தியின்றி இரத்தமின்றி அலிபாபா கொள்ளையர்களின் கருவூலத்துக்குள் புகுந்து கொள்ளையிட முடியும். அதற்கான வழியை தொழில்நுட்ப வளர்ச்சி நமக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

ஏழை மக்களே! அரசியல்வாதிகள் உங்கள் கண்களில் மண்ணைத்தூவி உங்களைச் சுரண்டி சர்வதேச வங்கிகளில் சேர்க்கட்டும், நாங்கள் அவர்கள் கண்களில் மண்ணைத் தூவி அவர்களின் வங்கிக் கணக்குகளுக்குள் புகுந்து, அதைக் கொள்ளையிட்டு உங்கள் பணத்தை உங்களிடமே திருப்பி சேர்க்கிறோம்!

எங்கள் பட்டியலில் உள்ள முதல் குற்றவாளி இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதி கோப்பெருஞ்சோழன். அவர் சுவிஸ் வங்கியில் சேர்த்துவைத்த கறுப்புப்பணம் ரூபாய் 36 ஆயிரம் கோடியை எங்கள் குழுவின் ஹேக்கர்கள் வங்கிக் கணக்கை உடைத்து திறமையாக கைப்பற்றியிருக்கிறார்கள். அந்தப் பணத்தை முழுவதுமாக இந்திய தேசத்துக்கு நன்மையளிக்கும் பிரதமரின் நதிநீர் இணைப்புத்திட்ட ஃபண்டுக்கு நாங்கள் transfer செய்கிறோம். அதற்கான ஆதாரங்களை கீழே இணைத்துள்ளோம்.

இந்திய அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கை! பொறுப்புள்ள பதவிகளில் இருப்பவர்கள் உட்பட 96 பிரபல இந்திய அரசியல்வாதிகளின் வங்கிக் கணக்குகள் எங்களிடம் சிக்கியிருக்கிறது. அவற்றை ஒவ்வொன்றாக விரைவில் வெளியிட்டு அந்தப் பணத்தையும் மக்களிடமே சேர்க்கவிருக்கிறோம். வங்கிக்கணக்கு போலிப் பெயரில்தானே இருக்கிறது, நாம் சிக்கமாட்டோம் என்று இருமாப்பாய் இருந்துவிடாதீர்கள். கோப்பெருஞ்சோழனை எப்படிக் கண்டுபிடித்தோம் என்று பார்த்திருப்பீர்களே!… அந்த வங்கிக்குள்ளேயே சில நல்லவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக உங்கள் உண்மைப் பெயரின் பட்டியல் எங்கள் கைக்கு ஏற்கனவே வந்துவிட்டது…

Your count down starts now…

இப்படிக்கு,
ராபின்ஹூட்

அந்த பதிவுடன் வங்கியின் இணையதள முகவரி, கொல்லைப்புறத்தின் உள்ளே செல்லும் எண்கள், வங்கிக் கணக்கின் கோட் நம்பர், மூன்று கேள்விகளுக்கான பதில்கள், 36 கோடி பணம் இருந்த screen-shot, அதை பிரதமர் நதிநீர் இணைப்பு ஃபண்டுக்கு transfer செய்த விபரங்கள் அடங்கிய screenshot ஆகிய அனைத்தும் இணைக்கப்பட்டிருந்தது.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் அந்த அக்கவுண்ட் உரிமையாளர் பெயரில் Tim Joyson என்ற போலிப்பெயர் மாற்றப்பட்டு C.Kopperunchozhan என்று திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

கோப்பெருஞ்சோழன் ஒரு 5 நிமிடம் எடுத்து எல்லாவற்றையும் படித்து ஆதாரங்களைப் பார்த்து முடிப்பதற்குள் அப்பதிவை 800 பேர் பகிர்ந்திருந்தனர். அது வைரஸை விட வேகமாகப் பரவத் தொடங்கியிருந்தது.

“இள்ளக்ங்ன்கோ…”

கோப்பெருஞ்சோழன் கத்தியதில் வீடே குலுங்கியது…

இளங்கோ வேகமாக ஓடி வந்து அவரது அறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். அவனிடம் தனது மடிக்கணினியை வீசி எறிந்தார், “என்னடா இது…யாரு செஞ்ச வேலடா இது?”

இளங்கோ, “அதாம்ப்பா எனக்கும் இப்பத்தான் ஒரு போன் வந்துச்சு… என்ன போஸ்ட் அது?”

இளங்கோ அவரது மடிக்கணினியை எடுத்து அந்தப் பதிவைப் பார்த்தான், அவனுக்கு வியர்த்து ஊற்றியது.

இளங்கோ படித்துக் கொண்டிருக்கும்போதே கோப்பெருஞ்சோழன் கல்யாணி அம்மாளை அச்சிலேற்ற முடியாத கொடூரமான வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தார். தன் அப்பா இவ்வளவு மோசமான வார்த்தைகளைப் பேசி இளங்கோ இதுவரைக் கேட்டதே இல்லை.

அதைப் படித்துவிட்டு இளங்கோ தாமதிக்காமல் ஒன்றிரெண்டு பேருக்கு போன் செய்தான்… அடுத்த ஒரு மணி நேரத்தில் ஃபேஸ்புக் அந்த அக்கவுண்ட்டை நீக்கியிருந்தது. ஆனால் அந்த பதிவை பகிராமல் காப்பி பேஸ்ட் செய்தவர்கள் மட்டும் கிட்டத்தட்ட 5000 பேர், அதைப் பகிர்ந்தவர்களின் எண்ணிக்கைக்கு கணக்கில்லை. அனைத்து இந்திய மீடியாக்களும் அலறத் தொடங்கியிருந்தன. அஸ்வா டிவி மட்டும் வழக்கம்போல(!) இயங்கிக் கொண்டிருந்தது.

ஒட்டுமொத்த இந்திய ஊழல் அரசியல்வாதிகளுக்கும் அல்லையைப் பிடித்தது. யார் அந்த ராபின்ஹூட்? அந்த 96 அக்கவுண்ட்டுகளில் என்னுடையதும் இருக்கிறதா?

அந்த ஒரு ஃபேஸ்புக் பதிவு சர்வதேச அளவில் ஒரு பெரிய அதிர்வை ஏற்படுத்தியிருந்தது. அந்த குறிப்பிட்ட வங்கி அந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்து இருந்தது. எங்கள் வங்கியில் அப்படி கறுப்புப்பணம் போட்டுவைக்கும் எந்த வசதியும் இல்லை. இது எங்கள் வங்கியின் மீது சேற்றைவாரி இறைக்கும் முயற்சியன்றி வேறல்ல என்று ஒரு அறிக்கையுடன் முடித்துக் கொண்டது. அந்த வங்கிக்கணக்கு சம்பந்தப்பட்ட தடையங்கள் அனைத்தையும் அது தனது இணையதளத்திலிருந்து நீக்கியிருந்தது. ஆனாலும் அந்தப் பதிவு இடப்பட்ட சில ஒரு மணி நேரம் வரை அந்த அக்கவுண்ட் ஆக்டிவ்வாக இருந்ததை உள்ளே போய்ப்பார்த்த பலர் சாட்சியாக சமூகவலைதளங்களில் பகிர்ந்திருந்தார்கள்.

அந்தப் பதிவில் இருந்ததுபோல பிரதமர் நதிநீர் இணைப்பு ஃபண்டில் 36 கோடி ரூபாய் சேர்ந்திருக்கிறதா என்பதை அறிய தகவலறியும் உரிமை சட்டத்தின் வாயிலாக அந்த ஒரு நாளில் மட்டும் சுமார் 3700 பேர் மனு அளித்திருந்தனர். தருணத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட கல்யாணி அம்மாள், “கடந்த இரு நாட்களுக்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் இருந்து பிரதமர் நதிநீர் இணைப்பு ஃபண்டில் 36 ஆயிரம் கோடி ரூபாய் வந்தது உண்மைதான். ஆனால் அதில் தமிழக முதல்வரை தொடர்புபடுத்துவது குறித்து அவர்தான் விளக்கமளிக்க வேண்டும்” என்று பேட்டியளிக்க இந்தியா முழுவதும் பரபரப்பு பற்றிக்கொண்டது.

ஒட்டுமொத்த இந்தியாவும் கோப்பெருஞ்சோழன் என்ன சொல்லப்போகிறார் என்பதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது

*********** *********** ***********

அத்தியாயம்: 44

அறுவடை நாள்

அன்று காலை 11.00 மணிக்கு முதல்வர் கோப்பெருஞ்சோழன் செய்தியாளர்களை சந்தித்தார். செய்தியாளர்கள் வீசிய கேள்விக் கணைகளுக்கு பொறுமையாக பதிலளித்தார்.

கோப்பெருஞ்சோழன், "நான் சொல்றத கொஞ்சம் கவனமா கேளுங்க, என்னுடைய 48 வருட அரசியல் வாழ்க்கையை மொத்தமா குழிதோண்டி புதைக்கணுங்கிற நோக்கத்தோடு எதிரிகள் செஞ்ச வேலைதான் இது. அது என்னுடைய வங்கிக் கணக்கு என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. எங்களிடம் அப்படியொரு கணக்கு இல்லங்கிறதை அந்த வங்கியும் மறுத்திருச்சு, அப்புறம் ஏன் இன்னும் இதை பிரச்சனையாக்கிக்கிட்டே இருக்கீங்க?"

செய்தியாளர்களில் ஒருவர், "இல்லசார், இரண்டு நாட்களுக்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் இருந்து பிரதமர் நதிநீர் இணைப்பு ஃபண்டில் 36 ஆயிரம் கோடி ரூபாய் வந்தது உண்மைதான் அப்படீன்னு உங்க கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சரே ஒத்துக்கிட்டு இருக்காங்க. அதுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க?"

கோப்பெருஞ்சோழன், "ப்ச்…அதை நான் மறுக்கலங்க, ஏதோ ஒரு வங்கிக்கணக்கிலிருந்து பிரதமர் நிதிக்கு 36,000 கோடி ரூபாய் போயிருக்கலாம். ஆனா அதுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லைங்கிறதுதான் என்னுடைய வாதம். ஃபேஸ்புக்ல வந்தது முழுக்க முழுக்க போட்டோஷாப் செய்யப்பட்ட அவதூறு குற்றச்சாட்டு அவ்வளவுதான். அந்த போலி ஃபேஸ்புக் பதிவைத் தவிர வேறு என்ன ஆதாரம் இருக்கு உங்ககிட்ட"

செய்தியாளர் சந்திப்பு இப்படி கிட்டடத்தட்ட ஒரு மணி நேரம் நீண்டது. அனைத்து டிவிக்களும் அதை நேரடியாக ஒளிபரப்பினர். பதவி விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற கோப்பெருஞ்சோழன் தனது தரப்பு வாதத்தை ஆணித்தரமாக எடுத்துரைத்திருந்தார். ஆனாலும் தவறு செய்த அரசியல்வாதிகள் இப்படித்தான் பேசி மழுப்புவார்கள் என்ற எண்ணம் மக்கள் மனதில் பதிந்து விட்டிருந்ததால் அவரது வாதத்தை யாரும் நம்பத் தயாராக இல்லை.

இந்த விவகாரத்தையொட்டி ஆளுங்கட்சியில் சலசலப்பு ஏற்பட்டிருந்தது. இந்தச் சூழலில் கட்சியைக் காப்பாற்ற கோப்பெருஞ்சோழன்; கட்சி மற்றும் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகினால் நல்லது என்று கட்சி பிரமுகர்கள் தங்களுக்குள் பேசத் தொடங்கியிருந்தனர். ஆனால் பூனைக்கு யார் மணிகட்டுவது என்ற பயத்தில் யாரும் வாய் திறக்கவில்லை.

ஆனால் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் விதத்தில் கோப்பெருஞ்சோழனுக்கு எதிராக துணிச்சலாக ஒரு குரல் முதலாவதாக எழும்பியது…

அந்தக் குரல்…

இளங்கோவினுடையது…

கோப்பெருஞ்சோழனின் செய்தியாளர் சந்திப்பு முடிந்து அடுத்த ஒரு மணி நேரத்தில் இளங்கோ அஸ்வா டிவியில் தோன்றிப் பேசினான்…

“பேரன்பு கொண்ட தமிழக மக்களுக்கும், கட்சியின் தொண்டர்களுக்கும் எனது தாழ்மையான வணக்கங்கள். தமிழக அரசியலில் நிலவும் அசாதாரணமான சூழலை நீங்கள் அறிவீர்கள். நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த எட்டு ஆண்டுகளாக தமிழகத்தில் ஒரு நிலையான ஆட்சியைக் கொடுத்திருப்பதும், மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் நடத்தி வருவதும் நாம் யாவரும் அறிந்ததே!

ஆனாலும் திடீரென்று சமீபத்தில் அவர்மீது சாட்டப்பட்ட ஒரு பொய்க் குற்றச்சாட்டு நம் அனைவருக்கும் மிகுந்த அதிர்ச்சியையும் மனவருத்தத்தையும் கொடுத்திருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்று நிரூபிக்க வேண்டிய கடமை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கிறது. ஸ்ரீ இராமனது சந்தேகத்தைப் போக்க எப்படி சீதாபிராட்டி நெருப்பில் இறங்கினாரோ அதே துணிச்சலோடும் நேர்மையோடும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கட்சி மற்றும் ஆட்சிப்பொறுப்பிலிருந்து விலகி தனது தரப்பு உண்மையை நிரூபிக்க கடமைப்பட்டிருக்கிறார். அவர் அப்படிச் செய்யும் பட்சத்தில் அது இந்திய அரசியலில் ஒரு சிறந்த முன்னுதாரணமாக அமையும். பதவியின் கண்ணியமும் காக்கப்படும். கட்சியின் பொறுப்பாளர்கள் அவர்மீது கொண்ட அன்பின் காரணமாக இந்த கோரிக்கையை வைக்கத் தயங்குகிறார்கள். ஆனால் கட்சியின் நலன் கருதி அவர்கள் சார்பில் நான் இந்தத் தாழ்மையான வேண்டுகோளை முதல்வருக்கு விடுக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பின்னால் கோடிக்கணக்கான தொண்டர்களும், தமிழக மக்களும் இருக்கிறார்கள். அவர் விரைவில் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை பொய்யானது என்று ஆதாரங்களுடன் நிரூபிப்பார் என்று கட்சியின் அடிமட்டத் ஒருவனாக நானும் மனதார நம்புகிறேன். ஜெய்ஹிந்த்!

இளங்கோவின் இந்த அதிரடியை யாருமே எதிர்பார்க்கவில்லை. ஏற்கனவே எரிந்து கொண்டிருந்த நெருப்பில் பெட்ரோலை ஊற்றியதுபோல இளங்கோவின் பேச்சு அனைத்து ஊடகங்களிலும் புயலைக் கிளப்பியது.

இதையடுத்து அவசரவசரமாக கோப்பெருஞ்சோழன் ஒரு டிவிக்கு அளித்த பேட்டியில், “இளங்கோ அவர்கள் எந்தக் கட்சிப் பொறுப்பிலும் இல்லை. அவர் தான்தோன்றித்தனமாக அஸ்வா டிவியில் பேசிய பேச்சு வன்மையாக கண்டிக்கத்தக்கது. நான் எந்தக் குற்றமும் செய்யாத நிலையில் பதவிவிலக வேண்டும் என்று நிர்பந்திப்பது அநீதியானது. எனவே கட்சிக் கட்டுப்பாட்டை மீறி செயல்பட்ட காரணத்தால் இளங்கோவை அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து டிஸ்மிஸ் செய்கிறேன்” என்று அறிவித்தார்.

இந்தக் கருத்து மோதலால் கட்சியின் முக்கால்வாசிப்பேர் இளங்கோவின் பக்கமும், கால்வாசிப்பேர் கோப்பெருஞ்சோழனின் பக்கமும் நின்றனர். இளங்கோ அதற்குப் பின்னர் வெளிப்படையாகவே பேச ஆரம்பித்தான் “தமிழக முதல்வர் பதவி விலக வேண்டும், கட்சியின் மிக மூத்த உறுப்பினரும், சுதந்திரப் போராட்ட தியாகியுமான ஐயா பாண்டிப்பெருமாள் முதல்வர் பதவியில் நியமிக்கப்பட வேண்டும்”

இதைத் தொடர்ந்து தமிழக அரசியலில் அப்பா - மகன் மோதல் உச்சகட்டத்தை எட்டியது. தியாகி பாண்டிப்பெருமாள் ஐயாவை முதல்வராக நியமிக்க வேண்டும் என இளங்கோ கோரியது தமிழக மக்களை வெகுவாகவே கவர்ந்தது. இளங்கோ கோப்பெருஞ்சோழன் வீட்டைவிட்டு வெளியேறி தனியே ஒரு வாடகை வீட்டில் குடியேறினான்.

தொலைக்காட்சிகளின் விவாத அரங்குகள் இப்போது சுவிஸ் வங்கியை விவகாரத்தை விட்டுவிட்டு அப்பா - மகன் மோதலை ஊதிப் பெரிதாக்கும் கடமையில் ஈடுபட்டிருந்தன. தமிழகத்தில் இளங்கோவுக்கு ஆதரவு பெருகியது.

அடுத்தடுத்து சூடுபிடித்த கருத்து மோதல்களால் ஒரே வாரத்தில் கட்சி இரண்டாக உடைந்தது. சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. நம்பிக்கை வாக்கெடுப்பில் கோப்பெருஞ்சோழன் படுதோல்வியடைந்தார். தமிழக ஆளுனர் இளங்கோ அணியை ஆட்சி அமைக்கும்படி அழைத்தார். பாண்டிப்பெருமாள் ஐயா தலைமையில் புதிய அமைச்சரவை அமைந்தது. கோப்பெருஞ்சொழன் அணியில் இருந்த கொஞ்சப் பேரும் அடுத்தடுத்து இளங்கோவின் அணியில் வந்து இணைய கோப்பெருஞ்சோழன் தனித்து விடப்பட்டார்.

கட்சி அலுவலகம், சின்னம், கட்சியின் பொதுச்செயலாளர் பதவி ஆகிய அனைத்தும் இளங்கோவின் கைக்கு வந்து சேர்ந்தது.

அடுத்த சில நாட்களில் நடிகை ஒருவர் கற்பழிக்கப்பட ஊடகங்கள் உட்பட அத்தனைபேரின் கவனமும் அந்தப் பக்கம் திரும்பியது. அரசியல் ஆரவாரங்கள் ஓரளவுக்கு அடங்கிய பிறகு ஒருநாள் இளங்கோ கோப்பெருஞ்சோழனை வீட்டில் போய்ப் பார்த்தான். அவர் மனதளவில் நொறுங்கியிருந்தார். அனைத்தும் திடீரென அவர் கைகளில் இருந்து பறிக்கப்பட்டது அவரை ரொம்பவே பாதித்திருந்தது.

இளங்கோ, “சாரிப்பா, நடந்தெதெல்லாம் ஒரு கனவா இருக்கக்கூடாதான்னு இருக்கு, உங்களை இப்படிப் பார்க்கவே எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு”.

கோப்பெருஞ்சோழன் விரக்தியாக ஒரு சிரிப்பை உதிர்த்தபடி, “அது ஒண்ணுமில்ல தம்பி, எல்லாம் விதிப்படிதான் நடக்கும், ஆனாலும் நல்ல வேளையா எதுவும் நம்ம கையை விட்டுப் போகல…”

இளங்கோ, “நீங்க பெரிய சாணக்கியன்தாம்ப்பா, உங்களுக்கெதிராகவே என்னை நீங்க அன்னிக்கு டிவில பேசச் சொன்னப்ப அது எனக்கு ஒரு விஷப்பரீட்சையா தெரிஞ்சது… ஆனா உங்க அரசியல் கணக்கு… சான்சே இல்லப்பா”

கோப்பெருஞ்சோழன் நிதானமாக,”ஹூம், அது இல்லாட்டி இத்தனை வருசம் இங்க குப்ப கொட்டிருக்க முடியாது தம்பி. இந்த நேரத்துல நாம ஒண்ணா நின்னுருந்தோம்னா ரெண்டு பேருமே எல்லாத்தையும் இழந்திருபோம். இந்த மாதிரி நேரத்துல நரித்தந்திரம் மட்டும்தான் உதவி செய்யும்…

ஒருபக்கம் எதிர்கட்சிகள் நாடாளுமன்றத்தையும், சட்ட மன்றத்தையும் அமளி பண்ணி முடக்கிருப்பாங்க, இன்னொரு பக்கம் கட்சிக்குள்ளயே அதிருப்தி, மூணாவதா மக்களுடைய அதிருப்தி அத்தனையும் நம்ம ரெண்டு பேரோட அரசியல் எதிர்காலத்தையும், கட்சியோட எதிர்காலத்தையும் இருட்டுல தள்ளிரும். இந்த சூழலை பயன்படுத்தி கல்யாணி கட்சியையும் கைப்பத்திருவா... அதனாலதான் இந்த ஏற்பாடு...வேற வழியே இல்ல...அதனாலதான் என்னை வில்லனாக்கி உன்னை ஹீரோவாக்கி ஒரு நாடகத்தை அரங்கேத்துனேன். அத்தனை பேர் கவனத்தையும் திசை திருப்பியாச்சு.

நான் ஏன் அந்த பாண்டிப்பெருமாளை நியமிக்கச் சொல்லச் சொன்னேன் தெரியுமா? அவர் ஒரு தியாகி, அவரு பேரைச் சொன்னா மக்களுக்கு பிடிக்கும், இன்னொன்னு அவர் இன்னும் ஆறு மாசம் தாங்குறது கஷ்டம் இப்பவே 88 வயசாச்சு. உடம்புல ஆயிரத்தெட்டு பிரச்சனைகள். (இளங்கோவின் தோள்களில் தட்டி) “இனி உன் காலம்…ஜமாய்!”

இளங்கோ அவரிடம் விடைபெற்று வெளியேறும் போது…

கோப்பெருஞ்சோழன், “இளங்கோ”

இளங்கோ நின்றபடியே திரும்பாமல், “என்னப்பா?”

கோப்பெருஞ்சோழன், “பவானி எப்ப வர்றா?”

இளங்கோ, “நாளைக்கு”

கோப்பெருஞ்சோழன் சோகமாக, “இந்தத் தனிமையிலதான் ஒரு பேரக்குழந்தை இருந்தா எவ்வளொ நல்லா இருக்கும்ணு தோணுது”

அப்பா சொன்னதைக் கேட்டு இளங்கோவின் முகம் மாறியது… அவரைத் திரும்பிப் பார்க்காமல், ஒன்றும் பேசாமல் விருட்டென்று வெளியேறினான்.

*********** *********** ***********

அத்தியாயம்: 45

மீண்டு(ம்) துளிர்த்த காதல்

உமாவும், திருநாவுக்கரசும் பெரும்பாலான நேரங்கள் கல்யாணி அம்மாளுடனேயே இருந்தனர். தான் கைது செய்யப்பட்டதற்குப் பிறகு உமா தனது வேலையை ராஜினாமா செய்திருந்தாள். கல்யாணி அம்மாள் அவர்கள் இருவரையும் தனது பிள்ளைகள் என்ற இடத்தில் வைத்துப் பார்க்கத் தொடங்கினார். டெல்லிக்கு சென்றாலும் அவர்களை தன்னுடன் கூட்டியே சென்றார். அவருக்கு அவர்கள் இருவரும் பல விதங்களில் உதவியாகவும் இருந்தார்கள்.

அர்ஜுனின் நினைவுகள் உமாவை வாட்டி வதைத்தன. “அவன் எனக்கு நேர்ந்த அநீதிக்கு பழிவாங்கத்தானே தனசேகரனைக் கொன்று இப்போது சிறையிலிருக்கிறான்! ஆனால் என்னதான் குற்றம் இழைத்திருந்தாலும் ஒரு உயிரை ஈவு இரக்கமின்றி அவன் கொன்றதை ஏற்றுக்கொள்ள முடியுமா? அதிலும் அந்தக் கொலைக்கு என்னையும் உடந்தையாக்கி…அது தவிர திருநாவுக்கரசு விஷயத்தில் அர்ஜுன் நடந்துகொண்ட விதம் மிகக் கொடுமையானதல்லவா, அவன் ஏன் அப்படி நடந்து கொண்டான்?”

“எது எப்படியிருந்தாலும் அர்ஜுன் நேர்மையானவன். நியாயத்தின் பக்கம் நிற்பவன். அவனது செயல்கள் தவறாக இருந்தாலும் நோக்கம் சுயநலமற்றது. அவன் செய்தது தவறாக இருந்தாலும் நான் அவனை இழக்கக்கூடாது. ஒருவழியாக அவள் மனம் குழம்பிக் குழம்பித் தெளிந்தது…மனப்போராட்டமும் ஒரு முடிவுக்கு வந்தது.

இந்தச் சூழலில் கல்யாணி அம்மாள் ஒருநாள் உமாவைப் பார்த்து திடீரென கேட்டார், “நீ இன்னும் அர்ஜுனை மறக்கலைல உமா?”

உமா அந்தக் கேள்விக்கு பதிலளிக்காமல் தலையை கவிழ்ந்தபடி அமைதியாக இருந்தாள்.

கல்யாணி அம்மாள், “என்னால உன் நிலைமையை நல்லாப் புரிஞ்சுக்க முடியுதுமா… நானும் உன் அனுபவங்களைக் கடந்து வந்தவதானே…ஆனா ஒரு தாயா என்னாலதான் அர்ஜுன் செஞ்சத மன்னிக்க முடியல.. நீ என்ன ஒரு மகாத்மாவையா பெத்து வச்சிருக்கன்னு அவன் கேட்ட கேள்வி இன்னும் என் காதுலயே ஒலிச்சுக்கிட்டு இருக்கு. (விரக்தியாக) ம்ம்ம்… நியாயமான கேள்விதான்! அவனும் என் மகனைக் கொல்லல, ஒரு காமவெறிபிடிச்ச மிருகத்தைத்தான் அழிச்சிருக்கான். ஆனா என்னதான் இருந்தாலும் என் மனசு அர்ஜுனை இன்னும் ஏத்துக்கப் பக்குவப்படல உமா… தாய் மனசு இல்லையா?…நான் அவனை புறக்கணிக்கலாம், ஆனா நீ அவனைப் புறக்கணிக்கிறதுல நியாயம் இல்ல. உன் காதல் எவ்வளோ உண்மையானதுன்னு எனக்குத் தெரியும். உனக்காக அவனை சீக்கிரம் வெளியில எடுக்க நான் முயற்சி பண்றேன். நீ கவலைப்படாதே..உனக்கு அவனைப் பார்க்கணும்னு தோணுச்சின்னா தாராளாமாப் போய்ப் பாரு.”

கல்யாணி அம்மாளின் வாயில் இருந்து அந்த வார்த்தை பிறக்க காத்திருந்த உமா உடனடியாக அர்ஜுனை சிறையில் சென்று சந்திக்க விண்ணப்பித்தாள். அவளைப் பார்க்க விரும்பாமல் அதை அர்ஜுன் புறக்கணித்திருந்தான். ஐந்து முறை அவள் தொடர்ந்து விண்ணப்பித்த பின் கடைசியாக ஆறாவது முறையாக அவளைச் சந்திக்க அவன் சம்மதித்தான்.

உமா அர்ஜுனை சந்திக்க சிறைக்குச் சென்றாள். அர்ஜுன் அமைதியாக வந்து நின்றான். அவன் நின்ற கோலத்தைப் பார்த்து உமா கதறி அழுதாள். அவன் சலனமின்றி எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

உமா அழுகையை நிறுத்துவிட்டு பேசத்தொடங்கினாள், “அர்ஜுன் உன்னை சீக்கிரம் வெளிய எடுக்க முயற்சி பண்றதா கல்யாணி ஆண்ட்டி சொன்னாங்க”

அர்ஜுன், “நான் வெளிய வர விரும்பல” அவன் பேச்சில் நிதானமும், தொனியில் கோபமும் தெறித்தன.

உமா, “ஏன்”

அர்ஜுனிடம் பதில் இல்லை…

உமா, “உனக்கு என் மேல அப்படி என்ன கோபம் அர்ஜுன். ஏன் திருநாவுக்கரசுகிட்ட அப்படி நடந்துக்கிட்ட, நாங்க என்ன பாவம் செஞ்சோம்?”

அர்ஜுன் அவள் முகத்தைக்கூட திரும்பிப் பார்க்க விரும்பாமல் ஒரே வார்த்தையில் பதில் சொன்னான், “நம்பிக்கை துரோகம்”

உமா, “நம்பிக்கை துரோகமா, நானா? கொஞ்சம் புரியும்படியா சொல்லு அர்ஜுன் ”

அர்ஜுன், “நான் சொல்லி புரிஞ்சுக்க வேண்டிய நிலையில நீ இல்ல. உனக்கே எல்லாம் தெரியும். நீ கிளம்பலாம்..நான் உன்னை இன்னொரு தடவை பார்க்க விரும்பல. அதை சொல்றதுக்குத்தான் இந்தமுறை உன்னை பார்க்குறதுக்கு சம்மதிச்சேன்”

அர்ஜுனிடம் அப்படிப்பட்ட கடினமான வார்த்தைகளை எதிர்பாராத உமா மீண்டும் அழத் தொடங்கினாள். “உன் பிரச்சனை என்னன்னு தெரிஞ்சாத்தானே அர்ஜுன் நான் என் தரப்பு நியாயங்களை சொல்ல முடியும். நீ இப்படி எதுவுமே சொல்லாம இருந்தா நான் என்னதான் பண்றது?”

அர்ஜுன், “நீ ஒண்ணுமே பண்ண வேணாம். எனக்கு ஏற்கனவே எல்லாத்தையும் தெளிவா புரிய வச்சிட்ட உமா, உன் அண்ணனுக்கு நீ பாஸ்வேர்டையும் கவிஞர்கள் பெயரையும் அனுப்பி வச்சிருந்த SMS-ஐ நான் பார்த்துட்டேன். அதுக்கும் மேல எனக்கு வேற என்ன புரியணும்”

அர்ஜுன் சொன்னதைக் கேட்டு உமா இடிந்து போய் உட்கார்ந்தாள். அந்த SMS-ஐ அர்ஜுன் பார்த்திருந்த விஷயம் இதுவரை உமாவுக்கு தெரியாது. தன்மீது அவனுக்கிருந்த கோபத்தின் காரணத்தையும், அதன் விளைவாகத்தான் அர்ஜுன் திருவை மிசோரமில் அடைத்து வைத்தான் என்ற உண்மையையும் அவள் அப்போது புரிந்து கொண்டாள். சிலவினாடிகள் கழித்து கண்களைத் துடைத்துவிட்டு அவள் நிமிர்ந்து பார்த்தபோது அர்ஜுன் அந்த இடத்தில் இல்லை…

அர்ஜுன்…

அர்ஜுன்…

கத்தினாள் பதில் இல்லை…

சில நிமிடங்களுக்குப் பின்னர் ஏதோ சொல்ல நினைத்தவனாக அர்ஜுன் திரும்ப வெளியே வந்தான், “நான் பண்ண ஒரு பெரிய தப்புக்காக உங்கிட்ட மன்னிப்பு கேட்கணும் உமா, அந்தப் பணத்தை நான் அவசரமா அனுப்ப வேண்டியிருந்தது. ஏழைக் குழந்தைகள் ஆபரேஷனுக்குன்னு உங்கிட்ட பொய் சொல்லி அந்தப் பணத்தை அனுப்பிச்சதுக்கப்புறம் என் மனசாட்சி என்னை ரொம்பவே வாதிச்சுச்சு. guilty-யா ஃபீல் பண்ணேன். மற்ற ஏற்பாடுகளெல்லாம் நேர்த்தியா செஞ்சிருந்ததால இதுல எந்தப்

பிரச்சனையும் வராதுன்னு நம்புனேன். ஆனா நான் நினைச்சதுக்கு நேருக்கு மாறா எல்லாம் நடந்திருச்சு. அதனால உனக்கு ஏகப்பட்ட பிரச்சனைகள், அவமானங்கள்…Im so sorry Uma” சொல்லிவிட்டு அவளிடம் பதிலை எதிர்பார்க்காமல் அவன் திரும்பிச் செல்ல முயற்சிக்க…

“அர்ஜ்ஜுன்…” உமா கோபமாகக் கத்தினாள்..

“இப்ப நான் சொல்றதை நீ கேட்கலைன்னா நீ என்னை கொலை செஞ்சதுக்கு சமம்… அதுக்குமேல உன் இஷ்டம்” உமா பேசிய தொனியின் உக்கிரத்தைக் கண்டு ஒரு நொடி உள்ளூர கலங்கிய அர்ஜுன் அவள் பேசட்டும் என்று அமைதியாக திரும்பி வந்து நின்றான்.

உமா அக்கவுண்ட் விஷயமாக திருநாவுக்கரசு அவளிடம் சொன்ன எல்லா விஷயங்களையும் அப்படியே அர்ஜுனிடம் ஒப்பித்தாள். கடைசியாக, “… உன்னையும், கல்யாணி ஆண்ட்டியையும், இந்த நாட்டையும் ஏமாத்திட்டு அந்தப் பணத்தை என் குடும்பத்தோடு சேர்த்து கொள்ளையடிச்சு அனுபவிக்கிற அளவுக்கு நான் மோசமானவ இல்ல அர்ஜுன். நீ எப்படி என்னை மாதிரிப் பொண்ணுங்க வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாதுன்னு தனசேகரனை அழிச்சியோ, அதே மாதிரிதான் நானும் மூணு பொண்ணுங்க அனாதையாகிடக் கூடாதுன்னு அந்த அக்கவுண்ட்டுல இருந்து கொஞ்சப் பணம் மட்டும் எடுத்துக்க சொல்லி பாஸ்வேர்டை திருநாவுக்கரசுகிட்ட கொடுத்தேன். அது சரின்னு நினைச்சேன்னா எங்கூடப் பேசு..இல்லைன்னா கிளம்பு”

அர்ஜுன் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வடிவதை உமா பார்த்தாள். அவளாலும் அழுகையை அடக்கமுடியவில்லை.

அர்ஜுன், “எனக்கு இந்த ஜெயில் கொடுமையை விட நீ எனக்கு நம்பிக்கை துரோகம் செய்துட்டியேங்கிற வேதனைதான் உமா என்னை கொடுமையா வாட்டி வதச்சிச்சு… ஆனா இப்ப எனக்கு அந்த பாரம் நீங்கிருச்சு… ஆக்சுவலா நீதான் அந்த அக்கவுண்ட் விபரங்களை திருநாவுக்கரசு கிட்ட கொடுத்திருப்பன்னு நான் நினைச்சுட்டேன். ஆனா சேவியர்ங்கிற வேற ஒரு ஆள் மூலமா உன் அண்ணன் கைக்கு அது போனது இப்பத்தான் எனக்கு தெரியுது”. கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். அவன் முகத்தில் லேசாக ஒரு புன்னகை பூத்தது. உமாவுக்கு பிரிந்த உயிர் மீண்டும் உடலுக்குள் வந்து சங்கமித்தது போல இருந்தது.

அர்ஜுன் சற்று உற்சாகமாக, “அப்புறம், எல்லா ரொம்ப நல்லபடியா முடிஞ்சிச்சு போல, பணம் பிரதமர் ஃபண்டுக்கு போயிடுச்சு, அத்தை மினிஸ்டர் ஆகிட்டாங்க… எப்படி எல்லாம் நடந்தது?”

உமா குதூகலமானாள், “ஐயோ அர்ஜுன்.. அது ஒரு சினிமா கிளைமாக்ஸ் மாதிரிடா… கிட்டவந்து காதைக் கொடேன்…”

*********** *********** ***********

அத்தியாயம்: 46

கிளைமேக்ஸ் - இரகசியம் (பிளாஷ்பேக்: 1)

உமா அர்ஜுனிடம் நடந்ததை இரகசியமாகச் சொல்லட்டும், நான் அதை வழக்கம்போல உங்களுக்கு பிளாஷ்பேக்காக சொல்லுகிறேன். ஆரம்ப அத்தியாயங்களில் விழுந்த பல முடிச்சுகளை அடுத்த இரு அத்தியாயங்களில் அவிழ்க்க வேண்டியிருக்கிறது.

கல்யாணி அம்மாள் அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட நாளில் மூன்று கேள்விக்கான பதில்களைத் தருவதாக அவர் இளங்கோவிடம் வாக்குக் கொடுத்ததையும் அந்த வாக்கை அவர் நிறைவேற்றியதையும் நாம் அறிவோம். அவர் பதவிப்பிரமாணம் முடித்து செய்தியாளர் கூட்டமும் முடிந்து தனது அலுவலகத்தில் அமர்ந்திருந்தார். அவருடன் உமா இருந்தாள். கல்யாணி அம்மாளின் மனம் மிகுந்த திருப்தியாக இருந்தது. வெகுநாட்களுக்குப் பிறகு அவரது முகத்தில் சிரிப்பை உமா பார்த்தாள்.

அறைக்கதவு தட்டப்பட்டது, உள்ளே நுழைந்தவன் இளங்கோ…

கல்யாணி அம்மாள், “வாப்பா இளங்கோ…சந்தோஷந்தானே…”

இளங்கோ மெலிதாக சிரித்தபடி வந்து அமர்ந்தான்.

கல்யாணி அம்மாள் அவன் முகத்தைப் பார்த்து குறும்பாக சிரித்தபடியே, “ஏம்ப்பா 36 ஆயிரம் கோடி இப்ப உன் கையில இருக்கு, அதுல இருந்து ஏதாச்சும் ஒரு சின்ன கொசுறு பணத்தையாவது நதிநீர் இணைப்பு திட்டத்துக்கு நன்கொடையாக் கொடுக்கலாமே!”

இளங்கோ, “இப்பவே கொடுக்கலாம்மா, பிரதமர் நதிநீர் இணைப்பு ஃபண்டோட அக்கவுண்ட் நம்பர் இருந்தா கொடுங்க”

கல்யாணி அம்மாள் அவனை ஆச்சரியமாகப் பார்த்தபடி தனது மொபைலில் குறித்து வைத்திருந்த வங்கி விபரங்களை அவனிடம் நீட்டினார்.

அதை வாங்கி தனது மடிக்கணினியைத் திறந்து செம்பருதியின் வங்கிக் கணக்கினுள் நுழைந்த இளங்கோ சிறிது நேரம் கழித்து தனது மடிக்கணினியை கல்யாணி அம்மாளிடமும் உமாவிடமும் காட்டினான்.

இளங்கோ, “நதிநீர் இணைப்புத்திட்டத்துக்கு என்னுடைய சார்பா நான் 36 ஆயிரம் கோடி கொடுக்கிறேன்…”

கல்யாணி அம்மாளும், உமாவும் பிரமித்துப் போயினர். பணம் transfer ஆகிக்கொண்டு இருந்தது. நடப்பவை கனவுபோல அவர்களுக்கு இருந்தது.

சிறிது நேரத்தில் செம்பருதியின் வங்கிக் கணக்கில் இருந்த மொத்தப் பணமும் பாரத பிரதமரின் நதிநீர் இணைப்புத் திட்ட நிதிக்கு transfer ஆகியிருந்தது. ஒவ்வொரு ஸ்கிரீனையும் இளங்கோ பிரிண்ட் செய்து வைத்துக் கொண்டான். கல்யாணி அம்மாள் பரவசத்தில் எழுந்து வந்து இளங்கோவைக் கட்டி அணைத்து உச்சந்தலையில் முத்தமிட்டார். அந்தத் தாயின் அணைப்பை எதிர்பாராத இளங்கோவின் கண்கள் கலங்கின.

கல்யாணி அம்மாள், "ஐய்யா எவ்வளோ பெரிய காரியம்யா செஞ்சுட்ட... நான் யார் யாரையெல்லாம் நம்புனனோ அவங்கள்ளாம் என்னை கைவிட்டுட்டாங்க... நான் யாரை மோசமானவன்னு நெனச்சேனோ அவனக்கொண்டு கடவுள் காரியத்தை நடத்தி முடிச்சிட்டாருய்யா" அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. உமா இளங்கோவை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள், அந்தப் பார்வையில் அவன் மீது அவளுக்கு மிகப்பெரிய மரியாதை ஏற்பட்டிருப்பது தெரிந்தது.

இளங்கோ, "இது ஆரம்பம்தாம்மா.. இனி தமிழ்நாட்டு அரசியலை தலைகீழா திருப்ப வேண்டிய வேலை இருக்கு. கொஞ்ச காலத்துக்கு முன்னாடி வரை நீங்க சொன்ன மாதிரி நான் மோசமானவன்தான்... ஆனா சமீபத்துல விழுந்த அடிகள் என் வாழ்க்கையோட போக்கை மாத்திருச்சு... சில தனிப்பட்ட குடும்ப விஷயங்களை என்னால உங்ககிட்ட ஷேர் பண்ண முடியாது (அது என்னன்னு நாம அடுத்த அத்தியாயத்துல பார்ப்போம்). ஆனா எங்கப்பாவோட ஜாதித்திமிர், அதிகார வெறி, பண ஆசை என் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கிருச்சும்மா".

"எங்கப்பாவை பழிவாங்கி, அவர்கிட்ட இருக்கிற எல்லாத்தையும் பறிச்சு அவரை மூலையில உட்கார வைக்கணும்னுங்கிற வெறியோட மட்டும்தான் என்னோட மாற்றம் ஆரம்பிச்சிச்சு. ஆனா உங்க செய்தியாளர் சந்திப்புல நதிநீர் இணைப்பு தொடர்பா நீங்க அறிவிச்ச அறிவிப்புகளைக் கேட்டுக்கிட்டு இருக்கும்போதே...உங்க வாழ்க்கை, உங்க நேர்மை, இந்த மண்ணு மேலையும் மக்கள் மேலையும் நீங்க வச்சிருக்க பாசம் எல்லாம் ஒருநொடி என் மனசாட்சியை உலுக்கிருச்சு...அரசியல்ல உங்களை மாதிரி ஒரு நல்லவங்களோட சேர்ந்து வேலை செய்யணும்னு தோணுச்சு, எல்லாத்தையும் மாத்தணும்னு தோணுச்சு...அதாம்மா"

கல்யாணி அம்மாள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய, "எத்தனையோ காலத்துக்கப்புறம் இன்னிக்குத்தாம்ப்பா என் வாழ்க்கையில ரொம்ப மகிழ்ச்சியா இருந்தேன், அந்த மகிழ்ச்சியை நீ இரட்டிப்பாக்கிட்ட மகனே, என் நாட்டுக்கு ஒரு நல்ல அரசியல்வாதி கிடைச்சுட்டான்..."

சில வினாடிகள் கழித்து கல்யாணி அம்மாளின் முகம் சுருங்கியது "உங்கப்பா உன் வாழ்க்கைய மட்டும் கெடுக்கல தம்பி... என் கணவருக்கு நடந்தது விபத்து இல்ல இளங்கோ...அது...அது...படுகொலை"

இளங்கோவுக்கு தலை சுற்றியது, அவனால் அதை நம்ப முடியவில்லை. செம்பருதி இறந்த நாளன்று கோப்பெருஞ்சோழன் அழுத நிகழ்வுகளெல்லாம் அவன் கண் முன்னே வந்து சென்றன. "இல்லம்மா, சான்ஸே இல்லை..எங்கப்பா கெட்டவர்தான்...ஆனா இதை என்னால நம்ப முடியல... எந்த ஆதாரத்தை வச்சு நீங்க அதைப் படுகொலைன்னு சொல்றீங்க, அதையும் எங்கப்பாதான் செஞ்சாருன்னு எப்படி சொல்றீங்க?"

கல்யாணி அம்மாள், "லீனா சொன்ன உண்மைகளை வச்சுத்தான் தம்பி"

இளங்கோவுக்கு மின்சாரம் தாக்கியதுபோல இருந்தது, "என்னது லீனாவா?"

கல்யாணி அம்மாள், "எல்லோரும் நினைக்கிற மாதிரி லீனா சாகலை தம்பி...அவ உயிரோடதான் இருக்கா (அவள் கொலை செய்யப்பட்ட விஷயம் கல்யாணி அம்மாளுக்குத் தெரியாது).. ஒரு மாசத்துக்கு முன்னாடி எனக்கு ஒரு போன் வந்திச்சு. எடுத்து பேசும்போதுதான் தெரிஞ்சது அது லீனா, மலேசியாவுல இருந்து பேசுனா. அவ சொன்ன உண்மைகள் என் உயிரை உலுக்குற மாதிரி இருந்துச்சு"

இளங்கோ அதிர்ச்சியுடன், "என்னம்மா பெரிய இடியை தூக்கி தலையில போடுறீங்க"

கல்யாணி அம்மாள், “உண்மைதான் தம்பி, லீனா சொன்னது இதுதான்… ஆரம்பத்துல உங்க அப்பாதான் என் கணவர்கிட்ட லீனாவை அனுப்பியிருக்கார். அது சாகுற வரைக்கும் என் கணவருக்கு தெரியாது. அவ ஒரு உளவாளி…

“என் கணவரும் லீனாவும் மலேஷியாவுல இருக்கும்போது உங்க அப்பா அவங்க சென்னைக்கு திரும்பி பிரயாணம் பண்ணப்போற தனி விமானத்தைப் பத்தின தகவல்களை லீனாகிட்ட கேட்டிருக்கார். அவளுக்கு அப்பவே லேசா சந்தேகம் வந்திருக்கு, ஆனாலும் அவர் கேட்ட தகவலை அவருக்கு கொடுத்துட்டா…அது ஒரு தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம். சென்னை திரும்புறதுகாக அவங்க கோலாலம்பூர் விமான நிலையத்துக்கு வந்தப்புறம்தான் அவளுக்கு தெரிஞ்சிருக்கு ஏற்கனவே திட்டமிடப்பட்ட விமானத்துல அவங்க பயணம் பண்ணப் போறதில்ல, விமானம், விமானி எல்லாமே மாற்றப்பட்டு இருந்திருக்கு. உங்கப்பாவும் அந்த விமான நிறுவனமும் சேர்ந்து ஏதோ சதி பண்ணிருக்கலாமோன்னு ஒரு சந்தேகம் லீனாவுக்கு வந்திருக்கு…”

“உடனே அவ என்ன பண்ணிருக்கா, எல்லா பரிசோதனைகளையும் முடிச்சிட்டு விமானம் ஏறப்போற நேரத்துல திடீர்னு ஏதோ ஒரு எமர்ஜென்சி கால் வந்த மாதிரி நடிச்சிட்டு… சிங்கப்பூர்ல இருக்க அவளோட சித்தி சீரியஸா இருக்காங்க அவங்களைப் போய் நான் பார்த்திட்டு நாளைக்கு பயணிகள் விமானத்தைப் பிடிச்சு சென்னை வந்துடறேன்னு சொல்லி என் கணவர்கிட்ட அனுமதி வாங்கிட்டு விமானநிலையத்தில இருந்து கிளம்பிட்டா. அதுக்கப்புறம் நடந்ததுதான் உனக்கே தெரியுமே!…அந்த விமானத்துல பயணம் செஞ்ச ஏழு பேருல 5 பேரு உடல் கிடைச்சிருச்சு, மீதம் இரண்டு பேர் உடல் மட்டும்தான் கிடைக்கல..லீனா அந்த விமானத்துல பயணம் செய்யவே இல்ல.…”

இளங்கோ இடிந்துபோய் உட்காந்திருந்தான். கோப்பெருஞ்சோழன் செம்பருதி மரணத்தின்போது அழுதது, 45 வருட பழக்கம் காரணமாக அவரை கொல்ல மனசாட்சி இடங்கொடுக்கவில்லை என்று சொன்ன பொய்கள் அனைத்தும் அவன் சிந்தையில் வந்து போனது…

கல்யாணி அம்மாள் தொடர்ந்தார். “லீனா இம்மிகிரேஷன் எல்லாம் கம்ப்ளீட் பண்ணிட்டுத்தான் அதுக்கப்புறம் எப்படியோ வெளியேறியிருக்கா… அதனால மலேசிய அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவள் விமானத்துல ஏறிப் போயிட்டதாத்தான் பதிவு ஆகியிருக்கும். ஆனா அவ அந்த விமானத்துல வரலைங்கிற விஷயம் அந்த விமான நிறுவனத்தின் மூலமாத்தான் உங்கப்பாவுக்குப் போயிருக்கணும். இந்த சதி இரகசியங்கள் தெரிஞ்ச லீனா இன்னும் உயிரோட இருக்கிறது உங்கப்பாவுக்கு ரொம்பவே உறுத்தியிருக்கு. அவளை தேடிப்பிடிச்சு கொல்லச்சொல்லி மலேசியாவுக்கு ஆள் அனுப்பியிருந்திருக்கார்”.

“லீனா மலேசியால இருக்கும்போதே ஒருநாள் போன்பண்ணி எனக்கு இந்த விஷயத்தை சொல்லிட்டா. ஏன்னா அப்பவே உங்கப்பாவோட ஆட்கள் அவளை துரத்த ஆரம்பிச்சதை தெரிஞ்சுக்கிட்டு இந்த இரகசியம் யாருக்கும் தெரியாமப் போயிடக்கூடாதுன்னு நினைச்சு எங்கிட்ட உண்மையைப் போட்டு உடைச்சிட்டா…அதுக்கப்புறம் அவ எப்படியோ மலேசியாவை விட்டு வெளியேறி தாய்லாந்துக்கு போனபோது அங்க இம்மிகிரேஷன்ல மாட்டிக்கிட்டா…அப்ப திரும்ப அவ எனக்கு போன் பண்ணா..நான் பாங்காக்ல எனக்கு தெரிஞ்ச அரசு உயரதிகாரி குடும்பம் ஒண்ணு இருக்கு. அங்க ரொம்ப செல்வாக்கு உள்ளவங்க. நானும் என் கணவரும் அங்க சுற்றுப்பயணம் போயிருந்தப்ப எனக்கு அவங்க பழக்கமானாங்க. அவங்க மூலமா நான்தான் அவளை அந்த இம்மிகிரேஷன் பிரச்சனையில இருந்து மீட்டேன். அதுக்கப்புறம் அவகிட்ட இருந்து எனக்கு எந்த போன்காலும் வரல. என்ன ஆனாளோ, எப்படி இருக்காளோ தெரியல”.

இளங்கோ அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாதவனாக…”எங்கப்பன் சாணக்கியன் இல்லம்மா சகுனி, அரசியலிலிருந்து அகற்றப்பட வேண்டியவர்… இவ்வளோ தெரிஞ்சும் ஏம்மா பேசாம இருந்தீங்க?”

கல்யாணி அம்மாள் விரக்தியாக, “சகல அரசியல் பலமும், தந்திரமும் பொருந்திய ஒரு அரக்கனை எதிர்த்து இந்த சாதாரண பொம்பளையால என்னப்பா பண்ண முடியும்... சாவுக்கு நீதி கேட்க என் புருஷனும் சத்தியவானா என்ன?...அதைவிட மக்களுக்கு பயன் தர்ற ஏதாவது ஒரு செயல்ல ஈடுபடலாம்னு தோணுச்சு. அதான் அர்ஜுனை நம்பி அந்த அக்கவுண்ட் விஷயத்துல இறங்கினேன். கடவுள் அருளால இப்ப எல்லாம் நல்லபடியா முடிஞ்சுச்சு..நான் சாகுறதுக்கு முன்னாடி எல்லா நதிகளும் இணைக்கப்பட்டு, இந்தியா முழுவதும் நீர்வழிச்சாலைகள் இயங்குறதைப் பார்த்திடணும்... இப்ப எனக்கு இருக்கிற ஒரே ஆசை இதுதான்”.

இளங்கோ, “கெட்டதை அழிச்சிட்டு நல்லது செஞ்சாத்தாம்மா அந்த நன்மை மக்களுக்கு கிடைக்கும். நீங்க ஆக்குறதையும், காக்குறதையும் பார்த்துக்கங்க.... நான் உங்களுக்கு பக்கத்துணையா இருந்து அழிக்கிற வேலையில இறங்குறேன்.

கல்யாணி அம்மாள், “ரொம்ப சந்தோஷம்ப்பா.. உன் உதவி எனக்கு இருந்திச்சின்னா என்னால எதையும் சாதிக்க முடியும்னு நம்பிக்கை இருக்கு”

இளங்கோ, “உமா”

உமா, “சொல்லுங்க சார்”

இளங்கோ, “நான் சொல்றதை அப்படியே இங்கிலீஷ்ல டைப் பண்ணு...(சொல்லி முடித்த பின்பு) ஃபேஸ்புக்ல ‘ராபின்ஹுட்’ -னு ஒரு அக்கவுண்ட் ஆரம்பிச்சு அதுல நான் சொன்னதை அப்படியே ஒரு பதிவாப் போடு, அதோட நான் ப்ரிண்ட் பண்ணி வச்சிருக்க ஸ்கிரீன்ஸ் எல்லாத்தையும் இணைச்சு நான் சொல்லும்போது அதை போஸ்ட் பண்ணு”

உமா, “ஓகே சார்”

இளங்கோ, “முக்கியமா எந்த ஐ.பி அட்ரஸ், எந்த ஏரியால இருந்து போஸ்ட் பண்ணிருக்காங்க, எதுவுமே யாராலேயும் டிராக் பண்ண முடியாதபடி இருக்கணும்”

உமா, “அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன் சார்...”

இளங்கோ எழுந்து கிளம்பும் முன்னர்.. கல்யாணி அம்மாளிடம், “நாளை மறுநாள் நாடே அதிரப்போகுதும்மா... நீங்க வேடிக்கை மட்டும் பாருங்க!”

*********** *********** ***********

அத்தியாயம்: 47

கிளைமேக்ஸ் - திருப்புமுனை (பிளாஷ்பேக்: 2)

கடந்த அத்தியாயத்தில் இளங்கோ கல்யாணி அம்மாளிடம், “கொஞ்ச காலத்துக்கு முன்னாடி வரை நீங்க சொன்ன மாதிரி நான் மோசமானவன்தான்…ஆனா சமீபத்துல விழுந்த அடிகள் என் வாழ்க்கையோட போக்கை மாத்திருச்சு… சில தனிப்பட்ட குடும்ப விஷயங்களை என்னால உங்ககிட்ட ஷேர் பண்ண முடியாது. ஆனா எங்கப்பாவோட ஜாதித்திமிர், அதிகார வெறி, பண ஆசை என் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கிருச்சும்மா”. என்று சொன்னது உங்களுக்கு நினைவிலிருக்கலாம்.

கடந்த அத்தியாயத்தை வாசித்த வாசக அன்பர்களுக்கு, இளங்கோவிடம் பார்த்த மாற்றம் ஆச்சரியமாகவும் சிலருக்கு நம்ப கடினமானதாகவும்கூட இருந்திருக்கலாம். தனஞ்செயன் மறைவால் இளங்கோவின் வீட்டில் ஏற்பட்ட பயங்கர அதிர்வுகளை இன்னொரு அத்தியாயத்தில் பார்க்கலாம் என்று நான் 27-ஆம் அத்தியாயத்தை நிறைவு செய்திருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைப் பாதையும் 180 டிகிரி திரும்ப எங்கோ ஏதோ ஒரு திருப்புமுனை காரணமாக இருக்கும். அப்படி இளங்கோ வாழ்வில் ஏற்பட்ட திருப்புமுனைதான் இது:

இளங்கோ சேவியரை கண்டுபிடித்து கொலை செய்தபின்பு அவனுக்கு தனஞ்செயன் மீது சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் தான் சேவியரைக் கண்டுபிடித்து கொன்றதை அவன் கோப்பெருஞ்சோழனிடம் சொல்லாமல் மறைத்துவிட்டான். காரணம் அதற்கு தனஞ்செயனே காரணமாக இருந்தாலும்கூட அந்த விஷயம் அப்பாவுக்குத் தெரிந்தால் அதைக் காரணம் காட்டி தனது திருமணத்தையும், பவானியையும் மேலும் தவறாகப் பேச வாய்ப்புண்டு என்பதாலும், அவரால் அவர்களுக்கு ஆபத்து நேரலாம் என்பதாலும் அதை மறைத்து டெல்லிக்கு செல்வதாக பொய் சொல்லிவிட்டு தனஞ்செயனை சந்திக்க மும்பை சென்றிருந்தான்.

மும்பையில்…

வெறிச்சோடிக் கிடந்த ஒரு மதிய நேரத்தில் தனஞ்செயன் அவனது அலுவலகத்தில் தனியாக ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். திடீரென்று அழைப்பு மணி ஒலிக்க கதவைத் திறந்தவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. வெளியே இளங்கோ நின்றிருந்தான்.

“அத்தான்! என்ன surprise இது? எப்படி வந்தீங்க? உள்ள வாங்க, உள்ள வாங்க”

உள்ளே நுழைந்த இளங்கோ, “அதிருக்கட்டும், ஊரே 144 போட்டிருக்காங்க, நீ இங்க தனியா ஆஃபீஸ்ல உட்காந்து என்ன பண்ற, எதுவும் சீக்ரெட் ப்ராஜெக்ட் போகுதோ?”

“இளங்கோ கேட்ட கேள்வியின் குதர்கத்தை அறியாத தனஞ்செயன், “உங்களுக்குத் தெரியாம அப்படி என்ன அத்தான் சீக்ரெட் இருக்கப் போகுது. அடுத்தவாரம் பெங்களூர்ல ஒரு presentation இருக்கு. அதுக்கு ரெடி பண்ணிக்கிட்டு இருக்கேன்”

இருவரும் பேசிக்கொண்டே தனஞ்செயனின் கண்ணாடி அறைக்குள் நுழைந்தனர்.

தனஞ்செயன், “நீங்க 144 போட்டிருக்க நேரத்துல எப்படி சர்வ சாதாரணமா வந்தீங்கங்கிறதுதான் எனக்கு ஆச்சரியமா இருக்குத்தான்…அதான் பொலட்டிகல் பவர்ங்கிறது!”

இளங்கோ தனஞ்செயனின் கண்களை கூர்ந்து பாத்து, “அந்த பொலட்டிகல் பவர் என்னன்னு தெரிஞ்சேதான் எங்கூட விளையாண்டியா?

தனஞ்செயன் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தான் அவன் குரலில் நடுக்கம் தெரிந்தது, “என்னத்தான் சொல்றீங்க? ஒண்ணும் புரியலயே!”

இளங்கோ டேபிளில் இருந்த ஒரு ஃபைலை எடுத்து தனஞ்செயன் முகத்தில் வீசி அடித்தான், “ நீ எங்கிட்ட எத்தனை கோடி வேணும்னு கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பேனே, அத விட்டுட்டு எங்கப்பா சொன்ன மாதிரியே கழுத்தறுத்திட்டியேடா துரோகி!” அந்த ஃபைலினுள் இருந்து விடுபட்ட காகிதங்கள் அறை முழுவதும் பறந்தன…

தனஞ்செயன் பயங்கர குழப்பத்துடன், “என்னத்தான் சொல்றீங்க, சத்தியமா நீங்க சொல்றது எதுவுமே எனக்குப் புரியல”

இளங்கோ, “புரியலையா? நீ அனுப்பிச்ச உளவாளி எங்கிட்ட சிக்கிட்டான்… அதுவாவது புரியுதா இல்லையா?

தனஞ்செயன் அதிர்ச்சியாக, “உளவாளியா! யாரத்தான் சொல்றீங்க?”

தனஞ்செயன் நடிப்பதாகக் கருதிய இளங்கோவுக்கு கோபம் அதிகமானது, “டேய் நடிக்காத” தனது ஜீன்ஸ் பாக்கெட்டில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து தனஞ்செயன் நெற்றியில் வைத்து, “இப்ப நீ உண்மையை ஒத்துக்கலேன்னா என் பொண்டாட்டியோட அண்ணன்னுகூடப் பார்க்கமாட்டேன் சுட்டுப் போட்டுட்டுப் போய்க்கிட்டே இருப்பேன்”

தனஞ்செயன் உள்ளம் நொறுங்கிப் போனான், “சுடுங்கத்தான், தயவு செய்து என்னை சுட்டுக் கொன்னுடுங்க…ஏதோ துரோகம்ங்கிறீங்க, உளவாளியை அனுப்பிச்சேங்கிறீங்க..எனக்கு எதுவுமே புரியல..இப்படி என்னை அசிங்கப்படுத்துறதுக்குப் பேசாம சுட்டுக் கொன்னுட்டுப் போயிடுங்க”

இளங்கோ தனது கைத்துப்பாக்கியை மீண்டும் பாக்கெட்டில் சொருகினான், “டேய்…சேவியர் ஒரு நிருபர் மாதிரி வேஷம் போட்டுக்கிட்டு எங்கப்பாவும் செம்பருதியும் படிச்ச மாவட்டத்துல இருக்க கல்வி அதிகாரிகிட்டப் போய் விபரங்கள் சேகரிக்க முயற்சி பண்ணிருக்கான்”

தனஞ்செயன் ஆடிப்போனான், “சேவியரா?”

இளங்கோ, “உன் நெத்தில நான் ஏன் பிஸ்டலை வச்சேன் தெரியுமா? நீதான் அந்த அக்கவுண்ட் விபரங்களை சேவியர்கிட்ட கொடுத்து ட்ராக் பண்ணச் சொல்லியிருப்பேனு நான் சந்தேகப்படுறதுக்கு எனக்கு ஸ்ட்ராங்கா ரெண்டு காரணங்கள் இருக்கு:

ஒண்ணு, நான் பிரிண்ட்-அவுட் எடுத்துட்டு டெலீட் பண்ண பிறகு அந்த அக்கவுண்ட் அவன் கையில எப்படி கிடைச்சது?

ரெண்டு, அந்த டாக்குமெண்ட்ல வெறும் கோட் நம்பர் மட்டும்தான் இருக்கு, பேங்க் எதுங்கிற டீட்டெயில் கூட அதுல இருக்காது. ஒரு சாதாரண ஆளான சேவியருக்கு அந்த பேங்க் எதுங்கிற விபரமும், அந்த வெப்சைட்ல எந்த நம்பரைப் போட்டு உள்ள நுழையனுங்கிற விபரமும் எப்படி தெரிஞ்சிச்சு? ஏன்னா அவன் அக்கவுண்ட்டை திறந்து, ஃபேவரைட் டீச்சர் யாருங்கிற முதல் கேள்வியைப் பார்த்துட்டுத்தான் மாவட்ட கல்வி அதிகாரி ஆபீஸ்ல போயி விபரங்கள் சேகரிக்க முயற்சி பண்ணிருக்கான்.

தனஞ்செயன் உணர்ச்சிகள் மரத்துப்போய் ஜடமென நின்றிருந்தான்.

இளங்கோ தொடர்ந்தான், "உன் நெத்தியில பிஸ்டலை வச்ச எனக்கு ட்ரிக்கரை அழுக்க எவ்வளவு நேரமாகி இருந்திருக்கும்? ஆனாலும் நான் ஏன் இன்னும் நின்னு பேசிக்கிட்டு இருக்கேன் தெரியுமா? இதுல உனக்கு சம்பந்தம் இருக்காதுன்னு நான் நினைக்கிறதுக்கும் எனக்கு ஸ்ட்ராங்கா ரெண்டு காரணங்கள் இருக்கு:

ஒண்ணு, நாம முதல் கேள்விக்கான பதிலைக் கண்டுபிடிச்ச மூணு நாள் கழிச்சுத்தான் சேவியர் அதே கேள்விக்கான பதிலை கண்டுபிடிக்க அந்த ஊருக்கு போயிருக்கான்.

ரெண்டு, அந்த கல்வி அதிகாரிகிட்ட அவன் செம்பருதியோட பள்ளிப்பருவம் பத்தின விபரங்களைக் கேட்காம, எங்கப்பாவைப் பத்தின விபரங்களைத்தான் கேட்டிருக்கான். அது ஏன்னு எனக்குப் புரியல. இந்த ரெண்டு காரணங்களையும் வச்சுப் பார்க்கும்போது உனக்கு இதுல சம்பந்தம் இல்லாம இருக்கவும் வாய்ப்பிருக்கு…

இளங்கோ பேசிக்கொண்டிருந்தவைகளை கேட்டுக்கொண்டிருந்த தனஞ்செயன் பதில் எதுவும் பேசாமல் தனது கம்பியூட்டரில் இருந்து சிசிடிவிக்கான மென்பொருளை ஓப்பன் செய்தான். அதில் இளங்கோ வந்து அந்த டாக்குமெண்ட்டை பிரிண்ட் எடுத்த அந்த நாளில் பதிவான வீடியோக்களைத் திறந்தான். அதில் சேவியருக்குப் பின்னால் தலைக்கு மேலே வைக்கப்பட்டிருந்த கேமராவின் பதிவுகளை அவன் ஓப்பன் செய்ய இளங்கோவும் அருகே வந்து நின்று பார்த்தான்…

இளங்கோவின் முகத்தை பயம் கலந்த வெறுப்புடன் பார்த்த தனஞ்செயன், "உங்க சந்தேகத்துக்கான பதில் இப்ப கிடைச்சிரும் அத்தான்…" அவன் முகம் அழுது வீங்கியிருந்தது.

அந்த வீடியோப் பதிவில் அந்த நாளில் பிரிண்ட்-அவுட் எடுக்க இளங்கோ வந்து உட்காந்தது, சேவியரிடம் லாகின் பாஸ்வேர்ட் கேட்டது, சேவியரும் அவனும் பேசிக்கொண்டது போன்ற பதிவுகள் கடந்தன. அதில் இளங்கோ பிரிண்ட்-அவுட் செய்த காகிதங்களை எடுத்துக்கொண்டு அந்த இருக்கையைவிட்டு எழுந்து போன சில நிமிடங்கள் கழித்து சேவியர் தனது கம்பியூட்டரில் ஒரு சாஃப்ட்வேரை திறந்தது அதில் பதிவாகி இருந்தது. தனஞ்செயன் அந்த இடத்தில் pause செய்து சேவியரின் கம்பியூட்டர் மானிட்டரை நோக்கி ஜூம் செய்து நிறுத்தினான்.

தனஞ்செயன், "இது ஃபைல்ஸ் ரெக்கவர் பண்ற சாஃப்ட்வேர் அத்தான். இந்த ஆபீஸ்ல எவனும் ஃபைல்ஸை ஒழுங்கா மேனேஜ் பண்ண மாட்டானுங்க. அடிக்கடி முக்கியமான ஃபைல்ஸ் எல்லாம் தொலைஞ்சு போயிடும். அதுக்காக நெட்வொர்க்ல இருக்கிற டெலீட் ஆன ஃபைல்ஸை எல்லாம் திரும்ப எடுக்கிறதுக்கு இந்த சாஃப்ட்வேரை நான்தான் வாங்கிக் கொடுத்தேன். அது வழியாத்தான் நீங்க டெலீட் பண்ண அந்த டாக்குமெண்ட்டை அவன் ரெக்கவர் பண்ணி எடுத்திருக்கிறான்".

இளங்கோ, "ஓ..ஷ்ஷ்ஷிட்…" தலை கவிழ்ந்தபடி சேரில் உட்காந்தான்…

தனஞ்செயன், "ஆனா அந்த பேங்க் பத்தின விஷயங்களெல்லாம் அவனுக்கு எப்படி தெரியும்ணு எனக்கு தெரியாதுத்தான். அதை என்னால கண்டுபிடிக்கவும் முடியாது. (தனது இரு கைகளையும் தோளுக்கு மேல் உயர்த்தி) உங்களுக்கு இன்னும் என் மேல சந்தேகமா இருந்தா இப்பவே சுட்டுக் கொன்னுட்டுப் போய்க்கிட்டே இருங்க"

இளங்கோ மிகுந்த குற்ற உணர்வுடன் தனஞ்செயனின் கைகளைப் பிடித்து, "ரொம்ப ரொம்ப சாரி மாப்ள…ப்ளீஸ் என்னை மன்னிச்சிரு"

தனஞ்செயன், “பரவாயில்லத்தான், நடந்த சம்பவங்களும் என் மேல உங்களுக்கு சந்தேகம் உண்டாகும்படிதான் நடந்திருக்கு, ஆனா ஒண்ணு தெரிஞ்சுக்கங்க அத்தான்…நாங்க ஏழைங்கதான் ஆனா எங்களுக்கு துரோகம் பண்ணத் தெரியாது” அவன் சொன்னது இளங்கோவுக்கு செவுளில் அறைந்தது போல இருந்தது.

தனஞ்செயன் மிகுந்த கோபத்துடன் போனை எடுத்து, “இருங்க அந்த நாய…”

இளங்கோ அவனை கைகாட்டி நிறுத்தினான், “விடு, அவன்கிட்ட உன்னால பேச முடியாது”

தனஞ்செயன், “ஏன்?”

இளங்கோ, “அவனைப் போட்டாச்சி”

தனஞ்செயனுக்கு பயத்தில் இரத்தம் உறைந்தது…

“சரி மாப்ள, திரும்ப சாரி கேட்டுக்கிறேன். எதையும் மனசுல வச்சுக்காத” என்றபடி குற்ற உணர்வோடு இறுகிய முகத்துடன் வெளியேறினான்.

தனஞ்செயன் தனது கைகளில் முகம் புதைத்து குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தான்.

இளங்கோ மறைக்க நினைத்தாலும் அவன் சேவியரை செந்தேற்பாக்கத்தில் வைத்து கொன்ற விஷயம் சம்பவம் நடந்த அன்று இரவே கோப்பெருஞ்சோழனுக்கு தெரிய வந்திருந்தது. ஆனால் அதைத் தனக்குத் தெரிந்ததாக அவர் இளங்கோவிடம் காட்டிக்கொள்ளவில்லை. கோப்பெருஞ்சோழனைப் பொறுத்தவரை தனஞ்செயன்தான் சேவியரை வைத்து அக்கவுண்ட் விஷயத்தில் டபுள் கிராஸ் செய்ததாக உறுதியாக நம்பினார். பவானி அவரது வீட்டுக்குள் காதல் என்ற பெயரில் நுழைந்ததே எதிர்கட்சி மற்றும் எதிர் சாதியின் சதி என்ற சந்தேகம் அவருக்குள் ஆழமாக வேரூன்றியிருந்தது. அவருக்கு அவன் குடும்பத்தின் மீது ஏற்கனவே இருந்த கோபத்தில் எண்ணெய் ஊற்றியதுபோல அது அமைந்துவிட்டது. இளங்கோவும் அவனும் நெருங்கிப் பழகியதை அவரால் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை. மும்பையில் நடைபெற்ற கலவரத்தைப் பயன்படுத்தி தனஞ்செயனை முடிக்க அதுவே சிறந்த தருணம் என்று அவருக்குத் தோன்றியது.

இளங்கோ அடுத்து தனஞ்செயனை சந்திக்க மும்பைக்குத்தான் போவான் என்று அவர் கணித்திருந்தார். இளங்கோ அங்கு செல்லும் முன்னரே தனஞ்செயனை கொல்வதற்கு அவர் அங்கு ஆள் ஏற்பாடு செய்திருந்தார். இளங்கோ தனஞ்செயனை சந்தித்துவிட்டு அவன் அலுவலகத்திலிருந்து வெளியேறிச் சென்றதும், கோப்பெருஞ்சோழனின் ஆட்கள் தனஞ்செயனை அவன் அலுவலகத்திலிருந்து கடத்திச் சென்று, சித்திரவதை செய்து, கடற்கரையில் வைத்துப் படுகொலை செய்தனர்.

தனஞ்செயன் இறந்த செய்திகேட்டு பவானி அலறி மயங்கி விழுந்தாள். அவளுக்கு நான்காவது முறையாக கருச்சிதைவு ஏற்பட்டது. இந்தமுறை அது அவளது உடலை ரொம்பவே பாதித்தது. அண்ணனின் கொடூர மரணமும், அடுத்த கருச்சிதைவும் அவளது மனநிலையை கடுமையாக பாதிக்க அவளுக்கு உடனடியாக தீவிர மனநல சிகிச்சை தேவைப்படுவதாக மருத்துவர்கள் எச்சரித்தார்கள். எனவே இளங்கோ அவளை தனது தாயார் மீனாட்சி அம்மாளுடன் அமெரிக்காவுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தான். நமது கதையில் நான் தனஞ்செயன் மறைவுக்குப் பின்பு பவானியைப் பற்றி எழுதாததற்குக் காரணம் இதுவே!

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவந்த பவானியின் உடல் மற்றும் மனநிலையில் விரைவில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் இனி தாய்மைக்கான வாய்ப்பு அறவே இல்லை என்பதை மருத்துவர்கள் உறுதியாகக் கூறிவிட்டனர்.

இளங்கோ தனஞ்செயன் இறந்த செய்தியை கேள்விப்பட்ட பின்பு அவனுக்கு கோப்பெருஞ்சோழன் மீதே வலுவான சந்தேகம் ஏற்பட்டது. மும்பை போலீஸில் உயர் பதவியில் இருந்த தனது நண்பர்கள் மூலம் தனஞ்செயனின் அலுவலகத்தில் இருந்த சிசிடிவி கேமராவின் பதிவுகளை கைப்பற்ற முயற்சி செய்தான். ஆனால் தனஞ்செயனின் அலுவலகத்தில் இருந்த சிசிடிவி கேமராக்கள் மற்றும் அதுசார்ந்த கருவிகள் அனைத்தும் சேதப்படுத்தப்பட்டிருந்தது தெரியவந்தது. அவனைக் கடத்த வந்தவர்கள் தங்கள் உருவங்கள் சிசிடிவியில் பதிவாகக்கூடாது என்ற நோக்கத்தில் அதை உடைத்திருப்பது தெளிவானது. எனவே இது திட்டமிட்ட படுகொலை, மதக்கலவரத்தில் எதேச்சையாக நிகழ்ந்த கொலை அல்ல. அந்தக் கொலையை தனது தந்தையைத் தவிர வேறு யாரும் செய்திருக்க முடியாது என்பதை இளங்கோ உறுதிப்படுத்திக் கொண்டான்.

தான் மிகவும் நேசித்த அப்பாவியான தனஞ்செயனைக் கொன்று, தன் மனைவி பவானி உடல்நிலையும் மனநிலையும் பாதிக்கப்படவும், அவள் கருவிலிருந்த தனது வாரிசு சிதைந்துபோகவும், தனக்கு இனி குழந்தைச் செல்வம் அறவே இல்லாமல் போகவும் காரணமான தனது தந்தை கோப்பெருஞ்சோழன் மீது இளங்கோவுக்கு கடுங்கோபம் ஏற்பட்டது. இவை அனைத்துக்கும் காரணம் அவருடைய சாதித்திமிர், அதிகார வெறி, பணத்தாசை ஆகியவையே!

அவரிடமிருந்து அதிகாரத்தை மொத்தமாகப் பிடுங்கி அவரை மூலையில் உட்கார வைத்தால் சாதித்திமிரும், அதிகாரபோதையும் தன்னால் அடங்கிப்போகும் என்று இளங்கோ நினைத்தான். அதைச் செய்ய தந்திரமாக அவருடைய வழியிலேயே சென்று நம்பவைத்துக் குழிபறிப்பதே சிறந்த வழி என்பதை அவன் அறிந்திருந்தான். அந்தச் சூழ்நிலையில் கல்யாணி அம்மாள் அவன் மனதில் ஏற்படுத்திய தாக்கம் அவனை ஒரு நல்ல அரசியல்வாதியாகவும் மாற்றிவிட்டிருந்தது.

*********** *********** ***********

அத்தியாயம்: 48

இனியெல்லாம் சுகமே!

இனி மீண்டும் நிகழ்காலத்துக்கு வருவோம். அர்ஜுனின் வழக்கு இன்னும் தீர்ப்பளிக்கப்படாத நிலையில் உமாவின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, அவனை அந்த வழக்கிலிருந்து விடுவித்து வெளியே கொண்டுவரும் முயற்சியில் கல்யாணி அம்மாள் இறங்கியிருந்தார். செம்பருதி ஊழல் செய்து சம்பாதித்த மற்ற சொத்துக்களையும் மீண்டும் மக்களிடமே சேர்க்கும் வேலை தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. இப்பொழுது அர்ஜுனுக்கு பதிலாக அந்த வேலையை திருநாவுக்கரசும் உமாவும் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் மூலம் சேவியர் குடும்பத்துக்கும் ஏராளமாக உதவிகள் கிடைத்துக் கொண்டிருந்தது.

ராபின்ஹுட் ஏற்படுத்திய புயலில் இந்திய அரசியல்வாதிகள் கதிகலங்கிப் போயிருந்தனர். அவர்களுக்கு அந்த சுவிஸ் வங்கியின் security மற்றும் privacy-யின் மீது இருந்த நம்பிக்கை சுத்தமாக அற்றுப் போயிருந்தது. பணம் போனாலும் பரவாயில்லை, ராபின்ஹுட் தங்கள் பெயரை அம்பலப்படுத்திவிட்டால் கோப்பெருஞ்சோழனுக்கு நடந்ததுபோல தங்கள் அரசியல் வாழ்க்கையே அஸ்தமித்துவிடும் என்று பயந்தார்கள். அவர்களில் சிலர் தங்கள் சரணடையும் விதமாக அக்கவுண்ட்டில் இருந்த பணத்தை பிரதமர் நதிநீர் இணைப்பு நிதிக்கு தாங்களே இரகசியமாக transfer செய்துவிட்டார்கள். இதன் விளைவாக நதிநீர் இணைப்பு நிதிக்கு தேவைக்கும் அதிகமாகவே பணம் வெகுசீக்கிரமே வந்து குவிந்தது.

தேவைக்கும் அதிகமான நிதி குவிந்ததையடுத்து நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் அடுத்த ஒரு சில நாட்களில் நதிநீர் இணைப்பு மற்றும் தேசிய நீர்வழிச்சாலை திட்டத்துக்கான அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியாகியது. அதன் ஆரம்ப கட்டப்பணிகள் போர்க்கால அடிப்படையில் துவங்கப்பட்டு இருந்தன.

அன்று அமெரிக்காவில் இருந்து பவானியும் மீனாட்சி அம்மாவும் திரும்புவதாக இருந்தது. இளங்கோ அடுத்த ஒரு மூன்று மாதங்களாவது அரசியல் அலுவல்களை குறைத்துக் கொண்டு பவானியுடன் நேரம் செலவிட வேண்டும், அவளை எங்கேயாவது சுற்றுப்பயணம் கூட்டிச்செல்ல வேண்டும் என்று நினைத்திருந்தான். நள்ளிரவு 2:30 மணிக்கே விமானம் சென்னை வந்தடைவதாக இருந்ததால் அவர்களை அழைத்துவர விமானநிலையத்துக்குச் சென்றுவிட்டான்.

பவானியும், அம்மாவும் வந்து சேர்ந்தார்கள். பவானி ஓரளவுக்கு தெளிவாக இருந்தாள். இளங்கோவைப் பார்த்ததும் புன்னகைத்தாள்.

இளங்கோ, “எப்படி இருக்க பவானி?”

பவானி, “நல்லா இருக்கேங்க, நீங்க எப்படி இருக்கீங்க, எங்கம்மா எப்படி இருக்காங்க?”

இளங்கோ, “நல்லா இருக்கேன், உங்கம்மா இன்னிக்கு உன்னைப் பார்க்க சென்னைக்கு வர்றாங்க… என் ஃப்ரண்டு அவங்களை ஃப்ளைட்ல அழைச்சிட்டு வர்றான்”.

மீனாட்சி அம்மாள், “பவானி முதல்ல ரொம்ப உடைஞ்சு போயிருந்தாப்பா, அந்த ஆஸ்பத்திரியோட சேர்ந்து ஒரு சின்ன சர்ச் இருக்கும். அதுல இருந்த ஒரு வயசான ஃபாதர் அடிக்கடி வந்து இவகிட்ட பேசி கவுன்சிலிங் கொடுத்து உருக்கமா ஜெபம் பண்ணிட்டுப் போவாரு… அதுக்கப்புறம் நல்லா தெளிவாகிட்டா”

இளங்கோ பவானியின் முகத்தைப் பார்த்து புன்னகைத்தான். மூவரும் விமான நிலையத்தை விட்டு வர, வெளியே கார் தயாராக வந்து நின்றது.

மீனாட்சி அம்மாள், “அப்பாவை நினைச்சாத்தாம்ப்பா எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு…இந்த நெருக்கடியான நேரத்துல என்னால அவரு கூட இருக்க முடியல” புலம்பிக்கொண்டே காரில் ஏறினார்.

கார் இளங்கோவின் வீட்டு வளாகத்தினுள் நுழைய காரில் இருந்த மூவரும் தங்கள் கண்களாலேயே நம்ப முடியாத காட்சி ஒன்றைக் கண்டார்கள். வீட்டின் வாசலில் கோப்பெருஞ்சோழன் நின்று கொண்டிருந்தார். தனஞ்செயனின் மரணம் பவானியிடத்தில் இப்படியொரு எதிர்வினையை ஏற்படுத்தும் என்று அவர் நினைக்கவில்லை. அது கடைசியில் தன் மகனின் வாழ்க்கையையே பூமராங் போல திருப்பித் தாக்கியது அவருக்கு ரொம்பவே வேதனையைக் கொடுத்திருந்தது. ஆனால் இந்த விஷயங்களை உணரவும் சிந்திக்கவும்கூட நேரமின்றி அரசியலில் ஓடிக்கொண்டிருந்தார். அரசியலில் திடீரென்று அவருக்கு ஏற்பட்ட சறுக்கல், தனிமை அனைத்தும் மனைவியும் அருகில் இல்லாத நிலையில் பல பாடங்களை அவருக்குக் கற்றுக்கொடுத்திருந்தது.

அது மட்டுமன்றி பவானிக்கு இனி புத்திர பாக்கியமில்லை என்று மருத்துவர்கள் சொன்ன செய்தியை அமெரிக்காவிலிருந்து போன் மூலம் மீனாட்சி அம்மாள் கோப்பெருஞ்சோழனிடம் சொல்லியிருந்தார். இருவரும் அன்று வெகுநேரம் போனில் பேசிக் கொண்டிருந்தார்கள். பவானியின் குணாதிசயம் குறித்து அன்று மீனாட்சி அம்மாள் நிறையவே கோப்பெருஞ்சோழனிடம் பகிர்ந்துகொள்ள, அதன் பின்னர்தான் பவானி-இளங்கோ காதல் தற்செயலாக நிகழ்ந்திருக்கலாம், அதில் எதிர்கட்சி, எதிர்சாதியின் சதி இருக்க வாய்ப்பில்லை என்ற எண்ணம் அவருக்குள் இலேசாக உருவாகியிருந்தது.

அவர் பவானியை மட்டும்தான் அப்பாவி என்று நம்பினாரேயொழிய தனஞ்செயன் மீது அவருக்கு இருந்த சந்தேகம் மட்டும் இன்னும் அப்படியேதான் இருந்தது.

காரில் இருந்து இறங்கிய பவானி நேராகச் சென்று கோப்பெருஞ்சோழனின் காலில் விழுந்தாள். அவர் அவளைத் தொட்டு தூக்கினார். அவர் கண்கள் குளமாகியிருந்தது. அவள் தலையில் கைவைத்து “எப்படிமா இருக்கே?” என்றார்…

பவானி, “நல்லா இருக்கேன் மாமா, நீங்க எப்படி இருக்கீங்க?”

கோப்பெருஞ்சோழன், இருக்கேன் என்று தலையாட்டியபடி “உள்ளே போம்மா, போயி ரெஸ்ட் எடுத்துக்க” கனிவாக சொன்னார். இளங்கோவுக்கும், அம்மாவுக்கும் அந்த மாற்றம் ஆச்சரியமாக இருந்தது.

அன்று காலை உணவை முதல் முறையாக வீட்டில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சாப்பிட்டார்கள். கோப்பெருஞ்சோழன் இளங்கோவிடம், “தம்பி நீ என்ன பண்ற, பவானியைக் கூட்டிட்டு ஒரு மாசம் எங்கேயாச்சும் ஃபாரின் டூர் போயிட்டு வா… கட்சி வேலையெல்லாம் அப்புறம் வந்து பார்த்துக்கலாம்”

பவானி முகம் மகிழ்ச்சியில் பிரகாசித்தது…

இளங்கோ, “சரிங்கப்பா, நானும் அதான் நினைச்சேன்”

காலை உணவு முடிந்ததும் பவானி அறைக்குள் சென்று தனது உடைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். இளங்கோ இரகசியமாக உள்ளே நுழைந்து பின்னால் இருந்து அவளைக் கட்டி அணைத்து, “எங்க டூர் போகலாம்? Europe, Australia, Japan…? சொல்லு…”

பவானி, “அதெல்லாம் இருக்கட்டுங்க, ஒரு முக்கியமான விஷயம், நான் இருந்த ஹாஸ்பிட்டலுக்கு வருவாருல்ல அந்த வெள்ளக்கார ஃபாதர் தாத்தா… அவர் சொன்னாரு டாக்டருங்க வேணா உனக்கு குழந்தை பாக்கியம் இல்லைன்னு சொல்லலாம்மா, ஆனா கடவுள் சொல்றாரு இன்னும் இரண்டு வருஷத்துல நீ ஒரு அழகான ஆண் குழந்தையப் பெத்தெடுப்பன்னு… அவன் சொன்னதெல்லாம் அப்படியே பலிக்குமாம்… எனக்கு நம்பிக்கை இருக்குங்க…எங்கண்ணனே எனக்கு மகனா வந்து பிறக்கப்போறான்”

இளங்கோ சிரித்தபடி, “ம்ம்ம்…அப்படியா? வரட்டும் அந்த ராஸ்கல்.. ஏண்டா எங்களையெல்லாம் இப்படி தவிக்க விட்டுட்டு போனேன்னு கேட்குறேன்”

இளங்கோ சொன்னதைக் கேட்டு பவானிக்கு அண்ணன் நினைவு வந்துவிட்டதை அவள் முகம் மாறுவது கண்டு புரிந்து கொண்ட இளங்கோ அவள் சிந்தனையை மாற்றும்படி, “சரி சீக்கிரம் சொல்லுடி எந்த நாட்டுக்குப் போகலாம்”

பவானி, “எந்த நாட்டுக்கும் வேணாம்…எனக்கு ரொம்பப் பிடிச்ச ஊட்டிக்குப் போகலாம். இங்க இருந்து கார்லயே…நீங்கதான் கார் ஓட்டுறீங்க… நமக்குப் பிடிச்ச songs-ஐ கார்ல கேட்டுக்கிட்டே ஜாலியா நீங்களும் நானும் மட்டும் குன்னூர், ஊட்டி, கோத்தகிரின்னு சுத்தணும். இது எனக்கு ரொம்ப நாள் ஆசைங்க…ஓகேயா?”

இளங்கோ உற்சாகமாக, “டபுள் ஓகே”

அடுத்த இரு நாட்களில் பவானி பல நாட்கள் கனவு கண்ட அந்தப் பயணம் தொடங்கியது…செல்லும் வழியில் ஆங்காங்கே புதிதாக ஊன்றப்பட்டிருந்த “தேசிய நீர்வழிச்சாலை திட்டம்” பலகைகளைப் பார்க்கும்போது இருவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. திட்டத்தின் ஆரம்ப கட்ட பணிகள் அவ்வளவு சீக்கிரமே தொடங்கவிருந்தன.

கார் குன்னூரை வந்தடைந்திருந்தது. இசைஞானியோடு சேர்ந்து செய்யும் பயணங்கள் என்றைக்குமே அலுப்பதில்லையே…யூகலிப்டஸ் வாசனை கமழும் பசுமையான தேயிலை தோட்டங்கள் நிறைந்த மலைப்பாதையில் கார் பயணித்துக் கொண்டிருந்தது. சில்லென வீசிய காற்றும், காருக்குள் ஒலித்த இசைஞானியின் பாடலும் மனதை இதமாகத் தாலாட்டியது…

இரு பறவைகள் மலை முழுவதும்
இங்கே இங்கே பறந்தன
இலை மறைவினில் இரு கனிகளும்
அங்கே அங்கே கனிந்தன
இது கண்கள் சொல்லும் ரகசியம்
நீ தெய்வம் தந்த அதிசயம்…

சூழலின் அருமையும், பாடலின் இனிமையும் இணைய…இருவரது மனதிலும் புதிய நம்பிக்கையும், உற்சாகமும் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது.

- இனியெல்லாம் சுகமே -